குலோத்துங்கன் கவிதைகள்
ஒரு கோபுர தீபம்

மு. குழந்தைவேலு

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

குலோத்துங்கன் கவிதைகள்
ஒரு கோபுர தீபம்

மு. குழந்தைவேலு

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை - 600 113

டாக்டர் வா.செ. குழந்தைசாமி அறக்கட்டளைச் சொற்பொழிவு
(அறக்கட்டளை நிறுவியவர்: ராம். பி. சாமி)

வரிசை எண் : 1

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	Kulōttuṅkaṉ kavitaikaḷ oru kōpura tīpam
Author	:	M. Kulaindaivelu M.A., M.Ed., M.Phil. Auditor (Retd.) Kopala Samuttiram, Tirunelveli
General Editor	:	Prof. Dr. K.A. Gunasekaran Director International Institute of Tamil Studies Tharamani, Chennai-600 113
Publisher & ©	:	International Institute of Tamil Studies II Main Road, C.I.T. Campus, Chennai-600 113 Ph: 22542992
Publication No.	:	634
Language	:	Tamil
Edition	:	First
Year of Publication	:	2009
Paper Used	:	18.6 Kg TNPL Maplitho
Size of the Book	:	1/8 Demy
Printing type used	:	10 Point
No. of Pages	:	vi + 202
No. of Copies	:	1200
Price	:	Rs. 60/- (Rupees Sixty Only)
Printed by	:	United Bind Graphics 189-D, Royapettah High Road Mylapore, Chennai - 600 004.
Subject	:	Kulothungan Poems - A Study

அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகட்கு நிறுவனம் பொறுப்பன்று.

பேரா. முனைவர் கரு. அழ. குணசேகரன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

அணிந்துரை

குலோத்துங்கன் கவிதைகள் ஒரு கோபுரதீபம் எனும் இந்த நூலில் கவிஞர் குலோத்துங்கனின் பல காலங்களில் பல சூழல்களில் எழுதப்பட்ட கவிதைகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. கோபுரதீபம் எனும் கருத்தியலை முன் வைப்பதற்கு முன்பதாக நூல் ஆசிரியர் பல நிலைகளில் கவிஞரின் கவிதைகளைப் பகுத்தும், தொகுத்தும், சமூகப் பார்வையில் பண்பாட்டுப் பார்வையில் எனுமாறு ஆய்வுக்குட்படுத்தியும் ஒரு முடிவுக்கு வந்துள்ளமையினை இந்த நூலைப் படித்தபின் உணர முடிகிறது.

தோணி கவிழ்ந்த கணம்
துணையின்றி நின்ற கணம்
. . . . .
அடங்கிய இவ்ஆவிகளின்
ஆசைகளை யாரறிவர்

என்ற வரிகள் சித்திரச் சோலைகளே! எனத் தொடங்கும் பாவேந்தர் பாரதிதாசனின் வரிகளை நினைவுபடுத்துவதாக அமைகின்றன.

கடந்த கால வரலாற்று நிகழ்வினை எண்ணிப் பார்க்கும் ஒரு கவிஞன் சமகால வாழ்வியலை எண்ணிப் பார்க்கத் தவறாமல் புதிய மானுட வரலாற்றுக்கு வித்திடக் கூடிய சிந்தனையைக் கொண்டு இயங்க வேண்டும். ஈழத்தின் அவலத்தை எண்ணிப் பார்த்து மானுடம் எரிகிறது என எச்சரிக்கை செய்யும் கவிஞரின் குரல் சமகால வரலாற்றைப் பதிவு செய்வதாக அமைகிறது. இருட்டறையில் **தூய்மையில்லை ஏணியிலை ஏற்றமில்லை** என்று குறிப்பிடும் கவிஞரின் வரிகள் நகர வாழ்க்கையில் மாசு குறித்துச் சிந்தித்தத் தொடர்ச்சியாக இருந்தாலும்கூட இவ்வரிகள் தனித்த நிலையில் எண்ணிப்பார்க்கும்போது பல நூறு பொருள்களைச் சுட்டி நிற்பதாக அமைகின்றன. இருட்டறைக்கு வெளிச்சம் வேண்டும். வெளிச்சம் இன்றிப் பாதையில் பயணிக்க இயலாது. வெளிச்சமற்ற அறை பல நிலைகளில் பலருக்கும் புதிராக இருப்பதில் இருந்து அறைக்குள் என்ன உள்ளது? என்ன தேவை என்பது குறித்த தெளிவு வேண்டியுள்ளது. இருட்டறை என்பது சமூகம் எனக் கருதிக் கொண்டால் விளக்கப்பட வேண்டியதும் வெளிச்சம் பெற வேண்டியதும் ஏற்றம் பெற வேண்டியதும் பல.

சாதி கூடாது என்பது குறித்தும், தமிழ்மொழி குறித்தும், மதங்கள் கூடாது என்பது குறித்தும், அறிவியல் தமிழ் குறித்தும், தமிழர்

ஒற்றுமை குறித்தும், மனித குல மாண்பு குறித்தும், பெண்ணியம் குறித்தும், இயற்கை குறித்தும், காதல் குறித்தும், போராட்டம் குறித்தும் இக்கவிஞருக்குக் கவிதைப் பொருள்கள் அமைந்துள்ளன.

கவிஞரின் கவிதையில் பயன்படுத்தப்படும் சொல்லாடல்கள் என்பன மரபு வழிவந்த செந்தமிழ்க் கவிஞர் என்பதை உறுதி செய்கின்றன. வலியிலா, பாடுவம், போற்றுவம், காணுவம், தேடுவம் என்னும் எதுகை மோனையுடன் சொற்கள் கவிதையாத்திருப்பதன் வழியே கவிஞரின் அந்தப் புலமை, கவித்துவத் தன்மை ஆகியவை புலப்படுகின்றன.

பாவேந்தர் பாரதிதாசனுக்குப் பின் ஆன்மிகச் சிந்தாந்தத்தை மறுத்து, மனித ஆற்றலை மட்டுமே முன்னிறுத்தித் தமிழ்ச் சமூகத்தின் பல்வேறு சமூகக் கூறுகளைத் தொட்டுத் தமிழரையும் தமிழ் உணர்வுகளையும் தட்டி எழுப்பிப் புரட்சி மிகுந்த சிந்தனைகளை அறிவியல் உலகிற்கு ஏற்றாற்போல் படைத்தளித் திருக்கும் கவிஞர் குலோத்துங்கனின் படைப்பாக்கத்தினைப் பல நிலைகளில் விமர்சித்து ஆய்ந்து எழுதப்பட்ட இந்த நூல் அறிவியல் தமிழ் உலகில் அடியெடுத்து வைக்கும் 21ஆவது நூற்றாண்டுக்கு மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தும் என நம்பிக்கை கொள்ளலாம்.

இந்த அறக்கட்டளையை நிறுவியவருக்கும், இச்சொற்பொழிவு நூலை எழுதியவருக்கும் எனது பாராட்டுக்கள்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் நிறுவனத் தலைவரும் தமிழக அரசின் முதல்வருமான மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் நன்றிக்கடன்பட்டுள்ளது.

தமிழ்ப்பணிகளுக்கு ஆற்றுப்படுத்தி வரும் மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களுக்கு எம் நன்றி என்றும் உரியது.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர் திரு க. முத்துசாமி இ.ஆ.ப. அவர்களுக்கும் நன்றி.

இச்சொற்பொழிவின் எழுத்துருவை மெய்ப்புத் திருத்தம் செய்த முனைவர் ஆ. தசரதன் அவர்களுக்கும், இச்சொற்பொழிவு மற்றும் நூல் வெளியீடு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப் பணியாளர்கள் மற்றும் கணிப்பொறியாளர் திருமதி எ.ம. லட்சுமி ஆகியோருக்கும் எம் நன்றிகள் என்றுமுண்டு. இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தாருக்கு எம் பாராட்டுகள்.

இயக்குநர்

ஆசிரியர் குறிப்பு



ஆசிரியர் மு. குழந்தைவேலு, திருநெல்வேலி மாவட்டத்தில் கோபாலசமுத்திரம் என்ற சிற்றூரில் 15.05.1932-இல் பிறந்தவர். தந்தை திரு. முத்தையா; தாயார் திருமதி பத்திரகாளி அம்மாள். கோபாலசமுத்திரம் வெங்கட்ராமையர் உயர்நிலைப் பள்ளியில் பள்ளிக் கல்வியை முடித்தார்.

பாளையங்கோட்டை, தூய சவேரியார் கல்லூரியில் B.A. பட்டம் பெற்றார். பின்னர், சென்னை, சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் B.Ed., முடித்தார். மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் M.A., M.Ed., M.Phil., பட்டங்கள் பெற்றார்.

சென்னையில் தமிழக அரசின் பொதுக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் 12 ஆண்டுகள் தணிக்கையாளராகப் பணி புரிந்து ஓய்வு பெற்றார்.

பல தமிழறிஞர்களோடு நெருங்கிப் பழகியவர். பல பத்திரிகைகளில் கட்டுரைகள், மதிப்புரைகள் எழுதி வந்துள்ளார்.

தற்பொழுது திருநெல்வேலி மாவட்டம் கோபாலசமுத்திரம் என்ற சிற்றூரில் விவசாயம் பார்த்து வருகிறார்.

பொருளடக்கம்

முன்னுரை		1
என்னுரை		22
1.	ஆய்வு ஓர் அறிமுகம்	25
2.	தமிழும் தமிழரும்	30
3.	சாதித் தீயில் தமிழினம்	43
4.	பூரணத்தின் ஒரு பாதி	49
5.	மானுடம்	64
6.	காலமும் முயற்சியும்	76
7.	இன்னற் கடலில் ஈழக் கலம்	86
8.	நிலையா உலகில் நிலைத்தவர்	90
9.	கண்டனத்துக்குரியவர்கள்	102
10.	வறுமை எனும் மானிடப் பகை	113
11.	பல்சுவைப் பாடல்கள்	122
12.	கவிதை நயம்	139
13.	கொள்கைகள்	157
14.	நிறைவுரை	177

முன்னுரை

"குலோத்துங்கன் கவிதைகள் - ஒரு கோபுரதீபம்" என்ற தலைப்பிட்டு அறிஞர் மு. குழந்தைவேலு எழுதிய திறனாய்வு நூலுக்கு முன்னுரை எழுதுமாறு முதறிஞர் முனைவர் வா.செ. குழந்தைசாமி என்னைப் பணித்த போது நான் சற்றுத் திகைத்தேன்.

'குலோத்துங்கன் கவிதைகள்' என்ற பெயரில் வா.செ.கு.வின் கவிதைத் தொகுப்பு 704 பக்கங்கள் கொண்டது. அந்த நூலைக் குழந்தைவேலு முற்றிலும் வரிவரியாகப் படித்துச் சுவைத்திருக்கிறார். நூலின் பின் அட்டையில் அச்சாகியிருந்த கவிதைக்குக் குழந்தை வேலு 14 பக்கங்களில் திறனாய்வு ஒன்றை எழுதிக் கவிஞர் குலோத்துங்கனுக்கு அனுப்பினார். அதைப் படித்த கவிஞர்

> 'நானே என் கவிதைகளுக்குத் திறனாய்வு செய்தாலும் உங்களின் திறனாய்வைப் போன்று செய்திருக்க முடியாது'

என்று மனந்திறந்து பாராட்டியுள்ளார். அவ்விருவர் தொடர்பும் அவ்விதம் தொடங்கியது.

திறனாய்வாளர் குழந்தைவேலு அவர்களுக்கு அறிஞர் வா.செ.கு. நேர் அறிமுகம் இல்லாதபோது அவர் ஒரு திறனாய்வை எழுதியது போல, என்னைப் பற்றி முழுமையாகத் தெரிந்திராத டாக்டர் வா.செ. குழந்தைசாமி, மு. குழந்தைவேலு அவர்களுக்கு, என்னை மிகவும் பாராட்டிக் கடிதம் எழுதி என்னை மிக உயர்த்தி, 'திறனாய்வு நூலுக்கு முன்னுரை எழுத ஏற்றவர்' என்று தெரிவித்து, 'ஒளி அச்சு'ப் படியை அனுப்பியிருக்கிறார். மெய்சிலிர்க்கிறது.

1988-இல் என்னுடைய அறுபதாவது அகவையின் அடையாளமாக மணிக்கவிதைகள் என்ற கவிதைத் தொகுப்பில் 'உள்ளத்தில் ஏணியுளர் உயர்வர்' என்ற கவிதையைக் குலோத்துங்கன் எழுதியிருந்தார்.

கவிதைத் தொகுப்பில் என்னைப் பாராட்டிப் பல கவிதைகள் நிறைந்திருந்தன. ஆனால், கவிஞர் குலோத்துங்கனின் கவிதையைப் பலமுறை படித்தேன். அது என்னை மிகவும் ஈர்த்தது.

> *வாரிக் கரைமணல் எண்ணும் பொறுமையும்*
> *வாய்த்தவன் சார்ந்து பின் வாங்குவனோ?*

என்பது அவர் கவிதை.

ஒரு முறைக்குப் பல முறை படித்தேன். 'பெரிய பொறுப்பை ஏற்பவன் சோர்வு கொள்ளலாகாது, பின் வாங்கக்கூடாது' - இந்த வரிகள் என்னை நிமிர்ந்து உட்காரச் செய்தன. மற்றும் சில வரிகள்

கோயிலின் தெய்வமும் யான் எனும் மேல் நிலை
கூடும்வரை மனம் ஓய்வதிலேன்
சுமையைக் குறை எனத் தொழுவதிலேன்
என் தோள்கள் வலி பெறத் துணை செய்வாய்
மலை ஏறின் முடிதொடு முன் மகிழ்வதில்லேன்

இப்படி எண்ணற்ற வரிகள். உண்மையை உரைப்பதில் என்ன வெட்கம்! நானும் 16 வரி பின்னட்டைக் கவிதையைப் பலமுறை படித்தேன்.

குழந்தைவேலுவைக் கவர்ந்த கவிதையைப் பலமுறை படித்தேன். படிக்கிறேன். கவிஞரிடம் பேசும்போது ஒரு தடவையாவது இந்தக் கவிதையைப் பற்றிச் சொல்லத் தவறுவதில்லை. அந்தக் கவிதை குலோத்துங்கன் பற்றிய முழு உருவத்தை நமக்கு அளிக்கிறது.

விழையும் பொருளெதுவும்
வீடுவந்து தானாக
நுழையும் எனக்கருதும்
நோக்குடைய னல்லேன்; என்
பயணம் பெரிது; செலும்
பாதை நெடிது. வழித்
துயரம் தவிர்க்கத்
துணை தேடேன்; என் படைக்கு
ஒரு சிலரும்போதும், நான்
ஒருவனே போதும், மெய்ப்
பொருளென்று தேடும்
புனிதப் பணியிதற்குக்
கூட்டமெதற்கு
கொடி பிடித்துப் பின்தொடர்வோர்
ஆட்டமேன் வேண்டும்
அரிய பொருளெதையும்
தேடியளிக்கச்
சிலர்போதும்; மற்றதனைக்
கூடிச் சுவைக்கக்
குவலயத்தை நாமழைப்போம்

இந்தக் கவிதையில் உள்ள தன்னம்பிக்கை, துணிவு, 'என் ஒருவனால் முடியும்' என்ற உறுதி எனக்குக் காந்தியடிகளின் தனி நபர் சத்தியாக்கிரகத்தை நினைவுபடுத்தின.

சுதந்தரப் போராட்டப் பயணம் பெரிது. நாட்டுக்கு எப்போது விடுதலை கிடைக்குமோ தெரியாது. அதைப் போன்று கவிஞர் வா.செ.கு வின் போராட்டமும். அவர் சொன்னவை:

என் பயணம் பெரிது, செல்லும் பாதை நெடிது. துணை தேடேன். வழித் துயரம் தவிர்க்க என் படைக்கு ஒரு

சிலரும் போதும். நான் ஒருவனே போதும்...
கூட்டமெதற்கு? கொடி பிடித்துப் பின் தொடர்வோர்
ஆட்டமேன் வேண்டும்?

ஆகா! கவிஞரின் நெடிய பயணம் யாது? இங்குதான் குலோத்துங்கனின் இலட்சியத்தை அறிய நிமிர்கிறோம். திறனாய்வாளர் இலட்சியத்தை விளக்கிக் கூற முயல்கிறார்.

'வாழ்க்கை வரலாறு', 'என் இலட்சியங்கள்' என்று அவர் தனியே எழுதவில்லை; பேசவில்லை. அவருடைய கவிதைத் தொகுதி வழியே அவரைக் காண்கிறோம். அவருடைய கொள்கையைக் காண்கிறோம். அவர் புரட்சிக் கருத்துகளை, புதுமைக் கருத்துகளைக் காண்கிறோம்.

குழந்தைசாமியின் இலட்சியத்தைப் புரிய வைக்கவே இந்தத் திறனாய்வு ஆராய்ச்சி நூல் படைக்கக் குழந்தைவேலு முன் வந்துள்ளார். நான்காண்டுகள் முழு ஈடுபாட்டுடன் மிகப் பாடுபட்டு ஆழ்ந்து நுகர்ந்து எழுதிய திறனாய்வை, அதற்கு முன்னுரை எழுதப் பதினெட்டு மாதக் காலம் என்னிடம் சிறை வைத்திருந்ததை எண்ணி வெட்கப்படுகிறேன்.

குழந்தைவேலு அவர்களின் திறனாய்வு ஏட்டைப் படிப்பதற்கு முன் மீண்டும் 704 பக்கங்கள் கொண்ட குலோத்துங்கனின் கவிதைகளைப் படித்தேன்.

கவிதை என்பது மொழியின் சிறப்புக்கு முன் நிற்பது. கவிதைகளை அங்குலம் அங்குலமாக, அணு அணுவாகச் சுவைக்க வேண்டும். பெரிய கற்கண்டுக் கட்டியைத் தாடையில் அடக்கிக் கொண்டு சுவை நீரை மெல்ல மெல்லப் பருக வேண்டும். அதுபோலவே நான் படித்தேன்; அவ்வப்போது படிக்கிறேன்.

நான் 52 ஆண்டுகள் ஆசிரியராக இருந்த 'அமுதசுரபி'யில் குலோத்துங்கன் கவிதைகள் பலவற்றை வெளியிட்டேன். குலோத்துங்கன் கவிதையைப் பலமுறை படித்த பிறகே வெளியிடுவேன். அந்தவரிகள் பல என்னுடன் பேசும்.

704 பக்கங்களைப் படித்த பிறகு பல பக்கங்களில் என் சிந்தனை ஓட்டத்தை, பாராட்டை, கருத்து வேற்றுமையைக் குறித்து வைத்தேன். நல்ல நூலின் பக்கங்களின் ஓரங்களில் கோடிடுகிறோமே என்ற கவலையிருந்தாலும் (புத்தகப் பக்கங்களில் கோடிடுவது தவறு என்று ஓர் அகராதிப் பின்னிணைப்பில் படித்த நினைவு) அவை என் விமர்சனக் குறியீடுகள். குழந்தைவேலுவின் திறனாய்வைப் படிக்கும்போது ஒப்பு நோக்க அவை மிகவும் பயன்பட்டன.

இதுவரை பட்டம் பெறுவதற்காக எழுதப்படும் ஆய்வுகளுக்கு அதற்கான நெறிமுறைகள், அடிக்குறிப்புகள், மேற்கோள்கள், ஒப்பீடுகள் உண்டு. பட்டங்கள் பெறுவதற்காக எழுதுவதற்கும், பொதுவாக மக்கள்

படித்துத் துய்க்க எழுதுவற்கும் வேற்றுமை உண்டு.

கவிஞர் குலோத்துங்கன் ஒரே நாளில் தொகுப்பில் உள்ள 261 கவிதைகளையும் எழுதிவிடவில்லை. (ரோம் நகரம் ஒரே நாளில் உருவாக்கப்படவில்லை என்று சொல்வார்கள்.) பல்வேறு சூழ்நிலைகளில் எழுதப்பட்டவை.

கவிஞர் கவிதை எழுதும்போதிருந்த சூழ்நிலை, வயது மாறி யிருக்கலாம். ஆனால், குறிக்கோள் மாறவில்லை. உள்ளத்தில் இடப்பட்ட அக்கினிக்குஞ்சு அணைந்து விடவில்லை. ஏழு கவிதைத் தொகுதிகள் வெளிவந்துள்ளன. அவற்றை எல்லாம் உள்ளடக்கிய பூரணம் இந்தத் தொகுதி.

> பள்ளிப் பருவம் தொடக்கம் முதல் பொதுவாக எனக்கு மொழிகளில் ஆழ்ந்த ஈடுபாடு இருந்து வந்திருக்கிறது. பள்ளியில் நான் பயின்ற வகுப்புகளில் தகுதிக்கு மேலான நூல்களைத் தேடிப் பெற்றுப் படித்து வந்திருக்கிறேன். நான் படித்த கரூர் நகராட்சி உயர்நிலைப் பள்ளியில் அன்றிருந்த சூழ்நிலை காரணமாகத் தமிழ்மொழி, தமிழ்ப் பண்பாடு, தமிழர் வரலாறு ஆகியவை பற்றி அறிந்து கொள்ளும் ஆர்வமும், அவற்றின் மீது பற்றும் பாசமும் கற்கும் விருப்பமும் வளர்ந்தன.

என்று விவரித்து வந்த, கவிஞருக்கு இராமலிங்க அடிகளின் பாடல்களில் ஈடுபாடு ஏற்பட்டது. திருமுருக கிருபானந்த வாரியார், சித்பவானந்தர் சொற்பொழிவுகள் ஈர்த்தன. பாவாணரின் தனித்தமிழ், அறிஞர் அண்ணாவின் தமிழ் நடை அவரைப் பெரிதும் கவர்ந்தன.சிலம்புச் செல்வரின் தமிழ்த் தேசியம் அவரை மிகவும் கவர்ந்தது. தமிழ் கவர்ந்த அளவுக்குத் தேசியம் கவரவில்லை என்று நினைக்கிறேன்.

சூழ்நிலை ஓர் எழுத்தாளனை உருவாக்குகிறது. புதிய சிந்தனை மலர வழி வகுக்கிறது. மிக உருக்கமான அவருடைய இளம் வயது வாழ்க்கை நினைவுகள் அவர் வளர்ந்த விதத்தைக் கூறுகின்றன.

> ஏழ்மையில் பிறந்து இருண்மையில் வளர்ந்து கல்லும் முள்ளும் நிறைந்த பாதையில் கால் நடையாகக் கை விளக்கின் துணைகொண்டு வாழ்க்கைப் பயணத்தை மேற்கொண்ட எனக்கு, இருப்பவை சிலருக்கு எட்டும். பலருக்கு எட்டாது. கண்ணுக்குத் தெரியாதவை சிலர் கைக்குக் கிடைக்கும். பலர் கைக்குக் கிடைக்காது என்பதை அன்றாட வாழ்வில் அனுபவித்த எனக்கு ஆழ்ந்த சமுதாய உணர்வும் சமுதாய நீதி பற்றிய அக்கறையும் ஏற்பட்டதில் வியப்பதற்கு எதுவுமில்லை. இளமையில் அமைந்த சூழ்நிலையும் எனது இயற்கையும்

அறிவியல் கல்வியும், தொழில் நுட்பப் பயிற்சியும் என்னை

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப் பொருள் காண்பதறிவு

என்னும் வள்ளுவர் வழியை வாழ்க்கை நெறியாக ஏற்றுக் கொள்ளச் செய்தன.

அவர் இளம் வயதில் நாட்டு விடுதலைப் போரைப் பற்றிச் சிந்தித்தாரில்லை. அதற்கான நூல்களைப் படிக்க விரும்பியதற்குச் சான்றுகள் இல்லை. பரவலாக அவர் எல்லா நெறிகளையும் ஆய்ந்துணர வேண்டும் என்று விரும்பினாரில்லை. நேரு அவரைக் கவர்ந்தது போல் காந்தியடிகள் அவரை ஈர்த்தாரா என்று அறிய முடியவில்லை. அதனால் கௌதம புத்தரை விட உலகாயத நெறிகள் பற்றிச் சிந்தித்தார். மாணிக்கவாசகரின் உள்ளம் உருக வைக்கும் பாடல்களும், கோதைத் தமிழும், ஆழ்வார்கள் பாடல்களில் திருமாலைப் பாடியது போக, மிச்சமுள்ள அறிவியல் சிந்தனைகளும் இளம் வயதில் அவரைக் கவரவில்லையோ என்று எண்ணத் தோன்றுகிறது. ஆனால், அவர் சிந்தனை வேறாக இருந்தது. ஓர் இராமகிருஷ்ணர் போல், விவேகானந்தர் போல், வள்ளலார் போல, அரவிந்தர் போல் மனித வாழ்க்கை உயரும் நெறிகளையே சிந்தித்தார்; கற்றார்.

மிகக் கவனமாக அவர் கவிதைகளில் புதைந்திருக்கும் அவருடைய புதிய நெறிகளை, சிந்தனைகளை, மீண்டும், மீண்டும் படித்தபோது, ஆழ்ந்து சிந்தித்தபோது, அவர் புதுயுகம் காணும் ஞானி என்றே எண்ணத் தோன்றுகிறது. துரும்பிலும் துரும்பாய் ஆடி ஆடி வாழும் மனிதனின் அடியும் முடியும் பற்றி ஆழ்ந்து எண்ணும்பொழுது, அவனுள் அடங்கியிருக்கும் ஆற்றல் பற்றிச் சிந்திக்கும் பொழுது, அவனால் இயலும் எனும் சாத்தியங்கள் பற்றிய கற்பனையில் ஈடுபடும்போது,

மனிதனின் மேல் ஒரு தேவனை இதுவரை
வய்யகம் கண்டதில்லை

என்ற கவிதை வரிகள் விசுவரூபமெடுத்து வெளிப்பட்டன.

'மனிதன் தேவனாகலாம்; மனிதனிடம் தெய்வம் இருக்கிறது; நானே கடவுள்; இந்த உலகம்தான் சுவர்க்கம்; வேறு சுவர்க்கம் இல்லை' என்ற தத்துவங்கள் குலோத்துங்கனைப் பெரிதும் ஆட்கொண்டு, அவற்றில் ஆழ்ந்து நிலைப்பட வைக்கின்றன. அதனால் அவர் கவிதைகள் முழுமையும் தெய்வத்தை விட மனிதன் உயர்ந்தவன் என்று உறுதியாகக் கூறும் தன்மை உடையனவாய்த் திகழ்கின்றன. குலோத்துங்கன் கவிதைகளில் எந்தத் தலைப்பை எடுத்தாலும், எந்தப் பக்கத்தைப் புரட்டினாலும் மனித சக்தியைப் போற்றும் நிலையைக் காணலாம்.

இந்தக் கவிதைகளைப் படித்து, ஆழ்ந்து, அனுபவித்து அவர்

வந்துள்ளார் குழந்தைவேலு. குலோத்துங்கன் கவிதைகளின் நயங் கூறித் தன் திறமையை வெளிப்படுத்த ஆய்வு நூலை எழுத அவர் முற்படவில்லை.

கவிஞரின் பாடல்களை ஆய்வாளர் 14 தலைப்புகளில் வகைப்படுத்தியுள்ளார்.

தமிழ், தமிழர், தமிழ்நாடு ஆகிய மூன்றின் மீது கவிஞர் குலோத்துங்கன் கொண்டுள்ள அப்பழுக்கற்ற அழுத்தமான காதலை விளக்கும் பல பாடல்களை நாம் காண முடிகிறது.

தமிழின் பெருமையையும், உயர்வையும் போற்றிப் பல பாடல்களைக் கவிஞர் எழுதியிருந்தாலும் அறிவியல் பாதையில் தமிழ் உலகு முன்னேறிச் செல்லவில்லையே என்ற ஏக்கம்தான் அவருள்ளத்தே முன் நிற்கிறது. தமிழ்த்தாய் கண்ணயர்ந் துள்ளாள் என்கிறார்.

பழங்கதை பேசிப் பயனில்லை என்பதைக் குலோத்துங்கன் வலியுறுத்திய பாடல்களை ஆய்வாளர் குறிப்பிட்டுள்ளார். குலோத்துங்கன் கவிதைகளைப் புதிதாக நுகர விரும்புபவர்களுக்கு வழிகாட்டியாக இருப்பதுதான் திறனாய்வின் சிறந்த பகுதி. அதனால் வழக்கமாகத் தமிழன் பெருமை பற்றிய பாடல்களையும் குறிப்பிடுவதுடன், கவிஞரின் ஆதங்கத்தை வெளிப்படுத்தும் பாடல்களையும் தேடித் தருவது ஆய்வாளர் கடமையன்றோ?

'மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமை இல்லை' என்று பாரதி கூறியதற்கொப்ப, குலோத்துங்கன் தன் உறுதியான இலட்சியத்தை வெளிப்படுத்துகிறார். அவற்றை ஆய்வாளர் எடுத்துக் கூறுகிறார்.

நந்தமிழின் பெருமை எது? ஆங்கிலம் போல்
ஞாலத்தின் பொது மொழியா! உலகமன்றில்
அமர்ந்துள்ள ஆட்சி மொழிக் குழுவில் ஒன்றா?
ஐக்கிய நாட்டவை மொழியா!

* * * *

வையத்தின் துறையனைத்தும் தன்னுள் கொண்டு
வளர்மொழியா? பல்கலையின் வாயிலா?

* * * *

ஆய்வில்லாது கதைசொல்லி என்ன பயன்?

என்ற பாடலை ஆய்வாளர் எடுத்துக் கூறுவது, தமிழில் புதிய புதிய சிந்தனைகள் உருவாக வேண்டும் என்ற கவிஞரின் உறுதியை, தமிழ்ப் பற்றைக் காட்டுகின்றன.

வேற்று நாட்டில் வாழும் தமிழ் இனம், கடல் கடந்து சென்ற தமிழர்கள் சொந்த மொழியை மறந்துவிட்ட நிலையைக் கவிஞர் துயருடன் விளக்குமிடங்களை ஆய்வாளர் எடுத்துச் சொல்கிறார்.

கடல் கடந்த நாடுகளில் வசிக்கும் தமிழர்கள் தமிழ்ப் பெயருடன் திகழ்ந்தாலும் மரபுகளில் தமிழ் விளங்கினாலும் எங்கும் தமிழ்ப் பண்பாடு நிலவினாலும் பேச்சிலே தமிழில்லையே என்று வேதனைப்படுகிறார்.

மூச்செனெ மரபு காத்த மொரீசியத் தமிழர் தங்கள்
பேச்சினில் தமிழைக் காணேன்

என்ற ஆதங்கப் பாடலை ஏக்கப்பாட்டு என்று கூறலாம்.

உலகில் சிறந்த அறிவியல் அறிஞர்களுள் ஒருவரான முனைவர் வா.செ. குழந்தைசாமி, அறிவியல் நூல் வளத்தில் தமிழ் பின் தங்கியுள்ளதை எடுத்துக்காட்டுகிறார். தமிழ் மேலும் உயர, வளர, செழிக்க அவர் பல பாடல்களை எழுதியுள்ளதை ஆசிரியர் நாம் அறியச் செய்துள்ளார்.

அறிவியல் வளர்ச்சி தொடர்பான விளக்கம், எச்சரிக்கை, அறிவுரை நிறைந்த பாடல்கள் பலவற்றை ஆய்வாளர் குறிப்பிடுகிறார்.

மனித இனம் மறுபிறவி பெறுமோ அன்றி
மதத் தலைவர் கற்பனையோ அறியோம்: ஆயின்
இனிய தமிழ் புதுப்பிறவி எடுக்க வேண்டும்.
எதிர்காலத் தேவையெலாம் ஏற்க வேண்டும்

‘இனிய தமிழ் புதுப்பிறவி எடுக்க வேண்டும்’ என்ற சொல் நயம் திரும்பத் திரும்ப நம்மைச் சொல்ல வைக்கிறது. தமிழ் வளர்ச்சிக்குப் புதிய சொற்கள் பயன்படுத்தப்பட வேண்டும். எல்லாம் தமிழில் இருக்கிறது என்று அறிவியல் புதுமைகளைத் தமிழில் காணத் தவறுவோர்க்குக் குலோத்துங்கன் துணிவுடன் அறிவுரை கூறுகிறார்.

பல புலவர்கள், தமிழ் மொழி ஆய்வாளர்கள் குலோத்துங்கன் கவிதைகளை எடுத்துக் கூறுவதால் குலோத்துங்கன் புதிய மார்க்கதரிசி என்று கூறலாம். இந்தத் தொகுதியில் ஆய்வாளர் அத்தகைய பாடல்களை எடுத்து விளக்கியுள்ளது மிகப் பயனுடையது. ஆய்வாளர் மிகவும் ஆழ்ந்து படித்திருக்கிறார் என்பதற்கு எடுத்துக்காட்டு.

எழுத்துருவைச் சீரமைப்பீர் எழுதல் கற்றல்
எளிதாக்க வழிவகுப்பீர்
சொல்லாக்கம் புது வழியில் துணிந்து காண்பீர்

இது போன்று வேறு கவிஞர்கள் துணிந்து கூறி இருக்கிறார்களா! கவிஞர்கள் அஞ்சக்கூடாது.

வேறுபடுத்துவது, பிளப்பது, ஒதுக்குவது, வெறுப்பது மொழி வளர்ச்சிக்குப் பயன்படாது. ஆனால் இருக்கும் பன்மையை ஏற்க வேண்டும், மதிக்க வேண்டும்.

'பன்மை போற்றுவோம்' என்ற தலைப்பில் கவிஞர் தந்த பாடல்களை ஆய்வாளர் எடுத்துக் கூறுவதன் மூலம் தம் ஆய்வுப் பணியைச் சிறக்கச் செய்துள்ளார்.

மாறுபட்டன போற்றும் மானிடர்
வையகம் தனில்தேவர் அல்லரோ
பன்மை இந்தியப் பண்பின் மூச்சடா

* * *

வழிகள் எண்ணில மனிதம் ஒன்றடா!

என்று உறுதியாகக் கூறுவதை எடுத்துக்காட்டுகிறார் ஆய்வாளர் குழந்தைவேலு.

இந்தியப் பண்பாட்டைக் குலோத்துங்கன் ஒதுக்கினாரில்லை. தமிழ்ப் பண்புடன் சேர்ந்தே பல இடங்களில் பாடுவது ஒருமைப் பாட்டுணர்வு கவிஞருக்கு மேலோங்கி நிற்கிறது என்பதற்குச் சான்று. 'மனிதம்', 'மனிதம்' என்ற சிந்தனையைப் பாடல்கள் முழுமையும் வளர்க்கும் நோக்கத்தை ஆய்வாளர் கூர்ந்து நோக்கியிருக்கிறார்.

உலகில் ஏற்படும் மாற்றம், வளர்ச்சி ஆகியவற்றின் தாக்கம் தமிழில் இடம்பெறாது தவிர்ப்பது தமிழ் மொழியின் வளத்தையும் பரப்பின் விரிவையும் தடுத்துவிடும், சுருக்கிவிடும் என்ற கொள்கையைக் கவிஞர் தம் கவிதைகள் வாயிலாக ஆய்வாளர் விளக்குகிறார்.

பலகணியை மூடுபவர் புதுமை சேர்க்கும்
பரிதி ஒளி கூசுபவர் முன்னோர் சொல்லே
உலகமென நம்புபவர் எதிர்காலத்தை
ஊடுருவி அறியாதார் உய்வதில்லை

தமிழ்மொழி உயர வேண்டும் என்ற பேரவாக் கொண்டுள்ள கவிஞர் குலோத்துங்கன் தமிழ்நாட்டைச் சீர்குலைக்கும் சாதித் தீயைப் பற்றிக் கொதித்து எழுதியுள்ள கவிதைகளை ஆய்வாளர் எடுத்துக்காட்டி விளக்கியுள்ளார். 'சாதித் தீயில் தமிழினம் வெந்தது' என்ற கருத்தை நிலைநாட்டும் பாடல்களை ஆய்வு செய்துள்ளார்.

வேதியர்கள் - அந்தணர்கள்தாம் சாதியை உண்டாக்கினர் என்ற கருத்து, கவிஞர் குலோத்துங்கனுக்கு வேரூன்றியிருக்கிறது. அதற்கு அவர் இளமையில் கண்டறிந்த துன்பங்கள், பெரியார் பேச்சு, எழுத்துகள்தான் காரணம். ஆயினும் சாதியை ஆதியில் ஏற்படுத்தியவர்களைப் பற்றி அதிகம் சாடாமல் பின் விளைவுகளைத் தம் வைர வரிகளால் விளக்குவதை ஆய்வாளர் கூற மறக்கவில்லை. இதுவும் ஒரு மனித நேயம் தான். 'குலோத்துங்கம்' என்ற புதுமார்க்க மாளிகையின் பலத்துக்கு ஏற்ற அடித்தளக் கற்கள்.

தீயன உண்டெனின் செய்தவர் அந்நியர்
நாற்குலம் கண்டவர் நம்மவர் அன்(று,) அது
மேற்குலம் நின்றவர் வேதியர் சூழ்ந்தது

என்று கூறும் இன்றைய தமிழர் சாதியை விட்டுவிடத் தயாராக இல்லை என்கிறார்.

வேதியர் சாதியை விடுப்பினும் அரசியல்
வாதியர் சாதியை வரமெனத் தாங்குவர்
சாதியை வைத்துத் தலைவர் வாழுவர்

* * * *

சாதியை விடுத்த தமிழர் யாரடா

என்ற பாடலைக் கூறி, 'குலோத்துங்கம்' என்ற நியாயம் தவறாத் தத்துவத்தை நிலைநாட்டுகிறார் ஆய்வாளர்.

'ஒன்றே குலமென வாழ்ந்த தமிழர் நெஞ்சில் இடைவெளி விழுந்து' என்று கூறிய ஆய்வாளர் குழந்தைவேலு,

சாதித் தழல்தனில் தமிழினம் வெந்தது.

என்று தீர்மானமாகக் கவிஞர் கூறுவதைத் தெளிவாக்கத் தவறவில்லை.

சாதியின் தலைவர் என்னும் தவளைகள் எழுப்பும் சத்தம்
காதினைப் பிளக்கும் தோற்றம் காண்கிறோம்.

என்று சாதித் தலைவர்களின் கொடுமைகள் பற்றி விளக்கும் பாடலை எடுத்துக் கூறி, கவிஞரின் துணிவை வெளிப்படுத்துகிறார்.

சாதி வேற்றுமை, பிரிவு, கொடுமைகள் பற்றிக் கவிஞர் பாடல்களை ஆய்வு செய்த குழந்தைவேலு, சமயங்கள் பற்றிய கேள்விக்குக் கவிஞரின் தெளிவான சிந்தனைகளையும் எடுத்துக் கூறுகிறார்.

மரபுகளின் அடிப்படையை ஆய்வோம் ஆழ்ந்து
கற்றவர்கள் முடிவென்னில் ஏற்போம் - எஃதும்
கண்மூடி எதிர்ப்பதில்லை ஏற்பதில்லை.

இந்த வரிகளை எடுத்துச் சொல்வதன் மூலம், முனைவர் வா.செ. குழந்தைசாமி அவர்களின் கொள்கையைத் தெளிவாக்கிவிட்டார் ஆய்வாளர். சுய சிந்தனை ஆய்வு இன்றி ஒரு கொள்கையை எதிர்ப்பதும், ஆதரிப்பதும் கூடாது என்பதை அவர் கவிதை மூலம் விளக்குவதை எந்தத் தலைவர்கள் தொண்டர்கள் சிந்திக்கப் போகிறார்கள்.

கவிஞர் வா.செ. குழந்தைசாமி அறிவியல் அறிஞர். எனவே அனைத்தையும் அறிவியல் கண்ணோட்டத்தில் காண்கிறார் என்பதை 3-ஆவது இயல் மூலம் தெளிவாக்கியுள்ளார் ஆய்வாளர்.

பெண்ணைப் பாடாத கவிஞர் மிகச் சிலர். குலோத்துங்கன் கவிதைகளில் பெண் எவ்வாறு பேசப்படுகிறாள் என்பதையும் ஆய்வாளர் விளக்கியுள்ளார்.

> சிறியன சிந்தியாத சீரிய நிலையில் பெண் படைக்கப் பெறுகின்றாள். சிறு மாசும் தீண்டாப் பெரிய தோற்றத் தினளாகக் குலோத்துங்கனின் கவிப்பெண் படைக்கப் பெறுகிறாள்

என்று முன்னுரையாகத் தொடங்கும் ஆய்வாளர் பல்வேறு சிறு சிறு தலைப்புகளில் குலோத்துங்கனின் பெண்ணியம் பற்றிய கவிநயத்தை விளக்குகிறார்.

'பெண் எழிலால் பித்தான கவிஞர்' என்ற தலைப்பில் குலோத்துங்கன் கவிதைகளிலிருந்து பெண்ணியத்தைக் கவிஞர் இரசித்த பாடல்களைத் தொகுத்துத் தருகிறார். என்னதான் தத்துவத் தந்தையானாலும் குலோத்துங்கன், ஓர் ஆண் மகன் தானே! பெண் அழகில் மயங்காதவர் உண்டோ? புராணக் காலந்தொட்டு இன்றைய நவீனக் காலம் வரை பெண்ணுக்கு அடிமையாகாதவர் உளரோ? ஆனால், காதல் வேறு; காமம் வேறு என்பதைக் குலோத்துங்கன் கூறுவது சிறப்பு.

'பெண் எழிலால் பித்தான கவிஞர்' என்று தலைப்பிடப் பட்டிருந்தாலும் பெண் அழகைக் குலோத்துங்கன் வருணித்துள்ள பகுதிகள், கவிஞர் தமிழ் மொழி, மனித நேயம், நாட்டுப்பற்று, சாதிக் கொடுமைகள், தமிழர் முன்னேற்றம் பற்றி மட்டும் பாட வல்ல கவிஞர் பெண் அழகை வருணனை செய்வதிலும் தம் புலமையை நிலைநாட்டியுள்ளதை அறிய வைக்கிறார் ஆய்வாளர்.

குலோத்துங்கன் பெண் அழகில் மயங்கிக் கொண்ட காதல் மற்ற கவிஞர்களிடமிருந்து வேறுபட்டு நிற்கின்றது.

இளமையின் துடிப்பினால் நீ ஈர்த்தனை இல்லை யானுன்
வளமுடை மேனிகண்டு மயங்கினன் இல்லை: எனது காதல்
ஆண்மகன் பெண்பால் கொள்ளும்
ஆசையின் தரத்த தன்று

* * *

காமம் ஓர் அணுவும் இல்லை

என்று 'பூரண வேட்கை' என்னும் பாடலில் காதல் என்பதன் மெய்யான தோற்றத்தைக் கூறுகிறார்.

மலரினும் மெல்லிது காமம் சிலரதன்
செவ்வி தலைப்படு வார்

என்ற குறள் கோட்பாட்டின் நகலாக - பிரதிபலிப்பாக - குலோத்துங்கன் காதல் திகழ்கிறது.

இலக்கியம் படைப்போர் இறைவனை நிகர்த்தவர் என்று ஆய்வாளர் புகழ்கிறார். அவரை அறியாமல் 'இறை' நினைவு வந்து விடுகிறது. தவறில்லை. கவிஞர் இறை மறுப்பவர் அல்லர். மற்ற கவிஞரினின்று மாறுபட்டவர் என்று ஆய்வாளர் நிலைநாட்ட முயல்கிறார். இதையும் ஒப்புக் கொள்ளலாம்; தன்னை ஒரு நாத்திகர் என்று கவிஞர் கூறவில்லை. கடவுள் என்பது பற்றி அவர் கொண்டிருக்கும் கொள்கை வேறுபட்டது. மனிதனே இறைவன் என்ற கொள்கை. புதிய நாத்திகம்!

பெண்ணிழிவுக்கெதிராகக் கவிஞரின் கருத்து மிக உயர்வானது. ஆண்களுக்கு அறிவுரை; வீழ்ச்சியுற்ற பெண்ணினத்துக்கு வழிகாட்டுதல்; இவரது எல்லாக் கவிதைகளும் புரட்சிக் கருத்தை வெளிப்படுத்துகின்றன.

மற்ற கவிஞர்களிடமிருந்து வேறுபட்டு மிகப் புரட்சிகரமாகவே தன் கொள்கைகளைக் கவிதைகளாகப் படைத்திருக்கிறார். கவிஞரின் பெண்ணியச் சிந்தனைக்காக ஓர் ஆய்வே வெளியிடலாம்.

கவிஞர், பெருமைக்கும் புகழுக்கும் உலகக் கவிஞர்களோடு உயர்நிலையில் வைத்துப் போற்றப்படத்தக்கவர் என்பதற்குக் காரணம் அவர் 'மானுடம்' பற்றிப் பாடிய பாடல்கள் தாம்.

'மானுடம் வாழ்க; வெல்க' என்று பண்ணிசைத்துக் குலோத்துங்கன் முகிழ்த்தெழுகிறார். மனிதனைத் தெய்வத்தை விட உயர்வாகக் கருதும் போக்கு கவிஞரிடம் தலைதூக்கி நிற்கிறது.

புதியன காணும் சிந்தையுடைய மனிதனின் சக்தியைக் கவிஞர் அன்புடன், அரவணைப்புடன் சிந்திக்கத்தக்க வழிகாட்டுதலுடன், துணிவுடன் பாடும் பாடல்களை மிகக் கவனமாக ஆய்வாளர் 15 சிறு தலைப்புகள் மூலம் விளக்கியுள்ளார். அது ஆய்வாளரின் ஆய்வுத் திறமையை, கடும் உழைப்பைப் புலப்படுத்துகிறது.

மானுடம் பாடுவேன்: மதியினைப் போற்றுவேன்
நெஞ்சின் திண்மையைப் பாடுவேன் யான்

என்று கவிஞர் மானுடம்பாடும் நேர்த்தியை ஆய்வாளர் விளக்குகிறார்.

பாவேந்தர் பாடலில் பூக்காரியும், வண்டிக்காரனும் பாட்டுடைத் தலைவரானார்கள் என்று ஆய்வாளர் ஓரிடத்தில் குறிப்பிடுகிறார். இராமாயணம், சிலப்பதிகாரம் போல மக்களிடைய அது பரவவில்லை. ஏன்? இங்கு அதை ஆராய்வது என் நோக்கமன்று. திசைமாறிச் சென்றுவிடும். ஆனால், ஆய்வாளர் ஒரு சார்பான சிந்தனையுடையவராயிருந்திருப்பார் என்ற ஐயம் தொடக்கத்திலிருந்தது. ஆய்வாளருக்கென்று சார்புடைய கொள்கை இருக்கக்கூடாது என்றும் சொல்லவில்லை. ஆய்வின் போது தராசு நிலை வேண்டும். ஆனால் மற்ற இலக்கியங்களை மதிப்பிடும் போது சற்று நடுநிலைமையும் தேவை. இந்த ஆய்வு ஏட்டைப் படித்து வரும்போது என் உள்ளத்தில் தோன்றியதை வெளிப்படுத்த விரும்புகிறேன்.

குலோத்துங்கன் மனித வெற்றியைக் காப்பியமாக எழுத வேண்டும் என்பது என் ஆசை. அறிவுரைகள், அறவுரைகள், சமூகத்தைக் குறை கூறல் என்று எல்லாம் கதை வடிவில் இருந்தால் மிக விரைவில் 'குலோத்துங்கம்' சமுதாயத்தில் பரவும், வளரும், நிலைக்கும். இனிப்புப் பூசிய, கசப்புச் சத்துள்ள மாத்திரையைத் தர வேண்டும்.

'குலோத்துங்கன் மானுடம் பாடும் மாக்கவிஞராகவே மிளிர்கிறார்' என்று சமகாலப் பேராசிரியை டாக்டர் உலகநாயகி பழனி கூறுவார். 'ஆழ்வார்கள், பாரதிக்குப் பின் என்னை ஆட்கொண்டவர் குலோத்துங்கன்' என்று கவிதை இலக்கியத் திறனாய்வாளர் இரா. சுராஜ் பாராட்டியுள்ளார். மற்றும் புகழ் பெற்ற திறனாய்வாளர் கைலாசபதி, தமிழறிஞர் தமிழண்ணல், அ.ச.ஞா. ஆகியோர் மனம் நிறைந்து பாராட்டியுள்ளது குலோத்துங்கனின் 'மானுடம்' என்ற கொள்கைக்காக.

வாழ்க மானிடம் அன்பும் இன்பமும்
மலர்க மண்மேலே மன்பதை
வளர்க மென்மேலே

என்று மானிடத்தைப் போற்றி அழியாப் பாடல்கள் பல படைத்துள்ள கவிஞர் குலோத்துங்கனின் மானுட நேயக் கவிதைச் சிறப்புகளை ஆய்வாளர் மிகச் சிறப்பாக எடுத்தியம்பியுள்ளார்.

'காலம் பொன் போன்றது', கண்டனத்துக்குரியவர்கள்,' 'வறுமை எனும் மானுடப் பளு' போன்ற தலைப்புகளில் ஆய்வாளர் மிகக் கவனத்துடன் சிறப்பான பாடல்களை ஆய்வுக்கு எடுத்து விளக்கிப் பெருமை சேர்த்ததைப் பாராட்டித்தானாக வேண்டும்.

இலங்கை - ஈழ நிலை உலக வரலாற்றில் கறுப்பு அத்தியாயங்கள்.

ஈழ மக்கள் படும் துயரைப் பற்றிக் கவிஞரின் பாடல்கள் - உலகம் உள்ள அளவும் மறக்க முடியாத பட்டய எழுத்துக்களாய்த் திகழ்கின்றன. காலம் மாறும். ஆனால், கடந்த கால வரலாற்று நிகழ்ச்சிகளை மாற்ற, மறைக்க முடியாது. நூற்றாண்டுகள் கடந்தும் குலோத்துங்கன் பாடல்கள், ஈழத் தமிழர் - சிங்களர் பிரச்சினையை அழியாக் கல்வெட்டாக நின்று பிற்காலத்தவருக்கு அளிக்கும்.

தாயகத்தில் அனாதைகளாகிவிட்ட ஈழத் தமிழர் தமிழகத்திற்கு அகதிகளாக இடம் தேடி வந்த பொழுது, கலம் கவிழ்ந்து கடலில் மூழ்கினர். இச்செய்தியைப் படித்த கவிஞரின் உள்ளம் அணு உலை போல், ஆயிரம் சூரியன் ஒன்று சேர்ந்த வெப்பம் போல் கொதிக்கிறது.

எரிமலைகள் ஆயிரம் வந்(து)
என்னுள்ளே சேர்ந்தாங்கு
பொறி பரப்பி வெம்மையினால்
பூமியினைத் தீய்ப்பது போல்
பொங்குதடா நெஞ்சம்!

என்று குமுறிய கவிஞர்.

தோணி கவிழ்ந்த கணம்
துணையின்றி நின்றகணம்
பேணியவை அத்தனையும்
பிரியும் பெருஞ்சோகம்
மின்னலென அங்கமெலாம்
விரவுகின்ற நேரத்தில்
என்ன நினைத்தாரோ
எதற்காக ஏங்கினரோ
சடங்கொன்றறியாது
தமர் சூழ்ந்தழுகாது
அடங்கிய இவ்ஆவிகளின்
ஆசைகளை யாரறிவர்

என்று கலங்கிய பாடல், பல நூறு ஆண்டுகளுக்குப் பின்னரும் படிக்கும் சந்ததியினரைக் கண்ணீர் விட்டுக் கதறச் செய்யும்.

'பிஜித் தீவில் ஹிந்து ஸ்திரீகள்' என்ற தலைப்பில் மகாகவி பாரதி பாடல் ஒன்று. ஆண்டுகள் பல ஆகிவிட்டன. நான் முதன் முதலில் படித்த பாடல். ஆனால், இன்றுவரை மனத்தைவிட்டு நீங்கியதில்லை.

'கடலில் ஒரு கல்லறை' என்ற கவிதையைப் படிக்கும் பொழுது பாரதியார் பாடல் நினைவுக்கு வருகிறது. அந்தப் பாடல் இசைக் கச்சேரி மேடைகளில் இராகம் தாளமிட்டுப் பாடும்போது 'விம்மி விம்மி விம்மி யழுகுங் குரல்' என்ற வரிகளைப் பாடும் போது அனைவர் விழிகளிலும் நீர் தேங்கும்; மெல்ல, மெல்ல, கன்னங்களில் வடியும். குலோத்துங்கன் என்ன நினைத்தாரோ, எவ்வாறு ஏங்கினாரோ அவர் உள்ளக்குமுறல் மனத்தைப் பிழிகிறது. இதுதான் பட்டயக் கவிதை. இசைக் கச்சேரிகளில் இசைவாணர்கள் ஒரு பாடலாவது ஈழத் தமிழர் நிலை பற்றிப் பாடலாம்.

திறனாய்வாளர் அந்த ஆய்வுத் தொகுப்பில் எடுத்துக் கூறியுள்ள கவிஞரின் வரிகள் நம்மை மெய்சிலிர்க்க வைக்கின்றன. இனப் பிரச்சினையில், இலங்கையில் தீ பரவிற்று. இலங்கை எரியும் காட்சியைக் குலோத்துங்கன்:

கனவெல்லாம் ஈழத்தின் அவலக்காட்சி
கண்விழித்தால் உயிர்பற்றி எரிவதேபோல்
மனமெல்லாம் எரிகிறது கயவர் செய்கை
மனிதத்தை எரிக்கிறது

என்று கொடுமை தாங்காது குமுறிக் கூறுகின்றார்.

ஈழம் பற்றி எரிகிறது - தமிழ்
இனமே அங்கு அழிகிறது.

என்று ஈழம் எரியும் காட்சியை விளக்கும் கவிஞர், உள்ளுறையாக இலங்கையே எரியும் என எச்சரிக்கிறார். தன் கணவனை அநீதியிழைத்துக்

கொன்ற பாண்டியன் நெடுஞ்செழியனின் மதுரையைத் தீக்கிரை யாக்கினாள் திருமாபத்தினி கண்ணகி. ஒருத்தியான கண்ணகியின் துன்பமே மதுரை மாநகரை அழிக்கும்போது, ஒட்டு மொத்த இலங்கைத் தமிழரின் கண்ணீர் இலங்கையை நிச்சயம் அழிக்கு மென்பது கவிஞரின் கருத்து.

அல்லல்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை

என்பது வள்ளுவர் வாக்கு.

ஈழத் தமிழரின் கண்ணீருக்குக் காரணமானவர்களும் கொடுமை கண்டு குமுறாத உலகமும் ஒரு சேர அழியும் நிலை உருவாகும் என்கிறார் கவிஞர்.

பல்வேறு தலைப்புகள், பாடு பொருள்கள், இலக்கிய வெளிப்பாடு, சிந்தனைகள், கனவுகள் எல்லாம் குலோத்துங்கனின் கவிதைகளில் காணலாம். திறனாய்வாளர் ஆழ்ந்து படித்து அவற்றின் நயம் கூறும் ஆற்றல் பாராட்டுக்குரியது.

குலோத்துங்கன் பாடல்களில் மேலும் பல சிறப்புகள் உள்ளன. நிலையாத உலகில் நிலைத்தவர்கள் என்ற தலைப்பில் பேரறிஞர்கள், கவிஞர்களைப் பற்றிப் பாடி, தமிழ்கூறும் நல்லுலகில் என்றும் அவர்களை நிலைக்கச் செய்துள்ளார்.

பாவேந்தர் பாரதிதாசன், பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார், மகாகவி பாரதியார், நேரு, குன்றக்குடி அடிகளார் - இவர்கள் சிறப்பைப் புகழ்ந்து பாடியுள்ளார். அந்தப் பாடல்களின் சிறப்பை ஆய்வாளர் விளக்கியுள்ளார்.

பாவேந்தரின் கவிநயத்தைக் கூறும் கவிஞர் குலோத்துங்கனின் கவிதைகளில் புதுமை இருப்பதை ஆய்வாளர் சுட்டிக் காட்டுகிறார்.

அறிஞர் அண்ணா மறைவு குறித்துக் குறிப்பிடுகையில், பண்டைத் தமிழகம் கடலால் அழிந்ததைக் குறிப்பிட்டு, அந்தச் சோக வரலாற்றுக்குப் பின்பு தமிழர்கள் இழந்த மாபெரும் இழப்பு பேரறிஞர் அண்ணா அவர்களின் மறைவு என்கிறார்.

ஆய்வாளர்களின் பெரும்பங்கு பாடலாசிரியர் புலமையாகப் புதுமையாகக் கூறும் கருத்தை எடுத்து இயம்புவதுதான்.

தெள்ளு தமிழ் மொழியும், பொன்னி பாயும் செந்தமிழ் நாடும், வள்ளுவர் குறளும் இருக்க, தமிழர்கள் கனவெல்லாம் நீயாகச் சூழ்ந்து நிற்கச் செல்லுலகம் வேறொன்று கண்டாயோ? நின் செந்தமிழ் அங்கில்லையெனில் திரும்புவாயோ?

எனக் கேட்கிறார். பேரறிஞர் அண்ணாவின் புகழுக்கு இந்த ஒரு வரி போதும். இந்தப் புகழ் வரிகளை எடுத்துக் கூறியுள்ள ஆய்வாளரைப் பாராட்ட வேண்டும்.

குலோத்துங்கன் இந்தத் தலைமுறையின் சிறந்த கவிஞராக உருவாவதற்குக் காரணமானவர்களுள் மகாகவி பாரதியும் ஒருவர். பாரதி கண்ட பாரதம் எனும் குலோத்துங்கனின் கவிதை பாரதியின் முழுமைப் படப்பிடிப்பாக அமைந்திருக்கிறது.

கவிஞரின் தாய், தந்தை, தங்கை, தம்பி ஆகியவரைக் குறித்து இரங்கும் இரங்கற்பாக்களிலும் கவிநயம் சொட்டுகிறது. கவிஞரின் இரங்கற்பா பாடலுக்கு இணையாக ஆய்வாளர் எழுத்தாற்றல் சிந்திக்க வைக்கின்றது.

'நெஞ்சில் வெந்துயரத் துன்ப இருள் சூழ்ந்துவிட்டது. நெஞ்சில் ஒளியற்ற உலகம். ஒரு வழியும் காணவில்லை. அம்மா! என்று அழைக்க யாருளர்? நெஞ்சமே வருந்தி அணுஅணுவாக எண்ணம் சிதைந்து இதயம் புரையோடி, வாழ்வு பெருமூச்சாக்கித் தேம்பித் தவியாய்த் தவிக்கிறார்.

குலோத்துங்கனின் நெஞ்சைத் தொடும் கவிதை வரிகளைப் படிக்க வேண்டும். பெற்றோரை இழந்ததால் வாழ்வில் வெறுமை சூழ்ந்த நிலையை நளினமாக்கும் வைர அடிகள் என்று ஆய்வாளர் கூறுவது முற்றும் பொருந்தும்.

தங்கை மறைவுக்குப் பிறகு தங்கையின் உழைப்பையும் இடருக்கு அஞ்சாத தன்மையையும் கூறும் பாடல்கள், மீண்டும் மீண்டும் படிக்கத்தக்கவை.

கல்லிடற முள்ளேறக் கால் நலிந்த நேர மெல்லாம்
உள்ளிருந்து பொன்மகள் நீ ஊக்குவித்தாய் -
வென்றேன் நான்!

என்ற சொற்கள் மூலம் தங்கை மீதுள்ள பாசம் நமக்குத் தெரிய வருகின்றது. கண்ணீர்க் கவிதைகள் அனுபவித்து உணரும்போது தான் பிறக்கும்.

பாசக் கவிதைகள், தமிழ்ப் புகழ் பேசும் கவிதைகள், தமிழர் முன்னேற்றம் குறிக்கும் பாடல்கள், தமிழ்ப் பெருமை கூறும் பாடல்கள், தன்னம்பிக்கையை வளர்க்கும் ஊக்கப் பாடல்கள் போல் குலோத்துங்கனின் சீற்றமிக்க பாடல்களும் மொழிக்கு ஒரு நல்ல மணியாரம்.

'கண்டனத்துக்குரியவர்கள்' என்ற தலைப்பில் ஆய்வாளர் கவிஞரின் எதற்கும் யாருக்கும் அஞ்சாத கண்டனக் கணைகள் நிறைந்த பாடல்களைக் குறிப்பிட்டுள்ளார்.

நிலையினரையும், சிறு பயன் தேடுபவரையும் கருத்துக் குருடர்கள் என்று கவிஞர் சாடுவது இந்தச் சமூக அவல வரலாற்றில் கவிஞரின் அழியா வரிகள். ஆட்சியாளர்களையும், ஊடகத் துறையினரையும் அவர் விட்டு வைத்தாரில்லை. ஆய்வாளரும், குறிப்பிடத் தவறவில்லை.

உலகின் புரட்சிகளைப் பற்றிச் சொல்லி, பாதிக்கப்பட்ட மக்களின் சீற்றமே அடித்தளமானதை உலக வரலாறு உணர்த்துகிறது. உலகப் போக்கை நன்றாக உணர்ந்த கவிஞர் 'மானுடச் சீற்றம் தோற்பதில்லை' என்று பொதுத் தலைப்பிட்டு 17 பாடல்களில் ஏழைகளின் நிலையை இந்தச் சமூகத்துக்கு விளக்கியுள்ளார். செல்வர், வறியவர் வேறுபாட்டின் இடைவெளி விரிந்தால் அதுவே புரட்சிக்கு வித்திடுமென்று அறிவுறுத்தி எழுதிய பாடல்களை ஆய்வாளர் சிறப்பாகக் குறிப்பிடுகிறார்.

வயிற்றைப் பிசைந்து துவண்டு பசி
வாட்டும் நோயிற் புரண்டு
கயிற்றின் புரியெனச் சுருண்டு . . .

ஏழை தவிப்பதாகக் கவிஞர் வேதனையுடன் பாடுவதை ஆய்வாளர் ஒரே ஒரு பாடல் மூலம் கவிஞரின் திறமையைப் புலப்படுத்துகிறார்.

நாராய் நாராய் செங்கால் நாராய்
கையது கொண்டு மெய்யது தழுவி

என்று வரும் வரிகள் பெட்டிக்குள் பாம்பு போல் சுருண்டு கிடக்கும் நிலையை நமக்கு நினைவூட்டுவது ஆய்வாளரின் ஒப்புவமைப் புலமைக்கோர் எடுத்துக்காட்டு.

தமிழரின் பெருமை கூறும் பாடல்கள், தமிழர் இன்னும் உலக அளவில் சாதிக்க வேண்டியுள்ளதைக் கூறும் கவிதைகள், பெண்ணைப் புகழ்ந்து வர்ணிக்கும் பாடல்கள், சிறுமை கண்டு சீறும் பாடல்கள் அனைத்தையும் விட ஏழ்மையை விளக்கும் பாடல்கள் சிலிர்க்க வைக்கின்றன. ஏழ்மை கண்டு அவர்கள் படும் இன்னல் புரட்சிக்கு வித்தாகும் என்று மட்டும் சொல்லாமல்

கட்டிய கோபுரம் அதிர்கிறது
அதன் கவசம் கவிழ்ந்து சரிகிறது
ஒட்டிய வயிற்றின் பசி நெருப்பில்
நம் உயர்வும் கனவும் வேகிறது.

என்று ஏழையின் துயரைச் சித்திரமாய்த் தீட்டும் கவிஞர்

பொறுத்தவர்கள் காலமெல்லாம் பொறுப்பதில்லை
பொங்கினர்க்கு நலம் இது புரிவதில்லை

என்று எச்சரிப்பதை ஆய்வாளர் சுட்டிக் காட்டியுள்ளதற்குப் பாராட்டுகள்.

பெண்மை, வறுமை, மனித நேயம், தமிழன் உயர்வு என்ற தலைப்பில் பாடல்களைத் தவிர மேலும் பலவிதக் கருத்துகள் கொண்ட பாடல்கள் வேறு. பல்சுவைப் பாடல்கள் வேறு. ஆய்வாளர் இரண்டிற்கும் உள்ள வேற்றுமையை, பல்சுவைப் பாடல்கள் என்ற தலைப்பின் மூலம் தெரிவித்து, குலோத்துங்கன் பாடல்களை முற்றிலும் அறிய வழி செய்கிறார். முதுமையை உருவகமாக்க - உருக்காட்சியில் அமைக்கக் கவிஞர் பயன்படுத்தும் சொற்றொடர்கள் மிகுந்த இலக்கிய இன்பம் தருகின்றன. பாரசீகக் கவிஞர் உமர்கய்யாம் தோன்றுகிறார் பாடலில்.

உச்சிப் பொழுதும் சரியுதடா - எனது
உடலின் நிழலும் நீளுதடா
எச்சப் பொழுதும் விரையுதடா - வரும்
இருட்டின் அடர்த்தி பெருகுதடா. . .
வீணையின் இன்னிசை மங்குதடா, என்
விரல்களின் நடனம் தளருதடா . . . .

* * * *

காலம் தீர்ந்தது கணக்கெங்கே எனக்
காதினில் ஓர்ஒலி விழுகுதடா"

என்று முதுமையின் நெருக்கம் படர்வதையும் வாழும் ஒளி குன்றி, இருள் நிறைவதையும் உருவகத்தாலே விளக்கி, முதுமையின் படி நிலைகளை உணர்த்துகிறார்.

முதுமையை உருவமைக்கக் கவிஞர் எழுதிய பாடல்கள் சோகப் பண்ணிசைத்தாலும் கவிநயம் மிக்கதாகத் திகழ்கின்றன.

> இந்தப் பாடலை ஆசிரியர் தவிர்த்திருக்கலாம் என்று தோன்றுகிறது. கவிதை இன்பத்தில் தனக்குள்ள இவ் அவலப் பாடலால் கரை காணாத் துயரில் துடிக்கிறது. நீரினின்று தரையில் விடப்பட்ட மீன் போல, கவிஞர் நெஞ்சில் கனத்த சுமையை ஏற்றுவது

என்ற ஆய்வாளரின் கூற்றை ஏற்க முடியவில்லை.

ஆய்வாளர் பிறகு சிந்தித்திருப்பார் போலும். 'முதுமை' பற்றிப் பேசிய முனைவர் வா.செ. குழந்தைசாமி, குஞ்சுகளின் கோரிக்கை என்ற பாடலில் இளைஞர்களின் எண்ணங்களை எடுத்துக் காட்டுகிறார்.

வானத்தில் பறக்க இடம் இல்லை எனக் கூறித் தடுக்காதீர்
எங்களுக்கு நீங்கள் இறக்கைகளைக் கொடுங்கள்
இடமிருக்கும் உயரம்வரை நாங்கள் எழும்புவோம்.

என்ற பாடல் வரிகளை எடுத்துக் கூறி நம்மைச் சமாதானப்படுத்துகிறார்.

'குலோத்துங்கன் கவிதைகள்' என்ற தலைப்பில் ஆய்வேட்டில் ஆய்வாளர் விரிவாக ஆய்ந்தளித்துள்ளவற்றைச் சிறப்பித்து எழுதத் துடிக்கிறேன். பக்கங்கள் போதா.

இலக்கியம் படைப்போர் இறைவனுக்கு நிகரானவர்கள். இறைவன் உலகைப் படைக்கிறான். எழுத்தாளன் இலக்கியம் படைக்கிறான். இருவருக்கும் படைப்பு, தொழில் என்று தன்னுரையில் கூறும் ஆய்வாளர், குலோத்துங்கன் கவிதைகள் மென்று சீரணிக்கத் தகுந்த நூல்களில் முக்கிய இடம் பெற்றுள்ளன.

குலோத்துங்கனைக் கவிஞராக மட்டும் நாம் கருதக்கூடாது. அவர் புதிய தத்துவம் கண்டவர். புத்துலகம் படைக்க விழிப்புடன் வந்தவர். புத்தர், வள்ளலார், விவேகானந்தர், பாரதியார் போன்று ஒரு புதுமை வழிகாட்டியாக, மார்க்கத்தரிசியாக அமைந்தவர் என்பதைப் பாடல்களில் பல இடங்களில் காணலாம்.

இந்த 21-ஆவது நூற்றாண்டில் கவிஞர்கள் பலர் கவிதைவழித் தம் கருத்துகளைக் கூற முற்படுகின்றனர். தாங்கள் 'இலட்சியக் கவிஞர்' என்று கவிதை மூலம் நிலைநாட்ட முயன்றாலும் அழுத்தமாக 'வழிகாட்டுதல்' கூறாது முடித்து விடுகிறார்கள்.

'இலக்கணத்தின் இலக்கியம் இந்தக் கவிதை நூல்' என்று ஆய்வாளர் கூறுவது சத்தியவாக்கு. குலோத்துங்கனின் கவிதை நயத்தில் முற்றிலும் திளைத்ததால் குலோத்துங்கனின் உள் மனத்தைக் கவிதை வழி மிகவும் உணர்ந்தவராக ஆய்வாளர் திகழ்கிறார்.

> ...... உண்மையைக் கலப்பின்றி உரைப்பவராக உள்ளார் கவிஞர். எச்சூழலிலும் எவருக்காகவும் தாம் உணர்ந்த விரும்பிய மெய்ம்மைகளைத் திரையிட்டுச் சமரசம் செய்து கொள்ளாத நேர்மையான துணிச்சலான எழுத்து குலோத்துங்கன் கவிதை. இதனால் இவரைப் பிடிவாதக் காரர், பித்தர் என்று சூடிய பட்டங்களை மகிழ்வுடன் ஏற்றுக் கொண்ட மாமனிதர்

என்ற ஆய்வாளரின் முடிவை ஏற்பதில் இருவிதக் கருத்துகளுக்கு இடமில்லை.

ஈழத்து அறிஞர் சிறந்த திறனாய்வாளர் கலாநிதி கைலாசபதி அவர்கள் கூறும் வார்த்தைகள்:

> குலோத்துங்கன் கவிதைகளில் உணர்ச்சிக்கு அதிக இடத்தைக் கொடுத்தாரில்லை. உணர்ச்சிக்கு மேலாகச் சிந்தனையே - அதாவது கருத்தே ஓங்கி நிற்கின்றது.

நூற்றுக்கு நூறு சரியான முடிவு.

குலோத்துங்கன் கவிதைகளில் நயங்களின் சிறப்பு என்ன? ஆய்வாளர் விரிவாக இந்தப் பகுதியில் விளக்கியுள்ளார்.

அணிகள், உவமைகள், புதிய உவமைகள், புதிய செய்திகள், உருவகங்கள், கருத்துச் செறிவுகள் இவை யாவும் நிறைந்திருப்பதை - கவிதை நயத்தைக் கவிஞரின் பல பாடல்கள் மூலம் ஆய்வாளர் விளக்கி மற்ற கவிஞர்களிடமிருந்து குலோத்துங்கன் எவ்வாறு வேறுபட்டுள்ளார் என்பதை மிகத் தெளிவாக ஆய்வு செய்ததற்காகத் திரு. குழந்தைவேலனாருக்கு இரு முனைவர் பட்டமளிக்கலாம்.

'குலோத்துங்கன் கவிஞருள் சிறந்த கவிஞர்' என்று தமிழண்ணல் கூறுவதும், 'குலோத்துங்கன் கவிதைகளுக்குத் தமிழிலக்கிய உலகில் கிடைத்திருக்க வேண்டிய அங்கீகாரச் சிறப்பு இதுவரையில் கிடைக்கவில்லை' என்று 1983-ஆம் ஆண்டிலேயே கவிஞர் பெ.தூரன் வெளிப்படுத்தியுள்ள ஆதங்கமும் மற்றும் பல மேதைகள் கூறும் பலவிதப் பாராட்டுகளும் மிக மிக மெய்யாகும்.

திரு. குழந்தைவேலு 'குலோத்துங்கன் கவிதைகள் - ஒரு கோபுரதீபம்' என்ற தலைப்பிட்டுக் கவிதைத் தொகுதி முழுமையும் திருத்தல யாத்திரை போல் முழு ஈடுபாட்டுடன் பயணம் செய்து ஆழ்ந்து சுவைத்துக் கவிநயத்தை நமக்களித்திருக்கிறார்.

அமுதத்துளிகளில் எந்தத் துளி சிறப்பானது என்று கூற முடியாத அளவுக்குக் குலோத்துங்கன் கவிதைகளை இந்த ஆய்வில் நமக்களித்திருக்கிறார்.

'குலோத்துங்கன் கவிதை - ஒரு கோபுரதீபம்' என்ற ஆய்வின் சிறப்பை நயம் விளக்கிய புலமையை எடுத்துக் கூறி அணிந்துரை எழுத வந்த நான், குலோத்துங்கன் கவிதைகளில் முற்றிலும் மூழ்கி விட்டேன்.

குலோத்துங்கன் தீபம், கோபுர தீபமோ, குடத்திலிட்ட ஒளிவிளக்கோ, கலங்கரை விளக்கோ. . . எந்தப் பெயரை வேண்டுமானாலும் சூட்டலாம். என் முடிவு, மானுட உயர்வுக்கு எழுதப்பட்ட வேத நூல். குலோத்துங்கன் கவிஞர் மட்டுமல்லர்; அவர் ஓர் இயக்கம். இடையில் நான் கூறியதைப் போன்று புதிய மார்க்கம் கண்ட தத்துவஞானி. குலோத்துங்கம் என்ற புதிய சிந்தனையைத் தூண்டியவர்.

இறுதியாக எனக்குத் திகைப்பு ஏற்படுகிறது. என்ன எழுதி முடிப்பது? ஆய்வாளரின் ஆற்றலையா? ஆய்வுக்கெடுத்துக் கொண்ட குலோத்துங்கன் கவிதைச் சிறப்பையா?

கவிஞர் குலோத்துங்கன் ஆய்வாளரை முதன்முதலில் பாராட்டும்போது 'நானே என் கவிதைக்குத் திறனாய்வு செய்தாலும் உங்களின் திறனாய்வு போன்று செய்திருக்க முடியாது' என்று பாராட்டியதை விட, நான் என்ன சொல்லிப் புகழ்ந்திட முடியும்.

நான் ஒரு முறை குலோத்துங்கனிடம் கூறினேன்.

> தங்கள் பாடல்கள் சிலவற்றை மெட்டமைத்து இசை அரங்குகளில் பாடினால், பலர் மனத்தில் ஆழப் பதிந்துவிடும்.
>
> (இந்தக் கருத்தையே டாக்டர் கா. மீனாட்சிசுந்தரம் அவர்களும் கூறியிருக்கிறார்கள்.).

இந்தக் கவிதை மாளிகையைக் கட்டி முடிக்கக் குலோத்துங்கன் ஏறத்தாழ 52 ஆண்டுகள் முனைந்திருக்கிறார். 704 பக்கங்களுடன் வெளியிட்டுள்ளார். அரை நூற்றாண்டு அயராத உழைப்பின் சிறப்பை இரசித்துப் பாராட்ட ஒரு சிலரே போதும் என்ற கவிஞரின் சொற்களில் உயர்ந்தோர் சிலர் உணர்ந்து பாராட்டினால் போதும் என்ற மன நிறைவு இருக்கிறது. இதை 'அடக்கம்' என்பதை விட வேறு கூற வார்த்தைகளில்லை.

திரு. குழந்தைவேலு, குலோத்துங்கன் பாடல்களுக்காகவே அவரை நேசித்தார். கவிதை இன்பத்தில் திளைத்தார். குலோத்துங்கன் கவிதைகளில் ஈடுபாடு கொண்டால் மட்டும் போதாது. அவர் வழிகாட்டுதல்களில் ஈடுபாடும் அவருடைய கொள்கைகளில் பூரண நம்பிக்கையும் கொண்டவராக இருக்க வேண்டும். ஸ்ரீ சங்கரர், ஸ்ரீ இராமானுஜர், ஸ்ரீ மத்துவர் போன்ற ஈடுபாடுடையவர்கள் வேண்டும். ஆனால் முந்தையவர்கள் போல் மூன்று வர தத்துவத்தை ஏற்படுத்தி விடக்கூடாது.

திரு. குழந்தைவேலு, குலோத்துங்கன் சித்தாந்தங்களில் முழுமையாகத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டதால் 704 பக்கங்களையும் தம் ஆய்வில் கொண்டு வந்துள்ளார். அது ஆய்வு நூல் அன்று; அதை விடச் சிறந்த வேறு நல்ல பெயர் சூட்ட வார்த்தைகளைத் தேடுகிறேன்.

இன்னும் எழுத வேண்டும்; இன்னும் எழுத வேண்டும் என்ற அவா என்னுள் மோதுகிறது. கட்டுப்படுத்திக் கொண்டேன்.

அரசியல் அறிஞர் என்று மட்டுமே பலரால் அறியப்பட்ட சி.சுப்பிரமணியம் அவர்கள் கல்விக்கு ஆற்றிய தொண்டு மகத்தானது. அவர் பாராட்டுகிறார் என்றால் அதற்கு மேல் முறையீடே கிடையாது. அவர் உரையினின்று சில வரிகளைக் கூறி நிறைவு செய்கிறேன்.

> இந்தப் புதுயுகத்தை எட்டுவதில் தமிழன் நிலை என்ன என்பதை ஆராய்ந்து பாரதியார் காட்டிய வழியின் அடிப்படையில் தமிழ் இனத்திற்கு வழிகாட்டிப் பணியேற்க முன் வந்துள்ளார், 'குலோத்துங்கன்' எனும் புனை பெயரில் கவிதைகள் இயற்றும் விஞ்ஞானி பேரா. வா.செ. குழந்தைசாமி. தற்காலத் தமிழ்க் கவிஞர்களில் இவருக்குள்ள ஒரு தனிச் சிறப்பு இவர் சிறந்த அறிவியல் நிபுணர்.

விதியே விதியே தமிழச் சாதியை
என் செயக் கருதி இருக்கின்றாயடா?

என்று வருந்தும் இவர் கவிதை நம் உள்ளத்தைத் தொடும் வகையில் அமைந்திருக்கிறது. இது தமிழினத்தைத் தட்டி எழுப்புமா என்ற கேள்வி நம்முன் தோன்றுகிறது.

'விதியே விதியே தமிழச் சாதியை என் செய்யக் கருதியிருக்கிறாயடா' என்ற பாரதியாரின் வரிகள்தான் குலோத்துங்கனை உலுக்கிவிட்டன என உணர்கிறேன்.

விவேகானந்தர் போன்றவர்கள் எவ்வகைச் சக்தியால் மக்களை விழிப்புணரச் செய்தனரோ அதே சக்தி குலோத்துங்கன் கவிதைகளுக்கும் உண்டு. திரு. குழந்தைவேலு போன்ற நூற்றுக்கணக்கானவர்கள் மேலும் அணுஅணுவாக ஆய்ந்து குலோத்துங்கன் மார்க்கத்தை - 'குலோத்துங்கத்தை' மக்களிடையே பரப்பாமலா இருக்கப் போகிறார்கள்.

காலம் கனியும்; காலம் மாறும்.

விக்கிரமன்

என்னுரை

உலக அறிவியல் பேரறிஞர்களில் ஒருவர்; மாபெரும் தமிழ் மரபுக் கவிஞர் என மிளிர்பவர்; செம்பொன் எழில்மலர்; மனம் மகிழ் மனம் நிறை மாட்சியினை நிகர்க்கும்; அந்த மாமனிதரே "குலோத்துங்கன் கவிதைகள்" எனும் நூலின் ஆசிரியர் முனைவர் வா.செ. குழந்தைசாமி அவர்கள். மாமேதையுடன் என்னை இணைத்தவை தினமணி நாளிதழும் தினகரன் ஞாயிறு மலர் வசந்தமும் ஆகும். நிலைமாறா நன்றியுடன் இவ் இதழ்களை நினைவில் கொள்கிறேன்.

தினமணியில் வருகின்ற முனைவர் அவர்களின் கருத்தாழம், தர்க்க ரீதியான அணுகுமுறை, இலக்கிய மேற்கோள்கள், குலோத்துங்கன் கவிதை அடிகள் கொண்ட கட்டுரைகள் ஆசிரியர் மீது மிகுந்த மரியாதையையும் பாசத்தையும் உருவாக்கி வளர்த்தன. கட்டுரைகளில் வரும் குலோத்துங்கன் கவிதைகளின் மரபும் அறிவியல் இணைந்த பழந்தமிழ்ப் பாடல்களின் நயமும் குலோத்துங்கன் கவிதைகளைப் படிக்கும் ஆர்வத்தை ஊட்டின. "குலோத்துங்கன் கவிதைகள்" நூல் வெளியீடு பற்றிய செய்தியையும் தினமணியில் கண்டேன். தேடிச் சென்று இந்த நூலை வாங்கித் தந்த நெல்லை இராதாசுவாமி கடிகாரக் கடை உரிமையாளர் அன்புச் சகோதரர் நா. அரி கிருஷ்ணன் அவர்கள் என்றும் என் நன்றிக்கு உரியவர்.

தம் நெஞ்சில் - வாழ்வில் - நீங்காது நிலை பெற்ற நினைவுகளைப் பற்றி, மிக உயர்ந்த பெருமக்கள் தினகரன் ஞாயிறு மலர் வசந்தத்தில் மிகச் சுருக்கமாகக் குறிப்பிட்டிருந்தார்கள். தம் கல்விக்கு உறுதுணையாக இருந்து, நாளெலாம் துன்பத்தையே துணையாகக் கொண்டு வாழ்ந்த தந்தை, சகோதரி இருவரும், தாம் பதவி பெறும் முன்பே மறைந்து விட்ட சோகச் செய்தியை முனைவர் வா.செ.கு. அவர்கள் வெளியிட்ட பாங்கு என்னைக் கண்ணீர் விடச் செய்தது.

கண்ணீரோடு ஒரு கடிதம் எழுதினேன். அவலத்தைப் பகிர்ந்து கொள்ளும் ஆறுதல் கடிதம் தான் அது. மிக விரைவில் பதில் பெற்றேன்.

"ஆழ்மனத்தில் அழுந்திக் கிடக்கும் உணர்வுகளை, ஒத்த உணர்வுடையோரால் தான் புரிந்து கொள்ள முடியும் . ..." என்று குறிப்பிட்டிருந்தார்கள். புழு நிகர்த்த எனக்குக்கூடப் புகழ் மலையினும் மாணப் பெரிய மாமேதை பதில் எழுதிய பாங்கும் என்னை மிக நெருக்கமாகக் கொண்ட பண்பும் என்னை அடிமையாக்கின. கடிதத் தொடர்பு, தொய்வின்றி வளர்ந்தது.

"குலோத்துங்கன் கவிதைகள்" நூலின் அட்டையின் கடைசிப் பக்கக் கவிதைக்கு 14 பக்கங்களில் ஒரு திறனாய்வு எழுதி அனுப்பினேன். திறனாய்வு பற்றி இவ்வாறு எழுதியிருந்தார்கள். "நானே என் கவிதைக்குத் திறனாய்வு செய்தாலும் உங்களின் திறனாய்வு போன்று செய்திருக்க முடியாது." மனம் திறந்து பாராட்டும் இந்த மாமனிதரை நான் தெய்வமாகவே கண்டேன்; காண்கிறேன்; காண்பேன்.

நான்கு அடிகள் கொண்ட கவிதையை நன்கு எழுதத் தெரியாதவன், புழுக்கம் கொண்டு, பிறரின் சிறப்பைப் போற்ற மறுக்கும் இந்நாளில், நேரில் கண்டறியாத என்னை - யார் என்றே உலகுக்குத் தெரியாத என்னை - மூன்று பல்கலைக்கழகங்களின் துணை வேந்தர் - டாக்டர் பட்டம் பல பெற்ற பேர் அறிஞர் மனம் திறந்து பாராட்டுவதை எம்மொழி கொண்டு எடுத்துரைக்க; போற்றிட!

704 பக்கங்கள் கொண்ட கவிதை நூலுக்கு முழுத்தாளில் 269 பக்கங்கள் கொண்ட திறனாய்வை 10.04.2004 இல் தொடங்கி 23.08.2004 இல் எழுதி முடித்தேன். கற்றோர் அனைவரிடமும் சென்றடைய வேண்டுமென்பதை எண்ணி, இந்த அளவுக்கு நூல் சுருக்கப் பெற்றது. எழுதிய பகுதியை என்னால் குறைக்க முடியவில்லை. என் நூலின் சிறப்புக்கு உறுதுணை புரிந்தவர் - என்றும் என் வணக்கத்துக்குரிய பேராசிரியர் - எம்.ஃபில் வழிகாட்டி டாக்டர் சொ. பொன்னுசாமி அவர்கள். என் உயிரின் மூச்சு உள்ளவரை, நன்றி சொல்லியே சுவாசிக்கும்.

கையெழுத்துப் பிரதியைக் கணினி அச்சேற்றிப் பேர் உதவி புரிந்த அன்புச் சகோதரர் நங்கநல்லூர் ந. நாகராஜன் அவர்களுக்கு நான் உளம் நிறைந்த நன்றி சொல்கிறேன்.

டாக்டர் சாமுவேல் ஜான்சன் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய பாஸ்வெல் அவர்களைப் பற்றிக் குறிப்பிடும் திறனாய்வாளர்களில் ஒருவர், "முட்டாள் ஒருவன் மிகச் சிறந்த வாழ்க்கை வரலாற்றை (Biography) எழுதியுள்ளான்" என்று குறிப்பிடுவதாகப் படித்த நினைவு, இப்போது நிழலாடுகிறது நெஞ்சில்.

ஏறத்தாழ நான்காண்டுகள் கடிதத் தொடர்பாகவும் தொலைபேசித் தொடர்பாகவும் எங்கள் தொடர்பு தொடர்கிறது. நேரில் பார்த்ததில்லை. ஒரு தடவை சன் தொலைக்காட்சிக்கு நன்றி சொல்கிறேன்.

> Of Lorna, of my life long darling. Of my more and more loved wife, I will not talk, for it is not seemly that a man should exalt his pride. Year by year, her beauty grows with the growth of goodness, kindness and true happiness above all with loving.

> லோர்னா என் வாழ்நாள் காதலி, பொழுதொரு வண்ணமாய் நாளும் வளரும் பாசத்துக்குரிய காதல் மனைவியைப் பற்றி நான் எதுவும் கூற மாட்டேன். ஏனெனில், ஒருவன் தான் பெற்ற அரும் பேற்றினைப்

> போற்றுதற்குரியதன்று. வயது ஏற, ஏற அவளின் மாட்சி, கருணை, உண்மையான மகிழ்வு, அனைத்திற்கும் மேலாக என் மீது கொண்டுள்ள காதல் வளர்ந்து வருவது போன்று, அவளின் அழகு வளர்ந்து வருகிறது.

என்று பிளாக்மூர் எனும் ஆங்கில நாவலாசிரியர் "போர்னா டூன்" எனும் புதினத் தலைவன், தன் மனைவி பற்றிக் கூறுவதாகக் கூறும் கருத்து, தலைவன் - தலைவியின் அன்புப் பிணைப்பின் பரிமாணம் காட்டும் விளக்கமாகும். பாசச் சிகரத்தின் பளிங்குக் காட்சி!

இந்நிலையுடன் வடலூர் அருட்சோதி வள்ளலார் அவர்கள் இறைவனைத் தந்தையாகக் கொண்டு தம் பிணைப்பை விளக்கும் பாங்கில், நான் பேரருளாளர் அறிவியல் அறிஞர் வா.செ. குழந்தைசாமி அவர்களைக் காண்கிறேன். இமயம் நிகர்த்த கொஞ்சு தமிழ் மரபுக் கவிதையின் சிறப்பொடு, வான் பரந்த அருள் உள்ளம் கொண்ட பெருநிலை மனித நேய மாமனிதர் என்பதால் "திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேன்" எனும் நிலையில் நிலைத்து நின்று போற்றுகிறேன். கவிதை நூலைத் திறனாய்வு செய்ய உரிமை தந்த அருளாளருக்கு என் உளம் நிறைந்த நன்றி கூறுகிறேன்.

முழுமையையே விரும்புகிறேன். என் ஆய்வு அணுகுமுறையில் குறை கண்டால், அருள் கூர்ந்து ஆக்கப் பூர்வ அறிவுரை, இடித்துரை வழங்கி, பூரணத்திற்கு ஒளி காட்ட வேண்டுகிறேன். குலோத்துங்கன் சிறப்பை உணர்த்தவே இப்பணியை மேற்கொண்டேன். என்னிலும் சிறந்தோர் பலருண்டு. நன்கறிவேன். இன்னும் பல கோணங்களில் குலோத்துங்கன் கவிதைகளை அணுகித் தமிழின் பரப்பைப் பல்கிப் பெருகச் செய்திட வேண்டுகிறேன். பழந்தமிழ் மரபு கொண்ட பாடல்கள்; அவற்றின் புகழ் மணம் புவியில் பொங்கிப் பரவிட ஆவன செய்ய வேண்டுகிறேன்.

"குலோத்துங்கன் கவிதைகள் - ஒரு கோபுர தீபம்" தான் என்பதை, உண்மை வெறும் புகழ்ச்சியில்லை என்பதைக் காலம் உறுதி செய்யும் என நம்புகிறேன்.

வாழ்க முனைவர் வா.செ. குழந்தைசாமி அவர்கள். வளர்க, "குலோத்துங்கன் கவிதைகள்" புகழ். வாழ்க உலகெலாம்.

அன்புடன்

மு. குழந்தைவேலு

1. ஆய்வு ஓர் அறிமுகம்

1.0. ஆய்வுத் தலைப்பு

"குலோத்துங்கன் கவிதைகள் - ஒரு கோபுரதீபம்" என்பது இவ் ஆய்வு நூலின் தலைப்பாகும். தற்காலக் கவிதை இலக்கியத்துக்குக் கிடைத்த அருமருந்தன்ன, அற்புதமான மாநிதியமாம் குலோத்துங்கன் கவிதைகள், வாழ்வியலின் மெய்ப்பாடுகள் எட்டினை மொழி, அரசியல் மாந்தர்தம் நிலைகள், சாதி, பெண்ணியம் பற்றியும் கடல் கடந்த தமிழரின் கண்ணீர்க் கதைகளையும் துல்லியமாகவும், துணிச்சலாகவும் படம்பிடித்து எண்பான் சுவையில் உணர்த்துகின்றன.

குணம்நாடிக் குற்றமும் நாடி யவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்

என்பது அய்யன் திருவள்ளுவரின் அமுத வாக்கு. இந்நூலில் சிறப்பு ஒளி மிகுதியாக இருப்பதால், குறளோவிய நெறி நின்று, "குலோத்துங்கன் கவிதைகள் - ஒரு கோபுரதீபம்" (கலங்கரை விளக்கம்) என்ற தலைப்பினைப் பெறுகின்றது இந்த நூல் பற்றிய ஆய்வு.

1.1 ஆய்வுப் பொருள் விளக்கம்

"குலோத்துங்கன் கவிதைகள்" பல பாடல்கள் கொண்ட தொகுப்பு நூல். இதன் ஆசிரியர் கவிதைகளைப் பொருள் வாரியாக அடியிற்கண்ட 18 தலைப்புக்களில் பகுத்துள்ளார்.

இப்பதினெட்டுப் பொதுத் தலைப்புகளில் வெளியான 261 பாடல்களும்

1. வளர்க தமிழ்
2. வாயில் திறக்கட்டும்
3. விண்சமைப்போர் வருக!
4. கதவுகள் காப்பதில்லை
5. விதியே! விதியே! தமிழச் சாதியை
6. அணையாத் தீபம்

என்னும் நூல்கள், மற்றும் நாள், வார, மாத, ஆண்டிதழ்களில் வெளிவந்த கவிதைகளாகும்.

1.2. ஆய்வின் நோக்கம்

சிந்தனைச் சீர்மை; சீர்திருத்த நோக்கு; சமயச் சார்பின்மை; பொருளியல் சமத்துவம் போன்றவற்றில், மகாகவி பாரதி, புரட்சிக் கவிஞர்

வஎண்	தலைப்பு	பாடல்கள்
1	ஆசைத்தீயின் சுடருடையேன்	5
2	பெரியன பெற ஒரு பித்தனும் வேண்டும்	16
3	ஒரு சிலரும் போதும் நான் ஒருவனே போதும்	22
4	வையம் தரும் இன்பம், வானம் தருவதில்லை	15
5	புதுயுகம் மலர்வதைப் பாடுகின்றேன்	23
6	மலைஏறின் முடிதொடு முன் மகிழ்த இல்லேன்	22
7	மானிடச் சீற்றம் தோற்பதில்லை	17
8	சாதித்தீயில் தமிழினம் வெந்தது	9
9	விதியே ! விதியே ! தமிழச் சாதியை...?	31
10	பெண்ணிற் பெருந்தக்க யாவுள?	13
11	நெஞ்சிருக்கும் வரையிலும் நிறைந்திருப்பாய்	9
12	பூரணத்தின் இருபாதி ஆணும் பெண்ணும்	7
13	நிலமகள் நோதல் இன்றி, நிறை பயன்	7
14	சிலை இவர்க்குச் செய்வதெனின் செம் நாணும்.	17
15	தன்னைத் தாண்டவம்	14
16	காவியங்கள் கலைகள் அவன் பெருமை பேசும்.	10
17	தன்வலிமை நம்பி அவர் தலைநிமிர்ந்தார்	11
18	இருவரை இழந்த வாழ்வு எத்தனை இழந்ததம்மா !	13
	மொத்தம்	261

பாரதிதாசன், மனிதப் பெருநோக்கும் மாபெரும் சிந்தனைகளும் ததும்பும் பேரறிஞர் அண்ணா, உலகச் சமுதாயச் சீர்திருத்தப் பெரியார்கள் வரிசையில் சிறப்பிடம் பெறும் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், ஆன்மீகத்தை அறிவியலுடனும் பகுத்தறிவுச் சிந்தனையுடனும் இணைத்த தவத்திரு குன்றக்குடி அடிகளார், இராவண காவியம் யாத்த புலவர் குழந்தை, கவிஞர்கள் முடியரசன், சுரதா போன்ற பெருமக்கள் வரிசையில் இடம் பெறுபவர் எழுத்து வேந்தர் வா.செ. குழந்தைசாமி.

மொழியுணர்வு, மொழிகாக்கும் - உயர்த்தும் - பாங்கு, சமுதாய நலன் சேர்த்தல், பொருளாதாரச் சீர்திருத்தம், அரசியலில் ஆக்கம் இணைத்தல், மதப் புனிதத்தின் இன்றியமையாமை போன்ற சிறப்பான கருத்துக்களை உள்ளடக்கியுள்ள, படைப்புக்களைத் தந்துள்ள இவர் பண்புமிகுந்த பகுத்தறிவாளர். பைந்தமிழ்ப் புலவரின் கவிதைச் சிறப்பைத் தமிழ் கூறு நல்லுலகம் கண்டுணர்ந்து, சுவைத்து, மகிழ்ந்து, பண்பும் பயனும் பெற ஆற்றுப்படை நூலொன்று வேண்டுமென்ற விருப்பத் தாலேயே, இத்திறனாய்வு எழுதப் பெறுகின்றது. யாம் பெற்ற இன்பத்தை, இவ்வையமும் பெறுதல் வேண்டு மென்பதே ஆய்வின் நோக்கமாகும்.

இவ்வாய்வில் "குலோத்துங்கன் கவிதைகள்" பற்றிய ஓர் அறிமுகம் தரப்பட்டுள்ளது. இந்த ஆய்வில் விளக்க முறையில் (Descriptive Method) ஆராய்வது, தவிர்க்கப்பட முடியாததாகும். எனவே விளக்க முறையைப் பின்பற்றி இந்த ஆய்வுத் தலைப்பு ஆராயப் பெறுகின்றது.

1.3 ஆய்வின் எல்லை

குலோத்துங்கன் கவிதைகள், பாரதி பதிப்பகம், முதற் பதிப்பு, ஜூலை 2002இல் வெளியிடப் பெற்றுள்ளது. "குலோத்துங்கன் கவிதைகள்" 18 தலைப்புகளில் உள்ள 261 பாடல்களும் ஆய்வுப் பொருட்களாக எடுத்தாளப் பெற்றுள்ளன.

1.4 ஆய்வேட்டின் அமைப்பும் பகுப்பும்

ஆய்வேடு 14 இயல்களாகப் பகுக்கப் பெறுகின்றது.

1. ஆய்வு ஓர் அறிமுகம்
2. தமிழும் தமிழரும்
3. சாதித் தீயில் தமிழினம்
4. பூரணத்தின் ஒரு பாதி
5. மானுடம்
6. காலமும் முயற்சியும்
7. இன்னற் கடலில் ஈழக் கலம்

6. காலமும் முயற்சியும்

7. இன்னற் கடலில் ஈழக் கலம்

8. நிலையா உலகில் நிலைத்தவர்

9. கண்டனத்துக்குரியவர்கள்

10. வறுமை எனும் மானிடப் பகை

11. பல் சுவைப் பாடல்கள்

12. கவிதை நயம்

13. கொள்கைகள்

14. நிறைவுரை

1.5 இயல் விளக்கங்கள்

"ஆய்வு ஓர் அறிமுகம்" என்னும் முதலாவது இயல், இந்த ஆய்வு பற்றிய பொது விளக்கமாக அமைகின்றது. ஆய்வுத் தலைப்பு ; ஆய்வுப் பொருள் விளக்கம், ஆய்வின் நோக்கம், ஆய்வின் எல்லை, ஆய்வேட்டின் அமைப்பும் பகுப்பும், இயல் விளக்கங்கள் என்னும் உட்தலைப்புகள் ஆகியன இவ்வியலில் இடம்பெறுகின்றன. கவிஞரின் வாழ்க்கை பற்றிய சிறு குறிப்பும் இடம்பெறுகிறது.

"தமிழும் தமிழரும்" என்னும் இரண்டாம் இயலில், குலோத்துங்கன் அவர்களின் தமிழ், தமிழர், தாய்நாடு பற்றிய எண்ணங்கள் விளக்கப்படுகின்றன.

"சாதித் தீயில் தமிழினம்" என்ற மூன்றாவது இயலானது சமுதாயத்தில் சாதி, சமயம் பற்றிய நிலைகளை உணர்த்துகிறது.

"பூரணத்தின் ஒரு பாதி" என்ற நான்காம் இயலில் பெண்ணின் மாட்சி, இடைக் காலத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி, இன்றைய பெண்களின் நிலை, எதிர்காலம் சிறக்க மேற்கொள்ளப்பட வேண்டிய சமூகப் பணி போன்றவை எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

"மானுடம்" என்னும் ஐந்தாவது இயல், மனிதனின் ஏற்றம் குறித்துப் பேசுவதாக அமைகின்றது.

"காலமும் முயற்சியும்" என்னும் ஆறாவது இயல், கண் போன்ற காலத்தின் அருமையையும் திருவினை இணைக்கும் முயற்சியின் பெருமையையும் விளக்குவதாக அமைகின்றது.

"இன்னற் கடலில் ஈழக் கலம்" என்ற ஏழாம் இயல் ஈழத் தமிழர், போராட்டம் பற்றி விளக்குகிறது.

"நிலையா உலகில் நிலைத்தவர்" என்னும் எட்டாம் இயல், நூலாசிரியரின் போற்றற்கும் புகழ்தலுக்கும் உரிய பெற்றோர் பெருமக்கள்,

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, பண்டித நேரு, தவத்திரு குன்றக்குடி அடிகளார், பாவேந்தர் பாரதிதாசன், மகாகவி பாரதியார் போன்றோரை நினைவுபடுத்தி, வாழ்த்துவதாக உள்ளது.

"கண்டனத்துக்குரியவர்கள்" என்னும் ஒன்பதாவது இயல், இழி செயல்புரிந்து, சமுதாய நலன் அழித்தோரைப் பழித்துரைப்பதாக அமைகின்றது.

"வறுமை எனும் மானிடப் பகை" என்னும் பத்தாவது இயல் வறுமையின் கொடுமை, வறுமைக்குக் காரணம், வறுமை ஒழிக்கப்பட வேண்டியதின் இன்றியமையாமை; ஒழிக்கப்படாவிட்டால் எதிர் கொள்ளப்பட வேண்டிய விளைவுகள் ஆகியவை பற்றி விளக்குகிறது.

"பல்சுவைப் பாடல்கள்" என்னும் பதினோறாவது இயலில், தஞ்சைக் கதம்பம் போல், பழனிப் பஞ்சாமிர்தம் போல், பல மணி, நவ மணி மாலைபோல் தனித் தலைப்புக்களில் இடம்பெற இயலாப் பாடல்கள் ஒன்றிணைக்கப் பெற்று, விளக்கம் பெறுகின்றன.

"கவிதை நயம்" என்னும் பன்னிரண்டாவது இயலில், குலோத்துங்கன் கவிதைகளின் பாடல் அமைப்பு முறை, கருத்துச் செறிவு, மொழியழகு, புதிய சொல்லாட்சி போன்றவை இடம்பெறுகின்றன.

"கொள்கைகள்" என்னும் பதின்மூன்றாவது இயல், முனைவர் வா.செ. குழந்தைசாமி அவர்களின் கொள்கை, குறிக்கோள், கோட்பாடுகள், வாழ்வியல் சிந்தனைகள், தத்துவங்கள் போன்றவற்றின் வெளிப்பாடாக அமைந்துள்ளது.

பதினான்காவது இயல் நிறைவுரையாக அமைகிறது.

1.6 கவிஞரின் வாழ்க்கை: சிறு குறிப்பு

கவிஞர் குலோத்துங்கனின் இயற்பெயர் வா.செ. குழந்தைசாமி. பிறப்பு: 14.7.1929. தந்தை: திரு. வே. செல்லப்ப கவுண்டர். தாயார்: திருமதி மாரம்மை. கவிஞர் ஓர் அறிவியல் அறிஞர்; கல்வியாளர். இந்தியாவில், ஜெர்மனியில், அமெரிக்காவில் உயர் கல்வி பயின்றவர். டாக்டர் பட்டம் பெற்றவர். நீரியல், நீர்வளத்துறை வல்லுநர். சிறந்த கல்வியாளர்; மூன்று பல்கலைக்கழகங்களில் துணை வேந்தர் பதவி வகித்தவர். ஆங்கிலம் தமிழ் இரண்டிலும் எழுத்தாளர், பேச்சாளர். தமிழக அரசின் திருவள்ளுவர் விருதும், தேசிய அளவில் சாகித்திய அகாதமி விருதும் பெற்றவர். ஏழு பல்கலைக்கழகங்களால் கெளரவ டாக்டர் பட்டம் வழங்கிக் கெளரவிக்கப்பட்டவர்; குடியரசுத் தலைவரால் தேசிய விருதுகளான பத்ம ஸ்ரீ [1992], பத்மபூஷன் [2006] விருதுகள் வழங்கப்பட்டு, கெளரவிக்கப்பட்டவர்; இப்பொழுது தமிழ் இணையப் பல்கலைக்கழகத் தலைவர்: மைய அரசின் மனித வள மேம்பாட்டுத் துறை அமைத்துள்ள தமிழ் மொழி மேம்பாட்டு வாரியத்தின் தலைவர்.

2. தமிழும் தமிழரும்

2.0. முன்னுரை

"விதியே!விதியே!தமிழச் சாதியை...." என்னும் ஒன்பதாவது பொதுத் தலைப்பில் உள்ள பாடல்களில், தமிழின் சிறப்பு, தமிழரின் பண்பு, மறைவாகப் பழங் கதைகள் பேசும் தமிழரின் நிலை, ஈழத் தமிழரின் கண்ணீரும் தமிழின் நிலையும், புதுக் கவிதைகளின் தன்மையும் போக்கும், தமிழின் வளர்ச்சிக்கு அறிவியல் சார்பின் இன்றியமையாமை போன்ற ஆக்கப்பூர்வ அறிவுரையும் வரலாறும் இடம்பெறுகின்றன.

2.1. தமிழின் சிறப்பு

முடிதொடுமுன் மகிழ்வதில்லேன்

என்னும் பாடலில்,

செந்தமிழ்த்தாய் நின்வளங்கள் சிறந்த வேனும்
தேவை இனும் கோடியுள....

என்ற பீடிகையுடன் தொடங்கும் கவிஞர்,

நின்னையன்றித் தொழுவதற்குப் பொருளறியாத்
தொண்டனம்மா

என்று தமக்கும் தமிழுக்குமுள்ள தொடர்பைத் தொண்டன், தலைவன் நிலை நின்று பேசுகிறார். தேவாரத் தமிழ் நிலையில் கூறுவதானால், குலோத்துங்கனின் நிலை, தமிழுக்குத் "தாசமார்க்கம்" எனலாம்.

குலோத்துங்கன், தமிழின் சிறப்பைப் போற்றும் பகுதி, முக்கனியில் கற்கண்டு, தேன்கலந்தது போல் இனிமை மிக்கதாகிறது.

கன்னலின் சாறும்முப் பழமும் கோதையர்
கனிவாய் இதழும் பிறவும்
உண்ணின் இனிப்பன கண்டீர்! . . . .

*   *   *   *

எண்ணின் இனிப்பது தமிழாம் எங்கள்
இன்பத் தமிழ்மொழி வாழ்க! ....
. . . . அருமைத் தமிழ் மொழி அன்னாய் நீ
அன்றோ அணையா ஒளியே....

தமிழின் இனிமையையும் ஏற்றத்தையும் விளக்கும் குலோத்துங்கனின் கவிதை நயம், பாவேந்தரின்

கனியிடை ஏறிய சுளையும் - முற்றல்
களையிடை ஏறிய சாறும்....

என்னும் பாடலுக்கு அணியாக அமைகின்றது.

வாழ்வுக் கடல் தனிலே - முதல்
மாந்தன் முழுகி எடுத்த வெண்முத்தடா
*   *   *   *   **

செம்பொன் களஞ்சியம் சுடர்விடும் ஞான
விளக்கடா....

எனத் தமிழின் பெருமைபேசும் கவிஞர், தமிழுக்கு இத்துணைச் சிறப்பு வரக் காரணம் "திருவள்ளுவன், ஔவை, இளங்கோவைப் பெற்றதால் மண்ணொளி பெற்றதடா...." என உருவகத்தால் விடை தருகிறார்.

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர் போல் இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததிலை....

என்று பாரதி, புலவர்களைப் போற்றுவது சிந்தனைக்குரியது.

எண்ணுந் தோறும் களிப்பே தமிழ்
என்மொழி என்மொழி இன்பத்தின் ஊற்றடா....

என்று நிறைவுபடுத்துகிறார், "இன்ப ஊற்று" என்னும் பாடலை. என்மொழி, என் மொழி என்ற அழுத்தம், கவிஞரின் தமிழ் உணர்வின் ஆழத்தைக் காட்டுகிறது.

அறிவியலின் பாதையிலே உலகு முன்னேறிச் செல்கின்ற நேரத்தில், தமிழ்த்தாய் கண்ணயர்ந்துள்ளாள் என்கிறார்.

என் இனமும் என்மொழியும் சோர்ந்ததென்னும்
வன்சொல்லின் பழிதாங்கும் வலியில்லாதேன்

என்று கவலையுடன் குலோத்துங்கன் கூறுகிறார்.

மலைஏறின் முடிதொடு முன் மகிழ்வதில்லேன்

என்பதன் வாயிலாகத் தமிழ் மீது கொண்ட குலோத்துங்கனின் பாசத்தையும் தமிழை உயர்த்திட அவர் கொண்ட உறுதியையும் காண்கிறோம்.

2.2. தமிழரின் பண்பு

தமிழரின் பண்பைச் சுட்டுவதற்கு, மாந்தரின் சிறப்பியல்புகளைப் பட்டியலிட்டு, அச்சிறப்புமிகு பண்புகளில் மாட்சியுற்ற முதல் இனம் தமிழினம் என்று குறிப்பிடுவது, இலக்கிய இன்பம் நல்கும் புதியதோர் இலக்கிய உத்தியாகிறது.

மானுடர் அமரர் அல்லர்; மண்ணில்
இறப்பில படைக்கும் ஆற்றல் இயன்றவர் மனிதர்

.... கருத்தின் எல்லை
மண்ணையும் விஞ்சும் ஆழ்ந்த
வாரியும் விஞ்சும் சூழ்ந்த
விண்ணையும் விஞ்சும் தாரை
வெளியையும் விஞ்சும்
பெருமிதம் கொள்ளத்தக்க பேறுடை
மனித சாதி பண்புடை வாழ்வு கண்ட
பண்டுதொட்டுயர்ந்து நின்ற
மண்புகழ் தமிழர்....

என்று தமிழரைப் புகழ்கிறார் கவிஞர்.

இந்தத் தமிழச் சாதி "யாதும் ஊரே - யாவரும் கேளிர்" என்ற உயர் நெறியுடன் வாழ்ந்த இனம். "புவனமும் மானுடர்க்குப் பொது வெனும் தமிழச் சாதி, குவலயக் குடும்பம். எவரும் குறுக்கிடும் சுவர்கள் இல்லா" என்று தமிழரின் வானினும் பரந்த வளமார் உள்ளத்தை ஓவியம் தீட்டுகிறார். தமிழரின் வீழ்ச்சியின் காரணத்தை உருவகமாக உணர்த்தும் முறையில் கவிஞர்:

ஒன்றுநும் கலத்திலுள்ள ஓட்டைகள்; பகைவர் உம்மை
வென்றுள சரிதை உங்கள் விரிசலின் சரிதை

என்கிறார். ஒற்றுமையின்மையே தமிழரின் வீழ்ச்சி நிலைக்கு அடிப்படையானது என்பது கவிஞரின் அசையா நம்பிக்கை.

தமிழர்தம் சிறப்பினை மறந்தனர்.
கூனரும் அடிமையும் தலைமை ஏற்றனர்
சாதித் தவளைகள் தலை தூக்கி ஓலமிட்டன
சிறியன பேசும் மன்றில் சிறுபயன் தேடும் -
வாழ்வில் புழுவென வயிற்றில் ஊர்வர்
பொது நலம் மறந்தும் எண்ணார்
வானமும் நிலமும் சேர
வளர்ந்தனர் வாழ்ந்த நாட்டில்
கூனர்கள் தலைமை ஏற்கும் கொடுமை
உருவானது. தமிழினம் தாழும் நிலை உருவாயிற்று.
"தன்னினம் அழிக்கும் பண்பில்
தமிழனுக் கிணையென் பாரை
இந்நிலம் கண்ட தில்லை"

என்று துன்பம் துயரம் கலந்த குரலில் வேதனையை வெளியிடும் கவிஞர்,

"இப்பழி சுமப்பதேன்?"

என்ற வினாவுடன்,

"தம்மினம் அழிக்கும் பண்பில் தலையவர்"

என்னும் பாடலை முடிக்கிறார்.

ஒற்றுமை யறியாது உளுத்த இனமடா.
வெற்றுரை! வெற்றுரை! வெற்றுரை வீரர்

என்பது, குலோத்துங்கன் கண்ட தமிழரின் காட்சியும் முடிவும் ஆகும். தமிழர்கள், ஒற்றுமையில்லாதவர்கள் என்பதை "நவக்கிரக இனத்தவர்" என்ற தலைப்புள்ள பாடல் மிக நுட்பமாக விளக்குகிறது.

செத்த நாகமும் சிறிது சீறலாம்.
சிதையில் ஏறிய சடலம் துள்ளலாம்....
ஒத்த நோக்குடன் தமிழகம் திரண்டு
உரிமை கோரிய சரிதை ஏதடா?

* * * *

ஒரும'னத்துடன் தலைவர் கூடி நம்
உரிமை தேடிய சரிதை ஏதடா?

தமிழின வேற்றுமை உணர்வுகளை விளக்கும் மிகப் பொருத்தமான தலைப்பு "நவக்கிரக இனத்தவர்". தமிழர்கள், வளர்வாரைத் தடுப்பர், வளர்ந்தபின் துதிப்பர். வளர்பவருக்கு வரவேற்பு இல்லை. தமிழ்க் குளத்தில், தக்கைகள் மிதக்கின்றன. தக்கவர் ஆழ்கின்றனர். வழுக்கு மரத்தில் ஏற முயல்வோரை, இழுத்துப்போடும் இயல்பினர். ஒருவன், ஓடி முன்னேற முயன்றால், ஒன்பது பேர் தடுத்து, நிறுத்த முயல்வர்.

எங்கு வாழினும் எதிரி சூழினும்
தங்கள் உட்பகை தளரா எளியர்

தமிழர் என்கிறார் குலோத்துங்கன்.

2.3. பழங்கதை பேசிப் பயனில்லாது வாழ்வோர்

எங்கள் தமிழ் உயர்வென்று மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் பேசுவது பயனில்லாச் செயல் என்பது குலோத்துங்கன் எண்ணம். "வளர்க தமிழ்! வாழ்க தமிழ் என்பீர்! கூடி வழுத்துவதால் தமிழ் வளர வசிட்டரா நீர்! குலப் பெருமை பேசுவதும் கொடுமை அன்றோ?" என்று கசப்பான உண்மையைக் கூறுகிறார், "வளர்க தமிழ்" என்னும் பாடலில்,

தாழ்ந்த இனம் உயர்ந்த மொழி சமைத்ததில்லை
தானாக எம்மொழியும் வளர்ந்த தில்லை

என்ற நியதியையும் கூறி, மொழி வளர, இனம் வளர வேண்டும், முயற்சியின்றித் தானாக எந்த மொழியும் வளர்வதில்லை என்ற மொழியியற் கருத்தையும் தருகிறார். தமிழினப் பெருமை காண வேண்டும் என்பதே கவிஞரின் குறிக்கோள்.

நந்தமிழின் பெருமை எது? ஆங்கிலம் போல்
ஞாலத்தின் பொது மொழியா! உலக மன்றில்
அமர்வுடைய ஆட்சி மொழிக் குழுவில் ஒன்றா?
ஐக்கிய நாட் டவைமொழியா!

* * * *

. . . .வையத்தின் துறையனைத்தும் தன்னுள் கொண்டு
வளர்மொழியா?.... ஆய்வில் லாது
கதைசொல்லி என்ன பயன்? தமிழர் பண்டைக்
கலைச் செல்வம் முழுமையும் கண்ட ரில்லை.

* * * *

ஒளியற்ற வெப்பத்தின் உருவம் நீவிர்
உம் பணியால் தமிழென்றும் உயர்வதில்லை
வளியுண்டு இடியுண்டு மழையில் லாத
வானம் நீர் தமிழும்மால் வளர்வ தில்லை

என்கிறார் குலோத்துங்கன்.

முன்னோர் செல்வ....
ஆசியிலே வாழ்கின்றோம் காலமெல்லாம்
அதன் பெருமை பேசுகின்றோம் அவல மன்றோ!

* * * *

. . . . ஓரினத்தின்
நிகழ்காலச் சாதனையில் நிறைவின்றேல் தொல் பழமை
புகழ்வாரை, போற்றுவரை யார் மதிப்பார்?

என்னும் வினாவால், இறந்த கால இலக்கியம் மிளிர, இலக்கியத்தில் நிகழ்காலச் சாதனை வேண்டுமென்பதை வலியுறுத்துகிறார்.

2.4. கடல் கடந்த தமிழரும் தமிழும்

"யாரை நோவாய்?" என்னும் கவிதை, கற்பனை நயத்துடன் கருத்துச்செறிவும் மிக்கதாக உள்ளது.

நெல் மலியும் பஃறுளியின் நிலமும் வானில்
நின்ற நெடுங் குமரியையும் கொண்டாய் நாடும்
தொல்கலையின் சுவடிகளும் இழந்தார்

தமிழர் என்ற துயர் மிகுந்த வரலாற்று நிகழ்வு காட்டி, இறுதியில் ஒரே அடியால் "தன்வினை தன்னைச் சுடுகிறது" என்பது போல,

தொல்கலையும் சுவடிகளும் இழந்தார் கண்ணீர்
சூட்டாலே கொதிக்கின்றாய்

என்று கூறுகிறார்.

இலெமூரியா கண்டத்தையும் உயர் தமிழ் நூல்களையும் தமிழரையும் இழந்த துயரம் தாங்காமல் தமிழர்கள் வடிக்கும் கண்ணீரின் சூட்டால், கடல் நீர் சூடேறிக் கொதிக்கிறது. இதனால்தான் கடல், நிலை குலைந்து குமுறுகிறது என்கிறார் கவிஞர். அழகிய கற்பனை: தமிழரின் கண்ணீரின் சூடு, கொதி நிலை வெப்பத்தை விட மிகுதியாக உள்ள தென்ற கற்பனை, ஈடில்லாக் கவிதைநயம் கொண்டது.

கடல் கடந்து சென்ற தமிழர்கள் சொந்த மொழியை மறந்துவிட்ட நிலையையும் துயருடன் விளக்குகிறார். "பேச்சினில் தமிழைக் காணோம்" என்னும் பாடல், மொரீசியத் தமிழர் தமிழ் மறந்த அவலத்தை விளக்குகிறது.

பெயரினில் தமிழைக் கண்டேன்
பெருகிடும் அன்பின் பண்பின்
உயர்வினில் தமிழைக் கண்டேன்
ஒளிர்நகை மலரும் பெண்டிர்
அணிகளில் தமிழைக் கண்டேன்
ஆடையில் தமிழைக் கண்டேன்
. . . . . . முருகனுக்குக்
காவடி தோளில் தாங்கும்
காட்சியில் தமிழைக் கண்டேன்....
மூச்செனு மரபுகாத்த மொரீசியத் தமிழர் தங்கள்
பேச்சினில் தமிழைக் காணேன் பெரிதவர் ஏக்கம் கண்டேன்

எனக் கூறும் கவிஞர், உரிய முயற்சி மேற்கொள்ளப் படாவிடின் மொரீசியஸ் மக்கள் தமிழை இழந்துவிடுவர்; உலகத் தமிழரின் விழுக்காடு குறையுமென்று உணர்த்துகின்றார்.

இலங்கையிலுள்ள கதிர்காம முருகன் திருக்கோயிலில், முருகன், சிலை வடிவில் காட்சியளிப்பதில்லை. திரைச் சீலையில் மட்டும் உருவத்தைக் காண முடிகிறது. அத்துடன், முருகன் திருக்கோயிலில்,

பூசனை முறைகள் கண்டேன்
புத்தனின் வழியில் நிற்போர்
ஈசனின் பூசைச் சேவை
ஏற்றுள புதுமை கண்டேன்

என்கிறார். கோயில் பூசாரி, பௌத்தத் துறவி என்ற வியப்பூட்டும் உண்மையைக் கூறுகிறார் கவிஞர்.

மலையும் மலை சார்ந்த இடமுமாகிய குறிஞ்சியின் தெய்வமான முருகனுக்குத் தமிழ் மறை போற்றாப் பௌத்தர் பூசைபுரிவது ஒவ்வாச் செயலாகும். மரபு காக்க மார்க்கம் உண்டா? காக்க முயல்வோர் யார்? விடை காணப்பட முடியா வினாக்கள்.

2.5. புதுக்கவிதை

புதுக் கவிதைக்குக் குலோத்துங்கன் சுட்டும் குறியீடு "கலைவானில் மத்தாப்பு வாணம்" என்பதாகும்.

மாடிக்குப் படியமைத்த வண்ணம் போல
வார்த்தை யொரு வரியாக்கி அடுக்கி வைத்தல்
வேடிக்கையன்று புதுக் கவிதை முற்றும்
விளங்காத தெனின் நன்று. மேதைச் சின்னம்

புதுக் கவிதையின் அமைப்பு, விளக்கம், குறியீடுகள் பற்றி மிகச் சுருக்கமாக, ஆனால் நனி நுட்பமாகக் கவிஞர் தரும் விளக்கம்:

குளிர்கின்ற நெருப் பென்பர் பனிக்கூட்டங்கள்
கொட்டுகிற அனல் என்பர். கொலைஞர் கண்ணில்
ஒளிர்கின்ற அருள் என்பர். இருளின் கூட்டம்
உமிழ்கின்ற ஒளி யென்பர். புதுமை செய்வார்
"சொற் சிலம்பம் ஆடுபவர்"

என்று புதுக்கவிஞரின் போக்கை இனம் காட்டும் குலோத்துங்கன், அவர்கள்,

அற்புதங்கள் சித்துக்கள் கண்டும்கேட்டும்
ஆர்ப்பரிப்பார் இன்றென்ன அன்றும் உண்டு

என்பதன் வாயிலாகச் சித்துக்களில் மெய் மறந்த திருக்கூட்டம் அன்றும் இன்றும் என்றும் உண்டு என்கிறார்.

மரபுக் கவிதையின் யாப்பு முறையையும் இனிமையையும் சிறப்பையும் விளக்கும் கவிஞர், மரபுகளை விட்டொழிக்கும் புதுக் கவிஞர்களிடம், புதுக்கவிதையாக்க, விதிகள் என்ன கண்டீர் என வினவுகின்றார்.

"விளையாடும் விளையாட்டிற்கே விதியிருக்கும்போது, கலைகளின் அரசியாக (Queen of Arts) விளங்கும் கவிதைக்குச் சில நெறிமுறைகள் வேண்டாமா? உழைக்காமலேயே ஊதியம் பெறவேண்டு மென்ற எண்ணமுடையவர் நம்மில் பலர் உள்ளனர். "சீச்சீ இந்தப் பழம் புளிக்கும்" என்பதைப் போன்று யாப்பையும் வெறுக்கின்றனர்" எனும் பா. வீரமணி அவர்களின் கூற்று, புதுக்கவிதையின் போக்கையும் நோக்கையும் புலப்படுத்தும் அற்புதச் சொல்லோவியம் ஆகும்.

சொந்த மென்று நீவிர்
துணிந்துள விதிகள் சொல்வீர்

எனக் கேட்கிறார் கவிஞர். விதிகளில்லா விதி வகுப்போரிடம், விதிகளை எங்கே தேடுவது? யார் தேடிக் காண முடியும்?

பந்த மொன்றறிந்திடாத பண்பிலை கலையும் இல்லை

என்று கவிதைக்குச் சில விதிகள் வேண்டுமென்கிறார்.

> அதீத நம்பிக்கை வறட்சி; அந்நியமயப்பாடு; பாலியற் பிறழ்ச்சி; மனோவிகாரம்; போலி மேதாவித் தன்மை முதலியவற்றால் உந்தப் பெற்று, மேனாட்டு நாகரிகப் பேதலிப்பில் பிறந்த ஒலி முறிவுக் கவிதைகளைக் கண்மூடித்தனமாக நகல் செய்த எழுத்து வட்டத்தினர், ஏறத்தாழ எல்லோருமே வடிவ அமைதியும் உணர்வுச் செறிவும் பொருந்திய தன்னுணர்ச்சிப் பாடல்களை எழுத இயலாதாராயிருந்ததில் வியப்பெதுவுமில்லை.

என்கிறார் பேராசிரியர் க. கைலாசபதி அவர்கள், "சமூகவியலும் இலக்கியமும்" எனும் நூலில்.

> இவர்களது (புதுக்கவிஞர்களது) சோக ஓலங்களும் நம்பிக்கை வறட்சியும் சாவுக் காதல் கீதங்களும் வாழ்க்கை மறுப்புப் பாடல்களும் நல்வாழ்வுக்காக நம்பிக்கையோடு போராடும் மக்களுக்குச் சிறிதும் தேவையற்றவை. இவர்களுடைய புதுக்கவிதைகளில் புதுமையில்லை. கவிதைத் தன்மையு மில்லை; புரட்சியுமில்லை. இவை வாழ்க்கைப் போராட்டத்துக்குப் பயந்து, சாவை விரும்பும் பலவீன மனிதர்களது கூக்குரல்தான்.
>
> தேடித் தேடிப் பார்த்தாலும் மனித கௌரவத்தை உயர்த்துகிற, மனிதனது அறிவை விசாலப்படுத்துகிற, மனித உணர்ச்சியை ஆழப்படுத்துகிற எந்தச் செய்தியையும் இவர்கள் மனிதனுக்குக் கூறவில்லை. சொறிந்து சுகம் காணுகிற சொறி சிரங்கு நோயாளி, பிறர்க்கு அச்சுகம் இல்லையே என்று கர்வம் கொண்டு கூறுவது போல இருக்கிறது, இவர்களது அகவுலக வெளியீடுகள் எனலாம்

என்னும் நா. வானமாமலை அவர்களின் கருத்து, புதுக்கவிதை பற்றிய சிறந்த படப்பிடிப்பாகும்.

குலோத்துங்கன் புதுக்கவிதை என ஒரு புது முயற்சி கவிதைத் துறையில் உருவாவதை எதிர்ப்பவர் அல்லர். புது முயற்சிகளை, எல்லாத் துறைகளிலும் வரவேற்பவர். ஆனால் சில புதுக்கவிதையாளர்களின் போக்கு அவருக்கு ஏற்புடையதாயில்லை. இலக்கியம் இலக்கியத்திற்காகவே. இலக்கியத் திற்குச் சமுதாயக் கடமை என எதுவும் இல்லை என்ற அணுகுமுறையும், சில புதிய கருத்துகளைச் சொல்வதற்கு மரபு, தடையாயிருக்கிறது என்பது போன்ற வாதங்களும் அவருக்கு உடன்பாடானவையன்று.

2.6. தமிழ் தலைமையேற்க வேண்டும்

பழகு நுண்கலை படைத்ததும் தமிழினம்.
மேதையர் வரிசையில் மேலவர் தமிழரே,
சாதனை யாவினும் தமிழரே தலையென
யாங்கும் தலைமை நாமே எய்திட....

வேண்டும் என்பதே குலோத்துங்கனின் விருப்பம். அவருடைய ஆழ்ந்த நெஞ்சத்து ஆசை.

பதவி தேடுவர், பதவியில் உள்ளோர்
உதவி நாடுவர், உள்ளம் சிறுத்துக்
குலத்திற் விதியிற் குழுமுவர். என்னுயிர்
நிலத்திற் புல்லிவை நிறைந்தது....

அதனால் தமிழினம் வீழ்ந்ததெனக் காரணம் காட்டுகிறார்; கவலைப்படுகிறார்.

இமயம் முதல் குமரிவரை பரவி நிற்கும்
இந்தியத்தின் வாழ்வியலில் இலக்கியத்தில்

சமயமெனும் சிந்தனையில் தத்து வத்தில்
தமிழ் மொழியின் பங்குண்டு சாற்ற வேண்டும்
விந்தியத்தின் வடக்கேயும் கடல்கள் தாண்டி
வெளியுலகின் மன்றத்தும் வேண்டும்

என்று தமிழன்னை பெருமை பெற வேண்டிய தம் விருப்பத்தையும் கூறுகிறார்.

"முடியணிவாயோ!" என்னும் கவிதையில், "எழுதவும் தமிழில் எண்ணவும் கருத்தின் முழுமையும் தமிழ் வழி மொழியவும் வேண்டிய மரபின் சொற்களும் வழக்கில் நிறைந்து பரவிய குறிகளும்," தமிழில் அமைதல் வேண்டும். அதுவே தமிழ் வளர்க்கும் என்கிறார்.

வாழ்வும் மொழியும் வளரும் பொருளாம்
.... புலமையின் உலகில்
எதுவும் பொதுவாம் இனத்தால் நிறத்தால்
வேற்றுமை அங்கிலை, வேண்டுவ முறையொடு
ஏற்றும் நாம்பல ஈந்தும் முன்செலும்
முடிவறு பயணமே முந்நீர் உடுத்த
படி தரு வாழ்வாம்

இதனை ஏற்று, முயன்று, முன் செலின் பைந்தமிழ்த் திருநிலம் புத்துயிர் பெறும் முத்தமிழ்த்தாய் முடியணிவாள் என்பது அவருடைய நம்பிக்கை.

2.7. தமிழில் புதுமையும் அறிவியல் சார்பும்

உலகின் மிகச் சிறந்த அறிவியல் அறிஞர்களுள் ஒருவரான முனைவர் வா.செ. குழந்தைசாமி அவர்கள், அறிவியல் நூல் வளத்தில், தமிழ் பின் தங்கியுள்ளதை எடுத்துக் காட்டுகின்றார்.

வழிவழி வருவயாவும் மார்க்கண்டம் பெறுவதில்லை.
அழிவன அழிந்தகாலை அகற்றுதல் தருமம்

* * * *

புதியபாதை துணிவதும் வளர்ச்சிப் பாதை

என்று அறிவியல் விளக்கம் தருகிறார்.

இற்றையொடு இணைந்துநிற் பேர்க்கு
இயல்வது இளமை
முந்தைப் பற்றொடு புதுமை சேர்க்கும்
பண்பிலார் வளர்வதில்லை

என்று எச்சரிக்கவும் தவறவில்லை கவிஞர்.

ஆய்வியலும் அறிவியலும் ஆளும் காலம்.
ஞாலத்தின் தேவைகளை எண்ணி ஏற்கும்.
ஞானமிலார்க் கிவ்வுலகில் நாளை இல்லை.

என்று உலகம் அறிவியல் நெறியுடன் இணைந்து நடப்பதன் இன்றியமை யாமையைக் குறிப்பிடுகிறார்.

மனித இனம் மறுபிறவி பெறுமோ அன்றி
மதத்தலைவர் கற்பனையோ அறியோம் ஆயின்
இனிய தமிழ் புதுப்பிறவி எடுக்க வேண்டும்
எதிர்காலத் தேவையெலாம் ஏற்க வேண்டும்

என்பது குலோத்துங்கனின் அறிவுரையாகும்.

எழுத்துருவைச் சீரமைப்பீர் எழுதல் கற்றல்
எளிதாக்க வழிவகுப்பீர்....
. . . . . சொல்லாக்கம். புதுவழியில் துணிந்து காண்பீர்
* * * *

. . . . . இறுக்கத்தால் பயனில்லை. இளக்கம் தேவை,
இலக்கண நூல் பயிற்சியெலாம் எளிமை செய்வீர்
மறுக்கின்ற வைதிகர்கள் வய்யம் செல்லும்
வழியறியார் எளியரவர் வழித விர்ப்பீர்
* * * *

பலகணியை மூடுபவர் புதுமை சேர்க்கும்
பரிதி ஒளி கூசுபவர் முன்னோர் சொல்வே
உலகமென நம்புபவர் எதிர்காலத்தை
ஊடுருவி அறியாதார் உயர்வதில்லை

எனும் கவிஞரின் மொழியியற் சிந்தனை, தமிழ் வளர்ச்சிக்கு உறுதுணை யாகும். "எளிமையே வலிமை" எனும் பாடல், சிலம்பின்

பசியும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்

எனத் தொடங்கும் நிறைவுப் பகுதியின் அறிவுரைகள் போன்றுள்ளது எனலாம்.

2.8. பன்மை போற்றுவோம்

"பன்மை போற்றுவோம்" என்ற கவிதை "வேற்றுமையில் ஒற்றுமை காண்பதே சிறப்பு" என்பதை வலியுறுத்துவதாகத் தோன்றுகிறது. மலர்கள் அனைத்தும் ஒரே வண்ணம், ஒரே அளவு, ஒரே மணமுடையதாக இருப்பின், கண்ணுக்கும் மனதுக்கும் நிறைவு தராது என்பதைச் சுட்டும் கவிஞர், ஒற்றுமை, உறவு, பன்மை பற்றி விளக்குகிறார்.

ஒற்றுமை என்பது ஒருமை யன்றடா
உறவு வேறடா; உரிமை வேறடா
பற்று வையகப் பண்பின் சீரடா
பன்மை மானிடர் பழமை வேரடா"

என்பதன் வாயிலாக, மொழிகளின் ஒற்றுமை; இணக்கம் என்பன தனி, பிறமொழிகளுடன் வேற்றுமையின்றி, ஒற்றுமை கொள்வதால் அம்

மொழிகளின் ஆதிக்கத்துக்குள்ளாகி, நம்மொழியின் உரிமையை இழப்பதாகாது, மொழிகளின் உறவுக்குக் கை கொடுப்போம். ஆனால் நம்முடைய மொழியின் உரிமை, தனித்தன்மைக்குக் குரல் கொடுக்க வேண்டுமென்பதே கவிஞரின் மொழிக் கோட்பாடாகும்.

பிறமொழிப் படைப்புகள், தமிழுக்கு வருவதை வரவேற்க வேண்டும். ஒப்பிலக்கிய நோக்கில் திறனாய்வு செய்ய வழி பிறக்கும். ஒப்பீடு, மொழி வளர்ச்சிக்கு உறுதுணையாகும். பிற இலக்கியங்களிலும் உயர்பண்புகளும் இழிகுணங்களும் பேசப்படுகின்றன. இவற்றை நம் இலக்கியப் பாத்திரங்களுடன் ஒப்பிட்டால், நம் மொழியின் தரத்தை நிர்ணயிக்கலாம். எனவே மொழிகளுக்குள்ளும் பன்மை போற்றுவதே சிறப்பிணைக்கும். இதனால்தான்,

மாறுபட்டன போற்றும் மானிடர்
வையகம் தனில் தேவர் அல்லவோ!

என வினவுகிறார் கவிஞர்.

பன்மை இந்தியப் பண்பின் மூச்சடா. . . .
வழிகள் எண்ணில மனிதம் ஒன்றடா

என்ற பொதுக் கருத்தைக் கூறுவதன் வாயிலாகக் கொண்டுகூட்டல் முறையில், மொழிக்கும் இந்த அணுகுமுறை தேவை என்பதைச் சுட்டுகிறார். தேசிய ஒருமைப்பாட்டின் கூறான, பன்மை போற்றுதல், மொழிக்கும் பொருந்தும் என்பதைக் கவிஞர் உணர்த்துவதால், "பன்மை போற்றுவம்" என்ற பாடலை, மொழியணுகு முறையில் ஒரு புதிய உத்தியெனக் கொள்ள இடமுள்ளது எனலாம்.

2.9. புழுக்கம்

"புழுக்கம்" என்னும் பாடலில், இருட்டறையில் புழுக்கம் இருக்கும்; தூய்மை இருக்காது என்பதை விளக்கும் கவிஞர், வெளிச்சத்தின் தேவையை உணர்த்துகிறார்.

சாளரங்கள் அடைக்கப்பட்டிருப்பதால், புறத்தேயிருந்து சுத்தமான காற்றும் வெளிச்சமும் அறைக்குள் புக முடியவில்லை. இது இதந்தரும் சூழல் இல்லை. பின் விளைவுகள், பல்கிப் பெருகுகின்றன என்பதை உள்ளுறையாக உணர்த்துகின்றார்.

காற்று வரவில்லை இவண் கடும்புழுக்கம் தோன்றுகிறது
சேய்மையுள மாசு வந்து சேராது காப்ப மெனும்
தூய்மை வழித் தூதுவர்கள்...." ஒவ்வாச் செயலால்
"இருட்டறையில் தூய்மையிலை ஏணியிலை, ஏற்றமிலை"

என முடிக்கிறார். இப்பாடலை மெலெழுந்த வாரியாகப் பார்த்தால், வெளிச்சமில்லாத அறையை விட்டு மேலேறிப் போக முடியாது என்ற கருத்து

மிளிர்வதாக இருந்தாலும் மொழிக்கு இணைத்துப் பார்த்தால், பாடலின் உட்பொருள் சிறப்புறத் தோன்றும்.

மொழியின் தூய்மை, புனிதம் காக்கப் பெறல் வேண்டு மென்பதற்காகப் பிறமொழிப் படைப்புகளை வரவிடாமல் தடுப்பது, நம் மொழியின் வளத்தையும் பரப்பின் விரிவையும் தடுத்துவிடும்; சுருக்கிவிடும். பிற மொழிப் படைப்புகளை, நம் மொழிக்கு, மொழியாக்கம் செய்வதால்தான் புதுமைக் கருத்துகள் நம் மொழியில் புக முடியும். புதுக்காற்றாம் பிறமொழிப் படைப்புகளைத் தடுப்பதால், நம் மொழி எல்லை விரிவடையாமல், தேக்க நிலை அடையும். "தேக்கம் என்பது சாவின் வாசல்" என்பது கவிஞரின் கூற்று. உயிர்வாழ, வெளிக்காற்று தேவைப்படுவது போன்று, மொழிவாழப் பிற மொழி இலக்கிய வரவு வேண்டும்.

தமிழ் மொழி இலக்கியத்தின் சாளரங்களையும் கதவுகளையும் திறந்து வைப்பதன் வாயிலாகத்தான் தமிழ்மொழியின் புழுக்கம் நீங்கும். சூரியனின் ஒளிக்கதிர்களும் தென்றலின் மென் சுகமும் அறைக்குள் புகுந்து மகிழ்வான, சுகாதாரமான சூழலை உருவாக்கும். இக்கருத்தை உணர்த்தவே இருட்டறையைக் காட்டி, இலக்கிய நயம் சேர்க்கிறார் கவிஞர். "இளமையே வலிமை" என்னும் பாடலின் கருத்து, இங்கே கொண்டு கூட்டற்குரியது.

பலகணியை மூடுபவர் புதுமை சேர்க்கும்
பருதி ஒளி கூசுபவர் முன்னோர் சொல்லே
உலகமென நம்புபவர் எதிர்காலத்தை
ஊடுருவி அறியாதார் உய்வ தில்லை

என்னும் அடிகள், இலக்கியச் சாளரங்களையும் திறந்து வைத்துப் பிறநாட்டு இலக்கிய ஒளிக்கதிர்கள் புக வழி வகுத்து, மொழிவளம் பெற ஆவன செய்ய வேண்டுமென்பதை வலியுறுத்துவதாக அமைகின்ற நல்ல உருவகமாகிற தெனக் கொள்ளலாம்.

2.10. தாய்நாடு

"படையல்" என்ற முதற் கவிதையில், தமிழன்னைக்கும் தாய்நாட்டுக்கும் இயற்கைக்கும் படைப்பைக் காணிக்கை யாக்குகின்றார். ஆறு உட் தலைப்புகளில் 120 அடிகள் கொண்ட பாடலாகத் திகழ்கிறது. தாய்நாட்டுக்கு வணக்கம் கூறும் தம் குறிக்கோள் போன்றவற்றுடன், தம்முடைய விருப்பமாகத் தாய்நாட்டின் புகழ்க் கிரீடத்தில் மாபெரும் மாமணி ஒன்றைப் பதிப்பதைக் கூறி நிறைவு செய்கிறார்.

. . . . .உன்னரும்
மண்ணிடைப் பிறந்த வாய்ப்பினைத் தவமென
எண்ணியும் களித்தும் இன்புறும் பித்தன்

என இந்நாட்டில் பிறந்ததைத் தவப்பேறாகக் கருதுகின்றார்.

எண்ணியும் களித்தும் இன்புறும் பித்தன்

என இந்நாட்டில் பிறந்ததைத் தவப்பேறாகக் கருதுகின்றார்.

> எவ்வித எதிர்நிலைச் சூழலிலும் தாய் நாட்டிற்குப் பெருமை சேர்க்கும் முயற்சியில் தளரேன் கொண்ட உயர் குறிக்கோளை அடைந்து நாட்டின் புகழை உச்சியில் ஒளிரச் செய்வேன்

என உறுதி கூறுகிறார். பாடல் அணிநயத்துடன் மிளிர்கிறது.

வானம் பொய்க்கினும் வயலிடைப் பயிரினைக்
கானல் தீய்க்கினும்....
உறுவலி தளரா உளமும் கை விடாது
அறுவடை வரும் வரை ஆற்றிடும் உழவன்

என்று பருவம் பொய்த்தாலும் தளரா உறுதியுடன் சிறந்த விளைவை ஈட்டும் உயர்ந்த உழவனுக்குத் தம்மை ஒப்பிடுகின்றார்.

"யாண்டும் யாங்கும் யாவுமாய் நிறைந்த அன்னை" என்று தமிழ் மொழியைச் சுட்டுகிறார் கவிஞர்.

"அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்த ஜோதியாகி அருளொடு நிறைந்த...." ஆண்டவனைத் தாயுமானவர் காண்பது போல், குலோத்துங்கன் நாட்டைக் கண்டு போற்றுகிறார். இறை வாழ்த்து எங்கும் பாடாத கவிஞர், தாய்நாட்டை, தாய்மொழியை, இயற்கையை இறைநிலையில் காண்கின்றார். தம்முடைய படைப்பை ஆண்டவனுக்குப் படைக்காமல் தாய்நாட்டுக்கு, இயற்கை அன்னைக்குப் படைக்கின்றார். இது கலை பிறந்த தமிழகத்தின் மீது கொண்ட கரைகாணாப் பற்றின் வெளிப்பாடு.

அன்னை உந்தன் தகுதி எனும் மணிமுடிமேல்
ஒருகல் சேர்க்கும் ஆசையுள்ளேன் அன்புள்ளேன்
ஆர்வமுள்ளேன்

என்று தம் விழைவை, விருப்பத்தை, வேண்டுதலை வெளியிடும் :

கனவெல்லாம் நின் தோற்றம் இதயத் தூறும்
கருத்தெல்லாம் நினதுயர்வுத் திட்டம் என்றன்
மனமெல்லாம் நின்கோயில் எளியன் பெற்ற
வாழ்வெல்லாம் நினது பணி. வையம் கண்ட
கலையனைத்தும் நீகாண அறிஞர் ஆய்வுக்
கள மனைத்தும் நீ உலவத் தலைமை ஏற்கும்
நிலையனைத்தும் நினதாகப் பெருமை தேடும்
நெஞ்சமுளேன் மற்றெந்த நினைவு மில்லேன்

என்று தன் நிலையை விளக்குகின்றார் கவிஞர்.

"வருகிற நாளில் எதிர்காலத்தில் உன் நாட்டு மக்கள் வளம் பெற்று, உயர்ந்தோங்கும் திருநாளைக் காண்பதற்குப் பாதைதேடும் எந்தன் செயலைத்தான் உழைப்பைத்தான் - உன் படையலாக்குகின்றேன். என்னிடம்

3. சாதித் தீயில் தமிழினம்

3.0. முன்னுரை

சாதி, சமயம் சார்ந்த கருத்துகளைக் குலோத்துங்கன் கவிதைகளில், "சாதித்தீயில் தமிழினம் வெந்தது" என்ற தலைப்புள்ள எட்டாவது பாடல் தொகுதியிலுள்ள ஒன்பது பாடல்களின் வழியே உணர்த்துகிறார். இப் பாடல்கள் தவிர வெவ்வேறு தொகுதிகளில் 8 பாடல் தலைப்புகள் சாதி, சமயம், தத்துவம், சமயத் தலைவர்களைப் பற்றிப் பேசுகின்றன. சாதி தோன்றிய தன்மை, கற்றோரிடையும் சாதிக் கொடுமைகள், விளைவுகள், சாதியை ஒழிக்க முயன்று முடமானோர், மதத்தலைவர்களின் செயல்கள், மதம் தேவைதானா? மனிதனாக வாழ ஆசிரியர்காட்டும் வழி, சாதி, சமய, மூடக் கொள்கைகளை ஒழிக்க வாழ்நாள் முழுவதும் போராடிய சமுதாயச் சீர்திருத்தவாதி தந்தை பெரியார் அவர்களிடம் தமிழ்ச் சமுதாயச் சரிவு குறித்துக் கூறி, தமிழச் சாதியை முன்னேற்ற வழி காண விண்ணப்பித்தல் போன்ற சிறப்புமிகு கருத்துகள் இவ்வியலில் இடம்பெறுகின்றன.

3.1. சாதியின் தோற்றம்

தமிழர்கள் சங்கம் கண்டனர். சாதிகள் கண்டிலர்
ஏற்றத் தாழ்வுகள் கடந்த வாழ்வினர்.

தமிழர்கள் வாழ்வில் சாதியைப் புகுத்தியவர் அந்நியர்களே என்ற வரலாற்றுண்மையை,

தீயன உண்டெனின் செய்தவர் அந்நியர்
நாற்குலம் கண்டவர் நம்மவர் அன்றது
மேற்குலம் நின்றவர் வேதியர் சூழ்ந்தது

என்னும் அடிகளால் உணர்த்துகின்றார். இன்றைய தமிழர், சாதியை விட்டுவிடத் தயாராக இல்லை.

வேதியர் சாதியை விடுப்பினும் அரசியல்
வாதியர் சாதியை வரமெனத் தாங்குவர்.
சாதியை வைத்துத் தலைவர் வாழுவர்

* * * *

மேடைஓர் உலகம் வீடுஓர் உலகெனும்
நாடகம் இன்றுநம் நடைமுறை யானது

இரு வேறு நடத்தை உள்ள மக்களாகத் தமிழர் மாறியதுகண்டு புழுங்குகிறார்.

உடம்பொடும் உயிரொடும் ஒன்றிய பிணியென
இடம்பெறும் நெஞ்செலாம் இழிக்கும் சாதியின்
கீழ்மையில் தமிழினம் கெட்டது.

ஒன்றே குலமென வாழ்ந்த தமிழர் நெஞ்சில் இடைவெளி விழுந்தது.

சாதித் தழல்தனில் தமிழினம் வெந்தது.
ஆதிக் குடியினர் அமரரின் றாயினர்

எனத் தீர்மானமாகக் கூறுகிறார்.

சாதியின் தலைவர் என்னும் தவளைகள் எழுப்பும் சத்தம்
காதினைப் பிளக்கும் தோற்றம் காண்கிறேன்

என்று சாதித் தலைவர்களின் கொடுமைகளையும் ஓலங்களையும் சுட்டுகிறார். சாதியை வளர்ப்பவர்கள், அரசியல் பேசும் தலைவர்களே என்பது குலோத்துங்கன் கண்டுணர்த்தும் முடிபு.

3.2 கற்றோரிடத்தும் சாதி

"சாதி இரண்டொழிய வேறில்லை", "சாதிகள் இல்லையடி பாப்பா" என்று சிறந்த கருத்துகளைப் புகட்டும் கல்விக் கூடங்களில் கூட, சாதிப் பெயர்கள் ஆடல் கண்டு சீறுகிறார். சாதிக் கொடுமைக் கெதிராக முழங்குவோர் செயலிழந்து, வாய்ச் சொல்லில் வீரராய் வகை கெட்டுக் கிடப்பதை எள்ளி நகையாடுகின்றார்.

சாதி ஒழிப்புக்கு உலகம் ஒன்றுபட்டெழுந்து, உடனே ஆவன செய்தல் வேண்டு மென்பதே அவரின் அறிவுரை; வேண்டுதல். புரட்சிக்கு வித்திடும் தன்மையில் அவருடைய அணுகுமுறை உள்ளது.

சிறுபயன் நாடிச் சாதிச் சிற்றினம் சேர்த்து நெஞ்சில்
வறுமையை வளர்ப்போர் காட்டும் வழியெலாம் தவிர்ப்பீர்

என்று கல்வித் துறையினர்க்கு வேண்டுகோள் விடுக்கிறார்; கற்றோரை வேண்டுகிறார்.

3.3 சாதித் தவளைகள்

சாதித் தவளைகளின் வறண்ட கூக்குரல், தமிழகச் சந்து பொந்துகள், வீதிகள், நகரெலாம் காதையும் கருத்தையும் துளைக்கிற தென்கிறார். சாதித் தவளைகளின் சப்தம் அடங்காத வரை, தமிழ்ச் சமுதாயம் சரியான நெறியில் கால் பதிக்கவில்லை என்பதே பொருள் என்பது ஆசிரியரின் கருத்து.

ஆதியிலிருந்தே அறிஞரும் பெரியரும்....
ஆழ்ந்து தெளிந்த ஆன்றோர் சான்றோர்
வள்ளுவர்....தெள்ளிய ஞானச் சித்தர்
சத்திய ஞானச் சபையின் தந்தை இப்
புத்துல கத்தின் புலவன் பாரதி.....

போன்றோர் கூறிய பகுத்தறிவுக் கருத்துகளைச் சமுதாயம் கடைப்பிடிக்க வில்லையே எனக் கலங்குகிறார். தமிழகத் தலைவர்களின்,

மனத்தினில் மாற்ற மின்றேல்
வாழ்வினில் வளர்ச்சி யில்லை

என்று இறுதியாக எச்சரிக்கை விடுக்கிறார்.

3.4 சமுதாய நீதி

சாதி பேத மற்ற - சரிநிலை - சமூகத்தில் தான் சமுதாயநீதி மிளிரும் என்பது நியதி. சாதிக் கிருமி, ஒரு துளைவிட்டு, மற்றொன்றை நாடி உண்டு, வளரும் உண்ணி என்கிறார்.

மேதைக்குப் புறம்பென்ப தெதுவுமில்லை
சாதியென்னும் பழியறியாச் சமுதாயம்
படைத்து வாழ்வோம்

என்பதன் வழியே, சாதியிலாச் சமுதாயம் ஒன்றே உலகை உயர்த்தும் என்பதில் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர். பேரிடும் சமுதாயத்தை, வேருடன் சாய்த்துப் புதியதோர் உலகம் செய்யப் புறப்பட்டார் பாவேந்தர். ஒன்றே குலம் என்கிற நிலை உருப் பெற்றால் தான், "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்ற உயர்நிலை உருவாகும் என்று உயர்வுகாணப் பண்ணிசைத்தவர் குலோத்துங்கன்.

3.5 சாதிக் கொடுமைகள் சாதியின் சாதனைகள்

"இனமென்ற மொழியென்ற எண்ணற்ற சிறுசுவர்கள் இல்லாத மனித உலகம்" வேண்டுமென விரும்புவதோடு அதனை உருவாக்க வழிகாட்டுபவர் குலோத்துங்கன்.

சாது என்ற கூட்டங்கள் சமயத்தின் தலைவர்கள் சாதித்த தென்ன?
ஓதென்று சொன்னமறை ஒருகோடி அவை நமக்கு உதவிய தென்ன?
ஒருமைக்கு வழிகாட்ட ஒரு சமயம் இன்றும் உளதோ?

என்று அடுக்கடுக்கான கேள்விக்கணைகள் தொடுத்து, சாதி, சமயங்கள் மனித குல ஒருமைக்கு வழிகாட்டாமல், வேற்றுமைக்கு வித்திடுகின்றன என்கிறார்.

ஞாலத்தில் இன்று வரை நாம் கண்ட வெற்றி யெலாம் - இரவு
நாளென்று பாராமல் நடுநின்று உண்மை தேடி
வான் கொண்ட அறிவியல் மனநிலை

என்று கூறும் கவிஞர், அறிவியலே நமது மறையெனக் கொண்டு, மாறாத அன்பு, நம் வழியென்று கண்டு, புதுயுகம் மலர்ந்திடச் செய்தல் வேண்டும்; அறிவியல் அணுகுமுறையே சாதிக் கொடுமைகளைச் சாய்க்கும் என்கிறார்.

3.6. சாதியை ஒழிக்கும் முயற்சியும் நிகழ்வும்

"ஆதியில் இல்லாத சாதி அமைப்புகள் உருவம் பெற்றுச் சங்கமாய் அங்குமிங்கும் தழைத்தன. ஏழ்மையை முதலாய் வைத்து, எளியரைத் திசை திருப்பும் தாழ்வினர் தன்னலத் தலைமையினர். புன்மையை வளர்க்கின்றன சாதிக்கட்சிகள். சாதித் தலைவர்களால், உயர்ந்த கோட்பாடுகள் மறைந்தன. புரட்சி யெல்லாம் பொசுங்கின. புரட்சியாளர், ஊனர்கள் ஆனார். ஊன் வளர்த்து, உடல் வளர்க்கும் சிறுமையினர், சிறப்புற்றனர். வறட்சி தோய்ந்த மனத்தினர் வளம் பெற்றனர்" என்று சாதியை ஒழிக்க முயன்றோர் வீழ்ந்ததையும் சாதிக் கொடுமையைத் துணைகொண்டோர் வாழ்வதையும் துயருடன் விளக்குகின்றார்.

பழிபெரும் பாவ மென்னப் பார்த்தவை அனைத்தும் சேர்த்துப்
பிழியவந் துருவெடுத்த பிணி பல பிணிகள் ஒன்றாய்த்
திரண்ட பேர் என்று வந்த தீமைஇச் சாதிச் சேற்றில்
புரண்டது போதும்....

சாதியை ஒழிக்க வாரீர் என்கிறார்.

3.7 சமயச் சாதனைகள்

சமுதாயத்தில், சமயத் தலைவர்களாலேயே பிரிவும் பிளவும் உருவாக்கப்பட்டு, சமயத்தின் பேரால் மக்கள் ஒருவரை, ஒருவர் கொன்று குவிக்கும் கொலைச் சூழல் உருவானது என்கிறார்.

மதத்தலைவர்கள் "எழச் சொன்னபோது எழுந்தோம். அவர்கள் தொழச் சொன்னபோது தொழுதோம். நம்பச் சொன்னபோது நம்பி, அவர்கள் பகையென்று சொன்னவர்களைப் பகைத்தோம்."

மதத் தலைவர்களின் கட்டளைகளை ஏற்று "எம் இனத்தைக் கொன்றோம். பிணமலையாய்க் குவித்தோம். பிளவுபட்டுப் போய் வெறுப்பு விரிந்து பரவி மண்ணில் வேரூன்றியது. இதுவே சமயச் சாதனைகள்" என்கிறார். "மதம், சமுதாயத்திற்கு அபின்" என்ற பொன்மொழி, குலோத்துங்கன் அவர்களின் கருத்தால், புகழ்மணம் பெறுகிறது.

"மதத்துக்கு எதிரான தீவிரப் போராட்டம், அந்த மதத்தை ஆன்மீக வாசனையாகக் கொண்ட உலகத்துக்கு எதிரான போராட்டமாக எண்ணுகிறது. இது அந்நியப் படுத்துதலின் எல்லா வழக்கங்களி லிருந்தும் மனிதனுடைய விடுதலைக்கான போராட்டம். மனிதனுடைய முழு வளர்ச்சிக்கான போராட்டமுமாகும். மதத்திற்கு எதிரான விமரிசனம், மற்ற அனைத்துக்கும் எதிரான அடிப்படை விமரிசனமாகும்", என்னும் கார்ல் மார்க்சு அவர்களின் கருத்து மதங்களுக்கெதிரான போராட்டச் சிறப்பை வலியுறுத்துகிறது. காரணம், மதங்கள், மக்களைப் பிரிப்பதையே சாதனையாகக் கருதிச் செயல்படுகின்றன.

பண்டை நாள் சிலுவைப் போர்கள் தொட்டு, சைவ, வைணவப் பூசல்கள், இந்து, சமண வெறிச் செயல்கள்; இன்னும் தொடரும் சமயக் கலவரங்கள், சமயங்களின் சாதனைகளை விளக்கும் நல்ல விளக்கங்களாகும் !

3.8 சமயங்கள் தேவைதானா?

மானிடர்தம் வளர்ச்சிக்கு மதம் படைத்தோம். அது, மக்களுக்குள், பகை வளர்க்கும் களமாய் அமைந்தால், மதம் ஒழிதல் நன்றெனும் கொள்கை கொண்டது குலோத்துங்கன் நூல்.

மதத்தின் பெயரால் மக்களைப் பிரிக்க
நீதமொரு பொலிவுடன் நீளும் சுவர்கள்.

மதிலும் சுவரும் வளர்ந்த நெஞ்சினில்
எதுவும் தளிர்விடா தென்பது திண்ணம்

எனவே அன்பு செய்யா மதம் தேவையில்லை என்பது உணர்த்தப் பெறுகின்றது.

மனித சாதியின் வாழ்வினை மிஞ்சும்
புனிதமொன் றிலை இதைப் புவிமிசை நாட்டுவம்

என்னும் அடிகளால், புனிதம் மிகுந்த மனிதத்தைப் போற்றி, மக்களைப் பிரித்துப் போரிடத் தூண்டிச் சமுதாயத்தைச் சாவிடமாக்கும் மதங்களை எதிர்ப்போம், என்பது வரவேற்கப்படத் தக்கதாகும்.

3.9 சாதி சமயம் பற்றிய சிந்தனைகள்

வானத்தை அண்ணாந்து பார்ப்ப தொன்றே
மதமென்றும் மறையென்றும் மயங்கி நிற்கும்
ஊனத்தைச் சுமக்கின்றீர்!

என்று மதமென்ற பேரால் கண்மூடி வழக்கத்தைப் பின்பற்று வோரைக் கூவி அழைக்கின்றார்.

வாழ்வுப் பாதையில் வழிகாட்டும் தவப் பெரியார் வந்து போனார்
முன்னையவர் அனைவருமே முனிவர் அல்லர்
முனிவரென நின்றோரும் கடவுளல்லர்
......மற்றவர்கள் உணர்வுகளை மதிப்போம் பண்டை
மரபுகளின் அடிப்படையை ஆய்வோம் ஆழ்ந்து
கற்றவர்கள் முடிவென்னில் ஏற்போம் எஃதும்
கண்மூடி எதிர்ப்பதில்லை ஏற்பதில்லை

என்னும் அடிகளால் திட்ட வட்டமாகத் தம் கருத்தைக் குறிப்பிடுகின்றார். இதை மக்களும் பின்பற்றினால், மதக் கொடுமைகளிலிருந்து விடுபடலாம் என்பது உள்ளுறை; வழிகாட்டுதல்.

புண்ணிய பாவம் மற்றும் புனைந்தன நம்பி யன்று
திண்ணிய நெஞ்சின் வேள்வித் திறனையே நம்பிநின்றோம்

மதம், விதி, புண்ணியம், பாவம் போன்ற புனைகதைகளை நம்பாமல், எதையும் தாங்கும் இதயத்தின் வலிமையால், கூற்று உடன்று வரினும் கூடி எதிர் நிற்கும் ஆற்றல் பெற்றுத் திகழ்தல் வலியுறுத்தப் பெறுகிறது.

முனைவர் வா.செ. குழந்தைசாமி அவர்கள் அறிவியல் அறிஞர். எனவே அனைத்தையும் அறிவியல் கண்ணோட்டத்தில் காண்கிறார். மக்கட்குப் பயன்படாதவை, ஊறு தேடுபவை எவையானாலும் அகற்றப்பட வேண்டியவை. மதம், அன்புக்குப் பதில் அழிவை இணைப்பதாயின், அது புறக்கணிக்கப்பட வேண்டும் என்பது, வரவேற்கப்படவேண்டிய சீரிய சிந்தனை.

4. பூரணத்தின் ஒரு பாதி

4.0 முன்னுரை

பெண்ணைப் பாடாத கவிஞர் இலர். பெண்மை பற்றிப் பேசாத இலக்கியம் இல்லை. இனம், நாட்டெல்லை கடந்து, குறுகிய சாதி, மதக் கொடுவட்டங்கள் தாண்டிப் பேசப் பெறுவதும் போற்றப் பெறுவதும் காதலும் அதன் உந்து சக்தியாக ஒளிரும் பெண்ணும் தாம். பாடுவோரின் பாங்குக்கேற்பப் பெண் பேசப் பெறுகிறாள். பண்டை இலக்கியங்கள் சில, பெண்ணைப் பேயாகவே சித்திரிக்கின்றன. குலோத்துங்கன் கவிதைகள், உயர்ந்த கோணத்தில் பெண்ணைப் பார்க்கின்றன. சிறியன சிந்தியாச் சீரிய நிலையில், பெண் படைக்கப் பெற்றுள்ளாள். சிறுமாசும் தீண்டாப் பெரிய தோற்றத்தினளாகக் குலோத்துங்கனின் கவிப் பெண்ணாள் படைக்கப் பெறுகின்றாள்.

4.1 குலோத்துங்கனின் கவிதைப் பெண்

"கவிஞர்கள் காலமெல்லாம் பாடியதும் காவியங்கள் கருப்பொருளாய்க் கொண்டதுவும் கலைகட்கெல்லாம் மூலமென நின்றதுவும் உயிர் தொட்டீர்க்கும் பெண்மையைத் தான்".

புத்துணர்வின் மணற்கேணி. அழகு கோடி
பூக்கின்ற மலர்க்காடு. கண்ஒவ் வொன்றும்
முத்துடைய மாதுளைபோல் அங்கம் தோறும்
முடிவில்லாச் சுவையமைந்த முழுமை பெண்மை

என்று "அனைத்தும் பெண்மை" எனப் போற்றும் கவிஞர் முத்தாய்ப்பாய்க் கூறும் கருத்து, பலகவிஞர்களின் கோணங்களினின்றும் மாறுபட்ட நோக்கும் போக்கும் கொண்டதாக அமைகின்றது. போகப் பொருளாக மட்டும் பெண்ணைக் கருதுவது பிழையானது பேதமையானது; பெருமைக் கெதிரானது.

அன்புமது, ஆற்றலது; உயர்வு தேடும்
ஆசையது அடிப்படைகள் அனைத்தும் பெண்மை

என்கிறார். "பெண், கள்ளோ, காவியமோ? என்பது, அணுகும் ஆணைப் பொறுத்தது" என்பார், டாக்டர் மு.வ. அவர்கள். குலோத்துங்கன் பெண்ணைக் காவியமாகக் காண்கிறார்; கவின் மிகு இலக்கியமாகக் கையாள அறிவுறுத்துகின்றார்.

4.2 குலோத்துங்கனின் கவிப்பெண் தோற்றம்

பெண்ணின் எழிலைப் போற்றிட, உயர்ந்த பொருட்களை உவமை யாக்குகிறார்.

மாந்தளிர் மேனியள் வாழ்வின் சுவையெலாம்
ஏந்திய உருவத்தினள் வையப் பொலி வெலாம்
கொண்டு திகழும் அழகின் திரு உரு....
....இப்புவி பெறற்கரும் மாமணி
வான் தவழும் கோல நிலவு;வான் மகள் அவள்....

பெண்ணை விளக்கும் விதத்தில், கவித்துவமும் கற்பனையும் மிக உயர்ந்த பண்பாடும் திகழ்வதால், குலோத்துங்கன் கவிதைகள் குன்றின் கோபுர மணிவிளக்காக; மணிவிளக்கின் வண்ணப் பேரொளியாக நெடுந்தொலைவுக்கு ஒளிப் புனலைப் பாய்ச்சுகின்றன.

அன்பே! இளமைக்கு அணி செய்யும் பெண் மயிலே!
....உயிர்ச்சிலையே! கற்பனையின் எல்லை கடந்த
எழில் உருவே! காதல் கடலோ நீ? களிப்பின் இருப்பிடமோ?
....ஓதும் அழகேஉன் உருவாக வந்ததுவோ?
....செந்தமிழே! தமிழ்ச் சுவையே! சிலையே

என்று பாமாலை சூட்டிப் பரவசப் படுகிறார் குலோத்துங்கன், பூமாலை சூட்டி இறைவனைப் போற்றும் இறை நெறியாளர் போன்று.

பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள், படைப்பில் ஒரு கவிஞன், மன்னன் மகளாம் காதலியை,

. . . . வானச்
சோலையிலே பூத்ததனிப் பூவோ நீதான்
சொக்க வெள்ளிப் பாற்குடமோ அமுத ஊற்றோ?
. . . . .எனை இழந்தேன் உன் எழிலில் கலந்த தாலே

எனப் புகழ்வது ஒப்பிடற்குரியது.

ஆதி முதல் மானிடத்தைப் பேணி வளர்த்தவர்கள்
பெண் என்னும் தெய்வங்கள்....
....மாண்பென்னும் பண்புக்கும் வடிவம் தந்து
வடித்த எழில் சிற்பமடா மாதர் கூட்டம்....
வையத்தின் மாண்பனைத்தும் ஒரு சொல் கொண்டு
வருணிக்க வேண்டுமெனில் அழகென் பேன்யான்
ஐயத்திற் கிடமின்றி அருவம் நீக்கி
அழகுதனி வடிவுபெறின் அரிவை ஆகும்

என்கிறார் கவிஞர்.

பரமசிவன், பார்வதியைத் தம் இடப் பாகத்தில் வைத்ததால்தான், பேராற்றல் பெறமுடிந்தது என்று புராணம் கூறி, உலகில் பெண்களே ஆற்றல். அவர்களை ஏற்றால்தான் மனிதர் சக்தி பெற முடியும் என்பதை விளக்குகிறார்.

பாவையினைத் தன்னுடலில் பாதி யாக்கும்
பகுத்தறிவால் பரமசிவன் வலிமை பெற்றான்.

* * * *

....ஆணும் பெண்ணும் பூரணத்தின் இருபாதி
நகல்கள் அல்லர்

என்று முடிவாகக் கூறுகிறார்.

4.3 பெண் எழிலால் பித்தான கவிஞர்

எழில், ஈர்ப்புச் சக்தி நிறைந்தது. கவிஞரும் கலைஞரும் எழிலில் இணைவது இயல்பே. "A thing of beauty is joy for ever", அனைத்து நிலையிலும் அழகு மகிழ்வூட்ட வல்லது. தம்மை ஈர்த்தவற்றைப் பட்டியலிடுகிறார் கவிஞர்.

செத்தமிழே! தமிழ்ச் சுவையே! கவிஞன் சிற்பி
செய்யாத காவியமே! சிலையே ! உந்தன்
பொன்னுடலின் பேரெழிலோ எழில் விரித்த
பொவன் கதிரின் நல்லொளியோ! ஒளிவிரித்த
மின்னலெனும் சிற்றிடை யோ? இடை சுமந்த
மெல்லுடலின் நடை அசைவோ? அசைந்த செவ்வாய்ப்
புன்னகையின் வெள் எயிறோ? எயிறு போர்த்த
பூவிதழின் நன் மதுவோ! மது நனைத்த
கன்னல் மொழித் தீஞ்சுவையோ? எனது நெஞ்சம்
கவர்ந்திட்ட பொருள் எதுவோ?

எனக் கேட்கிறார். நான் அறியேன் என்கிறார். இங்கு நாம் ஆய்வு மேற் கொள்ள முடியாது. எனவே கவிஞர் குறிப்பிட்ட ஏழும் இணைந்தே இடர் செய்தன, கவர்ந்தன என்றே சொல்லலாம். சிலப்பதிகாரக் கோவலனும் கானல் வரியில்,

பொழில்தரு நறுநிழலே! புதுமணம் விரிமணலே!
பழுதறு திருமொழியே! பனை இளவன முலையே!
முழுமதி புரை முகமே! முரிபுரு வில் இணையே!
எழுதரு மின்இடையே! எனை இடர் செய்தனவே

என்று 12 அடிகளில் தனக்கு இடர் செய்தனவற்றைக் குறிப்பிடுகிறான். நான்கடிகள் கொண்ட ஒவ்வொரு பாடலிலும் தனக்கு இடர் செய்த ஏழு பொருட்களைப் பட்டியலிடுகிறான். குலோத்துங்கன் குறிப்பிடுவதும் ஏழு பொருட்களைத்தாம். "Greatmen Think alike". உயர்ந்தோர் உள்ளல் ஒன்று போல் இருக்கும்.

4.4 காதல் கொண்டதன் காரணங்கள்

கைகள் படாமல், மெய்யும் தொடாமல்
காதல் மலர்வதில்லை

என்ற கருத்துக்கு எதிரானது குலோத்துங்கன் காட்டும் காதல் காட்சி.

*　*　*　*

. . . . எனது காதல்
ஆண்மகன் பெண்பால் கொள்ளும்
ஆசையின் தரத்த தன்று.

*　*　*　*

. . . . . காமம் ஓர் அணுவும் இல்லை

என்று "பூரண வேட்கை" என்னும் பாடலில், தான் காதல் கொண்ட காரணத்தைக் கூறுகிறார். காதலின் புனிதத்தைப் புகலுவதாகப் - போதிப்பதாக - உள்ளது.

மலரினும் மெல்லிது காமம் சிலரதன்
செவ்வி தலைப்படு வார்

என்ற, குறளோவியக் கோட்பாட்டின் நகலாகக் குலோத்துங்கனின் காதல் திகழ்கிறது.

4.5 புதுமையான காதலுணர்வு - காதலின் புதிய பரிமாணம்

உள்ளங்கள் இரண்டின் ஒன்றுதலே சங்கமம். கூடலின்பத்திலும் மேம்பட்டது; உடல்கள் ஒன்றாமலேயே, கூடல் நிகழக் கூடுமென்பது கவிஞரின் கருத்து.

கைகள் தொடாது கால்கள் படாது
கலவிகள் நிகழ்வதுண்டு. உணர்வுகள்
கரைபுரண் டெழுவதுண்டு......சுருளம்
குவிவதும் கலவியடா

என்னும் கருத்து சிந்தனைக்குரியது.

பிறந்த இடத்தை மறக்குதில்லையே
பேதை நெஞ்சம்

என்று செக்குமாடாய்ச் சுழன்ற உணர்வுக்குக் குலோத்துங்கனின் கருத்து ஒவ்வாப் புதிராகத் தோன்றலாம். கோப்பெருஞ் சோழனும் புலவர் பிசிராந்தையாரும் ஒருவரை ஒருவர் பார்த்திடா நிலையில் நட்பின் சிகரத்தில் நின்றனர். "புணர்ச்சி பழகுதல் வேண்டா, உணர்ச்சிதான் நட்பாங் கிழமை தரும்" என்பது வள்ளுவர் வாக்கு.

குறுந்தொகைத் தலைவன், தன் உளம் கவர்ந்தவளுடன்

ஒரு நாள் புணரப் புணரின்
அரை நாள் வாழ்க்கையும் வேண்டலன் யானே

என்று தன் காதல் நிலையைக் கூறுகிறான்.

தலைவியை, நீண்ட நாள் பிரிந்து, மீண்டும் வீடு திரும்பிய குறுந்தொகைத் தலைவன், தன் தலைவியுடன் உரையாடி இன்பம்

துய்க்காமல், தன் மகனை எடுத்து மகிழ்ந்த நிலையை ஓவியமாக்குகிறது குறுந்தொகைப் பாடல்.

கள்ளினும் காமம் பெரிது ஆனால் காமத்தைவிட அன்பு, பாசம், கருணை பெரிது.

அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே

என்று அன்பின் மாண்பு விளக்கப்படுகிறது. இதன் அடிப்படையில் ஒத்த அன்புணர்வு கொண்ட காதலர் கூடாமலேயே இன்பநிலை காணமுடியும் என்று குலோத்துங்கன் குறிப்பிடுகிறார். இதனால் தான்

இம்மியும் பொய்யிலை. நம்முளம் உடல்
இன்பத்தைத் தாண்டிக் கலந்தவை

என அறுதியிட்டு, உறுதி கூறுகிறார் கவிஞர்.

4.6 காதலில் தோன்றும் இனிமை,

"பெண்மை எனப்படும் காவியம் - புவி பேணும் வலிமையின் பெட்டகம்" என்பது குலோத்துங்கனின் கோட்பாடு. காதற் பிணைப்பில், புது ஞாலம் பிறக்கக் கூடும் என்பது கவிஞரின் நம்பிக்கை கவிஞர், புவிக்குக் கூறும் இனிய செய்தி

காதலினால் சாகாமல் இருத்தல் கூடும்
கவலைபோம் அதனாலே மரணம் பொய்யாம்

என்பது பாரதியின் காதற் கணிப்பு.

கண்ணின் கடைப்பார்வை காதலியர் காட்டிவிட்டால்
மண்ணில் பெருமலையும் மாவீரர்க் கோர்கடுகாம்

என்பது காதலின் சத்தியை விளக்கும் பாவேந்தரின் பார்வை.

உலர்ந்த சருகென உதிர்ந்த நெஞ்சம்
மலர்ந்த துன்னால், வையம்
கடந்ததோர் வீடு கண்டோம்

என்று காதற் சிறப்பை விளக்குகிறார் குலோத்துங்கன்.

அன்பே! உந்தன் மெய்தொட்ட இன்பமெலாம்
விரல்களுக்கும் நினைவுண்டு

காதல் உணர்வால் மூளையின் பணியை, விரல்கள் செய்கின்றன. முதற் சந்திப்பில் கண்டு மகிழ்ந்த காட்சிகளைக் கண்கள் பதிய வைத்துக் கொண்டு, இப்போதும் அவற்றைக் கண்டு மகிழ்கின்றன மனக் கண்களால். "செவிகளுக்கும் நினைவுண்டு புலரும் வான் நேர் திருமகள்நின் சுவை மொழியை மீண்டும் மீண்டும் புவியிருக்கும் வரைகேட்பேன்" என்கிறார். "கவிஞர், காதலர், பித்தர் மூவரும் ஒத்த உணர்வினர்" என்பார், ஆங்கில நாடக

மொழியை மீண்டும் மீண்டும் புவியிருக்கும் வரைகேட்பேன்" என்கிறார். "கவிஞர், காதலர், பித்தர் மூவரும் ஒத்த உணர்வினர்" என்பார், ஆங்கில நாடக ஆசிரியர் சேக்ஸ்பியர் அவர்கள்.

4.7 குடும்ப வாழ்வே, வாழ்வின் முழுமை

"திருமணம் செய்து கொண்டபின் தவறை உணர்வாய்: செய்து கொள்ளாவிட்டாலும் தவறை உணர்வாய்." என்பது ஒரு பொன்மொழி. இருதலைக் கொள்ளியில் எதனை ஏற்பது?

துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை

குறளின் கூற்று.

பொங்குமிளங் காதலுளம் பொலிய
அங்கை எனதுடல்தழுவ அலைபுரளும்
இன்பத்தில் அகம் மலர்ந்து
செங்கொவ்வை இதழ் அவிழ அத்தான்

என்று தலைவி சொல்லும் நிலையும்,

கலைப் புதையல் தென்றலென அசைந்து வரும்
செல்வம் என் சேய்....
கற்கண்டுச் சுவை வாயால் "அப்பா என்றான்"

என்னும் நிலையும் இணைந்தால்தான் வாழ்வு வாழ்வாகிற தென்பது குலோத்துங்கனின் கொள்கை. காதல் நிறை மனைவியும் அன்பு மிகு மக்கட் செல்வமும் பெற்றிருப்பதே பேறு பெற்ற வாழ்க்கை.

மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு

என்ற குறளுடன் கூட்டிப் பார்த்தால், குலோத்துங்கன் சிறப்பு மிளிரும்.

"எவர் திருமணம் செய்து கொண்டாரோ, அவர் மார்க்கத்தின் இரண்டில் ஒரு பகுதியை நிறைவேற்றி விட்டார்" என்பது நபி அவர்களின் வாக்கு.

4.8 மக்கட்பேறு

தனிமனிதனை அடிப்படையாகக் கொண்டு, உலகம் தொடங்குகிறது. மனமொத்த ஆண், பெண்ணின் கூட்டுக் களிப்பிலே உருவாவது மக்கட்பேறு என்னும் கனி. உலக இயக்கத்தின் நிலைக்கு உதவுவது மக்கட்பேறு, உலக வளர்ச்சியின் தளிர். குழந்தையைப் பற்றிப் பாடாத கவிஞரில்லை.

பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற

என்பது மக்கட்பேற்றின் சிறப்புணர்த்தும் குறள் ஓவியம். அமரகவி பாரதியார்:

சின்னஞ்சிறு கிளியே! கண்ணம்மா! செல்வக் களஞ்சியமே!
பிள்ளைக் கனியமுதே! கண்ணம்மா! பேசும் பொற் சித்திரமே!

என 48 அடிகள் கொண்ட கவிதையால் கண்ணம்மாவைப் போற்றிப் புகழ்கிறார்; உணர்வை, விரிவாய் விளக்குகிறார்.

மடியேறி விளையாடும் குழந்தை இன்ப
வாரிக்குள் விளைந்திட்ட தரளமோ - காதல்
கொடியேறி அவிழ்ந்திட்ட மலரோ - எங்கள்
கூட்டுக் களிப்பின் சிரிப்போ

என்று உலக நியதியை எழில் நிறை கற்பனையோடு தருகிறார் கவிஞர் குலோத்துங்கன்.

ஆடிவருந்திருவே! தேடி வந்த சிலையே!
சொல்கடந்த வானமுதே!
இன்பம் உருவெடுத்த பேரழகே!
இசை வடிவே !விந்தைப் பொருளே!
எழில் எடுத்த பொன்னுருவே!

என்று பாரதியை மிஞ்சும் பாங்கில் குழந்தையைப் போற்றுகின்றார் கவிஞர் குலோத்துங்கன் அவர்கள்.

மனிதகுலத்தின் மாசு மருவற்ற புனித நிலையே!
புலன் கடந்த பேருணர்வே!

என்று குழந்தையை அழைக்கும் கவிஞர், "குழந்தையரே! நீவிர், வாழும் சமுதாய வஞ்சம் அறியாதவர்கள், மண்ணில் தெரிவனவற்றுள் மறைந்திருக்கும் மாசுபல, கண்ணில் உங்களுக்குத் தெரிவதில்லை. குறையறியாதவர்கள் நீவிர். உங்கள் நெஞ்சும் நினைவும் நிறைவினிலே உள்ளன. நிறைவானவர்களாக இருக்கிறீர்கள்" என முடிக்கிறார்.

நிறைந்தாய்! நிறைவானாய்

என்ற பாடலில், எச்சரிக்கையாய் இருக்க வேண்டும்,

விழிப்புடன் இருக்க வேண்டும்

என்று சொல்லவில்லை. வாழுகிற சமுதாய நிலையின் தன்மையை மட்டும் சுட்டிக்காட்டிவிட்டு, முடிவெடுக்கும் கடமையைக் குழந்தைகளிடமே விட்டு விடுகிறார்.

ஓடி விளையாடு பாப்பா, ஒரு
குழந்தையை வையாதே பாப்பா

என்று பாரதி போன்றோ,

அறம்செய விரும்பு
*ஆறுவது சினம்

என ஔவை மூதாட்டி போன்றோ குலோத்துங்கன் அறிவுரை கூறவில்லை. இருக்கும் சூழலை விளக்கிவிட்டு, செய்யும் செயலைக் கேட்போர்க்கே விட்டுவிடும் கவிதைப் போக்கு குலோத்துங்கனின் அணுகுமுறை. இது தலைமுறை இடைவெளியின் (Generation gap) வெளிப்பாடாகவும் கொள்ளலாம். பகுத்தறிவுக் கருத்துக்கள் பரப்பும் பெரியார் அவர்கள், "இதை ஏற்பதும் ஏற்காததும் உங்கள் கையில்" என்பது ஒப்பிடற்குரியது.

நூலாசிரியர் முனைவர் வா.செ. குழந்தைசாமி, ஓர் ஒப்பற்ற அறிவியல் அறிஞர். இலக்கிய ஈடுபாடு கொண்டிருப்பினும் உள்ளம் அறிவியலையே நடுவணாகக் கொண்டு சுழல்கிறது. இவர் காணும் மனிதர்கள், மண்ணில் மாடிவீடு கட்டாமல், விண்ணில் வீடுகட்ட முனைவதாகக் கூறுகின்றார்.

தாரகைகள் பூத்தொளிரும் சாலப் பெருவெளியில்
ஊரமைத்து வாழ்வதற்கு உளம் விழையும் மாண்புடைய
மனித குலத்தின் மாசு மறுவற்ற
புனித நிலை. . . .

என்கிறார். விண்ணில் ஊரமைக்கும் பேறுபெற்ற, அறிவியல் அறிவு முதிர்ச்சியுற்ற சமுதாயக் குழந்தைகட்கு, ஒருவர் பாடம் புகட்டத் தேவை இல்லை. வாழ்கின்ற சூழ்நிலையைச் சொன்னால், வாழுகின்ற முறையை அவர்களே முடிவு செய்வர் என்ற நோக்கமும் குலோத்துங்கன் அறிவுரை கூறாததன் காரணமாகலாம். விண்ணில் வீதி சமைத்து, வீடு அமைத்துக் குடியேற வேண்டுமென்பதே கவிஞரின் விருப்பம், வேண்டுதல், அறிவுரை.

"உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்" எனக் குறள் கூறும். "கனவு காணுங்கள்" என்பார் மாமேதை டாக்டர் அப்துல்கலாம் அவர்கள். ஒரே மரத்தில் கனிந்த கனிகளின் இயல்பு அவர்கள்.

4.9 கவிஞரின் விருப்பம்

"எத்தவத்தைச் செய்தாலும் ஏதவத்தை பட்டாலும் முத்தர் மனமிருக்கும் மோனத்தே. . . " என்பது போல் பெண், பெண்மை; காதல் வாழ்வு போன்ற இல்லறச் சிந்தனைகளை விளக்கமுற விளக்கினாலும் நவமணிகளை இணைக்கும் பொன் சரடாக, அறிவியல் சிந்தனையும் நாட்டின் எதிர்காலக் கனவுகளும் பட்டு நெசவின் பாவு போல் நிற்கக் காண்கிறோம்.

மக்கட் பெருக்கத்தால், வசதியின்மையால், வீடில்லாத் துயர் மாற்ற விண்வெளியில் வீடமைப்பதே வழியென்பது கவிஞர் கண்ட குடியிருப்புப் பிரச்சினை தீர்வாகும். விண்ணில் வீடமைக்க விரும்பும் கவிஞர், தாம் மட்டும்

அருவியின் புனலில் அலைகடல் நீலவான்
மருவிடும் வெளியில் மாசறு வெண்பனி
உறங்கும் தனிமலை உச்சியின் அமைதியில்
மறந்திம் மண்ணினை வாழுவம் வாராய்

வாழ்வின் ஒளியே வாராய்!வையத்
தாழ்வுகள் யாவையும் தாண்டுவம் சிறுமையில்
கலங்கும் மானிடர் கைபடா தியற்கை
இலங்கும் பொன்னுலகு ஏகுவம் அன்பே!

என்று "குடியேற்றம்" எனும் கவிதையில் கூறுகிறார்.

இலக்கியம் படைப்போர் இறைவனை நிகர்த்தவர். மனிதரினின்று மாறுபட்டவர். அதனால் தான் கவிஞரின் சிந்தனை இயற்கைச் சூழலை, தனிமையை நாடுகிறது போலும்! கவிஞர் மற்ற கவிஞரினின்று மாறுபட்ட சிந்தனையாளர் என்பதற்கு இதுவும் ஒரு நிகழ்வாக இருக்கிறதெனலாம்.

4.10 காதற் பிரிவு

இலக்கியத்தில் தலைவன் தலைவியை விட்டுப் பிரிந்து செல்லுதலும் தலைவி, பிரிவைப் பொறுத்தாற்றி இருத்தலும் நினைந்து புலம்புதலும் வாய்விட்டு அரற்றுதலும் உணவின் பல்வேறு சுவைகள் போன்று, படிப்போருக்குப் பரிமாறப் பெறுகின்றன. சங்கத் தமிழில் திளைத்த கவிஞர், பிரிவு, பிரிவுத் துன்பம் பற்றிப் பாடத்தவறவில்லை. ஒருவேறுபாடு.

சங்ககாலத் தமிழன், பொருள் தேடப் "பொருள் வயிற்பிரிந்து" சென்றான். போர் நிமித்தம்; மன்னனின் தூது நிமித்தம், கல்வி நிமித்தம், துணைவியை நீத்துச் சென்றான் என்று தொல் தமிழ்ப் பெட்டகமான தொல்காப்பியம் சுட்டுகிறது. கற்பியலில், இறுதிப் பகுதியாகப் பிரிவு அமைக்கப் பெறுகிறது. 46 முதல் 50 முடிய உள்ள 5 நூற்பாக்கள், பிரிவு பற்றிப் பேசுகின்றன.

சொந்தம் மறந்தவர் சென்றதை எண்ணிநீ
சோர்ந்து துவள்வதும் ஏன் மனமே!
நம்மை மறந்தவர் தம்மை மறந்திட நாமறியாததும் ஏன் மனமே!....
.... நெஞ்சில் நிறைந்தவர் நீங்கிய பின்னரும்
நேச நினைவினில் வாடுகிறாய்....

என்று நெஞ்சுடன் புலம்பும் தலைவனைக் குலோத்துங்கன் கவிதைகள் படம் பிடித்துக் காட்டுகின்றன.

"நம்மை மறந்தாரை நாம் மறக்க மாட்டேமால்...." பழம் பாடல் அடி, "நம்மை மறந்தாரை மனமேநீ, ஏன் மறக்க அறியாமலிருக்கிறாய்?" புதிய அணுகு முறை.

துயர் துடைக்கும் ஆற்றல், பள்ளிப் பாடத்திற்கும் பட்டறிவுக்கும் இல்லை என்பதை,

பட்டறி வென்பதும் பள்ளியின் பாடமும்
பாசம் செயும்துயர் தீர்ப்பதில்லை.
.... ஆல மரக்கிளை, வேரென நாள்தொறும்
ஆசை வலுப்பெறக் காணுகிறேன்....

என்னும் அடிகளால் உணர்த்துகிறார் கவிஞர்.

காதற்பிரிவால் துடிக்கும் நிலையிலும் கவிஞர் கூறும் உவமை நயம் போற்றுதற்குரியது. வலுப்பெறும் ஆசையை விளக்க, இல்பொருள் உவமையையோ, பிற அணிகளையோ பயன்படுத்தாமல், ஆலமர வேர், கிளைகளை உருவகமாகப் பயன்படுத்துவது எளிய ஆனால் இனிய உவமையாகி எழிலும் இன்பமும் இணைக்கின்றன.

பிரிவாற்றாமையால் தவிக்கும் உள்ளம், இறுதியில் தம்மால் பாசத்தை மறக்க முடியாது; பாசமிலா உலகம் பாழ் உலகம், பாலை நிலம். அதனால் தம் உள்ளத்தை என்றும் பாலையாக்க விரும்பவில்லை; நினைவில் நிறுத்திப் பசுமையுடனிருக்கவே விரும்புவதாகக் குறிப்பாலுணர்த்துவதாக உள்ளதை

பாசமிலா தொரு பாருளதேல் அது பாலை....
* * * *

. . . .நேசமும் பாசமும் நின்றெதிர் கொண்டவர்
நெஞ்சம் பிரிந்தபின் முள்அலவோ?

எனக் கூறுவதன் வாயிலாகப் பிரிவுத் துன்பத்தின் கொடிய நிலையை உணர்த்தி முடிக்கிறார்.

காதற் பிரிவால், உள்ளம் அலைமோதி, அல்லலுற்று, ஆற்றாது அரற்றிய பின்பு,

பாதையெலாம் நீயிருக்கும் பக்கத்தே சேர்க்கிறது.....
....கலையுருவாய் நிற்கும்நீ கற்பனையில் என்னுணர்வின்
நிலையுணர்தல் கூடுமெந்தன் நெஞ்சுணர்தல் கூடும்

என்று தம் நிலையைக் கூறுகிறார். இறுதியில், "காதல் நிலையில் ஒன்றிணையாவிட்டாலும் உலக நலன் கருதி - மறுமலர்ச்சி காண - ஒன்றிணைவோம் வருக" என வேண்டுகின்றார். இதை

அன்பிற்கு இலக்கணமாய், அகத்திற்கு நாயகமாய்
மன்பதையின் வாழ்விலொரு மறுமலர்ச்சி காண்போமோ?

என்னும் அடிகள் விளக்குகின்றன. பிரிவாற்றாமையால் தவிக்கும் உள்ளம், இணையத் துடிப்பதை மறந்து, சமுதாய நலன் பேணத் துடிப்பதில் நிலை பெறுகின்றது.

ஊனேறு செல்வத்து உடன் பிறவியான் வேண்டேன்
கூனேறு சங்க மிடத்தான்தன் வேங்கடத்துக்
கோனேரி வாழும் குருகாய்ப் பிறப்பேனே....
மீனாய்ப் பிறக்கும் விதியுடையேன் ஆவேனே
செண்பகமாய் நிற்கும் திருவுடையேன் ஆவேனே
தம்பகமாய் நிற்கும் தவமுடையேன் ஆவேனே
படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேனே....

என்று பல்வேறு நிலைகளில் ஒன்றாய் இருக்க வேண்டுமென்று விழைந்து, ஊசலாடும் குலசேகர மன்னன், இறுதியில் மனத்தெளிவும் அமைதியும் பெற்று

"எம்பெருமான் பொன்மலை மேல் ஏதேனும் ஆவேனே" என்று பாடும் பக்தி நிலை முத்தாய்ப்புப் போன்று, குலோத்துங்கன் "மன்பதை வாழ்வில், மறுமலர்ச்சி காண்போம்" என்பது உலக உயர்வில், வாழ்வின் இலக்கு முற்றுப் பெறுவதாக - முற்றுப்பெறவேண்டுமென - உணர்த்துவதாக அமைகிற தெனலாம்.

குலோத்துங்கன் கவிதைகளின் பாமணம், பல காதம் கடந்து, பலகாலம் பொதிகைச் சந்தனமாகப் புகழ்மணக்கும். காரணம் அவர் பாடலைப் பாநயத்திற்காக மட்டும் பயன்படுத்தவில்லை; சமுதாய மாற்றத்திற்கு வழி காட்டும் ஒளிப்பிழம்பாக - கலங்கரை விளக்கமாகவும் கவிதையைப் பயன்படுத்துகிறார். கவிதைகள் கோபுர விளக்காக மிளிர்கின்றன.

4.11 பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள்

பெண்ணைச் சமுதாயம், மண்ணாய் மதித்து, மிதிக்கிறதென்பது கவிஞரின் கருத்து. மகளிர்.

மதி நலத்தில் சமமாவர் ஆய்ந்து பேசும்
மன்றத்தில் சமமாவர், தலைமைப் பண்பின்
விதி முறையில் சமமாவர், அன்பில் பண்பில்
மேலாவர் என்பதுவும் மிகைஒன் றன்று

இம்மேலோர், இல்லறத்தில் சிறந்து விளங்கும் ஏற்றம் பெற்றோர்.

காதலிலும் தீமையெனின் கனன்று பொங்கிக்
காய்வதிலும் எளியவரைக் காக்கத் தம்மை
ஈதலிலும் தலைமுறையின் ஏற்றம் தேடும்
இயற்கையிலும் தாய்க்குலத்துக் கிணையொன்றில்லை

ஆனால், பாவையர், பாவியராகக் கருதப்படுகின்றனர்.

பிறந்தஉயிர் பெண்ணாயின் பலதே யத்தில்
பெருமூச்சே வரவேற்பாய்ப் பெறுவ துண்டு

என்பதன் வாயிலாகப் பெண் சிசுக்கள் வெறுக்கப்படுவதைக் குறிப்பிடுகிறார். தொடர்விளைவுகள், தொடர்கின்றன.

திருமணத்தில் விலைபேசும் சிறுமை கூடத் தீர்ந்ததில்லை....

என்று வரதட்சணை என்னும் வரன் தண்டம் பற்றிக் கூறி வருந்துகின்றார்.

சதி இன்னும் வாழ்கிறது. பெண்ணை வைத்துச்
சந்தை பல நடக்கிறது. விதவை என்னும்
விதி இன்னும் தொடர்கிறது

என்பது ஆங்காங்கே இன்னும் நடக்கும் காட்டுமிராண்டிச் சதிச் சம்பவம், விதவைகளுக்கு இழைக்கப்படும் அநீதிகளை வேதனையுடன் வெளிப்படுத்துகிறார். அமுத்தப்படும் பெண்ணினம், தலை நிமிர வழியில்லாத தாழ்வுற்ற சமூக நலிவுற்ற நிலை உணர்த்தப்படுகிறது.

4.12 வீழ்ச்சியுற்ற பெண்கள்

ஏற்றம் பெற்ற பெண்களின் போற்றற்குரிய புகழ் பாடிய குலோத்துங்கன் அவர்கள், பெண்டிரின் வீழ்ச்சி பற்றியும் குறிப்பிடத் தவறவில்லை. இது மனம் நொந்த மாமனிதரின் சொல்லோவியமாகத் திகழ்கிறது.

நூல் படைக்கும் மேதையெனும் பெருமைகளை நாடாமல்
சமத்துவத்தைத் தேடாமல், சுதந்திரத்தைத் துய்க்கும்
ஏற்றம் நினையாமல் ஆடவர் போல் அங்கிகளும்
கால்நுழையும் ஆடைகளும் பூண்டார்கள்....
போதை மயக்கப் பொருள்களிலே தம் உரிமைப்
பாதை இருப்பது போல் பயணம் தொடர்ந்தார்கள்.
ஆடவர்தம் கேடனைத்தும் கற்றார்கள்
நாரியர்கள் அந்தவழி நனிதூரம் சென்று விட்டார்.

கேடுதரும் இந்தத் தத்துவத்தை யார் இவர்க்குக் கூறினரோ? என வினாவும் எழுப்புகிறார். பாவேந்தர் கூறிய ஒரு கருத்தைக் கோடிட்டுக் காட்டினால் குலோத்துங்கனுக்கு உகந்த பதிலாகலாம்.

அவள் நனி ஒப்பவில்லை. அவன் அவள் வருந்தும் வண்ணம்
தவறிழைக்கின்றான் இந்தத் தகாச் செயல் தம்மை அன்பு
தவழ்கின்ற புறாக்கள் தம்மில், ஒருசில தருதலைகள்
கவலைசேர் மக்களின்பால் கற்றுக்கொண் டிருத்தல் கூடும்

என்கிறார் பாவேந்தர். பண்பிழக்கின்றன சில புறாக்கள். இவ் இழி செயலை, அவை சில கயமைநிறை மனிதரிடமிருந்துதான் கற்றுக்கொண்டுள்ளன என்கிறார் பாவேந்தர். சில பெண்கள் தெய்வ நிலைவிட்டு இழிவதற்குச் சில கயவர்களே காரணம். கேடுதரும் தத்துவம் கூறுவோர் கயவர்களே. பெண்களின் வீழ்ச்சியை விரும்பவில்லை கவிஞர். காரணம், "தொட்டிலை ஆட்டும் கை, நாடாளும் கை," அது துவண்டால், நாடு வாடிவிடும்.

பெண்ணின் தோற்றம் ஒன்றையே, துணிந்து விற்றிடும் வணிகர் எண்ணிலர். "மாதர், நாணமும் துணிகள் என்பவும் துறந்த காட்சிகள்......... குறைந்த ஆடையில் மேடும் பள்ளமும் மிகைப்படுத்திடும்......... பெட்டைநிர் வாணம் பேசும் ஓவியம்......... கடை விரித்துள காட்சிகள்" பெண்மையின் பெருமையை விற்கும் வெளிப்பாடுகள். இப்பேரிழிவு, சீர்திருத்தம் பெறப்படாததுவரை

மாதர் சுதந்திரம் பொய்யடா - யாவும்
வேடம், வேடம் கனவு. கானல்நீர், கற்பனை

என்கிறார் நூலாசிரியர். பெண், கள்ளாகப் பயன்படுத்தப்படும் நிலை இருப்பது வரை, பெண்ணினத்துக்கு உய்திக்காலமே இல்லை என்பது கவிஞரின் உறுதியான நம்பிக்கை.

நெஞ்சில் உறுதியும் நேர்மைத் திறமும் கொண்டு, அறிவியலுடன் ஆழ்ந்த தமிழ்ப் புலமையும் கூடிய சிறப்பான கவிதையாப்பதால் தான் -

சமுதாய நலனினைக்கும் கருத்துக் கருவூலம் தருவதால் தான், டாக்டர் தமிழண்ணல் அவர்கள், குலோத்துங்கன் அவர்களை "அன்" விகுதி போடத் தயங்கி "அர்" விகுதியிட்டு, "குலோத்துங்கர்" என அழைக்கிறார். "குலோத்துங்கன் கவிதைகள்" என்றெழுதத் தயங்கிக் "குலோத்துங்கப் பாடல்கள்" "குலோத்துங்கக் கவிதைகள்" என்றெழுதக் காண்கிறோம்.

பிழை கண்ட போது, கண்ணின்று, கண்ணறச் சொல்லுதல் கடமையெனக் கொண்டு, கட்டுப்பாட்டுடன் அக்கண்ணியம் காப்பவர், டாக்டர் தமிழண்ணல் அவர்கள் என்பதை அவர்களுடனும் அவருடைய நூல்களோடும் தொடர்புடையோர் அறிவர்.

"தொகுப்பு நூலில்" வைதிகம் வழி மறைக்கும் எனும் தலைப்புக்கும் பாடலுக்கும் தொடர்பின்மை காணமுடிகிறது என்று "மானுடம் பாடும் கவிஞர் குலோத்துங்கன் கவிதைகள்" எனும் நூலின் முன்னுரையில் தமிழண்ணல் குறிப்பிடுவது சிந்திப்பதற்குரியதாகும்.

பிழைகண்டால், யார் எவரென்று பாராமல் பதிவுசெய்துவிடும் ஆய்வறநெறிநிற்பவர் டாக்டர் தமிழண்ணல் அவர்கள. குலோத்துங்கன் அவர்களின் நேர்மைதவறா கவிதை நெறியே டாக்டர் தமிழண்ணல் அவர்களைக் கவர்ந்துள்ளது.

குலோத்துங்கன் அவர்கள் பெண்ணின் மாட்சியையும் வீழ்ச்சியையும் குறிப்பிடுவது கண்டு, டாக்டர் கே.எஸ். சுப்பிரமணியன் அவர்கள் தன்னையே மறந்த நிலையில் பாராட்டுவது, முனைவர் வா.செ. குழந்தைசாமி அவர்களின் கவிதை மணிமுடிக்கு, விலையுயர்ந்த முத்துப் பதிப்பதுபோல் அமைகிறது.

> கரவொலிக்கு ஆசைப்பட்டுத் தன் கருத்துக்களுக்கு முகமூடி அணிவிக்க மறுக்கும் நாணயம் கவிஞரிடம் உள்ளது. உள்ளார்ந்த அறிவு/உணர்வுப்பூர்வமான இயைபு இன்றியே பெண்ணியக் குரல் எழுப்பும் சில ஆண் வேட தாரிகளின் பாசாங்கு, குலோத்துங்கனிடம் இல்லை.

என்கிறார் டாக்டர் கே.எஸ்.சுப்பிரமணியன் அவர்கள். முனைவர் குழந்தைசாமி அவர்கள், இருநிலை மாந்தரல்லர். ஒருமைநிலை நிற்கும் உயர்ந்த மனிதர் என்ற பண்பு விளக்கம், திரு சுப்பிரமணியன் அவர்களின் கருத்தால் கிடைக்கப் பெறுகிறோம்.

4.13 பெண்களுக்கு வழிகாட்டுதல்

ஆண்களைக் குற்றம் சாட்டி, எச்சரித்த கவிஞர், ஒடுக்கப்பட்ட பெண்கள் உயர்வுற, ஆணினத்தை

> *கெஞ்சுவதால் வருவதில்லை, உரிமை - தன்னைக்*
> *கேட்டெவரும் பெற்றதில்லை. கிளர்ந்தெழுந்து*
> *வஞ்சியர்கள் தலைநிமிர்க*

என்று பெண்கள் உரிமைக்காகப் போரிட வேண்டு மென வழிகாட்டுகிறார். பெண் விடுதலைக்கும் ஒத்த உரிமைக்கும் வேறு வழி காண முடியாததால், கிளர்ச்சிதான் நல்ல தீர்ப்பு வழங்குமென்ற நிலைக்கு வருகின்றார் கவிஞர்.

அழுத்தப்பட்ட- உரிமைகள் மறுக்கப்பட்ட - மக்கள் வாழ்வு பெற, புரட்சி யொன்றே பொன்னான வாய்ப்பென்றார் பாவேந்தர் பாரதிதாசன். ஒடுக்கப்பட்ட ஆண்கள், உயர்வெய்த, பாவேந்தர் காட்டிய பாதையையே, பெண் விடுதலைக்குக் குலோத்துங்கன் நெறியாகக் கொள்கிறார். பெண்ணைப் புரட்சி செய்யத் தூண்டும் நிலையை அழுத்தமாகப் பேசியவர் குலோத்துங்கன் எனலாம்.

ஓடப்பராய் இருக்கும் ஏழையப்பர்
உதையப்பர் ஆகிவிட்டால் ஓர்நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப்பா நீ

என்பது பாவேந்தரின் எச்சரிக்கையும் வழிகாட்டுதலுமாகும். குலோத்துங்கன் மிக மென்மையாக,

"கிளர்ந்தெழுந்து தலைநிமிர்க" என்கிறார். அழுத்தும் ஆண்கள் திருந்துவர் என்பது குலோத்துங்கனின் நம்பிக்கை. எனவே கனிச் சொல்லைப் பயன்படுத்துகிறார்.

ஆண்டாண்டுக் காலமாக, ஆண்கள் திருந்தவில்லை. கரும்புபோன்று, கொல்லப்பட்டால் மட்டுமே பயன் தருவர் கயவர். கொடிறுடைக்கும் கூன்கைக்கே பணிவர் என்ற அய்யன் திருவள்ளுவரின் குறளோவியத்தைப் பின்பற்றுகிறார், பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள். முனைவர் வா.செ. குழந்தைசாமி அவர்களுக்கும் பாவேந்தர் அவர்களுக்கும் இலக்கு ஒன்றே. சமுதாய இலட்சியமும் ஒன்றே. வழிமுறையில் மட்டும் மாற்றம்.

பெண்ணிழிவுக் கெதிரான கவிஞரின் கருத்து கவிஞரின் பெண்மை போற்றும் நிலையை விளக்கும் விளக்கமாகிறது. ஆண்களுக்கு அறிவுரை, வீழ்ச்சியுற்ற பெண்ணினத்துக்கு வழிகாட்டுதல் புரட்சிக் கவிதைகள் ஆகின்றன. பெண், போகப் பொருளாகும் புன்மை பொசுங்கிப் பெண் காவியமாம் புனிதம் உருவாக்கப்பட வேண்டுமென்பதே கவிஞரின் விருப்பம்; கோட்பாடு; கவிதைகளில் சுவைமிகுந்துள்ளது. தமிழுணர்வு ததும்புகிறது. தமிழ்ப் பண்பாட்டின் தலைமை நிலை நுட்பமாக, ஆனால் அழுத்தமாகச் சுட்டப்படுகிறது. தமிழ்ச் சுவையில் அறிவியலின் தாக்கமும் பகுத்தறிவுச் சிந்தனையின் அழுத்தமும் மிளிர்வதால் அறிவியல் இடையிட்ட தீந்தமிழ்க் கருத்துச் சுரங்கக் கவிதைகள் "குலோத்துங்கன் கவிதைகள்" எனலாம்.

வீழ்ச்சியுறு தமிழகத்தில் எழுச்சி வேண்டும்
விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்....
....காழ்ச் சிந்தை மறச் செயல்கள் மிகவும் வேண்டும்

என்பார் பாவேந்தர். எழுச்சி வேண்டும் பெண்களுக்கென அறிவுறுத்தும் முனைவர் வா.செ. குழந்தைசாமி அவர்கள், ஆணினம் "கீழ்ச் செயல்கள் விட வேண்டும்" என அறிவுறுத்துகிறார்.

அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகுத்தியுள்ள குறளொப்ப, பெண்ணைப் பற்றிப் பேசும் கவிதைக்குள் குலோத்துங்கன் அவர்கள் பெரும் சமுதாயப் புரட்சிக் கூறுகளை நிறைத்துள்ளார் எனலாம். இது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை.

5. மானுடம்

5.0 முன்னுரை

தெய்வத்தான் ஆகா தெனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்

என்கிறது குறள்.

குலோத்துங்கன் அவர்கள், மானுடத்தின் சிறப்பே மகத்தானது, மானுட ஆற்றலால் நிறைவேற்றப்படாப் பணி எதுவுமில்லை என்ற ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர். தம்மை முன்னிலைப்படுத்திக் கூறுவதன் வாயிலாகத் தரணிக்கு உயர்நெறி தருகிறார். உலகு உயர, வள்ளலார் அவர்களின் சமயச் சமரசம் தேவை என்பது வலியுறுத்தப் பெறுகின்றது.

மனிதன் என்பவன், சிந்தையும் செயலும் இணைந்தவன். தலைவனும் கவிஞனும் அவனே. மானிடன், ஏழை அல்லன். ஏற்றம் மிக்கவன். வையத் தலைவனும் மானுடனே, கனவுகள் மாற வேண்டும். கருத்துக்கள் மாறுவன. முன்னேற்றப் பயணம். முடிவில்லாததாக வேண்டும். கொள்கைக் குழப்பமும் வளர்ச்சியின் சாயலே. அடிப்படை மட்டும் அசைவதில்லை, எனும் கவிஞர், தம் பணி மானுடர் ஏற்றம் காண்பதே என்கிறார். மானிடரின் ஏற்றத்தையே பாடுவேன், எம்செயல் சிறப்பீனும் என்னும் கவிஞர்; சமயச் சமரசத்தை வலியுறுத்துகிறார். "பெண்மை வாழ்க" எனப் பாரதி துள்ளி, மகிழ்ந்தது போன்று, "மானுடம் வாழ்க; வெல்க" என்று பண்ணிசைத்து மகிழ்கின்றார், குலோத்துங்கன்.

5.1 மனமும் தோளும் இணைந்தவன் மனிதன்

மனிதன், மிருகப் பண்புகளுடன், பகுத்தறிவும் இணைந்தவன். மனிதன் பகுத்தறிவுள்ள - ஆறறிவுள்ள - மிருகம். (Man is a rational animal) .வயிற்றில் மட்டும், மானுடம் வாழ்வதில்லை. அளவிடற்கரிய அற்புதம் நிறைந்தது மானுடம். அனைத்தையும் அறிவதும் அளப்பதும் ஆய்வதும் மனிதன்.

கடவுளும் தேவரும் யாமெனும் சொல்லில்
கற்பனை மடமையின் கர்வமொன் றில்லை

என்று கூறும் கவிஞர்,

திடமுடன் குவிந்த சிந்தையும் செயலின்
திறமும் சேர்ந்தால் தெய்வமும் ஆவோம்

என்று விளக்கம் தருகிறார்.

"தெய்வம் இருப்பது எங்கே?" என்ற கேள்விக்கு, எந்த மனிதனிடம் உள்ளமும் உடலும் மனமும் தோளும் சிந்தையும் செயலும் உறுதி பெற்றிணைந்து கடமையாற்றுகின்றனவோ, அந்த மனிதன் தான் தெய்வம் இருக்குமிடம் என்பது கவிஞரின் உறுதியான நம்பிக்கை.

5.2 காப்பியத் தலைவனும் கவிஞனும் மனிதனே

கவிதையின், காப்பியத்தின் - தலைவனும் கவிதை பாடும் கவிஞனும் மானுடனே என்பதைக் "கவிதையின் தலைவன், கவிஞனும் அவனே" என்னும் பாடலில் குறிப்பிடுகின்றார்.

மனிதன், அணு நிகர்த்தவன். ஆயினும் அண்டத்தையே ஆராயும் ஆற்றல் மிக்கவன், வையத்தின் எல்லையைத் தேடும் வேள்வி மேற்கொண்டவன். கேள்வி நோக்குடன் உண்மையைக் கண்டறியும் முயற்சி மேற்கொண்டு சலியாது உழைப்பவனும் அவனே.

அதிர்ச்சியுற்றலையும் நெஞ்சினர் மாந்தர். தினமொரு புதுமை தேடும் சிந்தையர். புதியன காணும் சிந்தையொடு, விந்தைபுரிபவர் மனிதரே, தடைகள் கோடி எதிர்கொள்ளும் தகைமையர்.

இயற்கையின் இயற்கை தேடும் பாதையில்
முடிவிலாத பயணத்தார்.....பயணம் போற்றும்
கவிதையின் தலைவர். அக்காதையின் தலைவனைப்
பாடும் கவிஞனும் அவனே

என்று மனித மாட்சியைப் பாடுகின்றார், குலோத்துங்கன்.

"எல்லாம் வல்ல இறைவன்" (God is Great) என்று இறை நெறியாளர் இறைவன் மீதேற்றி வைக்கும் அளப்பரும் ஆற்றலைக் கவிஞர் மாந்தர் மீதேற்றி "எல்லாம் வல்ல மனிதன்" (Man is Great) என்றுணர்த்துகின்றார்.

5.3 மனிதன் ஏழை இல்லை

ஏழையென்றும் அடிமை யென்றும்
எவனுமில்லை ஜாதியில்

என்கிறார் பாரதி.

"எறும்பும் தன்கையால் எண்சாண்" என்ற பழம் பாடல் தளத்தில் நின்று, "எறும்புக்கும் இதயம் உண்டு" என்கிறார் குலோத்துங்கன்.

துரும்புக்கும் தோற்றம் உண்டு, பொருள், பதவி பெரிதல்ல. நிலை தாழா, உயர் குணம் ஒன்றே மனிதரை அளக்கும் அளவுகோல், உரைகல் என்கிறார். மாந்தரின் அளவுகோலுக்கேற்பத் தம்மை உயர்த்திட வேண்டும் என்பது கவிஞரின் விருப்பம், எதிர்பார்ப்பு.

வெற்றியெட்ட, முதலாவது, இலக்கை நிர்ணயம் செய்திடல் வேண்டும். குறிக்கோளில்லாச் செயல் திட்டம் - முயற்சி - பயனற்றுப்போகும். திட்டமிடல்

வேண்டும். அயராது உழைக்க வேண்டும். கவனம் சிதையாமல் கடமை யாற்றினால், "சக்தி முழுமையும் குவிந்த காலை இயல்வது வெற்றி" என்பது கவிஞரின் முடிபு.

ஏழ்மையும் துயரும் மற்றோர் இழைத்ததென்று கூறுதல், பொருந்தாக் கூற்று. பிறர் மீது குறை கூறுவோர், வாழ்வில் வளர்ச்சி காணார். வளர்ச்சிக்கு வழிவகுப்பதும் தொடர்வதும் தொய்வின்றித் தொடர்ந்து முன்னேறுவதும் வாழ்வில் நியதியெனக் கொண்டோர் என்றுமே தாழ்வதில்லை; ஏழ்மை எய்துவதில்லை என்பது கவிஞரின் கோட்பாடு.

"தீதும் நன்றும் பிறர்தர வாரா" என்ற புறநானூற்றுப் புலவரின் உருவிலே குலோத்துங்கனைக் காண்கிறோம்.

5.4 மானுடச் சிறப்பு

மனிதன் தனியன் அல்லன்.
சர்வமும் தன்னுள் கொண்டோன்.
. . . . புனிதனும் அவனே புதையலும் அவனே....
மறைகளும் மறைகள் தந்த மதங்களும் கடந்து நிற்கும்..
மாண்பினன் மனிதனே.

என்பது கவிஞரின் முடிபு.

வரைகள் கடந்த வாமனன் கொள்கை
முறைகள் மூலத்தின் முதல்வன்....

பகலவன், கோள்கள், மீன்கள், விண்வெளி, பேரண்டம் இவையனைத்தின் பரப்பையும் விட மனித மனம் பரந்து நிற்பது.

பனிமலர்த் தண்மை யோடு
பரிதியின் கனலும் கொண்ட
புனிதனும் அவனே சக்திப் புதையலும் அவனே

என்பது மனித மதிப்புப் பற்றிய கவிஞரின் துல்லிய எடையாகும்.

5.5 வையத் தலைவன் மாந்தன்

எடுத்த காரியம் யாவினும் வெற்றி

என்ற பாரதியின் இலக்கை எட்டிட வேண்டுமெனின், வாழ்வில் பல்வேறு பண்பினரை எதிர்கொள்ள வேண்டும். இது தான் இயற்கையின் நியதி. "பட்டறிவின் படிப்பினை" என்னும் பாடலில், முயன்று வினை முடிப்போரின் பண்புகளைப் பட்டியலிடுகிறார்.

எழிற்சிலை வடிக்கும்போது, நாமே மறந்து உளியால் சேதப் படுத்திடக் கூடும். அல்லது அற்பனின் அழுக்காறுள்ளம் சிலையைச் சேதப் படுத்திடலாம். இதற்காகச் சோர்ந்து, செயலிழப்பது, வளர்ச்சியைத் தடைப்படுத்தும். எனவே தொடர்ந்து முழுமைபெற ஆவன செய்யப்படுதல் வேண்டும். இவ் உருவகக்

கூற்று, முயன்ற செயலைச் செம்மையாகச் செய்து பூரணம் பெற வேண்டு மென்பதைச் சுட்டுவதாக அமைகின்றது.

மனிதரின், மாபெரும் சாதனை கண்டு, ஒரு சிலர் உதட்டளவில் பாராட்டுவர், ஒரு சிலர் உள்ளத்தில் அழுக்காறு கொண்டு, அல்லல் செய்திட முனைவர், மற்றும் சிலர் நேரடியாகவே, பகைமை பாராட்டுவர். மனிதன் எடுத்த காரியத்தை வெற்றிகரமாய் முடித்துப் புகழேணியில் மேற் செல்லும்போது, இத்தகைய எதிர்ப்புகளையும் இடையூறுகளையும் எதிர்கொள்வது, தவிர்க்கப்பட முடியாதவை என வழிகாட்டுகிறது குலோத்துங்கன் கவிதைகள். தடைகளைத் தவிர்த்து, ஒவ்வொருவரும் தலைமையேற்கும் தகுதி பெற வேண்டுமென்பதே குலோத்துங்கனின் குறிக்கோள், எதிர்பார்ப்பு.

வலிமையை வளர்க்கத் தயங்காதே. வலிமையை வளர்த்த பெருமை மறையாது. "சிறு துரும்பும் பல்குத்த உதவும்". மின்மினிப் பூச்சியும் பயணத்துக்கு வழி காட்டும். கிடைக்கின்ற சிறிய வாய்ப்பினையும் பயன்படுத்தி முன்னேற வேண்டும் என்கிறார் கவிஞர்.

5.6 மானுடம் தளர்ந்தால், உலகம் உறங்கிவிடும்

"உன்னடி தளர்ந்தால், உலகம் தேங்கும்" என்னும் பாடல் ஒரு பயனுள்ள விமரிசனம் (Constructive Criticism) என வரிசைப்படுத்தலாம்.

வயிற்றில் ஊர்பவர் என்றும் உயர்நிலை காணார்

கவிஞரின் தீர்ப்பு

வாழ்வினில் தனக்கொரு சரித்திரம் படைக்க வேண்டும்.
அதுவே மானிடர் பிறப்பின் சிறப்பு

என்னும் கவிஞர், மனிதன்,

வேதத் தலைவன்: கானம் பாடும் கவிஞன்.
. . . . .விண்ணவர் தேவர் விஞ்சையர் கூட்டமும்
ஆக்கிய திறத்தின் ஆசான். அறிவியல் நெறியின் தந்தை

என்று மானிட இனத்தைப் போற்றுகின்றார். உயர்ந்ததாகக் கருதப்படுவன வற்றிற்கெல்லாம், மனிதன் உயர்ந்தவன். மனிதன், தன்நிகரில்லாத் தலைவன் என்பது முடிவு.

சந்திர, சூரியர், செவ்வாய் தாண்டி, மேலும் மேலும் மேலே செல்ல வேண்டும். ஓய்தல் கூடாதென்பதே கவிஞரின் அறிவுரை.

மானிடனே!
நின்னடி வளர்ந்தால், நீள் நிலம் வளரும்,
உன்னடி தளர்ந்தால் உலகம் தேங்கும்

என இறுதியாக வலியுறுத்துவது. உலக உயர்வுக்குத் தனிமனித உயர்வு வேண்டும் என்பதை அடிக்கோடிடுவதாகும்.

வரப்புஉயர, மன்னன் முடி உயரும் என்பது போன்று உலகின் உயர்வும் தாழ்வும் தனிமனித நிலையிலேயே அடங்கியுள்ளன என்பது வலியுறுத்தப் பெறுகிறது. மானிடத்தின் இன்றியமையாமை, எடுத்தியம்பப் படுகிறது.

5.7 கனவுகள் வளர்க

உயர்நிலை மாந்தர்கள், வாழ்வில் கனவுகள் தேவையென்றே வலியுறுத்துகின்றன. அறிவியல் அறிஞரான முனைவர் வா.செ. குழந்தைசாமி அவர்கள் "வளர்க நம் கனவுகள்" என வாழ்த்தி, வழிகாட்டுகின்றார். மாந்தரின் கனவுகள், அவர்களை மாண்புறச் செய்கின்றன. தலைவர் நிலைக்குத் தகுதியாக்குகின்றன.

கவிஞன் கனவு கண்டால் காவியம் படைக்கிறான்.
காதலர் கனவு கண்டால் வாழ்வு தொடக்கம்.
நான் கனவு கண்டால், புதுயுகம் படைப்பேன்.
கனவுகள் நிச்சயம் நிறைவேறும்
மனமெனும் வாமனன் வரம்புகள் காணான்

எனப் பட்டியலிடும் கவிஞர், "வளர்க நம் கனவுகள்" என்று கூறுவதுடன், "மானிடம் வாழ்க" என்ற பாடலை நிறைவு செய்கிறார்.

பாரதி, சாதி, சாதி என்று, சாதி ஒழியப் பாடினார். குலோத்துங்கன், மானுடம், மானுடமென்று மானுடத்தின் மேன்மை காணப் பாடுகிறார். சமுதாய ஏற்றத்திற்கு மூடக்கொள்கைகள் ஒழிய வேண்டுமென்று பாடுவதும் பண்பாடு, மரபு வாழ வேண்டுமென்று இசைப்பதும் ஒரே குறிக்கோளை அடைய இரண்டு வழிகளில் பயணிப்பது போலாகும். திராவிடர் கழகமும் திராவிட முன்னேற்றக் கழகமும் சமுதாய நலன் காண்பதில், இரட்டைக் குழல் துப்பாக்கியாகச் செயல்படுகின்றன என்ற அண்ணாவின் கூற்று, பாரதி, குலோத்துங்கன் கவிதை அணுகு முறைகளுக்கு இயைந்து வருகிறது.

5.8 காலத்தால் கருத்து மாறும்

வாழ்க்கையுடன் தொடர்ந்து நாளும் வளர்ந்திட வேண்டும். அவ்வாறு, ஒட்ட ஒழுகலைத் தவிர்த்து வாழும் மனிதனைச் சமுதாயம் தாழ்த்திவிடும். இதைத் தவிர்த்திட இயலா.

ஆன்மீகம், ஆட்சி முறை, பொருளியல் போன்ற அனைத்திலும் குறைவிலாதெதுவும் இல்லை. கொள்கை, நாம் படைத்த கருவி, கர்த்தாவன்று. தன்னைப் பிணைப்பதெதையும் மனிதன் ஏற்பதில்லை. "சமுதாய ஒப்பந்தம்" எழுதிய ரூஸோ அவர்கள் கூறும் “Man is born free, but he finds himself everywhere in chain”. மனிதன் உரிமையுடன் பிறக்கிறான். ஆனால், அவன் வாழ்வில் அனைத்து நிலைகளிலும் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருப்பதை உணர்கிறான்" என்ற கருத்து, குலோத்துங்கனிடம் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது உணரப்படுகிறது.

வரு முன்னர்க் காத்திடல் வேண்டுமென்பது, கவிஞரின் கருத்து. எண்ணத்தின் அடிப்படையில் மனிதன், எண்ணிய எண்ணியாங்கு எய்துவான் என்கிறார் கவிஞர்.

நெஞ்சின் சுதந்திரம் காத்து நிற்போம் . . . . .
கோடி இன்பம் விழைவதெம் வேள்வி. . . .

எனக் கொண்டு மனிதன் செயல்புரிய வேண்டும்; கடமையாற்றிடல் வேண்டும் என்பது கவிஞர் காட்டும் உரிமைப் பாதை. இறைவன் முன்பு, உரிமை இழக்காத பெருநிலை; எச்சூழலிலும் சிந்தனைக்குச் சிறையிடாத் தன்மை, பந்த பாசமற்ற நிலை இவற்றையே வேள்வியெனக் கொண்டு செயலாற்றல் வேண்டுமென, உயர்வுக்கு வழி கூறுகிறார்; வேள்விக்கு விளக்கம் தருகிறார்.

சத்தியம் வளரும் மாறும், தர்மங்கள் மாறும் வாழ்வில்
உத்திமற் றொழுக்கம் மாறும் உயர்ந்தன என்று கண்ட
தத்துவம் வளரும் மாறும். சலனமும் மாற்ற மும்தான்
நித்தியம். . . . .

இந்த நியதிகளை ஏற்கும் நெறியினரே, உலகில் நிலைத்த புகழுடன் தலைமையேற்கும் தகுதி பெற்றவராக நிலை நிற்பரெனும் கருத்து, மாந்தருடைய உயர்வுக்குரிய ஆற்றுப்படையாகும். கட்டுப்படாத சுதந்திர நோக்கம் காட்டும் பார்வையில் மேற்சென்று, கோடியின்பம் விழைதலே தம்முடைய வேள்வியென்கிறார் குலோத்துங்கன் அவர்கள்.

5.9 முன்னேற்றப் பயணம்

"முன்னேற்றப் பயணம் காண்பர்" என்னும் பாடலில், கடந்தன பேசிக்காலம் கழிப்பவர் உயர்வதில்லை. மனிதசாதி வாழ்வதும் வளர்வதும் நேற்றிலல்ல. இன்றைய வாழ்வில், செயல்திறனில்தான் என்கிறார்,

"குழப்பமும் வளர்ச்சியின் அறிகுறிதான்" என்பது கவிஞரின் கருத்து. தன்நிலை விளக்கமாக முனைவர். வா.செ. குழந்தைசாமி அவர்கள் கூறும் விளக்கங்கள், உலகுக்கு வழிகாட்டுதல்களாக உள்ளன.

விதியை நம்பிப் பணியோம். கோள்களைக் கொண்ட சோதிடத்தை ஏற்கவில்லை. உயர்வுகள், தாழ்வதில்லை. தொழுதிடும் கடவுளோ, தோத்திரப் பாடலோ, இயம்பிடும் மறைகளோ, மனிதனை உயர்த்துவதில்லை.

மனிதரின் பழுதறு செயலும் வாழ்வும்
பாரிடை மனிதன் மாண்பின்
விழுமிய உரைகல் என்ற மெய்யினை நம்பி வாழ்ந்தேன்

எனக் கூறும் கவிஞர்,

காலங்கள் மறையும்.....நம்பும்
.....மூலங்கள் மாறும்: முடிவுகள் குழம்பி நிற்கும்

என்று, நிலைநில்லா நியதிகளை நிரல்படுத்தும் கவிஞர், முடிவு அடியாகக் "கொள்கைக் குழப்பமும் வளர்ச்சிதான்" எனக் கூறல், உற்று நோக்கற்குரியது.

5.10 இன்பம் இருக்குமிடம்

உண்மையான இன்பம். நிலைத்த இன்பம். இருக்கும் இடத்தை விட்டு, இல்லாத இடம் தேடி எங்கெங்கோ அலைகின்றார் பெரும்பாலோர். "இன்பத்தைத் தேடி" என்னும் பாடலில், கவிஞர், இன்பம் இருக்குமிடத்தைச் சுட்டுகிறார்.

அறிஞர்செய்த ஏடுதோறும் நிற்கின்றேன்.
.... கலைஞர் கூட்டம் இயற்றியவை அனைத்திலும் உள்ளேன்.
....தூய பாதை யெல்லாம் சிறுமையற்ற உள்ள மெலாம்
சர்வாதிகாரத்தைத் தனித்து நின்று
கட்டொடு சாய்த்திடுதற்கு, எழுந்த நெஞ்சின் கனவுகளில்
யானிருப்பேன்

என்று இன்பம் கூறுவதாகக் கூறும் கூற்று குறிப்பிடற்குரியது.

மனிதன், தெய்வமாகலாம் என்று குலோத்துங்கன் கூறுதல் இல்லை. காரணம், மாந்தன் தெய்வத்திலும் மேம்பட்டவன். கடவுளைப் படைக்கும் ஆற்றல் மிக்கவன் என்பது கவிஞரின் அசைவிலாக் கோட்பாடு. "தன்னை மிஞ்சுபவர் இல்லாத மேலோன் மனிதன். வாழ்வில் சந்ததமும் முன்னேறும் தவத்தோன். நாளும் சலியாத பயணத்தான். தாழ்வறியாச் சிந்தை வளம் ஒன்றாலே, அனைத்தையும் வெல்லும் திறனுடையோன் மனிதன்" என்பது கவிஞர் கொள்கை.

எம்மினத்தில் உயர்ந்தோர் உள்ளார்,
ஒருகோடி தளையெனினும்வெல்வோம் வாழ்வோம்

என்று தன் நிலை விளக்கம்போல், மானுடம் வெற்றிபெற, நல்லவரின் தலைமை ஏற்று, உணர்ந்தோர் வழிநின்று, பக்கபலமாதல் வேண்டும். வாழ்வுச் சிகரத்தின் முடிதொடல் வேண்டும் என்று குறிப்பால் உணர்த்துகிறார் குலோத்துங்கன்.

5.11 நாம் வாழ வேண்டும்

"நாடு இருந்தால்தான் வீடு இருக்கும், நாடு நலம் பெற்றிருந்தால் தான், வீடு நிம்மதியுடன் திகழ முடியும்" என்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் பொன்னுரையின் அடிப்படையில், "நாம் வாழ வேண்டுமெனின், நாட்டின் நலன் பேண வேண்டும்" என்கிறார் கவிஞர், "நாம் வாழ வேண்டும்" என்னும் பாடலில்.

நாட்டில் உள்ளோர், இல்லார் நிலைமைக்கு முதன்மைக் காரணம், தன்னலத்தின் பெருக்கமே என்று நோய் முதல் நாடும் கவிஞர், திறனற்றார் கையில் ஆட்சியைத் தந்திருப்பதே ஏற்றத் தாழ்வுகட்கு மூலம் என்பதையும் சுட்டத் தவறவில்லை.

இருப்பதைப் பகுப்பதல்லால்,
இயற்றுதல் இயலார் கையில்

பொறுப் பெலாம் தந்த நாட்டில்
புல்கூட முளைப்ப தஞ்சும்

என்கிறார். வினை செயா வீணர் கையில் பதவி சேர்ந்தால், தத்துவத்தாலும் சாத்திரம் படைப்பதாலும் எவ்விதப் பயனும் இல்லை. திறனுடையார் கையில் ஆட்சியைத் தர மக்கள் முனைந்து செயல்பட வேண்டு மென்கிறார்.

இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்(து)
அதனை அவன்கண் விடல்

எனும் குறட்பா நெறியில் மக்கள் செயல்படவேண்டும். பணம், பரிசுக்கு ஆசை கொண்டு நிலை தவறினால், நாடு நீங்காத் துன்பத்தையும் நிலைத்த வறுமையையுமே துணை கொள்ள நேரிடும் என்பது கவிஞரின் மறைமுக அறிவுரை.

உள்ளமும் உதடும் வேறாய் உலவிடும் கயமை முற்றும்
தள்ளவும் வேண்டும் உண்மைத் தலைமையும் நமக்கு வேண்டும்.
நாம் வாழ வேண்டின் நம்மோர் நடைமாற வேண்டும்....

என்னும் கவிஞரின் அறிவுரை, கவனம் பெறல் வேண்டும். காசுக்கு - கஞ்சிக்கு - வாக்குரிமை விற்கப்படுவதுவரை, மாந்தருக்கு உய்திக்காலமில்லை என்பது கவிஞரின் முடிவு ஆகும்.

5.12 மானுடர் ஏற்றம்

மானிடத்தின் ஏற்றம், மாண்புடையது. முத்தமிழின், தமிழினத்தின், மானுடத்தின் முன்னேற்றம் தம்முடைய முன்னேற்ற மென்று தெளிவு படுத்துகிறார். பற்று, பாசம், சொந்தம், சுற்றமெனும் அனைத்தும் துருவிப் பார்த்தும் முழுமை காணவில்லை. தத்துவம், சமயங்கள் அறிவு வாழ்வைச் சார்ந்தவை என்ற அனைத்தையும் சலித்தெடுத்தேன். அவற்றிலும் முழுமை காணவில்லை.

எப்பொருளும் எவ்வுறவும் மானிடத்தின்
ஏற்றம்போல் என்மனதை ஈர்த்த தில்லை

என்கிறார். உருவில் மாந்தர், வாமனர்போல் சிறிதாகத் தோன்றிடினும் விண்ணையும் மண்ணையும் ஈரடிகளால் அளக்கும் பேராற்றல் பெற்றவரென உவமை காட்டி விளக்குகிறார். ஓங்கி உலகளந்த உத்தமன் திருமால் போல், மனிதர் உலகையே கடந்து நிற்கும் பேருருவம் பெற்று, செயற்கரிய செயல் வேண்டுமென்பதை வலியுறுத்துகிறார். "எம்பணி மானிடர் ஏற்றம்" எனும் பாடல், மானிடரின் சிறப்புணர்த்தி மாந்தர்க்காக வாழும் மாமனிதர் குலோத்துங்கனின் பேருள்ளத்தை விளக்குவதாக உள்ளது. "மானுடம் பாடுவேன்" எனும் பாடலில்,

மானுடம் பாடுவேன்யான். மதியினைப்போற்றுவேன் யான்
....நெஞ்சின் திண்மையைப் பாடுவேன் யான்....
....உயர்வு தேடும் முயற்சியைப் போற்றுவேன்யான்....

என மானிடரின் புகழ்பாடுகிறார்.

சிறுமையின் நிழலும் தீண்டாப்
பெருமிதம் ஒளிரும் நெஞ்சும்
பீடுடை நடையும் கொண்ட

திருவினைப் பெற்றவன் மனிதன். எனவே என் பாட்டுடைத் தலைவனாக மானிடனையே ஏற்பேன் என்கிறார் கவிஞர்.

இறைவனையும் மன்னரையும் வள்ளலையும் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடிய இலக்கிய மரபுக்கு இறுதி அத்தியாயம் எழுதியது சிலப்பதிகாரம். வணிகன் கோவலனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு, ஐம்பெருங்காப்பியங்களுள் தலை சிறந்த சிலம்பு தோன்றியது. பாவேந்தர் பாடலில் பூக்காரியும் வண்டிக்காரனும் பாட்டுடைத் தலைவர் ஆனார்கள். சலியாத உழைப்பாளிகளைப் பாட்டின் தலைவர்களாக்கிக் கவிதை படைக்கிறார் குலோத்துங்கன் அவர்கள்.

புனிதத்தைப் போற்றுவேன் யான்
புகழ் ஒன்றே வய்ய வாழ்வில்
மனிதத்தின் உரைகல் என்னும்
மாண்பினைப் போற்று வேன்யான்

என்று கவிஞர் கொண்ட கருத்துக்குக் காரணம் காட்டுகின்றார். சிறப்பு எங்கிருந்தாலும் போற்றப்படவேண்டுமென்பது சீர்மைமிகு மேன் மக்கள், நற்குடிப்பிறந்தார் இயல்பு என்பது சிந்திப்பதற்குரியது.

5.13 எம்செயல் ஏற்றம் தரும்

"பித்தனும் வேண்டும்" என்ற பாடலின் வாயிலாக, மானுடர், அடிமை நிலையில், அடித்தளத்தில் ஆயிரம் ஆண்டுகள் வாழ்வதைக் காட்டிலும் முதன்மை நிலை பெற்று நொடிப் பொழுதே வாழ்தலே சிறப்பு; மனிதர்க்குப் பெருமை என்கிறார் கவிஞர்.

"மூச்சுள வரையும் முன்செல முயல்வேன்" என்பதன் மூலம் மனிதர் இறப்பது வரை முயற்சி மேற் கொண்டு முன்னேற வேண்டுமென்பதை வலியுறுத்துகிறார்.

யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத வாறு

என வள்ளுவம், மாந்தர் இறப்பதுவரை கற்றுக்கொண்டே இருக்க வேண்டுமென்று கூறிய கருத்து நினைத்தற்குரியது.

"மண்ணிடைப் பிறந்த வாய்ப்பினைத் தவமென எண்ணியும் களித்தும் இன்புறும் பித்தன்" எனத் தம்மைப் பற்றிக் கூறும் கவிஞர், தம் செயலால் மானுடம் மாண்புறும்; மொழி உயரும்; நாடுயரும்; உலகுயரும் என்று குறிப்பால் உணர்த்துகின்றார்.

5.14 சமய சமரசம்

மானுடம் சிறப்புற, வேற்றுமை ஒழிதல் வேண்டும். ஆன்மநேய ஒருமை, மலர வேண்டும்; "மதம் எனும் பேய் பிடியாதிருக்க வேண்டும்"; "யாவரும் கேளிர்" என்ற உணர்வு நிலை பெறவேண்டும். "கண்மூடி வழக்கமெல்லாம் மண்மூடிப் போக வேண்டும்"; வடலூர் வள்ளலின் சமரச சன்மார்க்க நெறி பரவ வேண்டும் என்னும் செந்நெறி நிலவ விழைபவர் முனைவர் வா.செ. குழந்தைசாமி அவர்கள்.

....கோப்பை நஞ்சுண்டதும்
முழங்கு தீயிடை வெந்ததும் சேயுடன்
கயற்கண் அன்பினள் காதல் துறந்ததும்
காடு சென்று கடுந்தவம் நோற்றதும்
செயற்படுந்துறை வெஞ்சிறை சேர்ந்ததும்
சிலுவை மாண்டதும் எம்மினம்

என்பதன் வழியே, சமயக் கொடுமைகளால், மூடக் கொள்கையால் சாகடிக்கப் பட்டோர் பட்டியலைத் தருகிறார். நச்சரவனைய நன்றறியாச் சமய வெறிகள் ஒழிக்கப்பட்டு, மத நல்லிணக்கம் உருப் பெறச் செய்ய வேண்டுமென்பது வலியுறுத்தப் பெறுகிறது, மாந்தரினம் மகிழ்வுற, மதநல்லிணக்கம். சமய சமரசத்தின் இன்றியமையாமையை விளக்கும் பாடலாக "வாயில் திறக்கட்டும்" என்னும் கவிதையுள்ளது.

5.15 கடைசி அஞ்சலி

அறிவியலால், உலகை ஒரு சிறு கிராமமாக ஆக்கினோம். மலைகள், கடல்கள் பிரித்து வைத்த தூரத்தைப் போக்குவரத்துச் சாதனங்கள்மிக எளிதில் வென்றன. ஆனால், மனிதர்களுக்கிடையே சாதி, சமய, நாடு, மொழி நிறங்களால் பிரிக்கப்பட்டு, ஒதுக்கப்படும் மனித நேயத்தை இணைக்க முடியவில்லையே என்று காலம் ஏங்குவதாகக் "கடைசி அஞ்சலி" எனும் பாடலில் கூறுகிறார். இதே, "மலை ஏறின் முடிதொடு முன் மகிழ்வதில்லேன்" என்னும் பாடல் தொகுதியில், "இன்பத்தைத் தேடி" என்ற தலைப்புள்ள பாடலில், "இன்பம்", தான் இருக்கும் இடங்கள் பற்றி விளக்குவதாகக் கூற்று அமைந்துள்ளது. "கடைசி அஞ்சலி" என்னும் கவிதையில், 'காலம்' தன் கவலையைக் கூறுவதாகக் கவிதையின் போக்கை அமைத்துள்ளார் கவிஞர். இலக்கிய உத்தி சிறப்பாக உள்ளது.

மனித சாதி எழுப்பிய சுவர்கள் கோடி,
இயற்றிய தடைகள் கோடி.
வேற்றுமை வளர்ந்து விட்ட
மலைகளின் ஓங்கி நிற்கும், பகைமை பொங்கும்
அலைகளின் அஞ்சத்தக்க அலையிவை.

என்கிறார், சமயச் சாதிப் பிளவுகளே, மானுடத்தை அச்சுறுத்துவன, அழிக்க வல்லன. புறத்தடைகளை வென்றோம். ஆனால் மானுடத்தின் அகத்தடை களான, சாதி, சமய, இன, மொழி, நிறத்தடைகளை வெல்ல முடியவில்லை.

இதற்கு முடிவு காணப்படாவிட்டால், ஒட்டு மொத்த உலகும் உருக்குலையும், உய்வதற்கு வழியே இல்லை என்பதே குலோத்துங்கனின் எச்சரிக்கை.

மனிதருக்குப் புலன்களை விஞ்சி நிற்கும் மெய்யறிவு, கல்வியறிவு, அறிவியலறிவு, பகுத்தறிவு வேண்டும். அது,

ஆண்மையுடன் கூடிய வினை நலத்தில்
இணைந்து செயலாற்ற வேண்டும்

என்கிறார். வலிமை மிகு உழைப்பும் பகுத்தறிவுச் சிந்தனையும் இணைந்தால், புறத்தடைகள் தூளாகும் என்பது கவிஞரின் கருத்து.

5.16 மானுடம் வாழ்க

ஆறு, கடல்களை விட ஆழ்ந்த சிந்தனை கொண்டவன் மனிதன்

அவனுடைய ஆற்றல், விண்டுரைக்க மாட்டாத விந்தை. மாந்தர், ஆய்வுக்குரிய தெய்வமாவர்.

காட்டில் திரிந்து விலங்கென வாழ்ந்த மாந்தர், இன்று பல்துறைக் கலைஞர்கள், கலைகளின் வேந்தர்கள். இந்த நிலை, மேதையர் கனவுகளால் கை கூடிய வெற்றி.

விண்ணில் பறந்து, வியனுலகை ஆய்கின்றனர். வியத்தகு விஞ்ஞான விந்தைகளை உரைக்கின்றனர். வாழ்வியலை வளர்த்தவர், வளர்க்கின்றவர்கள் மனிதர்களே.

அறம் நிறைந்த மெய்யறிவு, வாழ்வுக்கு வளம் சேர்க்கும். அந்த நிலையே, செல்வத்தை அள்ளிவார்க்கும். மனிதன் வளம் பெறுவதற்கு, மறம் தவிர்த்த நல்லன்பு மலர வேண்டும், அன்பும் அருளும் பெருகி, வன்செயலும் மறமும் மறையும் போதுதான் இன்பம், இதழ்விரிக்கும். எனவே மானிடம் சிறப்புற, அறம் போற்றப்படவேண்டும் என்பதை வலியுறுத்துகின்றார்.

வாழ்க மானிடம் அன்பும் இன்பமும்
மலர்க மண்மேலே - மன்பதை
வளர்க மென்மேலே

என்று மானுடத்தைப் போற்றி, இசைத்து, வாழ்த்துகின்றார். புவியனைத்தின் மீதும் அன்பும் இன்பமும் மலர்க, மேன் மேலும் மன்பதை வளர்க என வாழ்த்துவது, அருட்கவிஞர் முனைவர் வா.செ. குழந்தைசாமி அவர்கள், "வாழ்க உலகெலாம்" என வாழ்த்துவதாக அமைகிறது. குலோத்துங்கன் அவர்களின் அருள் உள்ளத்தைப் பிரதி பலிப்பதாக இவ்வியலின் இப்பகுதி அமைகிறது.

"இன்றைய தமிழ்க் கவிஞர்கள் ஈடுபடாத - சிந்திக்காத - அல்லது சிந்திக்கத் தவறிய - பலதிசைகளில் இக்கவிஞர் பயணம் செய்கிறார். இவை அனைத்திலும் அவருக்கு உந்து சக்தியாக - உறுதுணையாக - நிற்பது, அவரது மானுட நாட்டமேயாகும். இந்தப் பார்வையிருப்பதால்தான், எந்தக் கவிஞராலும் பார்க்கமுடியாத சில பரிமாணங்களையும் கவிஞர்

குலோத்துங்கன் பார்க்கிறார் எனலாம்" என்னும் முனைவர் கா. செல்லப்பன் அவர்களின் குலோத்துங்கன் மானுடம் குறித்த கண்ணோட்டம், ஒளிகாட்டும் வழித்துணையாகிறது.

"நான் ஏதென்ஸ் நகரையோ, கிரேக்க நாட்டையோ சேர்ந்தவன் அல்லன். ஆனால், நான் ஓர் உலகக் குடிமகன்" என்றார், கிரேக்கப் பெரியார் சாக்ரடிஸ் அவர்கள். "யாவரும் கேளிர்" என்ற தமிழ் மகனின் உறவினன் - உடன்பிறப்பு. உண்மையைத் தேடி, திறந்த நெஞ்சினராகவும் விரிந்த கொள்கையினராகவும் மனிதர் சுழல வேண்டும். திறந்த உள்ளமும் உயர்ந்த கொள்கையும் தாம், ஓர் உலகக் குடிமகனை உருவாக்கும் என்கிறார் குலோத்துங்கன் அவர்கள். உலகக் குடிமகனே, மானுடம் போற்றும் மாண்பினன் என்பது கவிஞரின் நிலைப்பாடு.

"I am Friend of unfriended poor" "நான் நண்பர்களற்ற நலிந்தாரின் - ஏழையின் - நண்பன்" என்றார் கவிஞர் ஷெல்லி. அவர் மனித நேயர். மானுடம் போற்றும் கவிஞர்.

"பிறரைத் தேய்த்துப் பெருவாழ்வு வாழுவதா, மனித நேயம்," ஏழ்மையை ஒழித்து, உலகில் இன்பம் விளைப்பதுவே மனித நேயம் - மானுடம் - மானுடம் வாழ்க என வாழ்த்துவோம்.

"குலோத்துங்கன், மானுடம் பாடும் மாக் கவிஞராகவே மிளிர்கிறார். மறுமலர்ச்சிக் கவிஞர்கள், மானுடத்தின் வளர்ச்சி பாடுவதில் வல்லவர்கள் - என்ற கூற்றை மெய்ப்பிக்கும் வகையில், கவிஞர் குலோத்துங்கன் கவிதைகள் அமைகின்றன " என "மரபில் பூத்த புது மலர்" என்ற கட்டுரையில் டாக்டர் உ. உலகநாயகிபழனி அவர்கள் கூறும் கூற்று, எண்ணி இன்புறுதற்குரியது. காரணம், இம்மதிப்பீடு, முற்றிலும் உண்மை, பூரண மெய்ம்மையாகும்.

"கவிஞர் குலோத்துங்கன் தமிழகத்தின் தலைசிறந்த கவிஞர். நற்போக்கும் முற்போக்கும் கொண்டு, மானுடம் போற்றும் இந்நுண் நோக்குக் கவிஞர், தமிழக மக்களால் பெரிதும் அடையாளம் காணப்பட்டுப் போற்றப்பட வேண்டியவராவர்" என்று பா. வீரமணி அவர்கள் பாராட்டும் பாராட்டுக் கவிஞரின் மானுடப் பாடலின் மகத்தான வெற்றிக்குக் கிடைத்த மாபெரும் பரிசாகும்.

ஆழ்வார், பாரதிக்குப்பின், என்னை
ஆட்கொண்டவர், குலோத்துங்கன்தான்.

வையக் கோவிலின் தலைவன், மாந்தன்

என்று வாயார மானுடத்தை வாழ்த்தும் இந்த மாக்கவிஞரைப் பற்றி

எழுதக் கிடைத்த வாய்ப்பை, இறைவன் அளித்த
வரமாகவே கருதி நிறைவு செய்கிறேன்

என்னும் பாரதி சுராஜ் அவர்களின் "மானுடம் பாடும் கவிஞர் குலோத்துங்கன்" கட்டுரையின் சொல்லோவியம், குலோத்துங்கன் குறிப்பிடும் மானுட மாட்சியையும் குலோத்துங்கன் கவிதைகளின் கோபுர விளக்குப் பெருஞ் சுடர் ஒளிப் புனலின் சிறப்பையும் ஒரு சேர உணர்த்தும் உண்மை நிலையாக, பொய்ம்மையின் நிழல் கூடத் தீண்டாப் புனித மெய்ம்மையாக உள்ளது.

6. காலமும் முயற்சியும்

6.0 முன்னுரை

காலம் பொன் போன்றது கடமை கண் போன்றது
ஞாலம் கருதினும் கை கூடும், காலம்
கருதி இடத்தால் செயின்

இவை போன்று, முயற்சி, காலம் பற்றி முனைவர் வா.செ. குழந்தைசாமி அவர்கள் கூறும் கருத்தும் வாழ்க்கைக்கு உறுதுணையாகும். திட்டமிட்ட முயற்சி, தளரா உழைப்பு, முடிவில்லாப் பயணம், முயற்சி தோற்பது இல்லை முயற்சியே முழுமை காணும், முயற்சியுடையோர் வெல்வர், முயல்வோர் போற்றுதற்குரியோர் என்பன போன்ற கருத்துகள் இவ்வியலில் இடம் பெறுகின்றன. அத்துடன் வாழ்க்கையில் பெறுகின்ற படிப்பினைகளையும் பாராட்டுதல்களின் பண்பு, பயன்பற்றியும் புதுப்பாதை காண வேண்டிய கட்டாயம் பற்றியும் குலோத்துங்கனின் கருத்துகளை இவ்வியலில் காணலாம்.

6.1.0 காலம்

மானிடரின் உடல், எலும்பு, தசை, நரம்பு, குருதியால் உருவாக்கப்பட்ட தெனினும் மானிடத்தின் மூலப்பொருள், கண்ணுக்குத் தெரியாத காலத்தினால் உருவாக்கப்பட்ட தென்கிறார் குலோத்துங்கன். மனித வாழ்வு எனும் எழிற் சிலை - கற்சிலை - காலம் - என்னும் கல்லினால் உருவாக்கப்பட்டதென்கிறார்.

காலமாம் விந்தைக் கல்லிடை யிழைத்தது
ஞால வாழ்வெனும் நற்சிலை நண்பா!

என்பது, காலம் குறித்த கவிஞரின் கருத்து.

6.1.1 உருவாக்கியவன் பயன்பெறவில்லை

சூரியன் செல்லும் பாதையைக் கண்டு, மனிதன் பொழுதைக் கணக்கிட்டான். உதயசூரியன் உதிக்கும் நேரம், காலைப் பொழுது உச்சி வந்தால், நண்பகல், மேற்கில் மறையும் நேரம், பகல் முடிந்து இரவு தோன்றும் காலமென்று கணித்தான், மனிதனின் நிழலின் நீளத்தைக் காலடியால் அளந்தும் நேரம் கணக்கிடும் முறை இருந்தது. அறிவியல் வளர, வளரக் காலம் கணக்கிடக் கடிகாரம் பயன்படுத்தப்பட்டது. அறிவியலின் பயன்,

காலத்தை அளவு செய்யும் கருவிநாம் கண்டோம். ஆயின்
காலத்தை ஆட்சி செய்யும் கலைகள்
நாம் கற்றோம் இல்லை

என்று காலத்தைப் பயன்படுத்தும் திறனற்ற போக்கைச் சுட்டுகிறார்.

"சிலை வடிக்க மறுப்போரிடம் சிற்றுளி. எழுத மறுப்போரிடம் எழுதுகோல். ஓவியம் தீட்டாதாரிடம் வண்ணத் தூரிகை போல் காலத்தைப் பயன்படுத்த மறுப்பவரிடம் சிக்கிக் காலத்தை காட்டும் கருவியாக மட்டும் உள்ளது" என்கிறார் கவிஞர். கறந்த பால், மடிபுகாது. கடந்த காலம் திரும்பிவராது. காலத்தின் யாத்திரை சென்று, காலத்தை ஆளுகின்ற கலைகள் நாம் கற்க வேண்டும் என்கின்றார். இறந்த காலத்தை எண்ணிப் பார்த்து, எதிர் காலத்தையும் உற்று நோக்கி, முறையாகத் திட்டம் வகுத்து, நிகழ்காலத்தைப் பயன்படுத்த வேண்டும். காலப்பாதையில் பின்னோக்கிச் செல்லும் திறனும் பெற வேண்டும் என்பது குலோத்துங்கனின் கூற்று.

6.1.2 அரைநொடிப் பொழுதும் பொற் காலமே

"அரை நொடியும் பொற்காலம்" என்னும் கவிதையில், பழமை பாடியே காதைப் புளிக்க வைக்கும் மனிதர்கள் மீது கொண்ட சீற்றம், சுடுமொழியாகிறது. மாட்டு வண்டி, பழங்காலப் போக்குவரத்துச் சாதனம் என்பதால், விமானத்தைவிட, வண்டி சிறந்ததாக முடியாது. பயன்படும் சிறப்பைப் பொறுத்தே, பொருட்கள் பெருமை பெறுகின்றன.

முதுமை, நரைத்த முடி என்பதால், சிறப்பில்லை. இளைஞன், அறிவிற் சிறந்திருந்தால், அவனே போற்றுதற்குரியவனாகிறான்.

முன்பிறந்தோம் மன்பதையில் முதல்யாம் என்னும்
மூடர்களே! முதுமையென்ன முயன்றா பெற்றீர்?
* * * *

பெரியநிலை இளமை பெறின் பெருமை யன்றோ!
* * * *

அரைநொடியும் பொற்காலம் ஆதல் கூடும்

என்கிறார் கவிஞர். அரை நொடியிலும் வரலாற்றில் இடம் பெறத்தக்க சாதனை இடம் பெறலாம்.

அரை நொடி நேரம் நின்றோம் யாம் இவண்
ஆயிரம் காதம் பின்னடைந்தோம்

எனும் அடிகள், அறிவியலில் நாம் பின் தங்கிய நிலையையும் மேனாட்டினர் முந்தியதையும் காலத்தின் அருமையையும் முன்னேற்றத்தின் வேகத்தையும் உணர்த்துகின்றன.

6.1.3 காலத்தைப் பயன்படுத்தத் தவறினால்

வருங்காலத் தேவைகளை உணர்ந்து, நிகழ்காலத்தை முறையாகப் பயன்படுத்தத் தவறிவிட்டால், வாழ்வு பயனற்றுப் போகும் என்பது கவிஞரின் முடிபு.

யாத்திரைப் பாதையில் யாருக்காகவும்
காத்திருக் காதடா காலம்

"எதிர்காலமில்லை" எனும் தலைப்புப் பாடல் தரும் எச்சரிக்கை.

சென்றவை எவையும் திரும்புவ திலையால், வருநாள் தேவையை உணர்ந்த மனத்தினர் வாழுவர். தவறிய இனத்தவர்க்கிந் நிலத்திலை எதிர்காலம், என உறுதியாய் உரைக்கிறார் கவிஞர். இது சாமியாரின் சாபமல்ல. சரித்திரம் உணர்ந்த, கல்வியாளரின் கூற்று, வாழ்வியல் உணர்ந்த அறிஞரின் பொன்னுரை. காலத்தைத் தள்ளிவைப்போரைக் காலம் தள்ளிவைக்கிறது. இயற்கை நியதி.

6.2.0 முயற்சி

முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்

அறநூலின் அறிவுரை. முயற்சியின் சிறப்பு சுட்டும் பாடல்கள், மூத்த தமிழில் ஏராளம். குலோத்துங்கன் கவிதைகளில், பத்துக்கும் மேற்பட்ட பாடல்களில் முயற்சி குறித்துப் பேசப்படுகிறது. தளரா முயற்சியே, ஆசைத் தீயின் சுடர் அணைந்து விடாமல் காக்கிறது. "ஏணி படைப்பவர் ஏறுபவர்" எனும் பாடல், இதைச் சுட்டுகிறது.

தட்டுங்கள் திறக்கப்படும். தேடுங்கள், கண்டடைவீர்கள்

என்கிறது விவிலியம்.

முயற்சியின் அடிப்படையில் பிறக்காத மகிழ்ச்சி,
மகிழ்ச்சியன்று. முயற்சியினால் வராத
எந்த மகிழ்ச்சியும் மனித இயற்கைக்கு மாறானது

என்கிறார் பகுத்தறிவுப் பேரறிஞர் பெர்ட்ரண்ட் ரசல் அவர்கள்.

6.2.1 முயற்சியும் பொறுமையும்

நான் ஒரு கோரிக்கையை எழுப்பி விட்டேன், அக்கோரிக்கை நிறைவேறும் வரை ஓய்ந்திருக்க மாட்டேன், என்று தம் முயற்சியை விளக்குகிறார், கவிஞர். கோரிக்கையை நிறைவேற்ற முதல் தேவை, முக்கியத் தேவை, பொறுமை. பொறுமையின் அளவையும் முயற்சியையும் குறிப்பிடுவதற்குக் கடற்கரை மணலை எண்ணும் முயற்சியாளனை உவமை கூறுகிறார். கதவு தட்ட முயன்றால், கதவு திறக்கப்படுவது வரை, ஓய்வறியேன் என்பது கவிஞரின் நிலைப்பாடு. கதவுகள் தட்டப்பட்டுக் கதவுகள் திறக்கப்படவில்லையெனில், கதவுகளைத் திறக்கச் சாவிகள் தயாரிக்கும் ஆற்றல் பெறுவோம் என்கிறார்.

தட்டும் கதவுகள் யாவும் திறந்திடும்
சாவி படைக்கும் தவத்தினர்யாம்

புதியன கண்டுபிடிக்க. பிரச்சினைகளைத் தீர்க்க விரும்புவதை அடைய. பொறுமை; திறமை; விடாமுயற்சி, கூர்த்த மதி வேண்டும் என்பது கவிஞரின் வழிகாட்டுதலாகும். பயணம் மேற்கொள்ளும்போது, முன்னோர் சென்ற பாதையை - மரபை - முற்றிலும் அறிவதுடன், முயற்சியின் விளைவைப் பற்றிய சிந்தனை வேண்டும். திட்டத்தின் இலக்கு, இதற்கு முன்பு முன்னோர் இவ்

இலக்கில் கண்ட வெற்றி, தோல்விகள், எங்கே, எதை நோக்கிப் போகிறோம் என்ற தெளிவு, திட்டத்தால் கிட்டும் சமுதாயப் பயன்கள் இவற்றை நன்கு ஆராய்ந்து கண்டுணர்ந்த பின்பே முயற்சி மேற்கொள்ள வேண்டும்.

6.2.2 கற்பதும் முயற்சிதான்

"கிட்டா தாயின் வெட்டென மற" என்பதை இந்த நூல் மறுக்கிறது. "முயற்சி, திருவினையாக்கும்" என்பதை, வழிகாட்டியாகக் கொள்கிறது.

"கல்வி கரையில என்றால், கால மெலாம் கற்பதன் பயன்யாது? கலைகள், கடல்போல் பரந்தன எனில், எல்லைதேடி என்ன பயன்? பூரணம், இல்லாத ஒன்றெனின், இளம்பிறையொடு நிறைவு பெறலாமே? அறிவியலும் பொருளியலும் கல்லாத, பழங்கால மக்கள், மகிழ்வுடன் வாழவில்லையா? புதியன கண்ட நாம், நல்ல நெறியில் அவர்களை விஞ்சினோமா? அறம் காணா நமக்குப் புதியன தேவையா? ஒரு புதிர் தீர்ந்தால், ஒன்பது புதிர்கள் முளைக்கின்றன. எனவே புதிர்களை அகற்ற நாம் மாணவர் போன்று கற்றுக் கொண்டே இருக்க வேண்டுமா?" என்று "விரக்தி" என்னும் கவிதையில் அடுக்கடுக்காகக் கேள்விகள் கேட்கின்றார் கவிஞர்.

கல்வி கரையிலாதது. எனவே, சாந்துணையும் கற்றுக் கொண்டிருக்க வேண்டும். கலைகளின் எல்லைகள் பரந்து, விரிந்தன. அவற்றின் கரைகளைக் கண்டறிய முயன்று, புதிய வரலாறு படைத்தாக வேண்டும். காலமெல்லாம் முயல்வது தான், முழுமையான இன்பம். புதியன கண்டறிந்த நாம், நல்லறத்தில் விஞ்சி நில்லாதது, நம் மனத்தின் அணுகுமுறைகளால் தாம். குறைகளைந்து, சிறப்பு நோக்கி முன்னேற வேண்டும். புதிர்கள் தோன்றுவதும், தீர்வுகள் காண்பதும் தான் வாழ்வியல் நெறியின் இலக்கணம். தேங்கிய குட்டை நீராக உள்ள-பிரச்சினையில்லா வாழ்வு, பயனற்றதாகும்; சுவையற்றதாகும். அறிவியல் வளர்வதால், நாம் மாணவர் போன்று கற்றுக் கொண்டே இருப்பதால்தான் இயற்கையின் விரிவுகளைக் கண்டுணரமுடியும். கண்டுணர்ந்தவற்றை வெளியுலகுக்குத் திறம்பட உணர்த்திக் களிப்பூட்ட முடியும். எனவே கற்பது முதல், ஆய்வு மேற் கொள்வது - முடிவுகாண்பது முடிய, அனைத்திலும் தளரா முயற்சி தேவை. அதுதான் வாழ்வுக்குச் சுவை கூட்டுவதாகும் என்கிறார் குலோத்துங்கன். மனித வாழ்வு முடிவில்லாத முன்னேற்றப் பயணம்.

முயற்சியும் பயிற்சியும் இணைந்தால்தான், வாழ்வில்
உயர்ச்சி காண முடியும்

என்பது கவிஞரின் தீர்ப்பு.

எங்கே முயற்சி உடையவர்கள் இருக்கிறார்களோ
அவர்களைப் பணிவேன் என்பது கவிஞரின் பண்பு

எனும் டாக்டர் உ. உலகநாயகி பழனி அவர்கள் கூற்று கோடிட்டுக் குறிப்பதற்குரியது.

6.2.3 வெற்றிக்கு விளிம்பில்லை

குன்றுக்கும் சிகரம் உண்டு,

மேருவைத் தொடுவோம்

என்ற தலைப்புகள், வெற்றிச் சிகரம், உயரம்காண முடியாத ஒன்று. எனவே முயற்சியினைத் தொடர்ந்து மேலேறிச் சென்று கொண்டே இருக்கவேண்டு மென்பதை வலியுறுத்தும் குலோத்துங்கனின் அறிவுரைகளாகும்.

"பறவைகள்! நீர் ஊரனைத்தும் உமதானீர். எங்கும் செல்லும் உரிமையொடு வாழ்கின்றீர். மனிதர் பேசும் நுழைவுச் சீட்டறியீர். சுங்கம், தீர்வை, நோய் தடுப்புச் சான்று அறியீர்! சுமைகள் இல்லை. விழைகின்ற இடமனைத்தும் உம் வீடே. நும்மோர் விடுதலையின் தரம் வியந்து, வியந்து நின்றோம்" என்று வியப்புடன் கூறும் கவிஞர், மறைமுகமாக மனித வாழ்வு நேர்மாறாக இருப்பது கண்டுவெறுப்புறுகின்றார். "நாங்கள் வீதிகளின் சகதிக்கே மீள்வோம்" என்னும் கடைசி அடி, மேலே சொன்னதற்கு அரண் ஆகும்.

ஒரே மூச்சில் பறந்து, இமயம் தாண்டும் பறவைகள் போன்று, கட்டுப்பாட்டுக்குட்படாத சுதந்திர நிலை பெற்ற புள்ளினம் போல், மனிதர்நிலை உயர்ந்திட வேண்டும். மேலேற வேண்டும். வெற்றிக்கு விளிம்பில்லை. அது அளவு கடந்தது. அதை அடையும் மனிதரைப் போற்றுவோம். அடையாப் புழுக்களை, அடை மொழிகளால் திட்டுவோம் என்கிறார், சிறப்பைப் போற்றுதலும் கயமையை வெறுத்தலும் இயல்பு.

பெரியோரைப் புகழ்தலும் இலமே,
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே

என்பது சங்கப் புலவர் நிலை. சிறப்பைப் போற்றுவதால் நல்லன வளரும். கயமையை இகழ்வதால், இழி செயல் மறையும் என்பது இன்றைய அணுகுமுறை. இயற்கையின் தீர்ப்புக்கு விட்டுவிடுதல் சங்க நெறி. செயலுக்கேற்ப, தீர்ப்பு வழங்குதல் இன்றைய முறை.

6.2.4 முயற்சி தோற்பதில்லை

"எண்ணும் உளத்தினிலே" என்னும் பாடலில், பல்வேறு கருத்துகள் தந்த ஆசிரியர் கவிதை முடிவில் "முயற்சி தோற்ப துண்டோ?" என்னும் கேள்வி கேட்பதன் வாயிலாக, என்றும் எங்கும் முயற்சி தோற்பதில்லை என்ற பதிலைத் தருகிறார்.

நினைக்கிற ஆற்றல் பெற்ற நெஞ்சினிலே, எத்தனை, எத்தனை கோடி சிந்தனை அலைகள்!காண்கிற கண்களின் பார்வைக்கு எல்லையுண்டு. குறிப்பிட்ட தொலைவுக்கப்பால், பார்வையின் வீச்சு படுவதில்லை. ஆனால் கருதுகிற கருத்துக்குக் காட்சி எல்லையில்லை. எதிர் நீச்சலே, விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கு வித்தாகிறது. முயற்சி செய்வதே, புதியன கண்டு பிடிக்க

வழியமைக்கும். முயற்சி தோற்பதில்லை. முயன்று கொண்டிருப்பதுதான் முன்னேற்றம் காண விரும்பும் மனிதனின் ஆக்கத்திற்கான அடிப்படை என்கிறார் கவிஞர்.

"முயற்சி யுண்டெனின் முழுமை காணுவம்" எனும் கவிதையில், விரும்பும் பொருளொடு ஒன்றி, ஓய்வின்றி, முயற்சி மேற்கொண்டு உழைக்கிறவர்களுக்கே வெற்றி கிட்டும். பயிற்சியும் கல்வியும் படையெனக் கொண்டால் முயற்சியுண்டெனின் முழுமை காணுவம் என்பது முனைவர் வா.செ. குழந்தைசாமி அவர்களின் கருத்து.

மந்திரம் சோதிடம் வசியம் தேடுதல்
எந்திரம் காப்புகள் இன்ன பூணுதல்
வேண்டுவ தாமோ வீணோ....

* * * *

....முயற்சி இன்றெனின் முழுமை காண்கிலம்....

* * * *

....முயற்சி யுண்டெனின் முழுமை காணுவம்

என முடிக்கிறார்.

"உள்ளத்தில் ஏணியுளர் உயர்வர்" என்னும் கவிதையும் முயற்சியின் சிறப்பை உணர்த்துவதாக உள்ளது. உழைப்பின்றி, விடுமுறையில் மகிழ்ச்சி காண்பவர்களையும் சோம்பி இருக்க வழிவகுத்து விடுமுறையளிக்கும் நிர்வாகத்தையும் இயக்கங்களையும் நோக்கி,

அழுவதற்கு விடுமுறை. பின்சிரித்துப் பேசி
அகமகிழ விடுமுறை நம்நோன்பு நாளில்
தொழுவதற்கும் விடுமுறை நம் தலைவர் தம்மைத்
துதிப்பதற்கும் விடுமுறையா சோம்பர் மக்காள்!

என வெறுப்புடன் விளிக்கும் கவிஞர்,

உழைப்பறியா வாழ்வுதனில் உயிர்ப் பொன்றில்லை.
உள்ளத்தில் ஏணியுளர் உயர்வர்....

என்கிறார்.

தானாக ஏதும் இந்தத் தரணி வந்து சேர்வதில்லை....

* * * *

திண்மையினால் வேரொடு
சிறுமையெலாம் தீய்ப்பதெனும்
உண்மையினால் அல்லாது
உயர்வெதுவும் காண்பதில்லை.

எனவே, சமுதாயம் ஏற்றம் பெற, தீயனதீய்க்கும் முயற்சி தேவை. குலோத்துங்கனின் நெஞ்சம் பிரெஞ்சுப் புரட்சி. உருஷ்யப் புரட்சிக்கு

முன்புள்ளநிலையையும் புரட்சி யெழுந்த சூழ்நிலையையும் புரட்சியின் போக்கு முடிவுகளையும் திரும்பிப் பார்ப்பதாக உள்ளதை உணர முடிகிறது.

6.3 பாராட்டுதல்கள்

முடிவற்ற முயற்சியுடையோர், பொன்னான காலத்தைப் புனிதமாகக் கொண்டு, பயன்படுத்தி, வாகை சூடும்போது பாராட்டுதல்கள் தேவையா எனும் வினா எழுகிறது. இருவேறு பதில்கள் வருகின்றன.

பொல்லான் என்பர் அதனாலென்?
புனிதன் என்பர் அதனாலென்?
கல்லான் என்பர் அதனாலென்?
கலைஞன் என்பர் அதனாலென்?
சொல்லா வசைகள் சொன்னா லென்?
சூழ்ந்து நின்று புகழ்ந்தாலென்?
எல்லா நாளும் ஒரு நாள் போல்
இருக்க வேண்டும் என் மனமே

என்று போற்றற்கும் தூற்றற்கும் சாயாத நடுநிலை மனம் வேண்டு மென்பார் உமர்கய்யாம் அவர்கள்.

போற்றுவோர் போற்றட்டும் புழுதிவாரித்
தூற்றுவோர் தூற்றட்டும்....

தொடர்ந்தென் பணி செய்வேன் என்பார் ஒரு புனிதர்.

ஆனால் குலோத்துங்கன் அவர்களோ, "பாராட்டை மிஞ்சுமொரு பரிசுமில்லை" என்கிறார். ஏன்?

ஊக்கத்திற்கு ஊட்டம் சேர்க்கும் சத்துணவு போன்றதடா
மனம் திறந்து சான்றோர்கள்
பாராட்டும் தகுதிச் சொற்கள்

என்று பாராட்டின் சிறப்பை உணர்த்துகின்றார். அத்துடன்,

தக்காரை நெஞ்சாரப் போற்றும் நாடு
தகுதியினை வளர்க்கின்ற கழனி, ஆற்றல்
மிக்காரால் உயர்வதடா மனித சாதி.
வேத மிது, விதியுமிது, விலக் கொன்றில்லை

என்கிறார். தகுதிகண்டு போற்றாததால் தான், திறமை மிக்கோர் வெளிநாடு செல்கின்றனர் போலும்!

6.4 படிப்பினை

படிக்கும் பாடம் தரும் அனுபவங்களைக் காட்டிலும் பட்டறிவு தரும் பாடம் சாலச் சிறந்தது. "பட்டறிவின் படிப்பினை" என்ற பாடலில் வேதாந்தங்கள் தத்துவங்கள் போன்ற கண் காணாதவை (Abstract)தரும் படிப்பினையை விட,

வாழ்வில் தாம் பட்டுணர்ந்தோ அல்லது பட்டுணர்ந்த நிலைகளைப் பிறர் விளக்குவதன் வாயிலாகவோ பெறும் பாடம், பெரும் பயன் தரும். இது தான் படிப்பினை எனப்படுகிறது.

வளர்த்தகடா மார்பில் பாயும்
மார்பு உனதாகவும் இருக்கலாம். அதற்காக
வலிமையை வளர்க்கத் தயங்காதே

பட்டறிவால் கவிஞர் தரும் செய்தி.

காலமெலாம் சிறுகச் சிறுகச் சேர்த்த தேனீக்களின் கூட்டைச் சிதைத்துத் தேன் அருந்துவது உலக இயற்கை. அதைப் போன்று:

சிற்பியின் கைபடைத்த அற்புதச் சிலையை ஓர்
அற்பனின் கை அரைநொடியில் அழிக்கலாம்

என்று பொறாமைக்காரர் - கயவர்- நிலையை உணர்த்தும் கவிஞர், சிலையைப்

படைத்த சிற்பியே! உன்பணியை விடாதே
உடைந்த சிலையின் ஓர் உறுப்பும் கூட
உன்னை அமரன் ஆக்கலாம்.

முழுமை பெற்ற படைப்பே சிறப்பிணைக்கும் என்பதில்லை. சிறுபடைப்பும் சீரிய புகழிணைக்கலாம் என்று வழிகாட்டுகிறார். சிறியோரால் சிறந்த படைப்புகள் சிதைக்கப் பட்டாலும் அதையும் பொருட்படுத்தாமல் ஆற்றும் தொடர் முயற்சியால், பெருமையிணையும் என்பது கவிஞரின் பட்டறிவிலிருந்து படித்த பாடம். பெருநிலை நோக்கி முயல்வோர்க்குக் கவிஞரின் பட்டறிவுப் பாடம் பேறு தரும் என்பதில் ஐயமில்லை.

மெய் வருத்தம் பாராது, பசி நோக்காது, கருமமே கொண்டோர் முயற்சியில் வெற்றி பெறும் போது, வென்றவர்க்கு மூன்று பரிசுகள் கிடைக்கும் என்கிறார்:

1. உதட்டளவில் பாராட்டு.

2. ஒரு சிலரின் பொறாமை.

3. சிலரின் பகைமை.

"ஒவ்வொரு நூலாசிரியரும் தன் விருப்பம் இல்லாமலேயே, தன் நூல்களில் தன்னைப் பற்றி வெளிப்படுத்திக் கொள்வார்கள்" என்ற அறிஞரின் வாக்கு, குலோத்துங்கனின் பட்டறிவு வெளிப்பாட்டில் பளிச்சிடுகிறது.

உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்
வடுக்காண வற்றாகும் கீழ்

குறள் காட்டும் கயமை. நச்சு உள்ளங்களால் பாதிக்கப்பட்டோர்க்கு இது ஆறுதலாகவும் பாம்புகளைச் சந்திக்கப் போகும் நல்லவர்களுக்கு

எச்சரிக்கையாகவும் அமையும், கவிஞரின் மும்மணிகள். பிறரின் சிறப்பை மனமுவந்து பாராட்டும் உயர்நிலை, நற்குடிப்பிறந்தோரின் பண்பு. மற்றோரால் நல்லன போற்றப் படுமென எதிர்பார்ப்பது, காளை மாட்டிடம் பால் கறக்க முனைவ தொப்பும் கானல் நீர்.

பாதியறிவு பகையினும் கொடிது.

பாதிக்கிணறு தாண்டுதல், படுபாதாளம் வீழ்த்தும்

அரைகுறைப் படிப்பு ஆபத்தானது

உலகில் உலவும் மொழிகள். குலோத்துங்கன் இவற்றை ஏற்கவில்லை.

Something is better than nothing

எள்ளைத் தின்றால், எள்ளளவு பசி நீங்கும்

என்பதில் நம்பிக்கை கொண்டவர்.

கசடறக் கற்பது சிறப்பு.... ஆயினும்
ஓரிரண் டெழுத்தும் ஊன்று கோல் ஆகலாம்

என்பது கவிஞரின் பட்டறிவு தரும் படிப்பினை.

இருளடர்ந்த பயணத்தில், முழு ஒளி இருந்தால், மிகவும் நல்லது. ஒளியே இல்லா இருள் நாளில் வானில் தோன்றும் மின்னலின் நொடி நேர ஒளியும் சிறு விளக் கொளியும் ஒரு மின்மினிப் பூச்சியின் ஒளியும் கூட விழிக்கு வழிகாட்டும் துணையாகலாம். எனவே

காலோ அரையோ கற்பது செல்வம்

என்கிறார்.

"கற்க, கசடறக் கற்பவை" முழுமை நிலை, பூரணம். கொஞ்சம் கற்பது, முழுப்பயன் தராவிடினும் காலோ, அரையோ பயன் தரலாம் என்கிறார். படிப்போர்க்குப் பயனுள்ள தத்துவம் ஆகு மென்பதில் கருத்து வேறுபாடிருக்காது.

உலகில் அழகென அமைவன அனைத்தும் இன்பம் தருவன.
ஆய்வினில் தோய்வதும் இன்பம் சேர்க்கும்.
பண்ணிசை பழகப் பழக இன்பம் தரும். இவைபோல்
பாசம் பயிலப் பயில இன்பம் தரும்

என்கிறார்.

நேரடியாகக் கூறாமல், குலோத்துங்கன் தம் அனுபவத்தை - பட்டறிவை, பெற்ற படிப்பினையை, விளக்கும் தன்மையில் அறநெறியை உணர்த்துகின்றார். நல்ல பாடம் கற்பிக்கின்றார். இலக்கியங்களின் நோக்கம், இன்பம் தருவதுடன் படிப்போரின் வாழ்வை நெறிப்படுத்திச் செம்மை சேர்த்தலும் ஆகும். குலோத்துங்கனின் படிப்பினை, சமுதாயம் படிப்பினை பெற வழி வகுக்கிறதெனலாம்.

6.5 புதிய பாதை காண்போர்

"தவசி-ரேட்டர்கள், நோன்பு கோடி நோற்றோர், மறைநூல்கள் முற்றும் உணர்ந்த ஆன்ம ஞானிகள், யோக வாழ்வினர், முனிவர் போன்றார் அறம் வாழ, மறம் வீழ முயன்றனர். வெற்றி கண்டிலர், தோல்வி கண்டனர். எனவே, "யாம் புதுப் பயணம் மேற்கொள்ளும் முடிவுகண்டோம்" என்று "வெளிநடப்பு" என்னும் பாடலில் குறிப்பிடுகிறார் குலோத்துங்கன்.

மூலம் முற்றிலும் மாற்றி ஆய்குவம்
* * * *
தேறும் வாழ்க்கையின் முடிவும் தேடுவம்

என்று வாழ்க்கைக்கு வழி காட்டாத - தீமையைத் தீய்க்காத மூல நூலையே மாற்றுவதுதான் தகுந்த வழி என்கிறார். வாழ்வின் தொடக்கம் எது? முடிவெது என்பதை நுட்பமாய் ஆய்ந்து, எங்கே பழுதுள்ளதென்பதைக் கண்டு குறை யகற்றிப் புதிய பாதை வகுத்துப் பொன் நிகர்த்த புவியை அமைப்போம் என்கிறார்.

"உண்மை தேடலில் தோல்வி கண்டனர்"
முன்னோர் எனவே
"வெளியில் வந்திட எண்ணினம் - புது
வீதி தேடிடும் வேள்வி ஏற்றனம்"

என்று பழைய பாதை பயன்தராததால், புதிய பாதையின் தேவையை உணர்த்துகின்றார்.

வலியிலாதவர் வலிமை பாடுவம்.
வறியர் நெஞ்சுள வண்மை போற்றுவம்.
மெலியர் மென்மையில் வீறு காணுவம்
விதிவிலக்கினில் விதிகள் தேடுவம்

என்கிறார். சங்ககாலச் சூழலில், போரும் காதலும் இரு கண்களாகப் போற்றப் பெற்றன. போரில் விழுப்புண் படாதது இழிவெனப்பட்டது. வீரமரணம் அடைந்தோர்க்கு நடுகல் நடப்பட்டு, வழிபாடுகள் மேற் கொள்ளப்பட்டன. இந்த மரபை மாற்றும் வழியில், "வலியிலாதவர், வலிமை பாடுவம்" என்பதோடன்றி, "மெலியர் மேன்மையில் வீறு காணுவம்" என்றும் குறிப்பிடுகிறார். வீரயுகக் கால மரபை மீறிய, வள்ளலாரின் அருள் உள்ளச் சிந்தனை வெளிப்பாடு, தொழுதற்குரியது.

அழுத்தப்பட்ட அடித்தளம், பாட்டுடைத் தலைவர் ஆக்கப்படும் என்பது கவிஞரின் புதுமைக் கருத்து; புரட்சிக் கொள்கை, தலைகீழ் மாற்றம்; தலைகீழ் மாற்றம் தானே, புரட்சி யென்று, பெயர் பெறுகிறது கவிஞரின் இலக்கியம், புரட்சி இலக்கிய மெனப் பெயர் பெற, போற்றப் பெற, முழுத் தகுதி பெற்றுள்ள தென்றால் முழு உண்மையாகு மன்றோ! புன்மைகளை வேரறுத்துப் பொசுக்கி, நல்லனவற்றை வளர்த்திட வேண்டும் என்கிறார் நூலாசிரியர் முனைவர் வா.செ. குழந்தைசாமி. நல்ல நிலத்தில் ஊன்றப்படும் வித்து, முளைக்காமல் போகாதல்லவா?

7. இன்னற் கடலில் ஈழக் கலம்

7.0 முன்னுரை

பதினெட்டுத் தலைப்புகள் கொண்ட "குலோத்துங்கன் கவிதைகள்" நூலில், இலங்கைத் தமிழர் குறித்த அவல வெளியீடாக ஒரு தொகுதி (11 பாடல்கள்) இடம்பெறக் காண்கிறோம். ஈழத்தமிழர் நிலை, அவர்களின் வேதனையின் எல்லை, அவர்களின் ஏமாற்றம், இலங்கை, பற்றி எரிந்து ஈமத்தீ போல் தோற்றந்தரும் துன்பக் காட்சி, ஏற்க வேண்டிய சபதம், கொடுமையாம் பெரும் மலையின், கொடுமை முடிச் சம்பவங்கள் இவ்வியலில் சித்திரிக்கப் படுகின்றன. ஈழத்தமிழரின் இன்னல்களுடன் ஆசிரியரின் மனித நேயமும் தமிழினப் பற்றும் ஒருசேர ஒளிரக் காண்கிறோம்.

7.1 இலங்கைத் தமிழர் நிலை

நன்று தீ தெனும் நியாய உணர்வுகள், இன்று இலங்கையில் இழிந்தது போல, உலக வரலாற்றில் என்றுமே இருந்ததில்லையெனும் வெறிநிலை நிலவுகிறது ஈழத்தில். வையப் புனிதமும் குடியரசென்னும் கொள்கையும் ஈழத்தை எழில் நாடாக்கத் தமிழர் சிந்திய செந்நீரும் கண்ணீரும் வியர்வையும் பொருளற்றதாயின. வெறி நாய், கொடும் விலங்கொப்ப, சிங்களர், தமிழர்களை வேட்டையாடும் வெறிச் செயல் நிலவுகிறது, ஈழத்தில்.

புத்தர் பெயருடன், இரத்த வெறியில் விடத்திலும் கொடிய வேற்றுமை விதைகளை, மதத்தின் பெயரால், இனத்தின் பெயரால் விதைத்துத் தமிழினத்தை முற்றும் சாய்க்கும் சூழ்நிலை. மானுடம், சுதந்திரம் இழந்தது. இலங்கை அரசின் படைகளும் அலுவலர் கூட்டமும் தமிழரின் வீட்டில் புகுந்தும் வளைத்தும் பெண்கள், மழலையர், முதியோர், ஆடவர் என்ற அனைத்து நிலையுள்ள தமிழர் குழாமையும் வெட்டிச் சாய்த்தும் சுட்டு வீழ்த்தியும் வெறிச் செயல் புரிகின்றன. மனித நேயம் இல்லா மாக்கள், மனித உருக்கொண்ட பேயர்! பிசாசுகள்! ஈழத்தமிழரின் நிலைமைகள் இவையென, குலோத்துங்கன் கவிதைகள் குறிப்பிடுகின்றன.

7.2 ஈழத்தமிழரின் ஏமாற்றம்

அந்நியர் இலங்கையை ஆண்டபோது, உரிமை பெறச் சிங்களர்களும் தமிழரும் ஒன்று கூடி உரிமைக் குரல் கொடுத்தனர். ஒன்றிணைந்து போராடி, உரிமை பெற்றனர். பட்டதுயர், ஒரு கோடி. விடுதலை பெற்ற பின்பு, தமிழரிடம் பாசம் காட்டுவதற்குப் பதில், பகை கொண்டனர், அன்புபாராட்டவில்லை. தமிழை அழிக்க முயல்கின்றனர், சிங்களர் ஏமாற்றப்பட்ட தமிழரின் வேதனையை வெளிப்படுத்தும் அவல நிலையை எழுத்தோவியத்தால் சித்திரிக்கிறார் கவிஞர்.

7.3 இலங்கை எரியும் ஈமத்தீயின் தோற்றம்

இனப் பிரச்சினையில், இலங்கையில் தீபரவிற்று, இலங்கை எரியும் காட்சியைக் குலோத்துங்கன்:

கனவெல்லாம் ஈழத்தின் அவலக்காட்சி
கண்விழித்தால் உயிர்பற்றி எரிவதேபோல்
மனமெல்லாம் எரிகிறது கயவர் செய்கை
மனிதத்தை எரிக்கிறது

என்று கொடுமை தாங்காது குமுறிக் கூறுகின்றார்.

ஈழம் பற்றி எரிகிறது - தமிழ்
இனமே அங்கு அழிகிறது

என்று ஈழம் எரியும் காட்சியை விளக்கும் கவிஞர், உள்ளுறையாக இலங்கையே எரியும் என எச்சரிக்கிறார். கணவனுக்கு அநீதியிழைத்துக் கொன்ற பாண்டியன் நெடுஞ்செழியனின் மதுரையைத் தீக்கிரையாக்கினாள் திருமாபத்தினி கண்ணகி. ஒருத்தியான கண்ணகியின் துன்பமே மதுரை மாநகரை அழிக்கும் போது, ஒட்டு மொத்த இலங்கைத் தமிழரின் கண்ணீர் இலங்கையை நிச்சயம் அழிக்குமென்பது கவிஞரின் கருத்து

ஈமத்தீ வளர்கிறது. தமிழர் ஆவி
எரிபொருளாய் அழிகிறது. அவர்கள் நியாயம்
ஊழித்தீயாகுமடா! வஞ்சர் ஆட்சி
உலகளாவத் தீய்க்குமடா

என்று எச்சரிக்கிறார் கவிஞர்.

அல்லல்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை

என்பது வள்ளுவர் வாக்கு. ஈழத்தமிழரின் கண்ணீருக்குக் காரணமானவர்களும் கொடுமை கண்டு குமுறாத உலகமும் ஒரு சேர அழியும் நிலை உருவாகும் என்கிறார் கவிஞர்.

7.4 கொடுமையின் கொடுமுடி

பெற்றநிலம் துறந்து, பிரியமுடன் பழகிவந்த சுற்றம், துணை பிரிந்து, தோணி துணையாகக் கடல் தாண்டி, உயிர்காக்க முனைந்த ஈழத்தமிழர்கள், நடுக்கடலில் பேரலைகளின் பிடியிலே சிக்கித் தவித்து ஆவிபிரிந்தார்கள். இச்செய்தியினைப் பார்த்த போது,

எரிமலைகள் ஆயிரம்வந் தென்னுள்ளே சேர்ந்தாங்கு,
பொறிபரப்பி வெம்மையிலிப் பூமியினைத் தீய்ப்பது போல்
பொங்குதடா நெஞ்சம்

என்று கவிஞர் ஆறாத் துயரில் ஆழ்கின்றார்.

தோணி கவிழ்ந்த கணம், துணையின்றி நின்ற கணம்
பேணியவை அத்தனையும் பிரியும் பெருஞ்சோகம்
மின்னலென அங்கமெலாம் விரவுகின்ற நேரத்தில்
என்ன நினைத்தாரோ ஏங்கினரோ?

* * * *

சடங்கொன்றறியாது, தமர்சூழ்ந்தழுகாது
அடங்கியஇவ் ஆவிகளின் ஆசைகளை யாரறிவார்?"
பயணம் செய்த தோணி கவிழ்ந்து, கடலலைகளில் சிக்கி
உயிர்க்கு ஓலமிடும் உயிர்கள் நிலை, கற்பனை யன்று.
நடந்த கடற்காட்சி. ஈழத்தமிழர் நிம்மதியற்று மாண்ட
நிலைமை கொடுமையிலும் கொடுமையே,

7.5 ஈழத்தமிழர் சபதம்

கொடுமைக்குள்ளான ஈழத் தமிழர் சபதமாகவோ, இனி, செயல்படுத்த வேண்டிய கடமையாகவோ, ஒன்று சுட்டப்படுகிறது. அச்சபதம், கொடுமைக்குள்ளாக்கப் பட்டோர் - உரிமைபறிக்கப்பட்டோர் ஏற்க வேண்டிய சபதமாக - உலகப் பொது நீதி ஆகின்றது.

வாழ்ந்த கூரையை நீங்கி, பெற்ற மண்ணைத் துறந்து, தாய்மொழி பேசும் எல்லையையும் தாண்டி, சுற்றம், சொந்தமற்று, எந்த ஊருமின்றி, திக்குத் தெரியாத நிலத்தில் அகதிகளாக வாழ்கிறோம், மடிகிறோம். சொந்த மண்ணில் கூட அடிமையாகத் திரியும் நிலையிலுள்ளோம்; ஈழத்தமிழர் களாகிய நாங்கள்.

ஒன்றை நம்பினம், ஒன்றை எண்ணினம்.
ஊழி யாயினும் கைவிடோம்.
என்றை மண்ணிடை எமது நற்றமிழ்
இறைமை காணுமுன் ஓய்ந்திடோம்

என்பதே அச்சபதம். இதுவே ஈழத் தமிழர் எண்ணமாக இருத்தல் வேண்டு மென்பது குலோத்துங்கனின் ஊகம்: எதிர்பார்ப்பு.

7.6 ஈழத்தமிழரின் இன்னலை எண்ணாத உலக நாடுகள்

இனப் படுகொலை நடக்கும் ஈழத்தில், உலகநாடுகள் அமைதி ஏற்படுத்த வேண்டும். தாக்கப்படும் தமிழருக்கு உதவ வேண்டும். அறம்சாகும் இலங்கையில், அறம் வாழ ஆவன செய்தல் வேண்டும் ஆனால் உலக நாடுகள், உதவவில்லை. குமுறும் ஈழத் தமிழர்போல், கொதிக்கிறார் கவிஞர். அதன் வெளிப்பாடாகத் தமிழர்களாகிய ஆண்ட இனத்தின் பெருமையைக் கூறித் தமிழர்க்குரிய தனிப் பண்பையும் குறிப்பிடுகிறார்.

நீதி பெறத் துணிந்த இனம் தோற்றதில்லை....
. . . ..உலகமன்றம்
தலையிட்டுத் தீர்க்குமென எதிர்பார்த்தல்ல.
தம் வலியை நம்பி அவர் தலைநி மிர்ந்தார்

என்கிறார். தன்னலம் பேணி இழி தொழில் புரியும் வல்லரசுகளின் ஆண்டான் போக்கையும் ஒப்பந்தம் பேசிக் கப்பம் கட்டினால் உற்ற துணையாகும் அதர்ம அணுகுமுறையையும் கொண்ட நாடுகளின் தன்மைகள் நன்கு விளக்கப்படுகின்றன.

ஈழத்தமிழரின் நிலைபற்றிக் கூறும் குலோத்துங்கன் கவிதைகளின் போக்கை மதிப்பிட்டால், இராமனுடன் போரிடத் துணிந்து நிற்கும் இராவணனின் தீர்மானத்தை ஒத்ததாக உள்ளது. இராமனுடன் போரிடுவதை நிறுத்துமாறு அறிவுறுத்துகிறான் மகன் இந்திரசித்து. அப்பொழுது இராவணன்:

முன்னையோர் இறந்தா ரெல்லாம்
இப்பகை முடிப்பர் என்றும்
பின்னையோர் நின்றா ரெல்லாம்
வென்றவர் பெயர்வர் என்றும்
நின்னைநீ அவரைவென்று
தருதி யென் றுணர்ந்து மன்றால்
என்னையே நோக்கி யான்இந்
நெடும் பகை தேடிக் கொண்டேன்

என்று மகனிடம் மறுமொழி பகர்வது போல், ஈழத் தமிழர் தம் இன்னல்களைத் தாமே தகர்த்தெறிவர் என்பதை விளக்குவதாக உணர்த்துகிறார் குலோத்துங்கன்.

8. நிலையா உலகில் நிலைத்தவர்

8.0 முன்னுரை

சங்ககாலச் சான்றோர் மன்னர்கள், புலவரால் புகழப்படுவதைப் பெறற்கரும் பேறாகக் கருதினர். இசை பட, புகழுடன் வாழ விரும்பினர். கருவியாக ஈகையை - அறத்தை - மேற்கொண்டனர்.

"குலோத்துங்கன் கவிதைகள்" நூலில், இரண்டு தலைப்புகளில் ஆசிரியர் தம் இதயம் நிறைத்தவர்களைப் போற்றுகின்றார். பாவேந்தர் பாரதிதாசன், மகாகவி பாரதியார் ஆகிய இரு கவிஞர்கள்; பேரறிஞர் அண்ணா, பண்டித ஜவஹர்லால் நேரு ஆகிய இரண்டு அரசியல் தலைவர்கள், உலகப் பெரியார்கள் வரிசையில் இடம்பெறும் சமூகச் சீர்திருத்தவாதி தந்தை பெரியார், துறவுக் கோலத்தில் சமுதாயச் சீர்திருத்தத் தொண்டாற்றிய தவத்திரு குன்றக்குடி அடிகளார் ஆகியவர்கள் பத்துப் பாடல் தலைப்புகளில் பாராட்டப் பெறுகின்றனர். "இருவரை இழந்த வாழ்வு எத்தனை இழந்ததம்மா?" என்னும் தொகுப்பில் வரும் 13 பாடல்களில், கவிஞரின் அன்னை, தந்தை, தங்கை, தம்பி ஆகியோரைக் குறித்த இரங்கற் பாக்கள் இடம் பெறுகின்றன.

8.1. பாவேந்தர் பாரதிதாசன்

"காவியங்கள் கலைகள் அவன் பெருமை பேசும்" என்னும் பொதுத்தலைப்பிலுள்ள 10 கவிதைகள் தொகுப்பின் முதற்பாடல் "புதுவைத் தமிழ்க் குயில்" என்னும் பாடலாகும். பாட்டுடைத் தலைவர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள்.

சங்க அகப் பாடல்கள், தலைவன், தலைவி பெயர்களைச் சுட்டாதது போன்று, பாவேந்தரின் பெயரைக் குறிப்பிடாமலேயே சொற்களின் கோர்வையைக் கொண்டு பெயரை உணர்த்தும் பாங்கு பெருமைக்குரியது. இருள் கவிந்த தமிழ்வானை எழில் செய்த எழில் நிலவே!வளர் கலையின் பிறப்பிடமே! தமிழ்க்குயிலே!புதுவை தந்த மணியே!தமிழகத்தின் புதை பொருளே! புத்துலகப் பாவரசே!வாழி!வாழி என்று போற்றுவதோடல்லாமல்,

இலக்கணத்துக்கு அணி செய்தாய்
இசைக்கலையின் வளம் மிகுத்தாய். நிறைந்தமூடப்
பழக்கத்தை வேரறுத்தாய். பைந்தமிழைப் புதுப்பித்தாய்.
ஒடிந்த நெஞ்சம்
கிளர்ச்சிபெற முரசொலித்தாய். உரிமை - எனக்
கிளர்த் தெழுந்தாய். தமிழர் - எங்கள்
உளத்தினிலே குடிகொண்டாய்
வாழிபுகழ்க் குன்றினுச்சி உலவுநீயே

என்று பாவேந்தரின் சாதனைகளைப் பட்டியலிட்டு வாழ்த்துகின்றார்.

8.2. பேரறிஞர் அண்ணா

"இயற்கை நீ கொடியள்" என்னும் கவிதை, அண்ணா அவர்களின் மறைவு குறித்து எழுதப்பட்ட சோகப் பாடல்.

உள்ளங்களை மீளாத்துயரில் ஆழ்த்திவிட்டு, மீளாத் துயில் கொள்ளச் சென்ற மேலோனை - "மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு" என்ற மாண்புடையோனை - பேரறிஞர் அண்ணாவைப் போற்றும் பெயர் குறிக்கப் பெறாத கவிதை.

கவிஞரின் சோகத்தின் ஆழம், சொல்லும் தரத்தில் உள்ளதாக இல்லை. உலகில் முதல் மனிதன் தோன்றிய இலெமூரியாக் கண்டத்தில் தமிழன் வாழ்ந்தது, கடற்கோளால் இலெமூரியாக் கண்டம் - இன்றைய தமிழகத்தின் தென்பகுதி அழிக்கப்பட்டது தமிழகத்தின் பெரும்நிலப் பரப்பையும் அளவிடற்கரிய தமிழர் கூட்டத்தையும் கடல் அழித்தது, தமிழர்க்கு என்றும் ஈடுசெய முடியாத பேரிழப்பாகும். அந்தச் சோக வரலாற்றுக்குப் பின்பு, தமிழர்கள் இழந்த மாபெரும் இழப்பு, பேரறிஞர் அண்ணா அவர்களின் மரணம். குலோத்துங்கனின் இக்கருத்து, அண்ணா அவர்கள் மீது ஆசிரியர் கொண்ட மதிப்பை உணர்த்துவதாக உள்ளது.

பல்லாண்டுகள் தம்முடைய பாசப்பிணைப்பில் கட்சியில் இருந்தோர், தம்மைவிட்டு விலகி வேற்றுக் கட்சிக்குச் சென்றபோது கூட வெகுளாமல், "தம்பி!நீ எங்கிருந்தாலும் வாழ்க" என வாழ்த்திய பேருளம் கொண்ட பேரறிஞர் அண்ணா அவர்களையும் இயற்கை தன் விதிப்படி நடத்துகிற செயல்கண்டு நன்மைக்கும் தீமைக்கும் பாகுபாடு தெரியாமல் ஒத்த நிலையில் நடத்துவது கண்டு, இயற்கையைக் "கொடியள்" என்று குலோத்துங்கன் வழங்கிய தீர்ப்பு, நல்ல தீர்ப்பு.

"செந்தமிழங்கு இல்லை யென்றால் திரும்புவாயோ?" என்னும் அடுத்த கவிதையும் அண்ணா அவர்கட்கு யாக்கப்பெற்ற இரங்கற்பா தான். வாய் மணக்க, மனம் குளிர "அண்ணா" என்றழைத்து, அண்ணா நீ சென்ற உலகில் செந்தமிழ் மொழி இல்லையென்றால், சென்ற இடத்தைவிட்டு எந்தமிழ் நாட்டுக்குத் திரும்புவாய் அல்லவா? எனக் கேட்கும் கேள்வி, அன்புடை நெஞ்சில் அவலம் நிறைப்பதாக உள்ளது;நெஞ்சை நெகிழ்விப்பதாக அமைகிறது.

"தெள்ளுதமிழ் மொழியிருக்கப் பொன்னி பாயும் செந்தமிழ் நாடிங்கிருக்கப் பொருள் நிறைந்த வள்ளுவர்தம் குறளிருக்கச் சங்கந்தொட்டு வந்த தமிழ்க் கவிதைகளின் கலையின் பண்பின் கள்ளுயரும் சுவையிருக்கத் தமிழர் நாங்கள் கனவெல்லாம் நீயாகச் சூழ்ந்து நிற்கச் செல்லுலகம் வேறொன்று கண்டாயோ? நின் செந்தமிழ் அங் கில்லையெனில் திரும்புவாயோ?" என்பது கவிஞரின் கேள்வி. சிறப்பான மொழி, நாடு, நூற்கள், பாசம் மிகுந்த உடன்பிறப்புகள் இங்கிருக்கும்போது இவற்றை எல்லாம் விட்டு, விட்டு எங்கோ அண்ணா அவர்கள் சென்று விட்டார். அங்கே

நம் அண்ணாவுக்குப் பிடித்த தமிழ் இல்லாவிட்டால், எக்காரணம் கொண்டும் அங்கே தங்க மாட்டார்;மீண்டும் இங்கே வந்து விடுவார் என்ற நம்பிக்கையும் கவிஞரின் ஏக்கமும் அவலத்தைப் பல்கிப் பெருகச் செய்கின்றன பல மடங்காக.

அண்ணா!எந்துயரம்நீ அறிதற் கியலா ஒன்றோ?
இயற்கைக்கும் நீகூட எளியன் தானோ?
மானுடர்க்கே பெருமை செய்த
சொல்லமுதத் தமிழ் மகன்....
வானந் தோய்ந்த மலை....

என்று, அண்ணா அவர்களைப் போற்றும் சொற் கோவைகள், நவரத்தின கோவையிலும் நனி சிறந்தவை,

குறள் போல் குறுகிய அடிகளில், பேரறிஞர் அண்ணா அவர்களின் விரிந்த - பரந்த - புகழைப் பாடுகிறார் கவிஞர்.

8.3 தந்தை பெரியார்

"காவியங்கள், கலைகள் அவன் பெருமை பேசும்" என்னும் மூன்றாவது கவிதை, இப்பாடல் தொகுப்பின் தலைப்பாகிறது. இப்பாடலின் பாட்டுடைத் தலைவர், பகுத்தறிவுப் பகலவன், ஈரோட்டு வெண் தாடிவேந்தர் தந்தை பெரியார் அவர்கள். நானிலம் பரந்து, கடந்து நிற்கும் பெரியார் அவர்களின் பெருந்தோற்றத்தை நாலடிகளில் விளக்கிக் காட்டுவது கவித்துவச் சிறப்பாகும்.

நீரெல்லாம் அவன் வியர்வை. தமிழகத்தின்
நிலமெல்லாம் அவன்நடந்த தாரை: வாழும்
ஊரெல்லாம் அவன் மூச்சின் காற்று: எம்மோர்
உயர்வெல்லாம் அவன்தந்த பிச்சை அன்றோ?

எம்மவரின் உயர்வெல்லாம், தந்தை பெரியார் அவர்களிட்ட பிச்சை என்ற கூற்று, நல்ல தமிழர்களின் ஒட்டுமொத்த உள்ளுணர்வுகளின் சொல்லோவியம். பகுத்தறிவுப் பெருநிலையாளரை, வானளாவப் புகழ்வதன் வாயிலாக, முனைவர் வா.செ. குழந்தைசாமி அவர்களின் செய்ந்நன்றி மறவாச் சிறப்புப் பண்பாடு போற்றுதற்குரியது ஆகிறது.

வணங்காத நிமிர்ந்ததலை: வாரியன்ன
வற்றாத கருத்துக்கள் மலரும் உள்ளம்.
உணங்காத தாளாண்மை: எதற்கும் அஞ்சா
உரங்கொண்ட பெருந்தலைவன் உழைப்பின் சின்னம்

* * * *

துணிவு பெறு; பகுத்தறிவின் துணைகொள் என்று
சொன்னவன்எம் தென்னகத்தின் துயர்துடைத்தான்

என்னும் சொற்றொடர்களால், பாடல் அடிகளால் பெரியார் அவர்களை ஓவியமாக்கிக் காட்டும் கவிஞர், கடமையையும் குறிப்பிடுகிறார். தமிழர்கள் என்றால் நன்றியுள்ளவர்கள் என்ற நிலையில்,

கடன்பட்ட தமிழுலகம் நன்றி சொல்லும்
காவியங்கள் கலைகளவன் பெருமை பேசும்

என்று கூறுகின்றார்.

இந்தியத் திருநாடு, விடுதலைபெறும் முன்பே,
"ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோ மென்று....
ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே"

என்று பாரதி சொன்னதைக் குலோத்துங்கன் கவிதைகள் நினைவுபடுத்து கின்றன. நன்றியுள்ள தமிழகக் காவியங்களும் கலைகளும் பெரியார் அவர்களின் பெருமையைப் பேச வேண்டு மென்பது, கவிஞரின் விருப்பம், வேண்டுதல், உத்தரவு.

நன்றிப் பெருக்கின் விளக்கமாக,

மண்ணோடும் வளியோடும் வானோடும் வாழ்வாய்

என மற்றொரு கவிதை மலர்கிறது. அது அவலம் பீறிடும் இரங்கற்பா.

மலைசாய்ந்த தையகோ! தன்மான
உணர்வனைத்தும் வடித்தெடுத்த
சிலை சாய்ந்த தையகோ! தென்னகத்து
மண்முழுதும் தெளிவுகண்ட
நிலைசாய்ந்த தையகோ! நீதியெலாம்
தானாகி நின்ற வேந்தன்
தலைசாய்ந்த தையகோ! தமிழகத்தின்
கொழு கொம்பு சாய்ந்த தம்மா!

எனக் குமுறும் குலோத்துங்கன்:

தென்னகமும் தமிழகமும் தீந்தமிழும்
வாழும் வரை திராவிடத்தின்
மண்ணோடும் வளியோடும் வானோடும் ஒன்றாகி வாழ்வாய் ஐய!

என்று தம் வாழ்த்துதலையும் கூறி முடிக்கிறார். தீந்தமிழ் வாழும் வரை தென்னகமாம் திராவிடநல் திருநாடு திகழ்வது வரை, தந்தை பெரியார் அவர்கள், மண்ணில், விண்ணில், காற்றில் கலந்து ஒன்றியிருப்பார், ஒன்றியிருக்க வேண்டும்.

8.4. மகாகவி பாரதியார்

பாட்டுக்கொரு புலவன் பாரதியின் பாநயத்தால், பண்புகளால் ஈர்க்கப் பெற்ற குலோத்துங்கன் அவர்கள், பாரதியின் ஏற்றத்தைப் போற்றும் பாங்கு,

உண்மை வெறும் புகழ்ச்சியில்லை. "பெருங்கவிஞு! கவிதைத்தாயின் தலைமகனே! பாரதிநின் தலைமை வெல்க"! பாரதியின் அறங்கள் வெல்க என வாழ்த்துகிறார் கவிஞர்.

சுவைபுதிது, சொல் புதிது, பாடத் தேர்ந்த
துறை புதிது. முறை புதிது, பாடிநின்ற
அவை புதிது. பொருள் புதிது. கவிஞு!நீஎம்
அவலத்தின் ஊற்றுகளை ஆய்ந்த எண்ண....

* * * *

சுவைபுதிது, மலர்புதிது, புதுயுகத்துக்
கவியரசே!பாரதிநின் கலைகள் வெல்க

என்று பாரதியின் கவிதையின் நிலையையும் நேர்த்தியையும் விளக்கி, வாழ்த்துகின்றார்.

"அச்ச மெனும் சிறுமைகளை அறியா நெஞ்சம்" பாரதி உள்ளம். "ஆளுமையின் உருவமென அமைந்த தோற்றம்" பாரதியின் தோற்றம்.

இச்சகம் செய்தறியாத ஏற்றம்:
எவருக்கும் வணங்காத தகைமை:
உச்சம்கொள் மெய்யறிவுப் பார்வை

கொண்டவர் பாரதி யெனப் புகழும் கவிஞர், பாரதியின் எண்ணத்தின் அறத்தை, இதயத்தின் பரப்பை, கொள்கைத்திண்ணத்தின் உயர்வை, சிந்தையின் தெளிவை, ஊடுருவும் மதிநலத்தைக் கண்டு, வியந்து, மலைத்து, மயங்கி நிற்பதாகக் கூறுகிறார்.

"பாரதி கண்ட பாரதம்" எனும் குலோத்துங்கனின் கவிதை, கவிஞர், வானொலியில் நிகழ்த்திய கவியரங்கக் கவிதையின் தொகுப்பு.

நாவசைத்து, நாடசைத்த கவிதை வேந்தன்:

* * * *

சாதியிலாச் சமுதாயம், சதியறியாச் சமுதாயம்
நீதி செயும் சமுதாயம் நிலைநாட்டப் பாடியவன்

என்று குலோத்துங்கன் போற்றுகிறார். பாரதி

நிறம் கடந்து, மொழி கடந்து, பிறந்து வாழ்ந்த
நிலம் கடந்து மதம் கடந்து மானிடத்தின்
திறம் நினைந்து பாடியவன்

விடுதலையைப் பாடியவர்;ஒருமைப்பாட்டின்
மேன்மையினைப் பாடியவர், வறுமைப் பாட்டின்
வடுஒழியப் பாடியவர், சாதி என்னும்
வகை ஒழியப் பாடியவர், காதல் மாதர்
பெருமையினைப் பாடியவர்

* * * *

உலகநோக்கின்
அருமையினைப் பாடியவர். . .. .
அறம் பற்றிப் பாடியவர்....

என்று அடுக்கிச் செல்கிறார், பாரதியின் கவிதை மாட்சியை

அண்ணாந்து விண்ணுலகைப் பார்த்துப் பார்த்து
அங்குசெலும் வழிதேடி அலைந்தோர் தம்முன்
மண்ணே நம் சுவர்க்க மெனும் மாற்றம் சொன்னான்
மானிடர்கள் அமரர்களாய் வளர்க என்றான்....
....அவன் கண்ட பாரதத்தை அமைப்போம்

என்று குலோத்துங்கன் கூறி முடிக்கிறார். பாரதி பற்றிய கவியரங்கக் கவிதை, பாரதியின் முழுமைப் படப்பிடிப்பாக அமைகின்றது.

ஒரு கவிஞனை, ஒரு கதாசிரியர், கட்டுரையாளர் காணும் போக்குக்கும் கவித்துவம் மிகுந்த ஒரு கவிஞன் நோக்கும் நோக்குக்கும் வேறுபாடிருக்கும். கவிஞனின் வெளிப்பாடு மகத்தானதாயிருக்கும் என்பதில் எள்முனை அளவும் ஐயமில்லை. பார்புகழும் பாரதியைச் சீர் மிகுந்த குலோத்துங்கன் விளக்கும் திறன், சிறப்பு மிக்கது. ஊடுருவி இதயத்தை - எண்ணத்தை ஆய்வு செயும் கவிக் கண்களினின்று, எதுவுமே தப்பிவிட முடியாது. எனவே குலோத்துங்கனின் பாரதிப் படப்பிடிப்பு முழுமையானது. திரு.வி.க. அவர்களின் கூற்றில் கூறுவதெனில் "குன்றின்மேல் நின்று கூவலாம்", பூரணமாகப் பொலிந்த பாரதிப் புலவனைக் குலோத்துங்கன் சொல்லோவியம் முழுமையாகச் செதுக்கியுள்ள தென்று.

8.5 பண்டித ஜவஹர்லால் நேரு

முனைவர் வா.செ. குழந்தைசாமி அவர்களால் பாரதப் பிரதமர் பண்டித நேரு அவர்கள். "பூரண மனிதன்" என்ற தலைப்பில் புகழப் பெறுகிறார்.

> மேருவை மிஞ்சிய புகழினன். நீரினும் தூய நெஞ்சினன். கார் நல்கும் வளத்தினும் மிஞ்சிய கருணையோன். சிறுமையொன்றி லாமேலோன். பெரியன அன்றிச் சிறியன சிந்தியாதான். பிறர் துன்பங்களைக் கண்டு பொறுத்திருக்கும் பொறுமையில்லாதவன். உலகின் புனிதங்கள் அனைத்தும் இணைந்த ஒரு மனித உருப் பெற்ற மனிதன். நேரு உத்தமன், புத்தன் சொன்ன தருமமும் சமண அன்பின் தன்மையும் பக்தி ஞானம் கருமமும் பரிந்துரைத்த கண்ணன் வழியும் தொன்மை மருவிய தமிழினத்தின் மறைகளும் அறிந்தோன். பாரதம் தந்த யாவும் பயின்ற, தியாகமே வடிவாக வந்தவன். மக்களாட்சி முறையின் மகத்துவம் முழங்கி நின்றோன். நிகரென அவனை ஒத்து நின்றவர் அரிதே. தெய்வப் புகழினன். புகழ் அனைத்தும் பூணுதற்கொருவன் பண்டித நேரு அவர்கள்,

என்று கவிஞர் போற்றுகின்றார். திராவிடத்தில், தென்னாட்டில், தமிழகத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களையும் பரந்த பாரதத்தில், மனிதருள் மாணிக்கம் மாமனிதர் நேரு அவர்களையும் போற்றக் காண்கிறோம். வாழ்தல் வேண்டிப் பொய் கூறாத பண்டைய தமிழ்ப் புலவனின் மாண்பு, குலோத்துங்கனிடம் மிளிர்வதால், மனமுவந்து பாராட்டுதற்குரியவர் ஆகின்றார் முனைவர் வா.செ.கு. அவர்கள்.

8.6 தவத்திரு குன்றக்குடி அடிகளார்

"காவியங்கள் கலைகள் அவன் பெருமை பேசும்" எனும் பதினாறாவது தொகுப்புப் பாடல்களில், இறுதிக் கவிதையாக இடம்பெறுவது "புதுயுகத்துறவி" எனும் பாடல்.

குன்றக்குடி அடிகளின் குன்றாப் புகழ் பாடும் கவிதை. பழுத்த பகுத்தறிவுச் சிந்தனையாளர், தந்தை பெரியார் அவர்களைப் போற்றிய குலோத்துங்கன் அவர்கள், கனிந்த ஆன்மீகச் சிந்தனையாளர் - இறையேற்புக் கொள்கையர் குன்றக்குடி அடிகளாரைப் பாடலாமா? பாடுவது முறையா? என்ற கேள்வி எழலாம். ஐயம் எழக்கூடாது என்பதால்தான் கவிதைத் தலைப்பை "மடத்தலைவர்" என்னாமல், "புதுயுகத் துறவி" எனக் குறிப்பிட்டுள்ளார் நூலாசிரியர்.

அறிவியலும் சமுதாயச் சீர்திருத்தப் பகுத்தறிவுச் சிந்தனையும் செயலும் இணைந்த ஆன்மிகம் இருக்க முடியாதா? ஏன் முடியாது?

பறைச்சியாவது ஏதடா? பணத்தியாவது ஏதடா?
இறைச்சி தோல் எலும்பிலும் இலக்கமிட்டிருக்குதோ?

என்று சாதி ஒழிப்புக்குக் குரல் கொடுக்கவில்லையா சித்தர்?

"ஈசனுக்கு உகந்தகல் எந்தக்கல்?" எனக் கேட்டுக் கடவுள் சிலையையும் கல்லாகக் காணவில்லையா? இவை போன்றவற்றுடன், சிவ வழிபாட்டையும் சேர்த்து, சிறப்பாகப் பேச வில்லையா? சித்தர் வழி நின்ற இருபதாம் நூற்றாண்டின் சீர்திருத்தத் துறவி, தவத்திரு குன்றக்குடி அடிகளார். சமுதாயச் சிந்தனையில் ஈரோடும் குன்றக்குடியும் இணைந்திருந்ததால், குலோத்துங்கன் இருவரையும் போற்றுவதில் எத்தவறுமில்லை.

மடத்துடன் மடமாய் அடைபட்டு, ஆசி மட்டும் வழங்கிக் கிடக்காமல், மடக்கொள்கை வேறு, அறிவியல்வேறு என்று தடுப்புச் சுவர் எடுக்காமல், ஆழ, அகல, அகழிகள் வெட்டாமல், நடமாடும் கோயில் நம் மக்களுக்குச் செய்யும் தொண்டே படமாடும் கோயில் பரமனுக்குச் செய்யும் பூசனைகளைவிடப் புனிதமானது என்றுணர்ந்து, புதிய பாதை - அறிவுப்பாதை - அறிவியல் பாதை வகுத்தவர் அடிகளார் அவர்கள். மூடக்கொள்கை முடை நாற்றம் வீசுகின்ற காட்டுமதயுகத்தினின்றும் மாறுபட்ட, புதுயுகம் காணப் போராடிய துறவி அடிகளார். எனவே தான், "புதுயுகத் துறவி" என்ற பொருள் பொதிந்த தலைப்பிட்டுள்ளார்.

சமயமொடு தமிழ் வாழத் தமிழர் வாழத்
தாழாது தளராது தொண்டு செய்து
இமய மென நின்றதமிழ் ஞானி....

* * * *

இனியதமிழ் வாழும்வரை இவனும் வாழ்வான்

என்று குறிப்பிடுகிறார் கவிஞர்.

அறிவியலும் ஆன்மிகமும் இணைந்து நிற்கும்
அற்புதத்தின் தந்தை இவன்....
....நிகழ்கால நெகிழ்வுக்கு நியதி தந்தான்

அதனால் அவனைப் பாடுகிறேன் என்பது உள்ளுறை.

இசை பரவ வாழ்ந்தவர்கள் இறப்பதில்லை
எங்கள் தமிழ்க் கொள்கை இது

நிறைவுப் பாடலடிகள், புகழுடன் வாழ்வோர்க்கு மரணமில்லை என்பதுடன் நிறுத்தாமல், "எங்கள் தமிழ்க் கொள்கை" என்றும் கோடிட்டுக் காட்டுகின்றார்.

தமிழுக்குத் தொண்டு செய்வோர் சாவதில்லை.
தமிழ்த் தொண்டன் பாரதிதான் செத்த துண்டோ?

எனக் கேட்கிறார் பாவேந்தர். "இசைபட வாழ்தல் உயிர்க்கு ஊதியம்" என்ற பழநூற் பண்பும் பாவேந்தரின் கருத்தும் இணைந்த கூட்டு குலோத்துங்கன் குறிப்பிடும் "எங்கள் தமிழ்க் கொள்கை."

8.7. கவிஞரின் அன்னை

"குலோத்துங்கன் கவிதைகள்" நூலின், இறுதி இயலான "இருவரை இழந்த வாழ்வு எத்தனை இழந்ததம்மா?" என்ற பதினெட்டாவது தொகுப்பில், கவிஞர் தம் தாய், தந்தை, தங்கை, தம்பி ஆகியவரைக் குறித்து இரங்கும் இரங்கற்பாக்களாகவே யாத்துள்ளார். புலவர் போற்றும் புகழ்பெற்றோர் இவர்கள்.

"அவலமே! உன்பேர்தான் இரங்கற்பாவோ?" அவலச் சுவையே! நீ தான் கவிதையின் பாடற்சுவையோ? எனக் கேட்கும் தன்மையில், துன்பியல் நிறைந்துள்ளது. கவிதை நயம் மிகுந்துள்ளது.

தாயின் மரணத்தால், வாழ்வில் மையிருள் சூழ்ந்து விட்டதென வருந்துகிறார். நெஞ்சில், வெந்துயரத் துன்ப இருள் சூழ்ந்து விட்டது. நெஞ்சில் ஒளியேற்ற, உலகம் ஒரு வழியும் காணவில்லை. அம்மா! என அழைக்க யாருளர்? நெஞ்சம் வருந்தி, அணு, அணுவாய் எண்ணம் சிதைந்து, இதயம் புரையோடி, வாழ்வு பெரு மூச்சாய், தேம்புதலாய்த் தவிக்கிறார். தாயை இழந்த சோகத் தனயன். அவலக் கொடுஞ்சிகர, உச்சி முனையாய்,

பழனம் வறண்டு பயிர்கருகின் தண்ணீர்
உழவர் இறைத்தங்(கு) உயிர் கொடுப்பர், மானிடர்தம்
உள்ளம் வறண்டு உயிர்கருகும் காலத்து
வெள்ளப் புனலெதுவும் வியனுலகே கண்டிலையோ?

என்னும் பாடல் அமைகிறது.

பயிர் வறட்சி தீர்க்க மாரியுண்டு. மக்களின் உயிர் கருகுவதை நீக்க எம் மாரியால் இயலும்? "கவிஞரின் வேதனை மிகுதியால், இலக்கியத்துக்கு விலை மதிப்பிடற்கரிய செய்யுள் கிடைத்துள்ளது. மண் தோண்டப்படும் போது, மணி கிடைக்கிறது அலை கடலில் மூழ்கினால் ஆணி முத்து !

துணி வெளுக்க மண்ணுண்டு. . . . .
மனம் வெளுக்க மருந்தில்லை

பாரதியின் புலம்பல் நிழலாடுகிறது நெஞ்சில்.

பிறர் துன்பத்தில் மகிழ்ச்சி காணும் நிலை (Lucretian Pleasure) அல்ல இது, கவிச்சுவை. இலக்கிய இன்பம். காணும் ஓர் இலக்கியச் சுவைஞனின் கருத்து.

தாயின் தகைமை பற்றிய தகவல்கள், அன்னையின் தியாக உள்ளத்தை விளக்குகின்றன. குடும்ப விளக்கின் அன்றாட வாழ்வு முறைகள், நிரல்படுத்தப் படுகின்றன. கவிஞரின் அன்னை அவர்கள், எண் எழுத்தும் கல்வி வாழ்வும் அறியாதவர். தம்முடைய செல்வம் உயர்வுறவேண்டுமென்ற கருத்தொன்றே கொண்டவர். உதயசூரியன் உதிக்கும் முன்னெழுந்து, மாலையிலே மேற்றிசையில் இலகுகின்ற மாணிக்கச் சுடரொளியாய்க் கதிரவன் மறையும் வரை கழனியில் உழைத்தவர். சிறுகச், சிறுகச் சேர்த்த காசுகளில் வாரச் சந்தையில் தின்பண்டம் வாங்கி வந்து, மகனுக்கு ஊட்டிய பாசமிகு அன்னை அவர்கள்.

கல்வியெதும் அறியாத ஆத்மா. பேசும்
கலையுலகம் புரியாத எளிய ஜீவன்.
செல்வமெனும் தனது மகன் கல்வி கற்றுத்
தேர்க என எவ்விதமோ சிந்தை கொண்டாள்

என்று கவிஞர் கூறும் கருத்து, கல்வியறியாத் தாய்க்குக் கல்வியின் மீதேற்பட்ட பிடிப்பை உணர்த்துகிறது.

அவ் எளியள் நெஞ்சில் சுடர்விட்ட
ஆசைகளை அறியப்போமோ?
அன்னையின் அன்பை அளக்க முடியுமோ?

என வினவுகிறார்.

அலைகடலின் கரைகாணக்கூடும். தாயின் அன்புக்கு எவராலே எல்லை காணக்கூடும்! அளப்பரிது என்பதால் தானே, தாய்மை, 'இறைமை' என ஏற்றிப் போற்றப் பெறுகிறது?

"வேகுதே தீயதனில் வெந்துபொடி சாம்பல் ஆகுதே, பாவியேன் ஐயகோ" என்று தீயில் தாயின் உடல்வேகக்கண்டு புலம்புகிறார். துறவு நிலை கொண்டவர் பட்டினத்தடிகள். இல்லறத்தார் நிலை என்னாகும்? குலோத்துங்கன் தாய்க்குப்பாடிய இரங்கற்பா, அவலப் பிழிவாக உள்ளது.

8.8 கவிஞரின் தந்தை

கவிஞர், தம் தந்தையைப் பிரிந்த துயரில் வெளியிடும் சொற்கள், சுருங்கிய அளவில் உள்ளன. ஆனால் மிக விரிந்த சோகம் விளைவிப்பதாக அமைகின்றன. வஞ்சப் புகழ்ச்சி அணிநயம் உள்ளதெனலாம்.

தந்தையும் கொடியன். அன்புத்தாயும்
அத்தகையளே என்
முந்தையும் இற்றைநாளை மூன்றையும் தம்மோடன்றோ
வெந்திடக் கொண்டு சென்றார்.
மீதமொன்றிலையால் வெந்நீர்
சிந்திடும் விழிகள் யாவும் தீர்ந்தபின் அழுவதுண்டோ?

என்னும் பாட்டின் வழியே, பெற்றோர் இறந்ததும் தம்முடன், கவிஞரின் முக்கால வாழ்வையும் கொண்டு சென்றனர், முக்காலமும் ஈமத்தீயில் வெந்தழிந்துவிட்டது" எனக் குமுறும் நிலை, துன்பத்தின் எல்லையைத் துல்லியமாக உணர்த்துகிறது பாலை வாழ்வு.

பிறந்தபோ தழுதேன். சுற்றம்
பெற்றவர் நண்பர் மண்ணைத்
துறந்தபோ தழுதேன்....அழுவதில் அமைதி கண்டேன்.
அருவிபோல் கண்ணீர் பொங்கத்
தொழுவதில் இன்பம் கண்டேன்

வற்றாக் கண்ணீரில் வாழ்ந்த கவிஞரின் சோகநிலை, கவிஞரின் கண்ணீர் முன் கலையும் விஞ்ஞானமும் தத்துவமும் வெறுமையாகின்றன. பெற்றோரை இழந்த வாழ்வு, பேறனைத்தும் இழந்த வாழ்வு என்கிறார் கவிஞர். பெற்றோரே எல்லாம் என்று கருதும் பிள்ளையும் பேறு பெற்றவர். பெற்றோரும் பேறு பெற்றவர்களே ஆவர்.

வெற்றியில் பொருள்ஒன் றில்லை
விருந்தினில் சுவையு மில்லை
சுற்றியென் வாழ்வில் நின்ற
துணைகளில் முழுமை இல்லை.
இருவரை இழந்த வாழ்வு
எத்தனை இழந்த தம்மா!
பெறுவன எதிலும் இந்தப்
பிரிவினுக் கீடு காணேன்

பெற்றோரை இழந்ததால், வாழ்வில் வெறுமை சூழ்ந்த நிலையை ஓவியமாக்கும் வைர அடிகள். பெற்றோரைப் பிரிந்த சோகம், பெருஞ்சோகமாகி எழுத்திலும் இழையோடுகிறது.

8.9 கவிஞரின் உடன்பிறப்பு

தமக்குப் பின்பு பிறந்த சகோதரி புற்றுநோயால் உயிருக்குப் போராடும் நிலையைக் காட்டும் கண்ணீர்த் துளிக் கவிதையே, "பிந்தியவர் முந்துவதோ?" என்ற தலைப்புள்ள பாடல்.

தந்தை யிறந்தார்பின் தாயிறந்தார் நான் பொறுத்தேன்.
பிந்தியவள் முந்தியெனைப் பிரிவதையும் தாங்குவனோ?
பற்றுலவும் நெஞ்ச மெலாம் பாழ்படர வாழுவனோ?

என்று தாங்க முடியாத சோகத்தைத், தங்கக் கிண்ணக் கவிதையில் தருகிறார். கொள்கலம், வைரமணி பதித்த சொக்கத் தங்கக் கிண்ண மெனினும் கொடுக்கப்படும் பொருள் சோகப் பிழிவாயிற்றே!

இடுக்கண், ஏமாற்றம், எதிர்பார்ப்பில் தோல்வி என வடுக்கண்ட நெஞ்சோடு, மனவலியால் தங்கை வாழ்கிறாள்.

கண்ணீரை உள்ளடக்கிக் கவலைகளை மூடிவைத்துப்
புண்ணீரின் வெம்மையெலாம்
பொறுத்தாய். இவையனைத்தும்
புற்றாக வந்ததுவோ பொறைமகளே?

எனும் பாடலால், தங்கைக்குப் புற்றுநோய் வந்த காரணத்தை விளக்குகின்றார் கவிஞர்.

அழுத்தப்பட்ட மன உணர்வுகள், நெஞ்சை வெடிக்கச் செய்கின்றன. கண்ணீர்விடாது கவலைகளை உள்ளடக்குவதால், கவலைகள் மாற்றுருக் கொண்டு மாய்க்கும் நோயாகின்றன என்கிறார் கவிஞர்.

தங்கையின் வரலாற்றுக் குறிப்புகள் தரும் பாடலாகக் குலோத்துங்கன் கவிதைகளின் நிறைவுப் பகுதி அமைகின்றது. கவிஞரின் வரலாற்றுக் குறிப்பும் மிளிர்கின்றது.

வேப்பம்பழம் சேகரிக்க விடியும் முன் தினம் சென்ற சோகக் கடமை, இருட்டும் வரை காட்டில் வேலை பார்த்த ஓய்வறியா உழைப்பின் நிலை, கள்ளிகள் நிறைந்த காட்டில், கால் நடைகள் மேய்த்த கடின உழைப்பு, களை யெடுக்க, கதிர் கொய்யச் சென்றமை போன்ற பணிச் சுமையால் அழுத்தப்பட்ட தங்கை நிலையைக் காட்டுகிறார்.

சுற்றமெனா நின்ற வரும் சுய நலத்தர் நின் பொருளைப்
பற்ற முயன்றார் பின் பயன்பெற்றார்

என்று, சுற்றத்தின் சூழ்ச்சியால் தாக்கப்பட்ட பரிதாபத்துக் குரிய தங்கையைக் காட்டுகிறார்.

பட்டுத் தெரித்ததுபோல் பதைபதைத்தநம் குடும்பம்
எட்டுத் திசைகளிலும் இருள் சூழ நின்ற கணம்
துணிவே நினதுருவாய்த் தோன்றினைநீ

என்று தம்முடைய குடும்பத்துயரையும் தங்கையின் துணிவையும் குறிப்பிடுகின்றார். தோல்வி, துயர், ஏமாற்றம் கண்டு துவளாத "எதையும் தாங்கும் இதயம்" கொண்ட தமிழச்சியைக் காண்கிறோம்.

கல்லிடற முள்ளேறக் கால்நலிந்த நேரமெல்லாம்
உள்ளிருந்து பொன்மகள்நீ
ஊக்குவித்தாய் வென்றேன் நான்.
மாலைகளும் பாராட்டும் வாய்ப்புகளும் வந்தடையும்
காலை உனையன்றியொரு
கடவுளையும் நான் நினையேன்

என்னும் நூலின் நிறைவுப் பாடற் கருத்து நிறைவானதாகவும் பாசப்பரிமாண எல்லையைக் காட்டுவதாகவும் அமைகின்றது. தங்கை மீது கொண்ட பாசத்தின் எல்லையையும் தமக்காக உழைத்த உடன்பிறப்பையே கடவுளாகக் காணுகின்ற கவிஞரின் பாச உணர்வையும் உணர்த்துவனவாக இப்பாடலடிகள் அமைகின்றன.

குலோத்துங்கன் அவர்களால் பாடப் பெற்றோர்; போற்றப் பெற்றோர் குலோத்துங்கன் கவிதைகளில் நிலைத்த இடம்பெற்று நிலைத்து நிற்போர் மேலே குறிப்பிடப் பெற்ற மேன்மைக்குரிய பெருமக்கள்.

9. கண்டனத்துக்குரியவர்கள்

9.0 முன்னுரை

போற்றுதற்குரியவரைப் புகழும் குலோத்துங்கன், "கண்டனத்துக் குரியவர்கள்" என்னும் நிலையினரையும் குறிப்பிடத்தவறவில்லை.

இரு தொகுதிகளைக் கண்டனத்துக்குள்ளானவர்கள் பற்றிய செய்திகளைக் கூற ஒதுக்கியுள்ளார். "சிலை இவர்க்குச் செய்வதெனின் செம்பு நாணும்" என்ற தலைப்பே, கண்டனத்துக்குள்ளானவர்களின் பண்பைப் பெருமளவு விளக்குவதாக உள்ளது. பதினைந்தாவது தொகுதியின் தலைப்பு "தன்னலத் தாண்டவம்". இரு தொகுதிகளிலும் உள்ள 31 பாடல்களை வரிசைப் படுத்தினால், 7 தலைப்புகளில் அடங்கும்.

9.1 தலைவர்கள்

தலைவர்கள், தொண்டர்களை உயர்த்துவதில்லை. உயரவும் விடுவதில்லை. பண்டைய மன்னர் போன்று, தலைவர்கள் ஆதிக்க வெறியில் திரிகின்றனர். இவர்களில் சிலர்,

தான் வாழ்வ தில்லையெனில் தரணிவாழத்
தாங்காத சிறுமையினர்.....

என்கிறார் கவிஞர். கொள்கையில்லாக் கட்சித் தலைவர்களைக் "குப்பை மேட்டுத் தலைவர்கள்" என்கிறார் குலோத்துங்கன்.

வறுமையொடும் பிணியோடும் வாடுவோரை
மயக்குதற்குக் கண்டபுது மருந்து ஏய்ப்போர்
அறுவடைசெய் கழனி நமது அரசியல்.....
. . . உளுத்துப்போன கலம் நமது நிர்வாகம்.
கொள்கை என்னும்
கண்ணில்லார் செலுத்துகிறார்

என்கிறது கவிதை.

இப்போலித் தலைவர்களின் பொழுது போக்கு, இடைவிடாப் போராட்டங்கள்! சூழ்ந்துள்ள வறுமை, ஊழலைப் பட்டியலிடுவர். சுவர்களிலெல்லாம் சித்திரம் வரைவர். நிருபரிடம் நீண்ட கண்டன அறிக்கை தருவர். கடை அடைப்புப் போராட்டம் நடத்துவர். தீர்வுக்கு ஆயுதம் மறியல் என்பர் என்று போராட்டத் தலைவர்களை இனம் காட்டும் கவிஞர்,

நல்வினை செய்த துண்டோ?
நாட்டினில் மனித வாழ்வு

துளிர்விட எருவும் நீரும்
சுமந்துள சரிதம் உண்டோ?
.....பயிற்றிடு தொழில்ஒன் றில்லாய்! .....

என்று ஆக்கப்பூர்வப் பணி மேற்கொள்ளாத அரசியல் கட்சிகளைச் சாடும் சாடலாகக் கலப்பற்ற உண்மையாக அமைகிறது. தலைமையேற்கும் தகுதி பெற்றோர் தலைமையேற்க வேண்டு மென்பது கவிஞரின் விருப்பம்.

9.2. துதிபாடும் தொண்டர்கள்

குலோத்துங்கனின் கண்டனத்துக்குள்ளானவர்களில் அடுத்து வருவோர், துதிபாடுவோர் - "ஆமாம் சாமிகள்" இவர்களின் பணிக்கு, ஆசிரியர் இட்ட பெயர் கவிதைத் தலைப்பு, "தாழ்வாரத் தவம்".

இச்சகம்பேசி, இழி தொழில் புரியும் இத் துதி பாடிகளை நோக்கிக் கூறப்படும் கருத்து, உலகப் பொதுக் கருத்தாகும்.

இமைவிற்றுக் கருமணியைக் காப்ப துண்டோ?
இழிவுக்கும் இழிவு செயும் இழிஞர்

என்கிறார். கூனிக்குறுகிக் கும்பிட்டு, நிலம் வீழ்ந்து "கொற்றவா! சரண்" எனத் துதிபாடும் கீழ்நிலையினர். பதவிவிரும்பிகள். "அருத்தியும் அரசின் மேற்றே......" என்று சரணடைய வரும் விபீடணனைக் குறித்த இராமன் கூற்று, வீடணநிலை ஒப்பிடற்குரியது." இலங்கை அரசை விரும்பியே, வீடணன் நம்மைச் சரணடைகிறான் என்கிறான் இராமன். தாழ்வாரத் தவத்தினர் குறிக்கோளும் ஆதாயமே.

9.3 இரட்டை நிலையினர்

கனவினும் இன்னாது மன்னோ வினை வேறு
சொல் வேறு பட்டார் தொடர்பு

இது குறளின் கூற்று. எனவே இரட்டை நிலையினர், இழி நிலையினர் கண்டனத்துக்குரியவர்களென்கிறார் கவிஞர். இவர்கள் குறையுடை மனிதர்கள். குலோத்துங்கன் குறை மதியாளரையும் குறிப்பிடத் தவறவில்லை.

பாவ மென்று பேசுபவர் வினையின் வந்த
பலனென்று கூறுபவர், பணிந்து நின்று
தேவனென்று போற்றுபவர் திரையின் பின்னர்
சிறுமைக்குத் துணைபோகும்

செயலோர் என்கிறார்.

இரட்டை வாழ்க்கைப் பழியறியாத் தலைவர் குலம்
பார்ப்பதுண் டோ?

என்று வினவுகிறார். உயர்ந்த தலைவர்கள், குலம் பார்ப்பதில்லை. அப்படியானால், குலம் பார்பபோர் இழி மக்களென்பது உள்ளுறை. இரட்டை

வாழ்க்கைப் பழி சுமக்காத தலைவர் குலம் இல்லையே என்பது கவிஞரின் கவலை.

புதிய மடங்கள், பழைய அதிபர்கள்

என்ற தலைப்புள்ள பாடலில்,

சமத்துவம் என்பார்....பகுத்தறி வென்பார்
புதுமைகள் படைத்தோம் என்பார்
....வழி வழி நடந்த பாதை மறந்திடக்காணேன்

என்று, புதிய மொந்தையில் பழைய கள் விற்கும் புலைத் தொழிலாளர் நிலையைக் காட்டுகிறார். புதுமை பேசி, பழமையில் உழலும் இரட்டை நிலையினர்

காலையில் கொள்கை ஒன்று
கடும் பகல் கொள்கை ஒன்று
மாலையில் கொள்கை ஒன்று மாறுவோர்....
....சமயத்திற் கேற்றவாறு.....

நிறம் மாறும் பச்சோந்திகள் என்று புழுங்குகிறார். இவர்களைப் "பழைய வைதிகர்கள்" என்று கூறாமல்,

சுதியினில் மாற்றம் பாடல்
சொல்பொருள் மாற்றம் இல்லை

என்று இசையுடன் இணைத்துக் கூறுகிறார். இரட்டை நிலை. வெளி வேடக் கொடுமையைச் சிறந்த இசை போல், மிகவும் இசைந்து இன்பம் தருகிறது இவ்வெளியீடு.

கனல் தெறிக்கப் பேசிடுவர்.
கடுஞ்சொல் கோர்த்துக்
கட்டுரையும் கவிதைகளும் படைப்பர் நெஞ்சில்
அனல் பறக்கும் உணர் வெதுவும் அறியார்

* * * *

ஆர்ப்பரிக்கும் பொம்மைகளின் அவதாரங்கள்

என்கிறார்.

உதட்டளவில் ஒரு கொள்கை பேசியோர், சில, பல காரணங்களால் மாற்றாரின் கொள்கைக்கு மண்டியிடும் கயமையைச் சாடுகிறார்.

கொள்கையொன் றிருக்க வேறு
கொள்கைக்கே அடிமையாகும்
வெள்ளுடை எழுத்தாளர்கள்
வெறுப்புறு செயலும் கண்டேன்

என்று, மாறுபட்ட நிலையினரைச் சொல்லம்பால் பாவேந்தர் தாக்குகின்றார். இத்தகைய இருவேறு நிலையினரால், சமுதாயத்துக்கு எத்தகைய நன்மையும் சேராது என்பதே மாக்கவிஞர்களின் தீர்ப்பு.

செயல்திறமை இல்லையெனில் சித்தாந்தங்கள்
செல்வங்கள் வளர்ப்பதில்லை. செயல்முடங்கள். . . .
. . . . . பயனற்ற பனுவல்கள்

இவை என்கிறார்.

நடிப்புச் சுதேசிகளை நாட்டுக்குக் காட்டிய மகாகவி பாரதியார் அவர்களைப் போன்று, குலோத்துங்கன் அவர்கள் தன்னலத்தால், நல்லவர் போர்வையில் ஆடும் தன்னலத்தாண்டவத்தை ஓவியமாக்குகிறார். எட்டுத் திசையிலும் எங்கும் செயற்கையின் ஆட்சி. பாரதமே ஒரு மேடை" என்பது, கவிஞர் கண்ட காட்சி:

குள்ள மனிதர்கள் தோன்றுகின்றார் - அவர்
கொள்கையும் திட்டமும் கூறுகின்றார் - கொடுங்
கள்வர்கள் மாற்றுருப் பூண்டு வந்தார் - வெளிக்
காட்சியில் தேவரும் தோற்றிடுவார்.....
.... கொள்கை வெறியெனும் கூட்டமடா - இவண்
கூர்த்த மதிநலம் இல்லையடா

என்று அரசியல் நடிகர்களையும், தொண்டர்களையும் காட்டுகின்றார் கவிஞர்.

அருட் பெருஞ்சோதி, தனிப் பெருங் கருணை வள்ளலார் அவர்கள், ஒருமை நிலையே உயர்வு என்பதை,

ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவு கலவாமை வேண்டும்

என்னும் பாடலால் சுட்டுகின்றார்.

9.4 சிறுபயன் தேடுபவர்

கவிஞரின் சீற்றத்துக்குரியவர்கள், சிறிய பயனை எய்த முனையும் சிறியர். "சிறுபயன்கள் தேடுபவர்" என்ற சொற்றொடரால் குறிப்பிடுகிறார். இவர்கள் "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" எனும் நெறி நில்லாதார். முயலை வீழ்த்திய அம்பை விட, யானை மீதெறிந்து குறிதப்பிய வேலே சிறந்த தென்பதை உணராதார். பயனை, விரைவில் அடைய, சிறுதானியம் விதைப்போர் இவர்கள்.

காளான் விளைவிக்கக் கழனி பெருக்குபவர்.
மாளாத செல்வம் வளர்ப்ப தறியாதார்.....
. . . . .சோறுகண்டு வாழுபவர் மனம்
வெட்காத விந்தைப் பிறவி

என்று சிறுபயன் தேடுபவரின் இலக்கணம், பண்பு கூறுகிறார். மற்றவர் பின் செல்வதன்றி, வேறொன்றறியாதார். இந்த இடுப்பு ஒடிந்தவர்கள், திருந்தி ஏற்றம் பெறும் நாள் வருமா என்று ஏங்குகின்றார் கவிஞர். இவர்கள் சமுதாயத்தின் சாபக் கேடுகள்.

9.4.1. கருத்துக் குருடர்கள்

பகையை வளர்ப்பவர்கள், தம் பாதையே வேதமென்பவர்கள், தமிழைப் பேணத் தாங்களே வாரிசென்பார். இவர்கள் கூறும் நெறிகளை ஏற்காவிட்டால், அறிஞரையும் வசை மொழி கூறுவர். வேறு வழக்கம் அறியாதவர். மற்றவர்களின் கருத்துகளில் களங்கம் காண்பதையே தொழிலாகக் கொண்டவர்கள் என்று கருத்துக் குருடர்களின் இலக்கணம் கூறுகிறார். இவர்களுக்குக் கண்ணொளிதர யாரால் முடியும் என்றொரு வினா எழுப்புகிறார்.

கருத்துக் குருடு, கலையற்றது. ஆனால் கறை மிகுந்தது, எனவே கண்டனத்துக்குள்ளாகிறது. உலகம் கறையின்றி, கரை காணா மகிழ்வில் திளைக்க வேண்டுமென்பதே கவிஞரின் விருப்பம்.

9.5. பத்திரிக்கைகள், எழுத்தாளர்கள்

அறிஞர்தம் இதய ஓடை ஆழநீர் தன்னை மொண்டு
செறிதரும் மக்களெண்ணம் செழித்திட ஊற்றி ஊற்றிக்
குறுகிய செயல்கள் தீய்த்துக் குவலயம் ஓங்கச் செய்வாய்
நறுமண இதழ்ப் பெண்ணே
உன் நலம் காணார் ஞாலம் காணார்

என்று பத்திரிகைகளின் சிறப்பைக் கூறுகிறார் பாவேந்தர்.

மக்களுக்குத் தகவல் தந்து, அறிவூட்டி, உயர்நிலைக்கு இட்டுச் செல்லும் சீரிய பணியாற்றுகிறது நல்ல இதழ். தரம் தாழ்ந்து, காசுக்கு விலைபோனால், மரபு, பண்பாடு மறையும். இதழ்களும் எழுத்தாளர்களும் தலையின் இழிந்த மயிர் போன்று நிலை குலைந்தால், சமுதாய உயர்வில் கவனங்கொண்டோர் சீறிப்பாய்கின்றனர். வியப்பொன்றுமில்லை.

இதழ் அறம் - பத்திரிகைத் தர்மம் - தவறிய நிலையைக் குலோத்துங்கன் "தசை வணிகம்" என்ற தலைப்பிட்டு, வெறுப்பை வெளிப்படுத்துகின்றார்.

இசை மொழியின் மாதர்தம் எழிலைத் துகிலுரித்துத்
தசை வணிகம் செய்பவர்கள் தரம் எதுவும் காணாத
வசை மொழியில் வல்லுநர்கள் மலர்கின்ற பாலுணர்வின்
பசை மொழியைக் காமுகர்தம் பசிமொழியிற் சித்திரித்து
விற்பனை செய்கின்றவர்கள்.....

என்று கோபத்தின் காரணத்தைக் குறிப்பிடுகிறார்.

கயமைகளை எழுத்தாக்கிக் காசாக்கும் கூட்டத்தின் படைப்பை அறிவுலகம் ஏற்காது;ஏற்பவர் கயவர் என்பது கருத்து.

தேன் மட்டுமே உண்ணும் தேனீக்கள் ஒருவகை. உயிரினக் கழிவை உணவாகக் கொள்ளும் வண்டினமும் உலகில் உள்ளன.

சான்றோர், சான்றோர் பலராகு பவ....
சாலார் சாலார் பாலரா குபவே

நரியும் நாயும் கழுகும் காகமும் பிணம் தேடித் திரிவது இயற்கை. சில எழுத்தாளர்களும் இதழ்களும் வாசகர்களும் விதிவிலக்கல்லவே.!

சிறந்த படைப்பாளிகளைப் போற்றும் பாவேந்தர் இரட்டை வேடம் போடும் எழுத்தாளர்களைக் குத்திக் காட்டத் தவறவில்லை,

காட்டினில் திரியும் போது
கிரீச் சென்று கழறுகின்றாய்.
கூட்டினில் நாங்கள் பெற்ற
குழந்தைபோல் கொஞ்சுகின்றாய்.
வீட்டிலே தூத்தம் என்பார்
வெளியிலே பிழைப்புக்காக
ஏட்டிலே தண்ணீர் என்பார்
உன்போல்தான் அவரும் கிள்ளாய்

என்கிறார் பாவேந்தர்.

எழுத்தாள நண்ப!

என்னும் 188 அடிகள் கொண்ட நீண்ட பாடல்

எழுத்தாள நண்ப உன்னை
எங்கெல்லாம் தேடுவேன் யான்

எனத் தொடங்குகிறது. எழுத்தாளன் எங்கிருக்க வேண்டும், எதைப் பற்றி எழுத வேண்டும், எவ்வித உணர்வு இருக்க வேண்டும் என்பனவற்றை வலியுறுத்து வதாக உள்ளது. எழுத்தாளன் இருக்க வேண்டிய இடங்களை உணரமுடிகிறது ஆனால் கவிஞர் குறிப்பிடும் நல்ல இடங்களில், காணோம். எங்கெங் கெல்லாமோ தேடியும் எழுத்தாள நண்பனைக் காண வில்லையெனக் கவிஞர் கூறுவதால், நண்பன் திசை மாறிய பறவையாகிவிட்டான் என்பதை உணர்கிறோம்.

எழுதுவோர் இருக்கத் தக்க
இடமெனத் தகுந்தவற்றுள்
முழுதுமே நுழைந்து பார்த்தேன்
முகவரி காணவில்லை

என்கிறார்.

புன்மை சாயவும் தருமம் தழைக்கவும் புரட்சி செய்து காயமுறல் வேண்டு மென எழுத்தாளரின் இலக்கணம் கூறுகிறார் எழுத்தாளர்கள் சமுதாய நீதிக்காகப் பாடுபடவேண்டுமென்ற, உணர்வு நினைவூட்டப் படுகிறது.

சொல்வளம் இலக்கியத்தின் சுவைவளம் இலக்கணத்தின்
செல்வமென் றனைத்தும் கொண்ட திருவினை வையத்திற்கு

வழங்க வேண்டியது எழுத்தாளரின் கடமை என்கிறார், கவிஞர்.

இவை போன்ற சமுதாயக் கடமைகளை ஆற்ற வேண்டிய எழுத்தாளர், நிலை தவறியது கண்டு வருந்துகிறார்.

வேடிக்கை மனிதர் கூட்டம்
மிகுந்துள இடம் உனக்கு
வாடிக்கை என்றெனக்கு
வந்ததோர் செய்தி

என்று ஆசிரியர் குறிப்பிடுவதிலிருந்து, எழுத்தாளர்கள் தம் நிலை தவறினர் என்பது, குறிப்பால் உணர்த்தப்படுகிறது.

"எழுத்தாள நண்ப" என்ற பாடல் அங்கதச் சுவை மிகுந்ததாக உள்ளது.

சமூக அவலக் காட்சி ! குறையுடையோர் கூட்டம் பற்றிய செய்தி காண்கிறோம். அதனால் கவிஞரின் கண்டனத்துக்குரியவர்கள் ஆகின்றார்கள்.

9.6. ஆட்சியாளர்கள்

கண்டனத்துக்குள்ளானவர்களில் மிகக் கடுமையாக விமரிசிக்கப் படுபவர்கள் ஆட்சியாளர்கள். ஆட்சியின் கொடுமையால், அல்லலுற்று ஆற்றாது அழும் மெலியார் நிலைகண்டு கவிஞர் குமுறுகிறார். அதன் வெளிப்பாடே "விலங்கும் நாணும்" எனும் கவிதை.

கறைவழியும் சிறுமையினர் அரசு செய்யும்
காவலர்கள் ஆவதுவா மக்கள் ஆட்சி?

* * * *

சிலை இவர்க்குச் செய்வதெனில் செம்பும் நாணும்

* * * *

கடையர்களில் கடையரிவர் ஆட்சி செய்ய
வழிவகுத்துத் தருவதற்கா மக்கள் ஆட்சி?

என்று மக்களாட்சியின் குறைகளை நிரல்படுத்துகிறார்.

சீற்றத்தால், கடுஞ்சொற்கள் வீசிய கவிஞர், "சீற்றம் நம் தேவை" என்ற தலைப்பிலுள்ள கவிதையில், பத்தியம் முடிந்தபின்பு கண்டதை எல்லாம் ஆவலாய் உண்பவர் போல், ஆட்சியில் பதவிப்பசி கொண்டவர்களை அமர்த்தினால், ஊழல் மிகப் புரிவர். பசி கொண்டோரை அமர்த்துவது தவறு என்கிறார். தினம் ஒரு கொள்கை கொண்டு, பதவி வெறியர் அலைகின்றனர்.

பைத்தியம் பிடித்த நாய், மதுவையும் குடித்த நிலையில் அவர்கள் உள்ளனர் என்பதை,

பித்த நாய் மதுவும் உண்டு பேதலித் தலைதல் போல

என்று உவமையால் விளக்குகிறார்.

"மது அருந்திய குரங்குக்குத், தேள் கொட்டியது போல" என்ற பழமொழியை - உவமையைக் - கையாளாமல், புதியதோர் உவமையை சொல்லாட்சி போல் பயன் படுத்துகின்றார். குரங்கு, கான் வாழ்விலங்கு. நாய் நகரில், வீதியில், வீட்டில் அலைவது. எனவே இது மிகவும் பொருத்தமானதோர் எளிய உவமை எனலாம்.

தலைமைப் பொறுப்புக்குரியோர்,

. . . . தாழா
உளமெனும் செல்வம் கல்வி
உரமெனும் செல்வம் கொள்கை
நலமெனும் செல்வம் கொண்ட

நல்லோராய் இருத்தல் வேண்டும் என்கிறார். இப்பண்பு நிறைந்தோர் தலைமையேற்றால், நாடு வளம் பெறும். இப் பண்புகளில்லாதோர் தலைமை யேற்றால்,

சிறிது நாள் பொறுப்போம், இன்று
குறுமையர் கொள்கை யற்றோர்
கொடிபிடித் தாட்சி தேடும்
சிறுமையை ஒழிப்போம் - இந்தச்
சீற்றம் நம் தேவை

என்கிறார்.

வலியோர் சிலர் எளியோர் தமை
வதையே புரிகுவதா....
....கொலை வாளினை எடடா - மிகு
கொடியோர் செயல் அறவே

என்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

தனியொருவனுக்கு உணவில்லை யெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்

என்ற மகாகவி பாரதியின் போர்க் குரலும் பாவேந்தரின் புரட்சிக் குரலும் குலோத்துங்கன் கவிதைகளில் ஒன்றிணையக் காண்கிறோம். தீச் செயல்களை வேரறுக்கச் சீற்றம் தேவைதானே?

இம்மென்றால் சிறை வாசம்
ஏன் என்றால் வன வாசம்

என்று செம்மையெல்லாம் தீய்க்கப்பட்ட சோவியத் நாட்டில், எழுந்தது யுகப் புரட்சி. இமயமலை வீழ்ந்ததுபோல் ஜார் மன்னன் வீழ்ந்தான். புரட்சி, வெள்ளம் கொடுமை நிறைந்த ஆட்சியை மாற்றிற்று. குலோத்துங்கன் அவர்கள் "புரட்சிக்கப்பால் அமைதி பொலியுமாம்" என்ற பாவேந்தர் அவர்களின் பாதையில் வந்தவர். எனவே குலோத்துங்கன் கவிதைகள், புரட்சி வித்துக்களாகின்றன.

"தீயவை தீய்ப்போம்" என்ற கவிதையில் அரசியல்வாதிகளின் கொடுமைகளைச் சித்திரிக்கிறார். முயலகனை ஒழிக்க, சிவன் வந்தது போன்று இன்னொரு சிவன் இங்கு வந்து, பொய்மையின் வணிகராம் இவ் அரக்கர் பிடியினின்று மக்கள் விடுபட ஆவன செய்ய வேண்டுமென்று விரும்புகிறார். ஆனால், சிவன் இங்கு வருவார் என்றெண்ண வழியில்லை என்று கூறும் குலோத்துங்கன் அவர்கள்,

அறிஞர்கள் எழுதல் வேண்டும் அறவழி ஆட்சி தேடும்
நெறியினர் எழுதல் வேண்டும்....

* * * *

எழுத்துலகனைத்தும் பொங்கி
எழுந்திடத் தொடங்க வேண்டும்.
....தூயவர் ஆட்சி தேடும் சூழலும் பரவவேண்டும்

என்று கொடுங்கோலாட்சியை மாற்றிட ஆயத்தப்படுத்துகிறார் கவிஞர். தருமமெனும் கொள்கையினர், தவவேடம் பூண்டு வலம் வந்தோரால், நாட்டின் நல்வாழ்வு குலைந்தது என்று உணர்த்துகிறார்.

ஒற்றுமையுடன், உயர்வாகத் திகழ்ந்த நாடு உருக்குலைந்து போனதனால், மிக வன்மையாகத் தீயோர் ஆட்சியைக் கண்டிக்கிறார். அதை ஒழித்தே ஆக வேண்டுமென உரத்தகுரல் கொடுக்கப்படுகிறது. இதன் தொடர்ச்சியாகப் பாபர் மசூதியிடிப்புப் பற்றிய கவிதைகள் எழுகின்றன.

9.7 நினைவுச் சின்னத்தை நிர்மூலம் ஆக்கினோர்

ஆசிரியரின் வெறுப்புக்குள்ளானோர் பட்டியலில், பழம் பெரும் வரலாற்றுச் சின்னமாகத் திகழ்ந்த பாபர் மசூதியைத் தகர்த்து, இந்து முஸ்லிம் உறவைத் தரைமட்டம் ஆக்கியவர்களும் இடம்பெறுகின்றனர். இவர்கள், ஒன்றுபட்ட பாரதத்தின் ஒற்றுமையை உருக் குலைத்த குறைமதியாளர்கள்.

"கங்கையும் போதுமோ?", "இரட்டை வேடம்" ஆகிய இரண்டு கவிதைகளின் வழியே, ஆசிரியரின் தமிழ் உள்ளமும்.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற கோட்பாடும் உலக ஆன்ம நேய உணர்வும் வெளிப்படக் காண்கிறோம்.

பாபர் மசூதியை இடித்த பாவக் கறையைக் கழுவ, புனிதமென்று போற்றப்பெறும் கங்கை நீருக்கும் ஆற்றல் இல்லை என்கிறார் கவிஞர்.

பாவக்கறையின் திண்மை அத்துணை ஆழமானது;அடர்த்தியானது. கவிதை மிகக் கடினமான சொற்களால் ஆனது. காரணம் அங்கே கொட்டப்பட்ட குருதியின் அளவு மிகுதி;பரப்பும் ஆழமும் அதிகம். கொல்லப்பட்டோர் எண்ணிக்கை, ஏராளம். அதனால் கொடுமை கண்டு கொதித்த உள்ளம் குமுறுகிறது. எரிமலையாய், அனல்கக்குகிறது.

பித்தர்காள் இந்த நாட்டின் பெருமையை ஒரு கணத்தில்
மொத்தமாய் அழித்து விட்டீர் மூடர்காள்!

நீங்கள் செய்த இழி செயலைத் துடைக்கக் கங்கை நீர் போதாது. எங்கள் உள்ளங்களில் வடியும் செந்நீர் உலரும் நாள் என்றோ? எனக் கூறித் துடிக்கிறார் குலோத்துங்கன்.

உலகில் நாங்கள் தலை நிமிர்ந்து வாழ்ந்ததைத் துரோகிகள்! துரோகிகள்!அழித்துவிட்டீர்கள். நீங்கள் அழித்தது மசூதியை அன்று. உலகனைத்தும் ஒன்றிணைந்து பழித்திடும் பாவம் செய்தீர்கள்.

பாவிகாள்! வெறிகள் யாவும்
மனிதரென் றுருவம் கொண்டு வந்தது போல் வந்தீர்

இற்றைநாள் வரை போற்றி வந்த பண்பாடு பாழாயிற்று எனப் பழித்துக் கூறுகிறார்.

நேருவின் அறமும் காந்தி
நெறிகளும் மலர்ந்த மண்ணில்
வேருடன் பண்பனைத்தும்
வீழ்த்தினீர் வெட்டிச் சாய்த்தீர்

* * *

நீசர் நீர் எங்கு வந்தீர்?"

* * *

தீப்பிழம்பான சொல் ஈட்டிகள்!குற்றுயிராய்த் துடித்த மக்கள் குமுறலின் வெளிப்பாடு! காக்கப்பட்டு வந்த இந்தியப் பண்பாடு கண்முன்னே அழிக்கப் படுவது கண்டெழுந்த வேதனை! அண்ணல் காந்தியடிகளின் அகிம்சை நெறியும் பஞ்சசீலம் காத்த பண்டித நேருவின் பண்பும் பறிக்கப்பட்டதால் ஏற்பட்ட துடிப்பும் பழிச் சொற்களாலான பாடலை உருவாக்கிவிட்டன.

எம்மினம் ஆயிரம், ஆயிரம் ஆண்டுகளாக அன்பை வளர்த்தது. கோயிலின் பேர் சொல்லி, அன்பை எங்ஙனம் கொன்று குவித்திட்டீர்? "ஈயைக் கொல்வதும் பாவமெனச் சொல்கிறது எங்கள் மதம்" என்று சொல்வீர் பாவிகாள்!தீயையும் மிஞ்சி, உயிர்கள் அனைத்தையும் தீய்த்து விட்டீர்!

மனிதநேயம் மானுடமென்று, காலையும் மாலையும் முணுமுணுப்பீர்! கூனிக்குறுகிச் சாதியில் சங்கமமாகிச் சதிச் செயல்புரிந்துவிட்டீர்! பதவி மோகத்தில் அனைத்தையும் விற்பவரிடம் பண்பை எதிர்பார்த்தல் தவறு.

பேச்சும் செயலும் வேறெனை வாழ்ந்திடும் பேய்களின் பின் நடப்பவரிடம், மனித நேயத்தை எதிர்பார்க்கலாமா? ஆண்டவனை அடைவதற்குப் பாதைகள் காட்டுவீர். ஆனால், ஆண்டவன் பேரால் மனிதருக்குள் வேற்றுமைத் தீயை வளர்த்து, வெறியுணர்வு நெய்வார்ப்பீர். நீங்கள் கொண்டது அனைத்தும் வேடம்! வெளி வேடம்! உங்கள் வேடம் குறித்துப் பல்லாண்டுக் காலம் படித்தும் கூட எங்களினம்.

ஏய்க்கும் கூட்டமாகிய உங்கள் கூட்டத்தின் பகட்டில் மயங்குதே என்று பழைய வரலாறுகளைத் தொட்டுக் காட்டி, மனித நேயமற்ற செயல்கள், மத வேடத்தில். சமயப் போர்வையில். நடந்ததையும் நினைவூட்டுகின்றார். மதம், மனித நேயத்தைக் காக்கவில்லை என்பதை உணர்த்துகிறார். சமயப் போர்வையில்தான், சதிச் செயல்கள் உருவாக்கப் பெறுகின்றன என்பது உணர்த்தப்படுகிறது. இப்பாடல் பழைய வரலாறுகளைக் குறிப்பால் உணர்த்துவதாக உள்ளது. மனிதம் தாக்கப்படும் போது, குலோத்துங்கன் கொதித்தெழும் நிலை இப்பகுதியில் விளக்கம் பெறுகிறது. கொடுமைகண்டு கொதித் தெழாக் கவிஞன் உண்மைக் கவிஞனல்லன். சோற்றுக் கவிஞன். வயிற்றுப் புலவன்.

10. வறுமை எனும் மானிடப் பகை

10.0 முன்னுரை

அல்லற்பட்டு ஆற்றாது அழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை

என்கிறது குறளோவியம்.

உலகின் புரட்சிகளுக்கெல்லாம், பாதிக்கப்பட்ட மக்களின் சீற்றமே அடித்தளமானதை உலக வரலாறு உணர்த்துகிறது, "குலோத்துங்கன் கவிதைகள்" நூலின் ஆசிரியர் "மானுடச் சீற்றம் தோற்பதில்லை" என்ற ஒரு பொதுத் தலைப்பிட்டு 17 பாடல்களில் ஏழைகளின் நிலையை, அவர்களின் தோற்றத்தை, நினைப்பை, அவர்களின் சீற்றத்தால் நிகழத்தக்க மாற்றத்தை, புரட்சியை விளக்குகின்றார். செல்வர், வறியவர் வேறுபாட்டின் இடைவெளி விரிந்தால், அதுவே புரட்சிக்கு வித்திடுமென்று அறிவுறுத்துகின்றார். பாதிப்புக்குள்ளானோரின் கண்ணீரும் கோபமும் பயங்கர விளைவை நிச்சயம் உருவாக்கும்; என்றும் தோற்பதில்லை என அறுதியிட்டு உறுதி கூறுகின்றார்.

10.1 பொருளியல் ஏற்றத்தாழ்வுகள்

பொருளாதார ஏற்றத் தாழ்வுகளே ஒரு சாராரை மேட்டுக்குடியின ராகவும் மற்றோரை வறியவராகவும் உருவாக்குகின்றன. சமுதாய ஏற்றத் தாழ்வுகள் சாதிப்படிகளைக் கட்டுகின்றன.

பஞ்சையர் எண்ணிலர் பசியினில் வாடுநர்
பரிதவிக்கின்றார்: ஆனால்
எஞ்சிய உணவினை வீதியில் குப்பையில்
எறிபவர் வாழ்கின்றார்

என்று கொடுமையினை விளக்கும் கவிஞர், தனிமனிதர் வாழ்வில் மட்டுமின்றி, உலக நாடுகளுக் குள்ளும் இந்த இருவேறுபட்ட நிலை நிலவுகிறதெனப் புள்ளி விவரம் தருகின்றார்.

வளமுளர் நாடென வறுமையர் நாடென
மண்ணே பிளந்ததடா........
எண்பது சதம் வரை வரவினை நுகர்பவர்
இருபது சதத்தரடா...... வாழும்
மன்பதை மீதினில் மற்றுள எண்பதின்
வரவே இருபதடா......

இது ஒட்டுமொத்த உலகச் சமுதாயப் பொருளியல் நிலைமை. உலக நோயைக் குறிப்பிடும் கவிஞர், நோயின் முதலையும் கண்டறியத் தவறவில்லை.

வறுமையும் செல்வமும் மானிடர் வாழ்வில்
வஞ்சகர் கண்டதடா!

பூமியின் இருதுருவங்களை, இயற்கை தந்தது போன்று, வறுமை, வளமை என்ற விரும்பத்தகாத இரட்டை நிலை இயல்பானதன்று. வஞ்சகரின் செய்தக்க அல்ல செயலின் விளைவென்கிறார். இந்தப் பெரும்பிணிக்குத் தீர்வுகாணப்படாவிட்டால், பின்விளைவு மிகக் கொடியதாகும் என்கிறார்.

பொங்கும் கடலும் புயலின் மையமும்
புவியில் தோன்றுதடா - அக்கினி
கங்கும் கரையும் கடந்தெழு காட்சியின்
கதிர்கள் மின்னுதடா

என்று கரை கடந்த புரட்சிக் கனல் மையம் கொள்ளும் நிலை தோன்றுவதாகக் கூறுகிறார்.

கொட்டும் வளங்கள் ஒரு பால் -
பசி குடலைப் பிடுங்கும் மறுபால்
ஒட்டிய வயிற்றின் கூட்டம்-
மிக உண்டு களிப்பார் ஆட்டம்
எத்தனை நாள் இது நடக்கும்-
புவி எதுவரை இதனைச் சகிக்கும்?

என்றொரு கேள்வியைக் கேட்பது, மதயானை வரும் முன் ஒலிக்கும் மணியோசையாகிறது. முற்போக்குச் சிந்தனையை முன்வைப்பதாக அமைகிறது.

10.2 வறுமை பசிக்கொடுமை

"மானம் குலம் கல்வி...... பத்தும் பசி வந்திடப் பறந்துபோம்" என்கிறது ஒரு பாடல். செல்வம் "இல்லானை இல்லாள் வேண்டாள்: ஈன்றெடுத்த தாயும் வேண்டாள்......" என்று, பாசப் பிணைப்பறுக்கும் படுபாதகக் கொடுவாள் வறுமை என்கிறது பழந்தமிழ்ப் பாடல் ஒன்று.

பிணிகளில் கொடிய யாவினும் கொடியது
சித்திர வதையின் நித்திய வடிவமே நிரப்பு........
அறிஞரைக் கவிஞரை அறவழி காட்டிடும்
நெறியினர் தம்மை நேர்மையி னின்றும்
வழுவாப் பெரியரை வாட்டும் பீடை.........
ஒப்பிலாததென் றுயர்ந்த மானிடம்
குப்பையாய்க் கூளமாய்க் குவிந்து மாய்ந்திட
வருத்தும் பகை.

என்று வறுமையின் கொடுமையை வேதனையுடன் விளக்குகின்றார் கவிஞர்.

"கொடிது, கொடிது, வறுமை கொடிது." இவ்வறுமையின் கொடிய உச்சி, தாம் ஈன்ற மகவு, தம் கண்முன்னே பசியால் வாடும் கொடுமை.

ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை

தாய்க்குச் சிறப்பிடம் தருகிறது குறட்பா. பிள்ளைப் பாசத்துக்கு முதலிடம் தருகிறார் குலோத்துங்கன். இம்மாற்றத்தைத் தலைமுறைகளின் இடைவெளி (Generation Gap) எனலாமா?

கடும்புயல் அஞ்சேன். கனலென வெய்யோன்
சுடுந்துயர் கருதேன். துயில்இழந் துறுகுளிர்
நடுங்குவ தாற்றுவன்: நனியிளஞ் சேய் இதில்
படுந்துயர் தாங்கும் பலமிலேன் ஐய கேள்!

சேயின் பசியால் சிதைந்திடும் பெற்றவரின் இதய ஓவியம்.

நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் - நிரப்பினுள்
யாதொன்றும் கண்பா(டு) அரிது.

வறுமைக் கொடுமையின் அளவை-பரப்பை-பரிமாணத்தை-முற்றும் விளக்குவதாக அமைகிறது.

10.3 ஏழையின் தோற்றமும் நிலையும்

"உடும்பை உரித்தது போன்ற தோற்ற முடையவராய், விலா எலும்புகள் வெளியே தெரியும்படிப் பசியால் மெலிந்த உடல் அமைப்பினராக மிகுந்த பசியுடையவராகப் பாணர்கள் காணப்பட்டனர்" என்று பழந்தமிழ் நூல் பாணர் தம் தோற்றத்தைப் படம்பிடித்துக் காட்டும்.

என்பொடு போர்த்த தோலும்-சிறு ஈர்க்கென மெலிந்த காலும்
துன்பிடை வறுத்த சடலம்-புவித் துயரின் கலமெனும் உடலம்........
.....கொண்ட உருக்கொண்டவன் பசித்த ஏழை.....

எனச் சித்திரிக்கிறார் குலோத்துங்கன். தெள்ளத் தெளிந்த தமிழால் உண்மை தெரிந்துரைப்பதால், வறுமையின் எலும்புக்கூட்டுருவம் கண்முன் தோன்றி நிலைக்கிறது - பழந்தமிழ்ப் பாணர் தோற்றம் போன்று.

"இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ?" என்ற குறளோவியச் சொற்றொடர், குலோத்துங்கன் கவிதையில் "வறியவனின் துயரின் கலமெனும் உடலம்" என்னும் நிலைக்குப் பொருந்துகிறது.

வயிற்றைப் பிசைந்து துவண்டு பசி
வாட்டும் நோயிற் புரண்டு........
கயிற்றின் புரியெனச் சுருண்டு....

ஏழை தவிக்கிறான் என்கிறார் கவிஞர். இக்காட்சி, "நாராய்! நாராய்! செங்கால் நாராய்!" எனத் தொடங்கும் பாடலில், சத்தி முற்றப் புலவர்,

கையது கொண்டு மெய்யது போர்த்தி
காலது கொண்டு மேலது தழீஇ....

பெட்டிக்குள் பாம்பு போல் சுருண்டு கிடந்த நிலையை நினைவுபடுத்துகிறது.

காய்ந்த இதழ், உலர்ந்த முகம்; கலங்கும் கண்கள்
கலைந்த குழல் ஆயினும்வற் றாத
அன்பில் தோய்ந்தஉளம்....

என்கிற நிலை "ஏழையாயினும் இதயம் உண்டு." மானம், குலம், கல்வி போன்ற உயர்பண்புகளைப் பசி பறித்திடினும் ஏழைகளின் இரக்கக் குணத்தை-வற்றாப் பாசத்தை-வறுமை அழித்திட இயலவில்லை என்பதை எழிலாக எடுத்துக்காட்டுகிறது. பசியாதுண்டு வாழ்வோரிடம் பாசமில்லா நிலை நிலவுவதை நினைக்கத் தூண்டுகிறது.

"தோல் போர்த்த கூடு; உயிரொன்று வதிவதற்கு எலும்பில் செய்வீடு" கொண்ட மனித உருக்கள் துன்பங்கள் எண்ணற்ற துயரங்கள் நிழல்போல் தொடர்கின்ற தம் வாழ்வில் சுகமென்ன கண்டார்? தென்றலைத் தீண்டிய தில்லை. தீயைத் தாண்டுகின்றார். தினமும் தீயில் மூழ்கி வாழ்கிறார்கள்.

10.4. ஏழையின் வாழ்வும் எண்ணமும்

வானை முட்டும் மாளிகை அருகில், மண்ணில் தவழும் மண்குடிசை! மலையும் கடலும் குறிஞ்சியும் நெய்தலும் குமைந்த காட்சிகள்! ஏழையின் குடியிருப்புக்குக் கவிஞர் சூட்டும் பெயர்கள், "குடிசைக் குவியல்," "மனிதத் தொழுவம்!"

மனிதத் தொழுவம் மானிடச் சாதியின்
புனிதம் முழுமையும் புதைத்த மண்ணில்
எழுந்த சின்னம்

என்று ஏழைக் குடிசையின் இலக்கணம் தருகின்றார் கவிஞர்.

பன்றியும் நாயும் பறவையிற் கோழியும்
ஒன்றியிங் கிவருடன் உறையும் தோழமை

நிலவுமிடம் ஏழையின் இல்லம் - குடிசை.

"சமரசம் உலவுமிடம் சுடுகாடு" என்றொரு கவிஞர் பாடுவதுபோல், ஏழையின் குடிசைதான் நறுமணம், கெட்ட மணம் கருதாத - விலங்கினப் பாகுபாடற்ற சமத்துவ பூமியாகத் திகழக் காண்கிறோம். "அனைத்தும் ஒன்றே" என்னும் அத்வைதத் தத்துவம் ஆட்சி புரியுமிடம். இந்த ஒரே நிலை, ஏழை, பணக்காரரிடையே நிலவினால் போற்றலாம். ஆனால் அங்கே "துவைதம்" அல்லவோ தொடர்ந்து, தூக்கி நிற்கிறது!

குடிசையின் உட்கட்டமைப்பை உணர்த்திய கவிஞர், குடிசையின் கூரையை விவரமாக விளக்கிக், "கூரைகளின் கூளம்" என்ற தலைப்பில் 36 அடிகளில் சொல்லோவியமாக்குகின்றார்.

"குடிலென்பர், பதியென்பர், குடிசை யென்பர் கூரைகளின் கூளம் இது குடியிருப்பா?

நாய்இனமும் அணுகாது சேற்று வாழ்க்கை.
நலம்விழையும் பன்றியினம் நண்ணிடாது.
வாய் இதனைப் பேசிடினும் குமட்டும்

என்கிறார். தொட்டால் கை மணக்கும்; எண்ண, எண்ண இனிக்கும்; கேட்டால், காதில் தேன் பாயும். படித்ததுண்டு. ஆனால், வாயால் பேசினாலும் குமட்டும் சூழலைக் கவிஞர் காட்டும் குடிசை உருவாக்குகிறது.

புழுநெளியும் கழிவிடமும் பாம்பு
வாழும் பொந்தும்போல் ஒழுகிய....
சீழ்ப்புண் என்னும் கொடுமை

போன்று தோன்றும் குடிசைத்தளம், சகதியினும் இழிந்தது என்பது, கவிதை அடிகளால் உணர்த்தப் பெறுகின்றது. ஏழ்மையை வேரும் சேரப் பறித்ததனை நீக்காது, பலரும் கூடி இது சமுதாய மரபென்று பேசுவது வஞ்சகச் செயல் எனச் சாடுகிறார் குலோத்துங்கன் அவர்கள்.

வீடுகட்டி நகரெடுத்தோம் குடிசை யில்லை.
வியர்வை சிந்தி விளைத்திட்டோம். கூழ் இல்லை.
காடு வெட்டி பருத்தி தந்தோம் கந்தை யில்லை ......
.... வையத்துக்கே
வாழ்வளித்தோம், வாழ்ந்தறியோம் ஏழை நாங்கள்

என்னும் ஏழையின் புலம்பல் யதார்த்தமானது மிகையன்று, ஆனால், எண்ணிச் செயல்புரிய வேண்டியவர்கள், ஏனோ, தானோ என்றிருப்பது தான் ஈடற்ற அவலம் இணைக்கிறது, சமுதாயத்துக்கு. புண்பட்ட மனத்தினர்க்கு நோயகற்ற மருந்திடாத சமுதாயம், தன்னைப் புரட்சிக் கனல் சூழ விடுகிறதென்பதைப் புரிய வேண்டும். பட்டினி கிடந்த மக்களின் பசித்தீ தான் பிரான்சு நாட்டின் எஃகுக் கோட்டையான பாஸ்டில் சிறைச்சாலையைத் தூள் தூளாக்கிப் பிடிசாம்பலாக்கியது.

10.5 ஏழையின் உடைமையும் உரிமையும்

கடமையைச் செய்தோர்க்கே உரிமையுண்டென்பது, வாழ்வியல் நியதி. "உழையாதார்க்கு, ஊதியம் இல்லை". "பாகப்பிரிவினை" என்ற பாடலில், ஏழைகளின் பணியையும் அதற்கு அவர்கள் பெறும் உரிமைகளையும் கவிஞர் பட்டியலிடுவது, எள்ளல் சுவை இணைத்து இனிமை தருகிறது.

ஓடுவதற் கெம்கால்கள், கால மெல்லாம்
உழைப்பதெனின் எம்தோள்கள். பசியால் நோயால்
வாடுவதற் கெம்உடலம் பகைமை மிஞ்சின்
மாளுவதற் கெம் உயிர்கள் சமுதா யத்தின்
அவலமெலாம் எம்தோளில் சுமப்பது......

ஏழைகளின் கடமையும் உரிமையும் ஆகின்றன. சந்து, பொந்துகளில் உலவிடத் தடைகள்; கட்டுப்பாடுகள் இல்லை. பரிபூரண உரிமை உள்ளது.

சமதர்மம் தொலைதூரக் கனவு-நாளை-
சாதிப்ப தன்றென்பார் தலைவர்........

ஏமாந்த ஏழைகளோ, இதைத்தம் உடைமையாக ஏற்பர் என எள்ளி நகையாடுகிறார் கவிஞர்.

நெஞ்சு பொறுக்கு தில்லையே - இந்த
நிலை கெட்ட மனிதரை நினைந்து விட்டால்....

என்ற பாரதியின் பாடல்தான் ஆறுதல் தருமென்று கொள்ள வேண்டியுள்ளது.

அறியாமையும் இல்லாமையும் இருப்பது வரை,
மனிதன் சுயமாகச் சிந்திக்கும் திறனை
அடைய முடியாது,

என்றுணர்த்தும் தந்தை பெரியார் அவர்களின் கருத்து, உய்த்துணர்ந்து போற்றுதற்குரியது.

நானிலம் சூழ்ந்துள்ள இருள்என்ப யாவும்
நாளைக்கு விலகுமெனும் நம்பிக்கை மனிதம்

என்னும் நம்பிக்கையில் வாழ்கின்றார் மெலிந்தார் என்கிறார் கவிஞர். நல்லோரின் வேண்டுதல். ஏழைகளின் நிலை உயர்த்தப்படாவிட்டால், உலகம் எதிர்கொள்ள வேண்டிய சிக்கல்கள் ஏராளம்.

10.6 ஏழையின் தோழர்கள்

பாட்டாளிகளின் - ஏழையரின் - தோழர்களென்று, பறைசாற்றித் திரியும் தன்னலத் தலைவர்களை ஆசிரியர் அவர்கள்,

தலைவர் என்போர் நடிப்பவர் ஆயினரோ?
உள்ளத்தில் உண்மையின்றி,
ஊரெல்லாம் தலைவர் என்று
கள்ளத்தில் வாழ்வு செய்யும்
களங்கத்தின் சின்ன மெல்லாம்
பள்ளத்தில் பாதாளத்தில் பரவையின் பிரளயத்து
வெள்ளத்தில் ஊழித்தீயில் வீழ்த்துநாள் விடியும் நாளாம்

என்கின்றார்.

"நம்மை வளர்த்தோம்" எனும் பாடலின் இறுதியில் "யார் வளர்த்தார்?" என்னும் சொற்றொடருடன் முடிக்கிறார். ஒடுக்கப்பட்டோரை ஒருவரும் உயர்த்த முன் வரவில்லை என்பதைக் குறிப்பால் உணர்த்துகிறார். சுருக்கமான வார்த்தைகளால், மிக அரிய விளக்கக் கருத்துக்களைத் தருவதால், குலோத்துங்கன் கவிதைகள் ஒரு கருத்துப் பெட்டகமாகத் திகழ்கின்றன.

10.7. வறுமையகற்றாக் கலையும் அறிவியலும் பயனற்றவை

கலைகள் இலக்கியம், அறிவியல், அறநூற்கள் போன்ற அனைத்தும் மக்களின் நலன் உயர்த்தவே அமைதல் வேண்டுமெனும் கொள்கை கொண்ட அறிவியல் அறிஞர், முனைவர் வா.செ. குழந்தைசாமி அவர்கள், சமுதாயச் சமநிலை காணாக் கல்வியும் அறிவியலும் மணமில்லா மலர்கள் போல் பயனற்றவை என்கிறார்.

சேற்றுப் புழுக்களும் பூச்சிகளும்-சிறு...... காகம் பசித்துயிர் விட்டதில்லை
சோற்றுக்கு மானிடர் வாடுவதா-மனம் சொல்லக் கொதிக்கிறது.

என்னும் கவிஞர்:

பஞ்சமும் பசியும் நோயும் பழியெனத் தொடர மண்ணில்
துஞ்சிடும் வறியர் துன்பம் துடைப்பதும் இயல்வ தின்றேல்
விஞ்சையும் கலையும் ஓதும் வேதமும் செய்வ தென்ன?

என்பதன் வாயிலாக, வறுமையகற்றா வித்தைகள், கலைகள், வேதங்கள் அனைத்தையும் அடியோடு அழித்துவிட்டுச் சமுதாய நலன் கூட்டும் புதிய பாதை காணுவதே கடமை; இந்தப் புதிய பணியன்றி வேறெந்த வேலையும் இங்கு இருத்தலாகாது என்று புரட்சிக் குரலில் ஆர்ப்பரிக்கின்றார்.

வானவில் பொற்பினில் மயங்கி நின்றிடும்
கானல் நீர் கவிஞரே! கல்வி மன்னரே! ......
கோடியில் கோடியில் குறைந்தி டாஉயிர்
வாடியும் மெலிந்தும் மண்ணில் நின்றிடும்
காட்சியை மறந்த கல்வி என் செயும்?

என்று கவிஞர்களையும் கல்வி மன்னர்களையும் வினவும் வினா கவிதையும் கல்வியும் மக்கள் வாழ்வாங்கு வாழ்ந்திட வழி வகை வகுக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றது,

தாகத்திற்குத் தண்ணீரும் பசிக்குணவும்
தருவதன்றிப் போதிக்க வேண்டியதென்?......

* * * *

உண்ணுவதற் குணவின்றி உழல்வ துண்டேல்
உலகத்தின் நாகரிக உயர்வொன்றில்லை

மாந்தரின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றா அறிவியலையும் ஆன்மிகத்தையும் தொழில் நுட்பப் பொறியியலையையும் ஒரு சேரத் தாக்குகின்றார்.

எச்சிற் கலம்பொறுக்கி எழும்பசித்தீ ஆற்றுகிற
பச்சைக் குழந்தையினைப் பார்க்கின்றோம் பாருலகில்....

* * * *

......ஏய்ப்பவர் வாழுவர் எத்தர்கள் ஆளுவர்
ஏழையர் வாழ்வது பேச்சினிலே.

* * * *

மாந்தர் கழித்தவை மாந்தர் சுமந்திடும்
வாழ்வு தொடர்ந்திடும் நாட்டினிலே
போந்த சுதந்திரம் பேசு சமத்துவம்
பொய்யடா, யாவையும் ஏட்டினிலே

என்கிறார். மனிதக் கழிவை, மனிதன் சுமக்கும் மாபாதகச் செயல் ஒழிக்கப்படா நிலையில், நாட்டின் சுதந்திரம், சமத்துவம் எல்லாம் ஏட்டுச்சுரைக்காய், பொய்யும் புனைந்துரையுமாகும் என்பது கவிஞர் தீர்ப்பு.

சேரி மக்கள் வாழ்வு செழித்திட, ஆக்கப்பணி, செயல்-முறைகள் தேவை, எழுத்து, உத்தரவு வழியே சீர்திருத்துவோம் என்பது பயனற்றது; வெற்றுரை.

சேரியெனும் நரகிங் குளதே - அவண்
சென்றவர் உய்வழி தேறுவிரே
காரியம் யாவினும் கைகொடுக்காதும்
காகிதப் போரினால் யாது பயன்?

தரமான செயல் திட்டங்களுக்கு, அறிவியலின் ஆக்கப்பூர்வச் சிந்தனை தேவை. நலிந்தார் வாழ்வு பெற அறிவியலைப் பயன்படுத்துதல் வேண்டும். அறிவியலின் மாறுபட்ட கருத்துக்களை மாற்றிக் கொள்ள வேண்டும். "அறிவியல் கருத்து அல்லது எந்தக் கருத்தும் மாற்றுதற்குரியதன்று" என வாதிடும் உடும்புப் பிடியைக், கவிஞரிடம் காண்பதற்கில்லை. கவிஞரின் குறிக்கோள், நாடுவளம் பெறல் வேண்டும், நலிந்தோரின் வாழ்வு உரம் பெறல் வேண்டும் என்பதே. கல்வி, கலை, அறிவியல், இலக்கியம் அனைத்தும் வறுமை அகற்றும் முயற்சியில் ஒன்றிணைந்து செயலாற்ற வேண்டும். அதுவே தலையாய கடமையாதல் வேண்டுமென வலியுறுத்துகின்றார்.

10.8 துடைக்கப்படாத துன்பத்தின் முடிவு

துன்பத்தின் அளவு, எல்லை தாண்டினால் - அணை கடந்தால் - அங்கே, அறமும் வேதமும் செயலற்றுப் போகுமென அறிவுறுத்துகிறார், கவிஞர். மனித உரிமைகள், காலவெள்ளத்தால், கடுங்கோடையால், பெரும்புயலால் அழிவதில்லை. மனித உரிமைகளைக் கேட்பது, வன்முறையோ, கடமை மீறலோ, சதிச் செயலோ அன்று. உரிய உரிமை மறுக்கப்படும்போது, சமூகச் சட்டங்கள் உடைத்து நொறுக்கப்படுகின்றன. புரட்சி என்ற புதுப்பெயர் பெறுகிற தென்பது கவிஞரின் கருத்து. அறிவுடையோர், சமூக நீதிக் காவலர்களின் கொள்கை.

பொறுத்த இனம் கொதித் தெழுப்பும்
கோரிக்கை மிஞ்சியொரு கொற்றம் இல்லை

என எச்சரிக்கிறார் குலோத்துங்கன்.

"கதவுகள் காப்பதில்லை" எனும் கவிதையில், ஏழை வயிற்றில் பசித்தீ பற்றி எரிந்தால், செல்வர் வீட்டு இரும்புக் கதவுகள், எரிந்து, சாம்பலாகிவிடுமென எச்சரிக்கின்றார். "மானிடச் சீற்றம் தோற்பதில்லை" என அறிவுறுத்துகின்றார்.

விரிசல் நிதமும் மிகுகிறது-மனம்
வெந்தவர் கூட்டம் வளர்கிறது.
கரிசல் வயல் நிலம் வெடிப்பதுபோல்.
நம் கண்முன் மானிடம் பிளக்கிறது

அழகான உவமை. புரட்சி பொல்லாததுதான். ஆனால் அன்பு நீர் பாய்ச்ச ஆள்இல்லை. பசுமையாக இருக்கவேண்டிய மருதநிலம், பாழ்பட்டது. பாலையானது. வெடிப்புகள் தோன்றுகின்றன. ஏழையின் இதயத்துக்கு, அருள்புரிய நாதியில்லை. வறுமை மனம், இறுகிக் காய்ந்து, கல்லாக மாற்றமடைந்து, சிறிது நாளில் வெடிக்கிறது. இது, புரட்சியின் தொடக்கநிலை.

இலக்கும் அடையும் வழிமுறையும் அன்பு, அறம் சார்ந்ததாக அமைதல் வேண்டுமென்ற நியதி குலைகிறது. பசிவந்திடப் பத்தும் பறந்து போயின. பசியகற்ற துயர் துடைக்க எவ்வழியையும் பின்பற்றலாம் என்ற மறநெறி தலை தூக்குகிறது.

கட்டிய கோபுரம் அதிர்கிறது.
அதன் கலசம் கவிழ்ந்து சரிகிறது.
ஒட்டிய வயிற்றின் பசிநெருப்பில் நம்
உயர்வும் கனவும் வேகிறது.
தீயின் கொழுந்து நீள்கிறது.
அது தீய்க்கும் பரப்பும் விரிகிறது.
வாயிற் கதவுகள் காப்பதில்லை. எழும்
மானிடச் சீற்றம் தோற்பதில்லை

கோபுரம் போல் கட்டப்பட்ட அன்பு, பொறுமை போன்ற உயர் பண்புகள் அனைத்தும் புரட்சித் தீயில் பொசுங்குகின்றன. கவிஞரின் நோக்கம், புரட்சி உருவாகி, மாடங்கள் சாம்பலாகி மண்ணோடு மறைந்திட வேண்டுமென்பதன்று; பசித்த மக்கள், அநீதியால், ஆட்சி அலங்கோலத்தால் பாதிப்புக்குள்ளானோர், வெறிகொண்டு அழிவுப் பாதையில் செல்வதைத் தடுக்க வேண்டுமென்ற அறம் ததும்பும் ஆர்வமே காரணம்.

பொறுத்தவர்கள் காலமெல்லாம் பொறுப்ப தில்லை.
பொங்கினார்க்கு நலம்தீது புரிவதில்லை.
வெறுத்தெழுவர் அவர்எந்த விதியும் காணார்.
வெறியுணர்வின் முன்பேச வேதம் உண்டோ?

என்னும் பாடல் கவிஞரின் உள்ளத்தை "அடுத்தது காட்டும் பளிங்குபோல்" எடுத்துக்காட்டுவதாக அமைகிறதன்றோ?

11. பல்சுவைப் பாடல்கள்

11.0 முன்னுரை

தனித்தனி இயல்களாக இடம்பெற இயலாத, தலைப்புகள் பாடல்களின் கருத்துகள் இவ் இயலில் அணி செய்கின்றன. பல்சுவைப் பழங்கள், செந்தேன், கற்கண்டு போன்றவற்றின் சங்கமம் பழநி பஞ்சாமிர்தம். நவமணிகளின் இணைப்பால் எழில் மிளிர்வது நவரத்ன மாலை. பல்வேறு வண்ண மண மலர்களின் ஒன்றிணைப்பு தஞ்சாவூர்க் கதம்பமெனப் புகழ் பெறுகின்றது. பலதிறன் கொண்ட கருத்துக்கள் கொண்ட பாடல்கள் ஒரே இயலில் இடம்பெறுவதால் பல்வேறு சுவை, மணம், மெய்ப்பாடுகள் தோன்றுகின்றன. படிப்போர்க்கும் சமுதாயத்துக்கும் மணமும் மகிழ்வும் சுவையும் இன்பமும் நிறைவும் தரும் எனலாம்.

11.1.1 எது கல்வி?

கல்வியைப் புகழும் கவிஞர், "வளர்ச்சி வாயில்" என்ற பாடலில்,

ஏடன்று கல்வி சிலர் எழுதும் பேசும்
இயலன்று கல்வி பலர்க்கெட்டா தென்னும்
வீடன்று கல்வி, அது வளர்ச்சி வாயில்

என்று கல்விக்கு விளக்கம் தருகிறார். கல்வி மனித ஒட்டுமொத்த வளர்ச்சியின் வாயில் என்கிறார். வகுப்பறையில், ஆய்வகத்தில் புதியன காணப்பெறல் வேண்டும். கல்விப் பணி, நாளும் வளர்ச்சியுறல் வேண்டும். கல்வியாளர்,

தொகுப்பனவும் விரிப்பனவும் மக்கள் வாழ்வைத்
தொடுவனவாய்.......

அமைதல் வேண்டும். அவர்களுடைய மொழியறியும் தரத்தனவாக, மூச்சுக் காற்றின் முணுமுணுப்பை உணர்த்துவதாக, தேவைகளை நிறைவேற்றி வைக்கும் விதிகாட்டும் பாங்கினதாகக் கல்வி அமைய வேண்டும் என அறிவுறுத்துகிறார்.

11.1.2 கல்வியின் பயன்

பெருமையும் புகழும் பெற்றியும் தருவது உயர்கல்வி எனக்கூறும் குலோத்துங்கன் அவர்கள், நம் பண்டைய கல்வி வளத்தையும் தவறாமல் குறிப்பிடுகிறார்.

வழிவழி வந்தபண்பின் மதிவளம் நமது செல்வம்.
தொழில்வளம் வலிமை ஆய்வுத் துறைகளில் முதன்மைபேசும்

மொழிவளம் தலைமையாவும் முறையொடு பயின்ற கல்வி
வழியதே யன்றோ: மேதை வளமுளார் யாவு முள்ளார்

மேதையாய்த் திகழ வேண்டும் என்பதை வலியுறுத்தும் கவிஞர், கல்வியின் ஏற்றத்தை இலைமறை காயாக அன்றி வெளிப்படையாக, விளக்கமாக எடுத்தியம்புகிறார். கல்வியின் முழுப்பயன் பெற்றிடக் கவிஞர் காட்டும் வழிமுறை மிகச் சிறந்ததாக உள்ளது. காரியம், நிகழ்வைக் காட்டி அதிலிருந்து காரணம் காணும் தர்க்க சாத்திர முறை போல் (Effect to Cause) வாழ்வின் பயன்களைக் குறிப்பிட்டு, கல்வியின் உயர்வை உற்றறியச் செய்கிறார்.

சிறுபயன் நாடிச் சாதிச் சிற்றினம் சேர்ந்து நெஞ்சில்
வறுமையை வளர்ப்போர் காட்டும் வழியெலாம் தவிர்ப்பீர்

என்கிறார் கவிஞர்.

11.1.3. கல்வி கற்கும் காலமும் தேடலின் விளைவும்

"மூழ்குவதெக் கடலோ?" என்னும் பாடலில், கவிஞர் தம்முள் மூண்டெழும் அறிவுப் பசியின் வெப்பத்தைத் தாங்க முடியாமல் தவிப்பதாகக் கூறுகிறார். அறிவுப் பசித்தீயைத் தணிக்க, எக்கடலில் மூழ்குவதோ எனவினவும் பாங்கில், மனிதருக்குக் கல்வியின் மீதான ஆர்வக்கனல் நெஞ்சுள் கனன்று கொண்டேயிருக்க வேண்டுமென்பதை உள்ளுறையாக உணர்த்துகின்றார். சாந்துணையும் - இறக்கும்வரை - கல்வி கற்கும் ஆர்வமும் கற்பதும் தொடர வேண்டும் என அறிவுறுத்துகின்றார். கல்வியைத் தேடித் தேடி, கவிஞர் உற்ற நிலையை

ஓடிய கால்கள் அலுத்தன - தேடும் உலகினைக் காணேனே!
நாடிய கண்கள் இருண்டன - அப்பொருள் யாண்டும் தெரிந்திலதே!
மிகத்
தேடிய சிந்தை மகிழ்ந்திட அங்குத் தெளிவெதும் காணோமே

எனும் பாடல் வழி உணர்த்துகிறார்.

காலே பரிதப் பினஎன் கண்ணே நோக்கி நோக்கி வாளிழந் தனவே
அகலிடு விசும்பின் மீனினும் பலரே மன்றஇவ் வுலகத்துப் பிறரே

என்னும் குறுந்தொகைப் பாடல், உடன்போக்கு மேற்கொண்ட மகளைத் தேடி அலைந்து பரிதவிக்கும் தாயின் நிலையைப் படம்பிடித்துக் காட்டுகிறது. குலோத்துங்கன் கல்வித் தேடலில் சோர்கிறார். இருவர்க்கும் காதல் பொதுவாக நிற்கிறது. காதலிக்கப்படுவோரில் தாம் வேறுபாடு.

11.2.1 கவிதைகள் கருக்கொள்ளும் காலம்

வாழ்க்கையின் மறுபதிப்பாகவும் உண்மையின்
வரி வடிவமாகவும் இருப்பதே கவிதை

அறிவியல் அறிஞர் வா.செ. குழந்தைசாமி அவர்கள், தமிழிலக்கியத் துறை - கவிதைத் துறையில் - புகுந்ததைப் "படையல்" என்னும் முதற் கவிதையில் குறிப்பிடுகின்றார். மற்றும் சில பாடல்களில் தாம் கவிதை எழுதும் முறை; திருத்தம் செய்யும் முறை பற்றி விவரிக்கிறார்.

தம்முடைய நெஞ்சம் பாடுக எனப் பணித்தபோது பாடுகிறேன்

என்கிறார். "கவிதைக் காதலியின் மீதுகொண்ட கடல்போன்ற காதலாற் பாடுகின்றேன்" என்கிறார். தம் பாடலால், தம்மை நாடு போற்றும் எனும் நம்பிக்கை உள்ளவர் எனினும் "எழுச்சியாற் பாடுகின்றேன்" என்னும் பாடலில் அவையடக்கமாக,

நாடெனைப் போற்று மென்றும்
நல்லிசைப் புலவர் செய்யும்
ஏடெனைப் புகழும் என்றும் இலக்கண இலக்கி யத்தின்
பீடெனக் குள்ள தென்றும்......

பாடப் புகவில்லை. ஆனால்:

பெருகும் நெஞ்சம் பாடெனப் பணித்தபோது
பணிந்தவன் பாடுகின்றேன்

என்கிறார். "கவலுமென் நெஞ்சின் பாரம் கவிமகள் தணிப்பாள் மிஞ்சும் அவலம்நின் றழுத்தும் காலை ஆறுதல் தருவாள்.... புலன்கள் யாவும் கவரும் என் கவிதை நங்கை காதலாற் பாடுகின்றேன்" என்று மனச் சுமையை மாற்றக் கவிபாடுவதை உணர்த்துகிறார் கவிஞர்.

இருளிடை மின்னல் கண்டேன்
எழுச்சியால் பாடு கின்றேன்

கவிதை, கவலையை மாற்றுகிறது. நெஞ்சின் சுமையை நீக்குகிறது. மகிழ்ச்சி தருகிறது. குலோத்துங்கன் கவிதைகள் நூலை, ஓர் ஆற்றுப்படை நூல் எனலாம்.

11.2.2 போலிப் புரட்சிக் கவிதைகள்

கவிதையில் புரட்சி செய்வதாகக் கூறி, சிலர் ஆடுகின்ற சொற் சிலம்பங்களையும் அடிப்படையே இல்லாமல், சூனியத்தில் சொர்க்கத்தைக் காட்ட முயலும் போலிகளையும் தோலுரித்துக் காட்டுகிறார். பொருளில்லாக் கற்பனைகள் புதுமை அன்று பொய்யுரை பித்தலாட்டம் என்கிறார். "ஆயும் புலனொடு பொருந்துவன புனைய வேண்டும்" என்னும் கவிஞர். "வினையற்ற இடமன்று கவிஞர் வையம்" என்று இலக்கணம் தருகிறார். "சொல்லின் சக்தி, நுகர்வார்தம் உணர்வுகளின் நுழைவே" என்கிறார்.

கருப்பொருளை, ஊடுருவிப் பார்த்துரைக்கும் கவிஞரின் ஆற்றலைப் பொறுத்தே, கவிதையின் தரம் நிர்ணயிக்கப் பெறும் என்கிறார்.

கவிதையின் ஊடே, எரிமலை, இடி, மின்னல் பூகம்பம் என்றெழுதுவது புரட்சியல்ல, கருத்துக்கள் நெஞ்சினின்று எழுந்து, பொங்கி, விரிகின்ற ஆவேசம், வெடிக்கின்ற சொற்களாக இருத்தல் வேண்டும். சொல்லின் வீச்சில், இடியோசை முழங்க வேண்டும். எரிமலைகள், குமுறி எழல் வேண்டும். புரையோடிய சாதி, சமயச் சமுதாயத்தின் வேரையும் விழுதையும் ஒரு சேரப் பறிக்கின்ற புயலிருக்க வேண்டும். நுகர்வோர்க்கு, இன்ப வெள்ளம் - உணர்ச்சிப் பெருக்கு - உருவாக்கும் இன்ப ஊற்றும் இணைந்திருக்க வேண்டும்.

மின்கம்பி செய்தி சொலும் இரும்பில் காந்தம் விசை ஊட்டும்
மின்சாரம் செம்பிற் செய்த நுண்கம்பிக்(கு) ஆற்றல் தரும்

என்பது கவிதைக்குக் கவிஞர் காட்டும் உருவகம். "கவிதையின் - சொல்லின் ஆற்றல், கவிஞரின் உணர்வுகளைப் பொறுத்ததாகும்" என்கிறார் குலோத்துங்கன்.

11.3 விஞ்ஞானம்

முன்னேற விரும்பும் நாட்டில், விஞ்ஞானம் போற்றப் பெறுகிறது. விஞ்ஞானத்தைப் புறந்தள்ளும் நாடு, பின் தங்குகிறது. அனைத்து நிலைகளிலும் அறிவியல் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதில் அறிவியல் அறிஞர் வா.செ. குழந்தைசாமி அவர்கள் நிலைத்த கொள்கை கொண்டவர். "விஞ்ஞான விந்தையெலாம்" என்னும் பாடலில் ஒரு விஞ்ஞானி, விஞ்ஞானத்தை அணுகும் முறை விளக்கப்படுகிறது.

அணுவைப் பிளந்தீர்!...... சோதனைகள் மேற்கொண்டீர்! என்றாலும்

நாடுதொறும் வன்முறைகள்.
நாளெல்லாம் போர் முரசம்
வீடுதொறும் துப்பாக்கி
வெடிகுண்டு வெறுப்புணர்வு.
அகதிகள் பட்டாளம்........

என்று விஞ்ஞானத்தின் சாதனையையும் விளைந்த வேதனையையும் பட்டியலிடுகின்றார். விபரீத விளைவுக்கு மூல காரணம் தேடுகிறார்.

சிந்தை வளரா முன் திறனை வளர்த்தோமோ?......
மெய்யறிவு தேடாது வெளியுலகில் வேண்டுவன
செய்யும் திறனொன்றே திருவென்று நம்பினோமோ?

என்று கேள்விக் கணை தொடுத்து......

கருவி படைத்தவனைக் கருவியே மாய்ப்பதுவோ?

* * * *

நம்மையறியாது நாம்தவறு செய்துவிட்டோம்

என்று நம்குறையைக் குறிப்பிட்டு விடை தருகிறார்.

அழிப்போர், ஆற்றல் பெற்றோர் என்ற மேனாட்டு அறிவியல் அறிஞர்களிடமிருந்து, முற்றிலும் மாறுபட்ட சிந்தனையாளர் குலோத்துங்கன். மனித நேயம், வள்ளலார் அவர்களின் ஆன்மநேய ஒருமைப்பாட்டு அருளுணர்வை, அறிவியலுடன் இணைத்து உலகநலம் காண விழையும் அருளாளர் முனைவர் வா.செ. குழந்தைசாமி.

பல்வேறு பாடல்களில், அறிவியல் பேசுகிறார், ஆக்கத்திற்கு, அறிவியல் பயன்படுத்தப்பட வேண்டும் என்றே வலியுறுத்துகின்றார். அறிவியல், இலக்கியத்துடன், கவிதை நயத்துடன்; மனித நேயத்துடன் இணைக்கப்பட்டிருப்பதால். கவிதைப் பொன் எழில் புதுமலர்; நறுமணம் பெற்றுத் திகழ்கின்றது. எனவே வனப்புடனும் மணத்துடனும் இலங்குகின்றது.

11.4 கூடங்குளத்தை எதிர்ப்பது ஏன்?

இப்பாடல், கூடங்குளத்தில், அனல் மின் நிலையம் அமைவதை ஆதரிக்கும் கருத்தாக உள்ளது. கூடங்குளம் மின் நிலையம் ஆற்றல் தருவது; ஆற்றல் மிக்கது. அது

தொழில் வல்லுநர் மேதையின் சேய்.
மாடனும் காடனும் செய்ததல்ல

என்று அறிவியல் அறிஞர்களின் நுட்பத்தால் முடிக்கப் பெறும் எனக் குறிப்பிடுகிறார், குறிப்பால்.

காற்றினில் மாசென முன் றெதிர்ப்பீர். . . . எதிர்
காலத்தில் ஆபத்தென் றென்றெதிர்ப்பீர்.
ஆற்றினில் மாசென ஒன் றெதிர்ப்பீர் - நிதம்
ஆக்க முயற்சி யெலாம் தடுப்பீர்"

என்று எதிர்ப்போர் கருத்தையும் ஆக்க முயற்சியைத் தடுக்கும் செயலையும் எடுத்துக்காட்டுகின்றார் கவிஞர்.

"தொழில்யுகம் தந்த வளம்" என்று கூடங்குளம் அனல்மின் நிலையத்தைக் குறிப்பிடுகின்றார். இது "ஏழைக்கு நலம் தரும் திட்டம்" என்பது கவிஞரின் கணிப்பு.

11.5 கழிப்பன இல்லை

"இயற்கையின் படைப்பில் யாவும் இனியன" என்று இயற்கையில் எங்கும் இனிமை காண்கிறார் குலோத்துங்கன் அவர்கள்

"எங்கெங்குக் காணினும் சக்தியடா" என்றார் பாவேந்தர்.

இயற்கைப் பொருளில் இன்பம் கண்டு மகிழ்ந்த பாரதி,"எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா" என்று, இன்பம் வைத்தது இறைவன் என்று போற்றுகிறார்.

இயற்கைப் படைப்பில், அணுவும் பயனில்லாதது எனச் சொல்வதற் கில்லை என்பது குலோத்துங்கன் கோட்பாடு.

ஊனமொன் றிருந்தால் அந்த ஊனத்தை ஈடு செய்யும்
தானமும் இயற்கை அன்னை தருவாள்

என்கிறார். பொருட்களை நோக்கும் நோக்கங்களின் தன்மையைப் பொறுத்தே, அவை பயன்படும் பொருட்களா, மற்றையவையா என்பன நிர்ணயிக்கப் பெறுகின்றன.

பொருந்தும் கல்வித் துணையொடு காணின்
கற்களும் புதரும் முள்ளும் கள்ளியும்
செல்வச் சுரங்கமாய்த் திகழும்

என்கிறார்.

இயற்கைப் பொருளைப் பயனுறப் பயன்படுத்துதற்குக் கல்வியறிவு தேவை யென்பதை வலியுறுத்தவே இப்பாடலை எழுதினாரோ என்று எண்ணத் தோன்றுகிறது.

11.6. நிலமகள் நோதல் இன்றி நிறைபயன்

நிலத்தை வெட்டி, உழுது, அகழ்ந்து துன்புறுத்தினாலும், பூமி சினக்காது, தன்னை வருத்துவோர்க்கு மிகு பயனைத் தருகிறது என்னும் கருத்திணைந்ததாக "அன்னையே! ஓர் ஐயம்" எனும் பாடல் அமைகின்றது. நிலத்தைக் குறித்துப் பாடினாலும்

எவ்வழி ஆடவர் நல்லவர்
அவ்வழி நல்லை நீ வாழிய நிலனே

என்னும் புறப்பாடலின் வெளிப்பாடாக உள்ளதெனலாம். சோம்பியிருப் போர்க்கு, இயற்கைத்தாய் சோறு போடுவதில்லை என்ற கருத்து வலியுறுத்தப் பெறுகிறது. இறைச்சிப் பொருள் போல், "சோம்பித்திரிபவர், தேம்பித்திரிவர்" என்ற கருத்தை வலியுறுத்துகின்றார் ஆசிரியர்.

அன்னை தன்னுள் தேக்கி வைத்துள்ள ஆற்றல், பெரு நிதியங்களையும் அவற்றைப் பெற, மனிதர் ஆற்ற வேண்டிய கடமை, விடா முயற்சி, உழைப்பையும் எடுத்தியம்புகிறார் கவிஞர். பாடலின் நிறைவுப் பகுதியில், பொது நியதியைச் சுட்டுகின்றார். அது சிறந்த முத்தாய்ப்பாகத் தங்கக் கிரீடத்தில் மாமணி பதிப்பதாக அமைகிறது.

இயற்கை அன்னையே!
தன்னையும் வருத்தித் தாழாது உழைத்து
உன்னையும் வருத்தினால் தானே உதவுகிறாய்
இது உன் குறையா? அல்லது கொள்கையா?

என்று பூமித்தாயிடம் கவிஞர் கேட்கும் கேள்விக்கு, அன்னை, பொறுமையின் திரு உரு மௌனம் சாதித்தாலும் "இது அன்னையின் குணமும் கொள்கையும்; நிறைவும் நெறியும் ஆகும்" என்று நாம் பதில் தருவோம்.

"உழைத்தால் தான் வாழ்க்கை" என்பதே நியதி, "தகுதியுண்டேல் வாழ்வுண்டு" தளரா முயற்சியுடன் கடின உழைப்பு இணைந்தால் நிச்சயமாகத் தரமான வாழ்வு உண்டு. தலைமை வாழ்வு பெறலாம்.

பயிர்த் தொழில் அதனினும்
உயிர்த் தொழில் இல்லைநம் உலகின் சரிதையில்

பயிர்த் தொழில் செம்மையால், கல்வி விரிந்து, கலைகள் பெருகின. இசையும் இயலும் கூத்தும் வணிக வாழ்வும் மலர்ந்தன. பண்பின் வாழ்வு புலர்ந்தது, எனினும்

"பண்டுதொட் டிருந்துவந்த பசிப்பிணி மறையவில்லை" என்று வறுமையால் துடிக்கும் ஏழையர் ஒருபக்கமும் கோடி கோடியாய்க் குவித்தும் தாகம் தீராச் செல்வர் மற்றொரு பக்கமும் நிற்கும் விரும்பத்தகா இருவேறு உலகத்தியற்கை இப்பாடலில் விளக்கமாக விவரிக்கப்படுகிறது.

ஆலைகள் கக்கும் நஞ்சு. அளவிலா வாகனங்கள்
சாலையில் கழிக்கும் நஞ்சு தரமிலாக் கழிவு கோடி......
* * * *

காற்றிலும் மாசுகோடி கழிவுகள் கழிப்பதால் நம்
ஆற்றிலும் மாசு மண்ணின் ஆழத்தில் தரைநீர் மாசு.
* * * *

...... யாங்கும் அளவிலாக் கழிவு

என மாசுபற்றி விவரிக்கும் கவிஞர், "வாழ்வில் எல்லையென்றெதற்கும் உண்டு. வரையறை உண்டு...... சூழல் நோதலைத் தவிர்த்தல் நன்று" என்று அறிவுறுத்துகின்றார்.

இயற்கையைப் போற்றி, ஏற்றம் பெற்ற ஆங்கில இலக்கிய இயற்கைக் கவிஞர் வேர்ட்ஸ்ஒர்த் அவர்களுக்குப் பல பாடல்கள் ஈட்டித் தந்த புகழைக் குலோத்துங்கன் கவிதைகளில் உள்ள இந்த ஒரே பாடல் பெற்றுத் தருகிறது என்பதைத் தமிழன் என்ற பெருமையுடன் கூறலாம்.

11.7. மனத்திற்குள் ஒரு வானகம்

இது, பாடல்களின் தலைப்பு.

"நெஞ்சமே திருக்கோயில்" என்பதுபோல், வானகம் - சொர்க்கம் - நெஞ்சுக்குள் தான் உள்ளதென்று, கவிதை குறிப்பிடுகிறதோ என மயக்கம் தரும் தலைப்பு, ஆனால் பாட்டுடைத்தலைவர், மது அருந்துவோராகவும் பாடுபொருள் மதுவாகவும் பாடல்கள் மதுவின் கேட்டை விளக்குவதாகவும் அமைகின்றன.

மது அருந்துவோரின் மயக்கநிலை; மதுவின் வகைகள்; மதுவின் தீமை; மது அருந்துவோர் யார், யார்? குடி நடமாடும் இடங்கள், தடுப்புச் சட்டங்கள்; களிநிலையை நாடுவதேன்? என்பன போன்றவை இத்தலைப்புள் அடங்குகின்றன. குடிகாரன்,

தள்ளாடி நடக்கின்றான். கால்கள் பின்னத்
தடுமாறி விழுகின்றான். வாய்தி றந்தால்
பொல்லாத புகல்கின்றான். வலியச் சென்று
போருக்கு முயல்கின்றான்.

இது குடிகாரர் நிலை.

இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு

குறளின் கூற்று.

குடிப்பன ஓர் ஆயிரம் மென் பொருளாய் உண்ணக்
கொள்வன ஓர் ஆயிரம்பின் ஊசி யேற்றிப்
பெறுவன ஓர் ஆயிரம்இப் பித்துக் கொண்டோர்

என்கிறார் கவிஞர், ஆயிரம் ஆயிரமாய் அடுக்கி,

கல்லாதார் என்பதிலை, ஒழுக்கப் பாதை
காணாதார் என்பதிலை. பதவி, செல்வம்
இல்லாதார் என்பதிலை, போதை வாழ்வில்
எல்லாரும் உளர்விலக்கிங் கெதுவு மில்லை

மடங்களிலும் வாழ்கிறது. மன்னர் செல்வ
மாளிகையில் வாழ்கிறது. வறியர் மொய்க்கும்
இடங்களெலாம் ஆள்கிறது, கலைஞர் மன்றில்
இன்ப நடம் புரிகிறது, போதை வேட்கை.

சட்டங்கள் தடுத்ததிலை. சமயக் கொள்கை
சாத்திரத்தால் இயலவில்லை........

என வருந்தும் கவிஞர், மதுவின் ஆட்சி, தலைக்கு மேலே போன வெள்ளம் என்பதை உணர்த்துகிறார்.

"மானிடம் களிநிலையை நாடுவதேன்?" தமக்குத் தாமே ஒரு வினா எழுப்பிய கவிஞர், யாரிடமும் பதிலை எதிர் நோக்காமல், தாமே பதிலளிக்கிறார்.

உள்ளத்தின் ஆழத்தில் கண்கள் காணா
உலகுள தோ? இன்பத்தின் ஊற்றங் குண்டோ?
கள் ளொத்த கலம்ஏறி அதனைத் தேடிக்
காலமெல்லாம் அலைகிறதோ மனித சாதி?

என்பது நிறைவுப் பாடல்

ஏதோ கண்காணா ஒரு கற்பனை உலகைத் தேடி, மது அருந்து கிறார்கள் என்பது ஆசிரியரின் ஊகம் போலும். முப்பத்திரண்டு அடிகளில் மது பற்றிய முழுவிவரத்தைக் காண்கிறோம். பலபக்கக் கருத்துகளைச் சில அடிகளில் உள்ளடக்கிய சீர்மை, சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் நெறியாகிறது.

11.8. அழகு

"முருகன் அல்லது அழகு" என்னும் நூலில், திரு.வி.க. அவர்கள் "எங்கெல்லாம் இளமை; அழகு; மணம், கடவுள் தன்மை (இறைமை) குடி கொண்டுள்ளனவோ, அங்கெலாம் குறிஞ்சி நிலத் தெய்வம் முருகன் குடி கொண்டுள்ளான்" என்பார். அழகுக்கு, ஈர்க்கும் ஆற்றல் அதிகம்.

"எழில் நிறை பொருள் எப்போதும் இன்பம் நல்கும்" (A thing of Beauty is Joy for ever) என்பது ஆங்கிலப் பொன்மொழி.

குலோத்துங்கன் அவர்கள், "அழகு எப்போதும் மகிழ்விணைக்கும்" என்று கூறவில்லை. "வையம் அழகினுக்கு அடிமை" என்கிறார். அழகை ஆண்டை நிலையிலும், மக்களைத் தாசன் நிலையிலும் வைத்துப் பாடுகிறார். அழகின் ஆதிக்கம் அளப்பரிது என்பது உய்த்துணரப் பெறுகிறது.

அழகு எங்குக் குடிகொண்டுள்ளது; எவ்வெவற்றில் நிலை கொண்டுள்ளது; எதில் முழுமை பெறுகிறது என்பதற்கு விடை தராமல் அழகைத் தேடுகிறேன் என்று முற்றுப் பெறாநிலையில் விட்டுச் செல்கிறார். ஏன்? அழகு, ஒரு பொருளிலோ, சில பொருள்களிலோ நிறைந்து, நிலை பெற்றிருப்பதாகக் கூறுவதற்கில்லை. ஆராய, ஆராய அழகு எல்லையின்றி விரிந்து செல்கிறது, தொட்டனைத் தூறும் மணற்கேணி போன்று, கற்றனைத் தூறும் அறிவு ஒப்ப.

"ஞாயிறு போற்றுதும், ஞாயிறு போற்றுதும்" என்று காலையிளம் பரிதியை - உதய சூரியனின் ஒப்பற்ற அழகை; "திங்களைப் போற்றுதும்" என்று முழுமதியின் எழிலை, "நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து நிலவென்று, காட்டுகின்றாய்" என்று பாடிப் பரவசப்படும் பாவலர் பலர்.

காதல், காதல்; என்று காதலைப் பாடிய கவிஞர்கள் பலர். அவர்கள் இளமை, அழகு, மென்மையைக் கண்டுணர்ந்து, உணர்த்தியவர்கள். வீரர்களின் ஆற்றலைப் போற்றிப் பரணிபாடியவர் பலர். வீரத்தின் ஆண்மையில் - அழகைக் கண்டவர்கள் இவர்கள்.

"வண்ணமும் வளமும் கொண்ட மலரினம் கவிஞர் நெஞ்சை ஆள்வதும் இயல்பே" என்று கவிஞரின் பாடு பொருளாகத் திகழும் அழகுப் பொருட்களைக் குறிப்பால் உணர்த்துகிறார் குலோத்துங்கன் அவர்கள். ஏனைய கவிஞர்களிடமிருந்து மாறுபட்ட நிலையில் தம் நிலையை விளக்குகிறார்.

பாடுதற்கென்று நெஞ்சைப் பறித்தன கோடியேனும்
நாடுமென் கவிதை உள்ளம் யாவினும் உயர்ந்த தென்ன
நித்தமும் எண்ணுகின்ற நிறைவொடு நாடுகின்ற
தத்துவம் வேறு தேடும் தலைப்புகள் வேறுவேறு,

என்கிறார் கவிஞர். கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள், "குலோத்துங்கன் கவிதைகளும் குழந்தைசாமியும் ஒரு முன்னுரைக் குறிப்பு" என்னும் பகுதியில்,

> கவிஞரின் அசாதாரணத் தன்மையும் பதியப்பட வேண்டுவதாகும். இதுவே, அவர் தனித்து நிற்பதற்குக் காரணமாகும். நவீன காலத் தமிழிலக்கியங்கள், இந்தக் கவித்துவக் குரலைக் கேட்கத் தவறக் கூடாது. இது தமிழின் எதிர்கால உயர்ச்சிக்கான குரலாகும். கவிதைக் கனவாகும். அந்த வகையில் குலோத்துங்கன் எண்ணிக்கையில் தனிமரமாக - ஆனால் - சிந்தனையில் ஒரு தோப்பாக நிற்கிறார் என்றே கூறவேண்டும்

என்று குறிப்பிடுவது ஒப்பிடற்குரியது.

அழகு, கற்பனையை வளர்த்தது. கவிதை தந்தது. மகிழ்ச்சி தந்தது. துன்பம் நீக்கியது, என்பனவற்றுடன் அமையவில்லை குலோத்துங்கன். வான நூல் அறிஞர்கள், மதியில் குடியேற வழி காண்கின்றனர். மக்களின் குடியிருப்புப் பிரச்சினையைத் தீர்க்க, விண்ணில் வீடமைக்க முயல்கின்றனர். கோள்களின் தொடர்பால், தொலைத் தொடர்புச் சாதனங்களின் பயன்பாடு மிகுகிறது. நுட்பம் மிளிர்கின்றது. வானியல் ஆய்வு, மண்ணில் வாழும் மக்களுக்கு மகத்தான உதவி புரிகிறது. எனவே தான் அழகுப் பொருட்களைப் போற்றிப் புகழ்ந்து நின்றுவிடாமல், வான நூல் அறிஞர்களை வாழ்த்தி வரவேற்கின்றார். ஓர் இலக்கியவாதியும் ஓர் அறிவியல் அறிஞரும் ஒரு பொருளை நோக்கும்போது ஏற்படுகின்ற வேறுபாடுகள் வெளிப்படுகின்றன. ஆய்வறிஞர்களின் திறமை போற்றுதற்குரியது.

உண்மை காண்கின்ற ஆர்வத்தில் மெய்ம் மறந்து
வானத்து நூலறிஞர் ஆய்வர் நாளும்
வளர்கிறது மனிதகுலம். வாழ்க மேதை

என்று வாயார வாழ்த்துகின்றார்.

பொருட்களின் புற அழகைக் காட்டிலும் பொருட்களின் மூலக் கூறுகள் தோற்றத்தின் ஊற்றுக் கண்கள் மக்களுக்கு எவ்வாறு பயன்படுத்தப் படலாம் என்ற ஆய்வு, பயன்நோக்கில் சாலச் சிறந்தது என்பது கவிஞரின் கருத்து.

கலை, கலைக்காக என்பதைவிட - கலை அழகுணர்ச்சிக்காக என்பதைக் காட்டிலும் - கலை, வாழ்வுக்காக; மக்கள் பயனுறப் பயன்படுத்துவதற்காகவே என்ற அறிவியல் அணுகுமுறையே சிறந்த தென்கிறார் கவிஞர்.

"கல்வி அழகே அழகு" என்னும் பழைய பாடலின் போக்கு மாறுபட்டாலும் நோக்கு, கவிஞரோடு இணைந்திருப்பதைக்காண முடிகிறது.

11.9. முதுமை

இளமைக்கும் அழகுக்கும் இடம் ஒதுக்கிய கவிஞர், முதுமைக்கும் ஒரு பாடல் புனைந்துள்ளார். இன்றைய சமுதாயம் முதுமையை ஒதுக்குவது போன்று, கவிஞர் ஒதுக்காதது, பாராட்டிற் குரியதாகவும். படிப்போர்க்குப் படிப்பினையாகவும் அமைகிறது.

"கணக்கறியேன்" என்னும் கவிதை, பொதுவாக முதுமையைச் சித்திரிப்பதுடன், கவிஞரின் தன்நிலை விளக்கத்தையும் தருவதாக அமைகிறது. வயது முதிர்வால் ஏற்படும் உடல் தளர்வு, எழுத்தின் வேகம் குறைதல் போன்ற வெளிப்பாடுகளை விளக்குகிறார்.

ஒளியின்றி இருள் சூழும் வேளை. உச்சரிப் பின் உச்சிப் பொழுது சரிந்து, கதிரவன் மாலையிலே மேற்றிசையில் இலங்குகின்ற மாணிக்கச் சுடராகச் சாயுகின்ற காலம். இளமை மறைந்து, முதுமை வரும் நேரம் முதுமைப் பருவமென வருணிக்கிறார். தளர்ச்சி, தலைதூக்குகிறது. விரலில் சோர்வு ஏற்படுகிறது. இயம்பும், எழுதும் சொல், நடை தளர்கிறது. எனினும் கவிதையின் ஊற்று மட்டும் வற்றவில்லை. கால்வளம் சோர்கிறது. அதனால், நடனத்தில் வேகம் இல்லை. ஆனால் ஆட்டத்தின் அடிப்படை இலக்கணங்களான அசைவும் கரணமும் தளரவில்லை. ஏனோ பலக்குறைவு புகுந்ததை உணர்கிறேன். காலம் தீர்ந்ததெனக் காதில் ஒருவித ஓசை கேட்கிறது.

"வாழ்ந்த காலக் கணக்கெங்கே என்று அவ்வொலி கேட்பதாக உணர்கிறேன்" என்று அவல வரியை எழுதுகிறார். படிப்போர் நெஞ்சில் அவலம் சேர்க்கும் அடிகளாக உள்ளன.

டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்கள் தம் வாழ்க்கை வரலாற்றின் நிறைவுப் பகுதியில் "நான் எதையும் சம்பாதிக்கவில்லை. எதையும் கட்டி வைக்கவில்லை. குடும்பம், மகன்கள், மகள்கள் யாருமே எனக்குக் கிடையாது. எனது கொள்ளுத் தாத்தா அபுல், தாத்தா பக்கீர், அப்பா ஜைனு லாபுதீன் ஆகியோரின் இரத்த பந்தம் என்னோடு முடிந்து விடலாம்" என்று கூறும் பகுதி இதய முள்ளோர் இதயத்தைப் பறித் தெடுப்பது போன்று, முனைவர் வா.செ. குழந்தைசாமி அவர்களின் இப்பாடல் தாங்கொணாத் துயர் தருகிறது.

முதுமையை உருவகமாக்க - உருக்காட்சியில் அமைக்கக் கவிஞர் பயன்படுத்தும் சொற்றொடர்கள் மிகுந்த இலக்கிய இன்பம் தருகின்றன. பாரசீகக் கவிஞர் உமர்கய்யாம் தோன்றுகிறார் பாடலில்.

உச்சிப் பொழுதும் சரியுதடா
எச்சப் பொழுதும் விரையுதடா - வரும்
இருட்டின் அடர்த்தி பெருகுதடா........
வீணையின் இன்னிசை மங்குதடா என்
விரல்களின் நடனம் தளருதடா,,,,,,,
காலம் தீர்ந்தது கணக்கெங்கே எனக்
காதினில் ஓர்ஒலி விழுகுதடா

என்று முதுமையின் நெருக்கம் படர்வதையும் வாழும் ஒளி குன்றி, இருள் நிறைவதையும் உருவகத்தாலே விளக்கி, முதுமையின் படிநிலைகளை உணர்த்துகிறார்.

இப்பாடலை ஆசிரியர் தவிர்த்திருக்கலாம் என்று தோன்றுகிறது. கவிதை இன்பத்தில் திளைத்த உள்ளம், இவ் அவலப் பாடலால் கரைகாணாத் துயரில் துடிக்கிறது, நீரினின்று தரையில் வீசப்பட்ட மீன் போன்று. நிலவும் நிலையே விளக்கப்பட்டாலும் நெஞ்சில் கனத்த சுமையை ஏற்றுகிறது இப்பாடல்.

தாம் செய்த பணிகள், தன்னல மற்ற தூய பணிகள் நாடும் மொழியும் உயர்வெய்த உழைத்த உழைப்பு. எனவே கணக்குக் கேட்கும் காலத்தில், தம் பணியையே முன் வைக்க உள்ளதாகக் கூறுகிறார். கடைசி நாளில் - தீர்ப்பு நாளில் (Judgement Day) ஒவ்வொரு வரும் தாம் செய்த செயல்களின் கணக்கை இறைவன் திரு முன் வைக்க வேண்டும். இறைவன் அவற்றைப் பார்த்துத் தீர்ப்பெழுதுவார் என்னும் கிறித்துவக் கருத்தின் சாயல் காணப்படுகிறது.

ஞாலம் மேம்பட நான் முயன்றேன் - என்
நடைமுறை யல்லது கணக்கறியேன்

என்று தம் பணியின் சீர்மையையும் நேர்மையையும் உறுதிபடக் குறிப்பிடுகின்றார்.

ஒழுக்கத்தின் ஆற்றல் - வலிமை. Moral Courage இங்கே மிளிர்கிறது.

"கணக்கறியேன்" கவிதை, முதுமை பற்றிய தன் நிலை விளக்கம் என்பதை விட, மக்கள் எப்படி வாழ வேண்டும் என்பதைக் கற்பிக்கும் பாடம் எனலாம். குறிப்பாக, எழுத்துவேறு, வாழ்க்கை வேறு எனவாழும் இருநிலை மாந்தரை வாழ்வாங்கு வாழ வழி காட்டும் கலங்கரை விளக்கம் எனலாம்.

11.10. இளைய தலைமுறை

"முதுமை" பற்றிப் பேசிய முனைவர் வா.செ. குழந்தைசாமி அவர்கள் "குஞ்சுகளின் கோரிக்கை" என்ற பாடலில் இளைஞர்களின் எண்ணங்களை எடுத்துக் காட்டுகின்றார். தங்களுக்கு வழிகாட்டி, உயரவழி வகுக்காமல், கட்டுக்குள் வைத்து ஆற்றலை அழுத்தி நிற்பதாக இளைஞர்கள் குற்றம் சாட்டுகின்றனர். தாங்கள் செல்ல வேண்டிய பாதையைக்காட்டி, பெற்றோர் வழியனுப்பி வைத்தால், தங்களால் மாபெரும் சாதனைகளைச் சாதிக்க முடியும் என்கின்றனர். பறவைக் குஞ்சுகட்குத் தங்களை உருவகப்படுத்தித் தாய் தந்தைப் பறவைகளிடம் தங்களின் நிலைபற்றிக் கூறும் இலக்கிய உத்தியில் அமைந்துள்ளது "குஞ்சுகளின் கோரிக்கை."

வானத்தில் பறக்க இடம் இல்லை எனக் கூறித் தடுக்காதீர்
எங்களுக்கு நீங்கள் இறக்கையைக் கொடுங்கள்.
இடமிருக்கும் உயரம் வரை நாங்கள் எழும்புவோம்......
.... எங்களைத் தேடவும் தேடித்திரியவும் விடுங்கள்.
இதுவரை கண்டதன் பெருமைபேசியே காலம் கழிக்காதீர்
எங்கள் தேடலுக்கு எத்தனையோஉலகங்கள் காத்திருக்கின்றன

என்கின்றன குஞ்சுப் பறவைகள்.

பிள்ளைகள் சுதந்திரமாக அவர்கள் வாழ்வுக்கு வழி தேடுவதற்குப் பெற்றோர் அனுமதிப்பதில்லை. "புவி பொல்லாதது. அச்சம் நிறைந்தது. இருள் சூழ்ந்து உள்ளது" என்று அச்சுறுத்தி, அடக்கி வைப்பதாலேயே இளைஞர்கள் தாமாகச் சிந்தித்துச் செயலாற்ற முடியாமல் தவிக்கின்றனர். இது பிள்ளைகளின் ஏற்றத்தையும் ஒட்டுமொத்த சமுதாய உயர்வையும் பாதிக்கிறது என்பது கவிஞரின் கருத்து. குறிப்பாக நம் தமிழர் சமுதாயம் வளர்ச்சியடையாததற்குப் பெற்றோரும் காரணம் என்பதை விளக்குவதாக இப்பாடல் அமைகிறதெனலாம்.

11.11. தனிமை

"இனிது, இனிது, ஏகாந்தம் இனிது" என்பர் வடலூர் வள்ளலார் அவர்கள் "தனித்திரு, பசித்திரு, விழித்திரு" என அறிவுறுத்துகிறார்கள். சிந்தனை உருவாகுமிடம் தனிமை. முனைவர் வா.செ. குழந்தைசாமி அவர்கள், தம் நிலையை விளக்கும் தன்மையில், தனிமையைப் புதிய கோணத்தில் விளக்குகின்றார்.

பலர் கூடிய கூட்ட நிகழ்ச்சியில் - விழாக்களில் - கலந்து கொண்டாலும் தாம், தனியே நிற்பது போன்றே உணர்வதாகக் கூறுகிறார். இந்நிலை எல்லோர்க்கும் வேண்டும் என்று உணர்த்துவதாகவும் கொள்ளலாம். தாமரை இலையில் தண்ணீர் ஒட்டா நிலை. மாந்தர் சூழ்ந்து நின்று எள் போட்டால் கீழே விழாத பெருங்கூட்டமாக இருக்குமிடத்தில் நின்றாலும் என்னுடன் அருகில் நின்றது தனிமையே..........பசுமை தோன்றிய பழனம் அங்கொரு பாலை தோன்றுதென் பார்வையில். வெறுமை தோன்றுதென் விழிகளில்........ என்று பூரணப் பொலிவிலும் வெறுமை; பெருங் கூட்டத்திடையேயும் தனிமை காண்பதாகக் கூறுவது, கவிஞரின் பண்பின் தனித்தன்மையை உணர்த்து வதாக உள்ளது.

எளிதில் அடைய நின்றன எல்லாவற்றையும் தாண்டி, அதற்கப்பாலும் தம் உள்ளத்தின் ஆசை தோன்றும் நிலையைக் கூறுகிறார். ஆரா அவா, கவிஞரை ஆட் கொண்டுள்ள தால், சிகரத்திற்கு மேலும் சென்று முடி தேடுபவராக உள்ளார். இந்நிலையில்

உடைய யாவினும் உயரநின்றிடும்
உடைமை காண் இடம் தனிமையோ?

என்ற வினா எழுப்புகிறார், கவிஞர் கேட்கும் கேள்விக்கு மாந்தர் நிலைக்கேற்ப விடை கிடைக்கும்.

11.12. சோகம்

.......மகிழ்வின் இடையே கவலையும்
மறைவாய்க் கீற்றாய்த் தெரிகிறது........
.........சோகம் என்னைத் தொடர்கிறது

என்கிறார் குலோத்துங்கன் ஏன்? காரணம், அடங்காப்பசி; தணியாத் தாகம்; அணையா நெருப்பு; ஆரா அவா என்பன ஒரு நேர் கோட்டுப் புள்ளிகள்.

வெற்றியின் அலைகளில் மிதந்தாலும் - சிறு
முள்ளெனச் சோகம் முகிழ்க்கிறது.

வெற்றிக் களிப்பில் தம்மை முழுதும் ஆட்படுத்திக் கொள்ள முடியா நிலையில் சோகம், நெஞ்சில் ஓர் முள்ளாகக் குத்துகிறது.

மழலையர் துணைவியர் மகிழ்கின்றனர்......
.......கழனியின் கதிர்வள நிறைவிடையே - சிறு
களைபோல் சோகம் கலக்கிறது

என்கிறார்.

கடந்த காலத்தில் நெஞ்சம் இழந்ததை நினைப்பதால்தான் இச்சோகம் எழுகிறதோ? பல்வேறு திக்குகளில் விடைகாண விரட்டுகிறது, இக்கேள்வி. "சோகம்" என்ற பாடலின் நிறைவுப் பகுதி:

நித்தம் தொடரும் யாத்திரையின் - நெடுஞ்
சிகரம் தேடும் வேள்விகளின்
* * * *
கனவின் தோல்விகள் இனம்தெரியாச் சிறு
கவலையின் வடிவம் காண்கிறதோ?

என்ற வினாவுடன் முற்றுப் பெறுகிறது. நெடிய பயணத்தில் குறுக்கீடு நிகழுமோ என்ற சந்தேகமும் சோகத்துக்குக் காரணமாவதைப் புரிய முடிகிறது.

"குலோத்துங்கன் பாடல்களில், இனம் தெரியாத ஒரு சோகம் இழையோடுவதை நான் காண்கிறேன். வாழ்வில் அவர் எட்டாத உயரம் இல்லை. இந்தச் சோகத்தின் காரணம் எனக்குத் தெரியவில்லை" என்று "மானுடம் பாடும் மாக்கவிஞர்" என்னும் கட்டுரையில், பாரதி சுராஜ் அவர்கள் குறிப்பிடுகின்றார்.

"சொல்புதிது, சுவைபுதிது" எனும் கட்டுரையில் டாக்டர் கு.வே. பாலசுப்பிரமணியன் அவர்களும் "தன்னம்பிக்கைப் பயணத்தில் எப்பொழுதோ சில தளர்ச்சிகள் தெரிவதைப் பிரேமா நந்தகுமார் குறிப்பிடுகிறார்" எனக் கோடிட்டுக் காட்டுவதுடன் "இத்தகைய தளர்ச்சி பாரதிதாசனுக்கும் இருந்திருக்கிறது எனினும் அடுத்த அரை நொடியில், இவர்களுக்கு இந்த நிலை மாறிவிடும். சரிதை ஏட்டில், அரைநொடியும் பொற்காலம் ஆதல் கூடும் என்பது கவிஞன் மொழி" என்று கூறுகிறார்.

குலோத்துங்கனின் சோகம் பற்றி ஆங்காங்கே, அறிஞர் பெரு மக்களால் பேசப்படுகிறது. நோய் கண்டறியப்படுகிறது. நோய் முதல் - நோய்க்குக் காரணம் - நோயின் ஊற்று கண்டறியப்படவில்லை; உணர்த்தப் பெறவில்லை. இங்கு இது குறித்து, ஒரு தனிப்பட்ட நிகழ்ச்சி பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

முனைவர் வா.செ. குழந்தைசாமி அவர்களை எனக்குத் தொடர்பு படுத்தியவை தினமணி இதழ்களில் வெளியான, முனைவரின் கட்டுரைகளும் தினகரன் இதழ் ஞாயிறு மலர் வசந்தத்தில் வெளியான, குலோத்துங்கன் அவர்கள் தம்மைப் பற்றி எழுதிய "மறக்க முடியாத நினைவுகள்" குறிப்பும் ஆகும்.

தினமணியில் வெளிவந்த கருத்தாழமும் சொற்செறிவும் தர்க்கசாத்திர நெறி நிற்கும் கட்டுரையமைப்பும் கொண்ட கட்டுரைகள், முனைவர் வா.செ. குழந்தைசாமி அவர்கள் மீது பெருமதிப்புக் கொள்ளச் செய்தன. கட்டுரைகளில் வந்த "குலோத்துங்கன் கவிதைகள்" மேற்கோள்கள், கண் காணாக் கவிஞர் குலோத்துங்கனின் மரபுக் கவிதைகள் மீது அளப்பரும் மதிப்பும் ஆர்வமும் ஏற்படுத்தின.

வசந்தத்தில் வெளியான, ஆசிரியரின் கடந்தகால நினைவுகள் என்னை, பெற்றோர் பாசமுள்ள அந்த மாமனிதர் மீது மாற்றமறியா இரக்க உணர்வும் மாறாத பாசமும் ஏற்படுத்தின. யார்க்கும் எதற்காகவும் இதை எழுதவில்லை. உண்மை நிலையையே எழுதுகிறேன். முனைவரின் எழுத்துக்களைப் படிக்கும் போது, கண்ணீர் விட்டேன். ஒரு ஆறுதல் கடிதம் எழுதினேன். "எனக்கு, 46 வயதில் என் தந்தையை இழந்தேன். என் பெற்றோரை நினைத்து இன்னும் தனிமையில் அழுகிறேன். தாங்கொணாத் துன்பம் தாங்கி, தங்களை ஆளாக்கி உயர் படிப்புக்கு வழி செய்த பெற்றோர், தங்களின் உயர்நிலை காணும் முன்பே மறைந்தது பேரிழப்பு, பேரவலம், தாங்க முடியாத வேதனை தருவதாகும். தங்களுக்குக் கண்ணீரோடு ஆறுதல் கூறுவது தவிர வேறு வழி எனக்கில்லை" என்று எழுதினேன். ஒரு சில நாளில் பதில் வந்தது.

"ஒத்த உணர்வினரால் தான், உள்ளத்தின் நிலையைப் புரிந்து கொள்ள முடியும்...." என்று எழுதியிருந்தார்கள். மனத்துன்பத்துடன் இருக்கும் இவர்களுக்கு நாம் ஆறுதலாக இருக்க வேண்டுமென்று உறுதி கொண்டேன் கடிதவாயிலாக நட்பு வளர்ந்தது.

"குலோத்துங்கன் கவிதைகள் வெளியீடு" குறித்து, தினமணியில் செய்தி கண்டேன். அந்நூலைக் கூட திரு. அரிகிருஷ்ணன் என்ற நண்பர்தான் வாங்கித் தந்தார். நூலைப் பார்த்தபோது தான் என் வணக்கத்துக்குரிய முனைவர் அவர்கள், மூன்று பல்கலைக் கழகங்களின் துணை வேந்தர் என்பதை அறிந்தேன். அதிர்ச்சியுற்றேன். புழுவினும் கீழான நான் எங்கே புகழ் மலையின் உச்சியில் கொடிகட்டிப் பறக்கும் பெருநிலையாளர் எங்கே?

'குலோத்துங்கன் கவிதைகள்' நூலின் கடைசி அட்டையிலுள்ள கவிதைக்கு ஒரு திறனாய்வு 11 பக்கங்களில் எழுதினேன். அதற்கு அந்த மேதை, "நானே என் நூலுக்கு மதிப்புரை எழுதினாலும் இந்த அளவுக்கு எழுத முடியாது" என்று பதில் எழுதியிருந்தார்கள். அன்று தான், நூலுக்கு மிகச் சிறந்த மதிப்புரை திறனாய்வு எழுத வேண்டுமென்று உறுதியான முடிவு மேற்கொண்டேன். இதுவரை, நான் அவர்களைச் சந்தித்ததில்லை. ஒரு நாள்

சன் தொலைக்காட்சிப் பேட்டியில் இந்த மேலோனை - உயர்பண்பாளரைக் கண்டு மகிழ்ந்தேன்.

முனைவர் குழந்தைசாமி அவர்களின் ஆழ்மனதில் ஆறாமல் கனன்று கொண்டே இருக்கும் பெற்றோரை இழந்ததவிப்பு எனும் பெருநெருப்பை, எந்தப் பதவியும் பாராட்டும் ஆறுதலும் முற்றிலுமாக அணைத்துவிட முடியாது.

அவர்களின் சோகம் மலையினும் மாணப் பெரிது. எனவே குலோத்துங்கன் கவிதைகளில், சோகம் இழையோடுவது புதுமையன்று; புதிரு மன்று. என்னைப் பொறுத்த வரையில் குலோத்துங்கன் கவிதைகளில் ஒவ்வொரு பாடலிலும் சூழல் உருவாக்கப்பட்டு, சோகம் பீறிடினும் வியப்பில்லை.

இந்த அவலத்திடையே தான் அழகுக் கவிதைகள், அறிவியல் கூறுகள் வெளிப்படுகின்றன.

கவலு மென் நெஞ்சின் பாரம் கவிமகள் தணிப்பாள். மிஞ்சும்
அவலம்நின் றழுத்தும் காலை ஆறுதல் தருவாள்

எனவே பாடுகிறேன் என்று கூறுவது உணர்தற்குரியது.

"வாழ்க்கையில் எத்தனையோ அவலங்கள் பிரிவுகள் தாக்கிய போதும் அவற்றையெல்லாம் உள்ளத்தில் பதிவு செய்து கொண்டு, தொடர்ந்து தன் குறிக்கோளை, இலக்கு நோக்கி மேலேறுகின்றன, கவிஞரின் கால்கள்" என்னும் முனைவர் கு.வே. பாலசுப்பிரமணியன் அவர்களின் கட்டுரை வரிகள், குலோத்துங்கன் அவர்களின் சோகத்தையும் வாழ்வியல் நெறியையும் ஒரு சேர விளக்கும் சொல்லோவியமாகும். "முடிதொடு முன் நில்லேன்" என முயன்று வெற்றி காணும் கவிஞரின் வெற்றியின் இரகசியத்தை விளக்கும் பாடல். எனினும் சோகம் இக்கானக் குயிலிசையில் கூடியே வருகிறது, பொதிகைத் தென்றல் புகழ் மணமாய்.

"தாய், தந்தை, தங்கை, தம்பி மறைந்தது, கவிஞருக்கு மிகப் பெரும் சோகத்தை உருவாக்கியிருக்கிறது என்பதை அவர் கவிதையில் காண முடிகிறது. இந்தச் சோகம் அடுத்தடுத்து நிகழ்ந்திருப்பதால் கவிஞர் நெஞ்சில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. குடும்பத் துன்பங்கள் சாதாரண மனிதரை மட்டுமன்றி, திடங்கொண்ட அறிவியல் அறிஞர்களையும் ஆட்டிப் படைக்கும்" எனும் பா. வீரமணி அவர்களின் கருத்து கவனத்திற்குரியது.

11.13. இன்றைய நிலை

இன்றைய நிலை குறித்த கவிஞரின் கருத்து களிப்பூட்டுவதாக இல்லை. கவலை சேர்ப்பதாக உள்ளது.

திரும்பிய பக்கமெல்லாம் தீமைகள் மலியத் தீயோர்
விரும்பிய யாவும் பெற்று விளங்கிடும் தோற்றம் கண்டேன்

என்று, கொடியோர் கொடிகட்டிப் பறக்கும் கொடுமையைக் குறிப்பிடுகிறார்.

மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்து கிடப்பதுவும்
நூலோர்கள் செக்கடியில் நோவதூஉம் காண்கிலையோ?
எண்ணற்ற நல்லோர்கள் இதயம் புழுங்க இரு
கண்ணற்ற சேய்போற் கலங்குவதும் காண் கிலையோ?

என்று அந்நியரிடமிருந்து உரிமைபெற நம் நாட்டு நல்லோர்பட்ட துன்பத்தை, அவல ஓவியமாகப் பாரதி காட்டுகிறார். திரும்பிய பக்கமெல்லாம் தீயோர் செழித்து வளர்வதைக் குலோத்துங்கன் காட்டுகின்றார். எதிரெதிரான பாத்திரங்கள். ஆனால் இரண்டுமே அவலச் சுவை. இருவரின் குறிக்கோளும் ஒன்றே, நல்லாட்சி அமைத்தலே ஆகும். எதிர் எதிரான நிலைகளிலும் ஓர் உன்னதமான கருத்தை உருவாக்க முடியும் என்பதற்கு, இவர்களின் படைப்புகள் உயர்ந்த சான்றுகளாகின்றன. பாரதியின் தலைப்பு "சுதந்திரப் பயிர்" குலோத்துங்கனின் தலைப்பு "வேள்வி ஒரு விளை நிலம்". சிறுமையர் வாழ்தல் கண்டும் சிறையில் தள்ளத் தகுந்தவர் ஆட்சியில் வீற்றிருத்தல் கண்டும் நெஞ்சம் கலங்குவதாகக் கூறும் கவிஞர், நெஞ்சுக்கு நீதி தன்மையில்,

உலகினில் நாளும் தீமை
நின்றதாய்ச் சரிதை இல்லை.
நேர்மையை என்றும் தீமை
வென்றதாய்ச் சரிதை இல்லை.

* * *

ஆள்வினை தோற்றதில்லை. அறவழி தவிர்ந்தி டாத
வேள்வியும் திறனும் மண்ணில் விண்ணகம் படைத்தளிக்கும்

என்று உலகப் பொது நியதியை உணர்த்துகிறார். பாஞ்சாலி சபதத்தில் பாரதியார் கூறும்

கட்டுண்டோம் பொறுத்திருப்போம் காலம் மாறும்
தருமத்தை அப்போது வெல்லக் காண்போம்........

* * * *

தருமத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும்.
தருமம் மறுபடியும் வெல்லும்

என்னும் பொது நியதியும் அறிவுரையும் குலோத்துங்கன் கவிதையுடன் பொருந்தி வரக் காண்கிறோம்.

பரந்த உள்ளப் பண்பினர்; சாதி, சமயம் கடந்த சன்மார்க்க நெறியினர்; கடமையாற்றலே கடவுள் பணியென்றெண்ணும் மனச் சான்றுள்ளோர்; புதியன புகுதலை ஏற்றுத் திருந்திடும் தியாக உள்ளச் செம்மையர்; சமத்துவத்தின் அடிப்படை தெளிந்த ஆட்சி அமைத்திடும் திறனுடையர்; சிறந்தோர்களைப் பதவியில் அமரச் செய்வதற்கு வழிவகுக்க சபதம் ஏற்போம் என்று நல்ல சமுதாயம் - புதிய பாதை - காண விரும்பி வழிகாட்டுகிறது குலோத்துங்கன் கவிதை.

12. கவிதை நயம்

12.0. முன்னுரை

கவிஞர்கள் - இலக்கியம் படைப்போர் - இறைவனுக்கு நிகரானவர்கள். இறைவன், உலகைப் படைக்கிறான்; எழுத்தாளன், இலக்கியம் படைக்கிறான். இருவர்க்கும் படைப்புத் தொழில், பொதுவானது. சூழல்; காலம்; உள்ளப்போக்கு இன்ன பிறவற்றின் நிலைக்கேற்ப, உந்துதலால், தாக்கத்தால் இலக்கியம் படைக்கப் பெறுவதால், படைப்புகளின் தன்மைகளும் தரமும் மாறுபடுகின்றன. ஒரே காலத்து எழுத்தாளர்கட்குள்ளும் நோக்கும் நோக்குக் கொப்ப இலக்கியப் போக்கும் பொருளும் வேறுபடுகின்றன.

புத்தகங்கள் மூன்று வகைகளாகப் பகுக்கப் பெறுகின்றன.

1. சுவை பார்க்கத்தக்கவை

2. விழுங்கத்தக்கவை

3. மென்று சீரணித்தற்குரியவை

குலோத்துங்கன் கவிதைகள் நூல், இவ்வரிசையில் மென்று சீரணிக்கத் தகுந்த நூல்களில் முக்கிய இடம் பெறுகிறது.

"நாம் படிக்கும் புத்தகங்கள், நம் நண்பர்களைப் போன்று, சிறிதளவில் இருக்க வேண்டும். பொறுக்கி எடுத்ததாகவும் இருக்க வேண்டும்" என்ற இலக்கணத்திற்கு, இலக்கியமாகத் திகழ்வது இந்நூல்.

குலோத்துங்கன் கவிதைகளில் உள்ள உவமை; உருவகம்; யாப்புமுறை, கற்பனை நயம், கவிதையழகு, சொல்லாட்சி, புதிய செய்தி, புராணக்குறிப்புகள், அங்கதம், அவலச் சுவை, ஏனைய எழுத்தாளரிடம் இருந்து விலகி நிற்கும் கவிதைப் போக்கு, கவிதை புனையும் சூழல் இன்னபிற இவ்வியலில் இடம் பெறுகின்றன.

12.1 குலோத்துங்கன் கவிதைகளின் அமைப்பு

எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான, 401 பாடல்களைக் கொண்ட குறுந்தொகை போன்று, 261 தலைப்புகளைக் கொண்டது, குலோத்துங்கன் கவிதைகள். குறுந்தொகைப் பாடல்கள், நாலடிச் சிற்றெல்லையும் எட்டடிப் பேரெல்லையும் கொண்டவை. குலோத்துங்கன் கவிதைகள், எட்டடிச் சிற்றெல்லையும் 352 அடிப் பேரெல்லையும் கொண்டவை. "பயணம் எங்கோ?" என்ற எட்டடிப் பாடல் 1960இல் எழுதப் பெற்றது. 352 அடிகள் கொண்ட "விதியே! விதியே! தமிழச் சாதியை" என்னும் பாடல் 1995 இல் எழுதப் பெற்றது

1969 இல் எழுதப் பெற்ற "நான் ஒருவனே போதும்" என்ற பாடல், நூலின் பின்புற அட்டையில் இடம் பெறும் சிறப்பைப் பெற்றுள்ளது. கவிதைகள் காலத்தால், அளவில் பெரிதாகியுள்ளன. கவிதைக் கருத்தால், சுவையால், பொருளால் தொடக்கக் கவிதைகளில் தொய்வுள்ளதெனக் கூறுவதற்கில்லை.

மாதமெலாம் முழுநிலவு வாய்ப்பதில்லை.
வளர்பிறையே முடிவின்றி வருவதில்லை.
சாதனைகள் இடையின்றித் தொடர்வதில்லை.
தடம் என்றால் குண்டுகுழி தவிர்ப்பதில்லை

இதைக் கவிதை பற்றிய கவிஞரின் கருத்து, எனவும் கொள்ளலாம்.

"மனிதன் வயது ஏற, ஏற, அனுபவத்தில் முதிர்கின்றான். அந்த அனுபவம், அவனுடைய புறமனத்தில்; அகமனத்தில்; எண்ணத்தில்; சிந்தனையில் தாக்கம் செய்யாமல் இருக்கமுடியாது." என்ற பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் அவர்களின் கருத்து, எண்ணிப் பார்த்தற்குரியது.

"சங்கப் பாடலில் திளைத்துப் பயின்றவர் (குலோத்துங்கன்). தமிழ்க் கலையும் பெருமையும் அங்குதான் உள்ளன என்று 1967 இல் கூறிய அதே கவிஞர், 1981 இலும் 1984 இலும் "மாறுவதும் எங்கள் இனம் நிமிடந்தோறும் வளர்வதும் எங்கள் இனம்" என்று பாடுகிறார் எனக் குறிப்பிடுகிறார் கலாநிதி க. கைலாசபதி அவர்கள்.

என்னை வளர்த்தாரின் இரவு பகலாகத்
தன்னை அழித்தெனக்குத் தடம் சமைத்த தந்தையரின்
அன்னை எனும்பெயரின் அழியாத காவியத்தின்
பொன்னை நிகர்த்தபதம் போற்றிப் படைக்கின்றேன்

என்று பெற்றோர்க்கு இந்நூலைக் காணிக்கையாக்குகின்றார். பாசமுள்ள பெற்றோர்; நன்றி மறவாப் பண்பு மகன்.

"படையல்" என்னும் தலைப்புள்ள பாடலுடன் இந்நூல் தொடங்கித் "தியாகதீபம்" என்னும் கவிதையுடன் முற்றுப் பெறுகின்றது. வடலூர் வள்ளலின் அணையா விளக்கை - அருட்பெருஞ்சோதியை நினைவு படுத்துவதாக நிறைவு பெறுகிறது.

சிந்தனைப் பறவைதன் சிறைவிரித்தெழும்நிலை
வந்த நாள் முதலதன் வானமும் வளியும்
இலங்கும் கதிரும் இதயம் நிறைந்து
துலங்கும் ஆசையின் துணையும் ஆனமெய்ப்
பொருளே!......

என்று சிறகு விரிக்கும் சிந்தனைப் புள்ளில் ஆரம்பித்து,

மாலைகளும் பாராட்டும் வாய்ப்புகளும் வந்தடையும்
காலை உனை யன்றிஒரு கடவுளையும் நான் நினையேன்

என்பதுடன் முற்றுப்பெறுகிறது.

தாய்நாட்டுப் பற்றை வெளிப்படுத்தித் தொடங்கி, மாண்டதம் தங்கைமீது கொண்ட மாறாத பாசத்தை நிலை நிறுத்தி முடிக்கிறார், கவிஞர். வானவெளியில் கவிதைச் சிறகை விரிக்கத் தொடங்கும் கவிஞர், மாலைகளும் பாராட்டும் வந்தடையுமென்று, வருங்காலத்தைக் கணித்தார். அவ்வாறே பதவி, பட்டங்கள், பாராட்டுகளும் பெற்று, எட்டா உயரத்தில் புகழுடன் நின்று நிலவுகின்றார்; மேலும் உயருகின்றார். நல்ல கவிஞன் வாக்கு, பொய்ப்பதில்லை. வருங்காலம் உரைக்கும் தீர்க்கதரிசிக் கவிஞர் எனப் போற்றவா? குறிக்கோளுடன் எழுதப் புகுந்து, இலக்கினை எட்டிய இலட்சியக் கவிஞரெனப் புகழவா? இரண்டும் இணைந்த ஈடிலாக் கவிஞரெனல் பொருந்தும். "உண்மையான எழுத்தாளருக்கு மன உறுதி வேண்டும்" என்பது ஓர் அறிஞரின் வாக்கு. மாறா மன உறுதி கொண்ட மாக்கவிஞன் குலோத்துங்கன்.

12.2. கவிதை இலக்கணமும் குலோத்துங்கன் பாடலும்

"வாழ்க்கையின் மறுபாதியாகவும் உண்மையின் வரிவடிவமாகவும் இருப்பதே கவிதை" என்பார் தம் இலக்கணத்தின் இலக்கியம் இக்கவிதை நூல்.

"மேதை எழுத்தாளர்கள், இதயத்திலிருந்து பேசுபவர்கள்" என்பதற் கேற்ப, உண்மையைக் கலப்பின்றி உரைப்பவராக உள்ளார் கவிஞர். எச்சூழலிலும் எவருக்காகவும் தாம் உணர்த்த விரும்பிய மெய்ம்மைகளைத் திரையிட்டுச் சமரசம் செய்து கொள்ளாத நேர்மையான - துணிச்சலான - எழுத்து குலோத்துங்கனின் கவிதை. இதனால் இவர் பிடிவாதக்காரர்; பித்தரென்று பொறாமைக்காரர் சூட்டிய பட்டங்களை மகிழ்வுடன் ஏற்றுக் கொண்ட மாமனிதர், கவிஞர் அவர்கள்.

"ஒரு பானை காடியைக் காட்டிலும் ஒரு சொட்டுத்தேன், ஈக்களை அதிகம் ஈர்க்கும்" என்பதற்கேற்பச் சுவைஞர்கட்குத் தேன் கவிதையாகிறது நூல்; தீங் கவிதைகள் ஆகின்றன "குலோத்துங்கன் கவிதைகள்."

"உண்மை மனிதர்கள் எல்லோரும் ஒரே சேனையிலிருக்கும் சிப்பாய்கள். அவர்கள் செய்யும் யுத்தமும் ஒரே விரோதியின் மேல்தான்." பகுத்தறிவுப் பாசறைக் கொள்கை வழி நின்று, பாவேந்தர் பரம்பரைக் கவிஞராகத் திகழும் நூலாசிரியர் அவர்கள் மூடக் கொள்கைகளை ஒழிப்பதிலும் சாதி, சமய பேதமற்ற புதியதோர் உலகு செய்வதிலும் கருத்தூன்றிய காலந்தொட்டு, தொய்விலா நிலையில் தோய்ந்து நிற்கின்றார்.

"உண்மையான ஆய்வாளன், ஒரு தலை சிறந்த உலகக் குடிமகன். மானிடம், அவன் இனம். உண்மை காண்பது, அவன் குறிக்கோள். அதற்கான பாதை அமைப்பது; பாலம் அமைப்பது அவன் பணி" என்னும் கலாநிதி க. கைலாசபதி அவர்களின் கருத்துக்கேற்ப, குலோத்துங்கன் கவிதைகள் உள்ளன. கைலாசபதியின் கவிதை இலக்கணத்துக்கு இந்நூல் செய்யுள் இலக்கியமாகிறது.

"குலோத்துங்கன் கவிதைகளில் ஒரு கட்டமைப்பு உண்டு. முதலும் முடிவும் இயைந்து, கருத்துக் கோர்வையாகக் கட்டுக் கோப்பாகக் காணப்படும்" என்னும் முனைவர் தமிழண்ணல் அவர்களின் மதிப்பீடு, குலோத்துங்கன் கவிதைகளின் இலக்கணத்தை விளக்குவதாக உள்ளது.

"தமிழில் வழி, வழி வந்த மரபு நிலையைக் கவிதையாக்கத்தில், செவ்வனே கடைப்பிடித்துள்ளார் குலோத்துங்கன் அவர்கள்" என்ற கார்த்திகேசு சிவத்தம்பி அவர்களின் கூற்று, குலோத்துங்கன் கவிதைகளின் மரபு; சார்பு விளக்கும் சான்றாகும்.

"கவிதைப் பொருள் கூற்று முறையில் பார்க்கும் பொழுது, இவர் கவிதைகள், பாரதியார், பாரதிதாசன் மரபில் வந்ததை இத்திரட்டைப் பார்த்த உடனேயே தெரிந்து கொள்ளலாம்" என்ற கார்த்திகேசு சிவத்தம்பி அவர்களின் கருத்து, குலோத்துங்கன் கவிதைகளின் போக்கை உணர்த்துகிறது.

அரசியல், தலைவர்கள்; நேர்மையற்ற ஆட்சியாளர்; இழி நிலை மாந்தர்; தமிழை அறிவியல் தமிழ் ஆக்காமல், பழம்பெருமை பேசுவோர் போன்றவர்களை எள்ளி, இடித்துரைக்கும் பாங்கில் கவிதைகள் வடிவம் பெற்றுள்ளன.

"குலோத்துங்கன் கவிதைகளில் தன்முயற்சி, தன்னம்பிக்கை, தன்னெழுச்சிப் பாடல்கள் புதுமையாய்ப் பாடப் பட்டுள்ளமையைக் காணலாம்" என்கிறார் முனைவர் தமிழண்ணல் அவர்கள்.

உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்.....
ஊழையும் உப்பக்கம் காண்பர்......
முயற்சி, மெய் வருத்தக் கூலி தரும்......
எண்ணிய எண்ணியாங் கெய்துப......

என்பன போன்ற பல அறிவுரைகளைச் செயல்படுத்தும் பார்வையை அழுத்தமாக வலியுறுத்துகின்றன என்பது முனைவர் தமிழண்ணல் அவர்களின் கருத்து.

"குலோத்துங்கனிடம், திருவள்ளுவரையும் திருமூலரையும் காண்கிறோம். திறனாளிகள் பலரும் குலோத்துங்கனிடம் பாரதியார் சாயலும் பாரதிதாசனின் பாதையும் காணப்படுவதாக எழுதியுள்ளனர். ஆனால், இவரிடம் காணப்படும் 'மரபு வளர்ச்சியை' ஆழ உணர்ந்து கூறினாரல்லர்.... குலோத்துங்கம், தமிழ்க் கவிதைக் கோபுரத்திற்கிட்ட கலசங்களாகும்" என்கிறார் தமிழண்ணல் அவர்கள்.

பார்ப்பவர்களின் கோணத்திற்கெல்லாம் ஏற்ப மிளிரும் பன்முகத் தோற்றம் கொண்டது, குறள் போல் குலோத்துங்கன் பாடல்.

12.3 கவிதைகளின் அமைப்பு - யாப்பு முறை

"தொடக்க நிலையில், விதி முறையான யாப்பு முறைகளையே கையாண்ட குலோத்துங்கன், படிப்படியாகப் பேச்சோசை மிகுந்த நடைக்கு

வருவதைக் காண முடிகிறது" என்று குலோத்துங்கன் கவிதைகளின் அமைப்புப் பற்றி விளக்குகிறார் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள். எடுத்துக்காட்டாகக் கவியரங்கக் கவிதைகளைக் குறிப்பிடுகிறார்.

கவியரங்கத்தில் பெரும்பாலும் ஓசை நயத்திற்கே முதன்மை கொடுக்கப்படுவதால், நிலைத்த மரபு யாப்பு நிலையை எதிர்பார்ப்பதற்கில்லை என்பது கண்கூடு. நேயர்கள் முன்பு நேராகப் பாடப்படுவதால் நேயர்களின் பாராட்டைப்பெறும் நினைவில், பேச்சு ஓசை மிகுந்த நடை வருவதைத் தடுப்பதற்கில்லை. கவியரங்கக் கவிதைகளின் போக்கை மட்டுமே கொண்டு கவிதையின் நிலையை நிர்ணயித்தல் சிறந்த அணுகுமுறை யென ஏற்பதற்கில்லை யெனலாம். சிலேடைகள் இரட்டுற மொழிதல், எள்ளல் போன்றவையும் கவியரங்கக் கவிதைக் கூறுகளாவதைத் தடுப்பதற்கில்லை; முழுமையாகக் குறை கூறுவதற்கில்லை. குலோத்துங்கன் கவியரங்கப் பங்கேற்பை உறுதியோடு தவிர்த்தவர். பாரதி கண்ட பாரதம் எனும் வானொலிக் கவியரங்கம் ஒரு விதி விலக்கு.

"கவிதைக்குத் தேர்வு செய்கிற சொல்லின் அழகும் அதைச் சொல்கிற அழகும் இணையும் போதுதான் கவிதையில் கவித்துவம் கிடைக்கிறது" என்கிறார் தணிகைச் செல்வன் அவர்கள். குலோத்துங்கன் கவிதையில் இவை இயைந்துவரக் காண்கிறோம்.

> சொல், பாட்டின் ஓசையுடன் இயைந்து, பாட்டின் லயத்தோடு சொல் இயைந்து நிற்கும் தன்மை, பாடலின் சிறப்புக்கு மிக முக்கியமாகும். அந்தச் சொல்லின் உச்சரிப் போசையும் பாடலின் பொருளும் இணைந்து நிற்கும் இயைபு, கவித்துவ ஆற்றலுக்கான உரைகல்லாகும்...... தமிழின் இந்தக் கவித்துவப் பாரம்பரியம், திருக்குறள், நாலடியார் முதல் சதகங்கள் வரை காணப்படுகின்றது. இந்தக் கவிதை மரபைக் குலோத்துங்கன் தனக்கென உள்வாங்கியுள்ளார்

எனும் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்களின் கூற்று, குலோத்துங்கன் கவிதைகளின் அமைப்பு முறையின் கூர்மையான படப்பிடிப்பாகும். அகவல், கண்ணி, சிந்து, விருத்தம் போன்ற மரபு வழி யாப்பு முறைகள் கவிதைகளில் அமைந்துள்ளன.

"குலோத்துங்கன் கவிதைகளில், உணர்ச்சிக்கு அதிக இடத்தைக் கவிஞர், கொடுத்தாரில்லை. உணர்ச்சிக்கு மேலாகச் சிந்தனையே - அதாவது கருத்தே - ஓங்கி நிற்கிறது. சொல்வளத்தின் வழி, மொழிநலமே இப்பாடலின் பிரதானச் சிறப்பு" - இது கலாநிதி க. கைலாசபதி அவர்களின் கருத்து.

"உணர்ச்சி வெளிப்பாடு என்ற ஒரு வழிப் பாதையில் ஓங்கி நிற்கும் இன்றைய தமிழ்க் கவிதைக்கு, இன்றியமையாத மாற்றுவழியாக அமைந்துள்ளது இந்நூல்" என்கிறார் க. கைலாசபதி.

குலோத்துங்கன் கவிதைகள், பொருள் வாரியாகப் பகுக்கப் பெற்றுள்ளன. அவர் புதுக்கவிதையில் ஈடுபாடுள்ளவர் அல்லர்.

புரியாததும் விளங்காததும் விடைகாணமுடியாததும் தாம், புதுக்கவிதைகளின் போக்கும் நோக்கும் பண்பும் பயனுமெனக் கருதுவதால், குலோத்துங்கன் கவிதைகளில், புதுக்கவிதையின் நிழல் கூடத் தீண்ட வில்லை. தொடக்கம் முதல், முடிவு வரை முற்றும் மரபுக் கவிதைகளாலான அமைப்பில் உள்ளது இந்நூல்.

நூலின் அமைப்பும் யாப்பும் பழந்தமிழ் இலக்கியத்தில் திளைத் தோர்க்குப் பேரின்பம் நல்குவதாக அமைந்துள்ளன.

12.4.0. அணிகளும் கவிதைச் சிறப்பும்

அழகிய - எளிய - உவமைகள்; இல்பொருள் உவமை; புதிய உவமைகள்; உயர்ந்த உருவகங்கள்; புதிய செய்திகள்; சொல்லாட்சி; புராண மேற் கோள்கள்; அங்கதம்; அவலம் கவின்மிகு கற்பனைகள்; அழகுக் கவிதை யமைப்புடைய பாடல்கள் போன்றவற்றின் சிறப்புக்கள் நூலின் உள்ளடக்கமாக உள்ளன. வாழ்வின் உண்மைகளை எழிலுடன் எடுத்துக்காட்டுகின்றன.

12.4.1. உவமைகள்

கவிதைக்கு - அழகு - செய்வது, அணியாகும். அணிகளுக்கெல்லாம் தாயணி உவமையணி. இந்நூலில், உவமைகளே மிகுதியாகப் பயன்படுத்தப் பெற்றுள்ளன. சிறப்புடன், சிந்தனையைக் கூர்மைப்படுத்துவனவாகவும் அணிகள் அமைந்துள்ளன. அதனால், உவமைகள், மிகுப்பயன் நல்குவனவாக மிளிர்கின்றன.

......கலைபிறந்த தாயகமே!
மழைகண்ட மயிலன்ன எனது நெஞ்சம்
மலர்கின்ற கனவுகளில் மகிழும் பாடும்.

வெம்புயல் தோணிபோல அலைகின்றோம்....

வெறிநாய் குதறி வீசிய தென்னச் சிதைத்தனர் ஈழம்

பாரம்கண் டஞ்சாத பகடுபோல் நின்றாய் நீ....

என்பன போன்ற உவமைகள் பல அணி செய்கின்றன நூலை.

உவமமும் பொருளும் ஒத்திருப்பதோடு, உயர்ந்த பொருளையே ஒப்பிடுகிறார் கவிஞர். நெஞ்சில் நிலைக்கும் உவமைகள் கையாளப் பெறுகின்றன.

12.4.2. இல்பொருள் உவமை

முனைவர் வா.செ. குழந்தைசாமி அவர்கள் ஓர் அறிவியல் மேதை. பயனற்றவை; பகுத்தறிவுக் கொவ்வாதவை பயன்படுத்தப் படலாகாது என்ற

நெறி நிற்பவர். இலக்கியம், இன்பம் பயத்தல் வேண்டும் என்பதில் ஒத்த கருத்தினர். எனினும் மிக உயர்ந்த கருத்தளிக்காத கோட்பாடுகளை ஏற்பதில்லை. 261 தலைப்புக்கள் கொண்ட நூலில், எண்ணிற்கடங்காத உவமைகள் உலவுகின்றன. ஆனால் இல்பொருள் உவமை, ஒன்றே ஒன்று மட்டும் அணியென்ற பெயருக்கு இடம் பெறுகிறது.

.......வாரணம் நடந்த தன்ன
மலையெழுந் தசைந்த தென்னப்
பெருமிதம் கலந்த பண்பின் பீடுடை வாழ்வு......

எனும் பாடல் இல்பொருள் உவமையணியின் எடுத்துக்காட்டாக இடம்பெறுகிறது.

உயர்வு நவிற்சியில்லாமல், உள்ளதை உள்ளவாறு
கூறிவிடுகிறார், குலோத்துங்கன்

என்னும் க. கைலாசபதி அவர்களின் கருத்து, குலோத்துங்கன் கவிதைகளின் சிறந்த - மெய்ம்மையான - சொல்லோவியமாகும். இல்பொருள் உவமையை ஏன் கவிஞர் கையாளவில்லை என்பதன் காரணம் புரிகிறது.

12.4.3. புதிய உவமைகள்

தொன்று தொட்டுப் பயின்று வரும் உவமைகளினின்றும் மாறுபட்டுப் புதிய உவமைகளைக் கூறுகிறார். சொல்லாட்சி போன்று தோன்றுகின்றன அப்புதிய உவமைகள்.

கூட்டம் சிதறிப் போவதை, அவிழ்த்துவிடப் பட்ட நெல்லிக்காய் மூட்டைக்கு உவமை கூறுவர். ஆனால் இந்நூல்,

பாசிகள் அவிழ்ந்து பரவின என்னத்
தேசம் பலவினும் சிதறிய குழுவாய்....

என நூலறுபட்டுச் சிதறிய பாசிகளுக்கு உவமை கூறுகிறது. என்றும் இளமை மாறாநிலைக்குப் புதிய சொல்லாக - சொல்லாட்சியாக - "மார்க்கண்டம்" என்னும் பதத்தைக் கவிஞர் பயன்படுத்துகிறார்.

நாய்விற்ற காசு குரைக்காது.
வேப் பெண்ணெய் விற்ற காசு கசக்காது

பரவலாக உலவும் பழமொழிகள், ஆனால் குலோத்துங்கன் அவர்கள், "அரசியல்வாதி பாட்டு" என்னும் கவிதையில், "செல்வம் எவ்வழி வரினும் அதன் எடை குறைவதில்லை" என்றொரு புதிய கருத்தைக் கூறுகிறார். பொருள் பொதிந்த பொன்னுரை. அரசியல்வாதிகளின் தத்துவமாக ஓர் அரிய உவமையைப் படைக்கிறார், அரசியல்வாதிகள் 'ஆசையின் பக்தர்கள். அவர்கள் தத்துவம்:

ஆசையும், கடவுளும் நிகராம் - எல்லை
அறியாத சக்தி இவை எது தொழினும் ஒன்றே

என்பது கடவுளுக்கு ஒரு புதிய உவமை.

12.4.4. புதிய செய்திகள்

இலங்கையின் கதிர்காமத்து முருகன் கோவிலில், முருகன், வள்ளி, தெய்வானைக்குச் சிலைகள் இல்லை. முருகன் உருவமும் துணியில் தீட்டப் பெற்ற ஓவியமே, திரு உருவத்திற்குப் பதிலாக உள்ளது. இதைக் காட்டிலும் மிக முக்கியச் செய்தி, தமிழர் சமயத்துக்கு முற்றிலும் மாறான பௌத்த சமயத் தலைவர் - மதகுரு - முருகனுக்குப் பூசனை புரியும் செய்தியாகும். இப்புதுச் செய்தி, வியப்பும் வேதனையும் தருகிறது.

கைகள் தொடாது, கால்கள் படாது
கலவிகள் நிகழ்வதுண்டு - உணர்வுகள்
கரைபுரண் டெழுவ துண்டு......
......உருளம் குவிவதும் கலவியடா

என்பன, உடல் ஒன்றா உள்ளப் புணர்வும் கலவியே என்ற கருத்தை வலியுறுத்தும் புதிய செய்திகளாகும். இதற்கு அரண் செய்வதாக, "நினைந்து, நினைந்து" எனும் பாடலில் "நம்முளம் உடல் இன்பத்தைத் தாண்டிக் கலந்தவை" என்ற செய்தி தருகிறார்.

வறுமைக்குக் கவிஞர் தரும் விளக்கம், "வண்மை முடம்" என்பதாகும்.

கண்முடம் குருடாம்; கால்முடம் நொண்டி.
வண்மை முடமெனின் வறுமை என்றுணருவம்

தன்னைத் தழுவும் தன் மனைவியின் கையை,

தசை அரும்பிப் பூத்தாலன்ன அங்கை
என துடல் தழுவ என்கிறார்

நினைந்து நினைந்து மகிழத்தக்க உவமை.

12.4.5. உருவகங்கள்; கருத்துச் செறிவுகள்

"நெருப்பனைய அறிவுப்பசி" என்று கூறாமல், "மூளும் அறிவுப் பசி நெருப்பு" என எழுதி உருவகம் தருகிறார். கருத்துச் செறிவுமிகு பாடல்கள், குலோத்துங்கன் கவிதைகள்.

காலங்கள் மறைய வாழ்வின் காட்சிகள் வளர நெஞ்சின்
பாலங்கள் விரிய ஆய்வுப் பார்வையும் முதிர நம்பும்
மூலங்கள் மாறக் கண்டேன்

என்னும் பாடலில் மறைய, வளர, விரிய, முதிர, மாற முரண் சொற்கள். கவிதை அமைப்பு இன்பம் நல்குவதாக உள்ளது.

அந்தாதி அமைந்த பாடல், சிலம்பின் "என்னை இடர் செய்தவை" அமைப்பில் உள்ளது. நனிசிறந்த கவிதை நயத்துக்கோர் நல்ல எடுத்துக்காட்டு.

பொன்னுடலின் பேரெழிலோ? எழில் விரிந்த
பொலன் கதிரின் நல்லொளியோ? ஒளிசிரித்த
மின்னலெனும் சிற்றிடையோ? இடைசுமந்த
மெல்லுடலின் நடை அசைவோ? அசைந்த செவ்வாய்
புன்னகையின் வெள்எயிறோ? எயிறு போர்த்த
பூவிதழின் நன்மதுவோ? மதுவிணைந்த
கன்னல்மொழித் தீஞ்சுவையோ? எனது நெஞ்சம்
கவர்ந்திட்ட பொருளெதுவோ? காணேன் அம்மா!

கருத்துச் செறிவும் சொல்லும் எழிலும் கைகோர்த்து நிற்கும் முக்கனிகள் இணைந்த அமுதக் கூட்டு.

நீரிலா வளமும் நன்செய் நிலமிலா விளைவும் நூற்ற
நூரிலா உடையும் பல்பொன் நலமிலாத் தொழிற்ப டைப்பும்
வேரிலா நாற்றும் நெஞ்சம் விழைவன யாவும் சேர்ப்பர்
கூரிய மதியும் ஆய்வும் கொள்கையும் கொண்ட வல்லோர்.

கற்பனை வளம் மிக்க கவிதைக்கோர் எடுத்துக்காட்டு.

தங்கவணத் தளிருடலென் தழுவலிலே
துவள எழில் தவழும் கண்ணில்
பொங்குமிளங் காதலுளம் பொலியஇளந்
தசையரும்பிப் பூத்தா லன்ன
அங்கைஎன் துடல்தழுவ அலைபுரளும்
இன்பத்தில் அகம் மறந்து
செங்கொவ்வை இதழ் அவிழ "அத்தான்" என்றாள்
வாழ்வுதேன் ஊற்றென்றேன்.

அகச் சுவைக் காட்சியின் அற்புதப் படப்பிடிப்பு. அகப்பொருள் இலக்கியத்தின் அழகு மிளிர் கலை ஓவியம்.

பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் புகழ்பாடும் பாடலாகப் "புதுவைத் தமிழ்க்குயில்" என்னும் கவிதை, ஆக்கம் பெற்ற ஆண்டு 1947. விளையும்பயிர் முளையிலேயே தெரிந்துள்ளது: கவிஞரின் வயது 17.

இலக்கியத்துக் கணி செய்தாய் இசைக்கலையின்
வளம் மிகுத்தாய். நிறைந்த மூடப்
பழக்கத்தை வேரறுத்தாய். பைந்தமிழைப்
புதுப்பித்தாய். ஒடிந்த நெஞ்சும்
கிளர்ச்சிபெற முரசொலித்தாய். உரிமை எனக்
கிளர்ந்தெழுந்தாய். தமிழர் எங்கள்
உளத்தினிலே குடி கொண்டாய். வாழி புகழ்க்
குன்றினுச்சி உலவு நீயே!

ஏறத்தாழ 60 ஆண்டுகட்கு முன்பு எழுதப்பட்ட கவிதை இது. தந்தை பெரியார் அவர்கள் மறைந்தது குறித்து எழுதப்பட்டு 1973 ஆம் ஆண்டு விடுதலையில் வெளி வந்த பாடல் "விண்ணோடும் மண்ணோடும் வாழ்வாய்":

"மலைசாய்ந்த தையகோ! தன்மான
உணர்வனைத்தும் வடித்தெடுத்த
சிலைசாய்ந்த தையகோ! தென்னகத்து
மண்முழுதும் தெளிவு கண்ட
நிலைசாய்ந்த தையகோ! நீதியெலாம்
தானாகி நின்ற வேந்தன்
தலை சாய்ந்த தையகோ - தமிழகத்தின்

* * *

கொழு கொம்பு சாய்ந்த தம்மா!

இரங்கற்பாவுக்கோர் எடுத்துக்காட்டு. ஈடிலாக் கற்பனைக் கோர் எழில் விளக்கம். கலப்பில்லா உண்மை நிறை கருத்துக் கோர் கவிதைச் சான்று.

தொடக்கம் தொட்டே, சிறப்புக் கவிதைகள் தோன்றியமைக்கு மேற்கோள்கள். இவை போன்று எண்ணிற்கடங்கா ஏற்றமிகு பாடல்கள் உள்ளன இந்நூலில்.

12.4.6 அவலச் சுவை

நாட்டுப் புறப் பாடல் பாங்கு மிளிரும் ஒப்பாரிப் பாடலெனத் திகழ்வது "கடலில் ஒரு கல்லறை" என்னும் கவிதை.

இலங்கையில் தமிழர்க்கெதிரான சிங்களர் வன்செயலிலிருந்து தப்பித்து உயிர்வாழத் துடித்த நம் தமிழரினம், தோணியில் கடல்கடக்க முயன்றபோது, கலம் கவிழ்ந்து, ஒட்டு மொத்தமாகக் கடலில் மூழ்கி மாண்டது. இச்சோக நிகழ்வே, இக்கவிதையின் கருப்பொருளானது.

தோணி கவிழ்ந்தகணம், துணையின்றி நின்ற கணம்
பேணியவை அத்தனையும் பிரியும் பெருஞ் சோகம்
மின்னலென அங்கமெலாம் விரவுகின்ற நேரத்தில்
என்ன நினைத்தாரோ? எதற்காக ஏங்கினரோ?
சடங்கொன் றறியாது தமர்சூழ்ந் தழுகாது
அடங்கிய-இவ் ஆவிகளின் ஆசைகளை யார் அறிவார்?

ஒப்பாரிப் பாடல் ஒப்பிலா அவலப்பிழிவு!. அவலச் சுவை முகட்டில் பிறந்த, அற்புதக் கற்பனை நிறை பாடல்களில் ஒன்று, "வெறுமை விரிவு". அன்னையின் மறைவு குறித்த கவிதை. வெளியான ஆண்டு 1956 என்பது எண்ணற்குரியது.

பழனம் வறண்டு, பயிர்கருகின் தண்ணீர்
உழவர் இறைத்தங் குயிர் கொடுப்பர். மானிடர் தம்
உள்ளம் வறண்டு, உயிர்கருகும் காலத்து
வெள்ளப் புனலெதுவும் வியனுலகே! கண்டிலை யோ?

கற்பனைச் செறிவு மிக்க, கண்ணீர்க் கவிதை. கற்பனையின் மணிமுடியாகத் திகழ்வது "பிந்தியவர், முந்துவதோ?" என்னும் கவிதை.

ஆசிரியரின் தங்கை, புற்றுநோயால் துன்புற்ற நிலையில் உருவான சோகக் கீதம்! அவலப் பாடல்! துன்பக் கவிதை!

"தான் வருந்தினால், சொந்தங்கள் புலம்புமே என நினைத்துச் சோகத்தை உள்ளடக்கி வைத்ததனால், துன்பங்கள் எல்லாம் புற்றாக உருவெடுத்துவந்து, தங்கைக்குக் கொடிய நிலையைச் சேர்த்தன" என்று கருதுகிறார், கவிஞர்.

கண்ணீரை உள்ளடக்கிக் கவலைகளை மூடிவைத்துப்
புண்ணீரின வெம்மையெலாம் பொறுத்தாய் இவையனைத்தும்
புற்றாக வந்ததுவோ பொறைமகளே?

என்னும் பாடல், விண்ணில் விண்மீன்கள் ஏன் கொப்புளங்கள் போல் தோன்றுகின்றன என்பதற்குக் காரணங் கூறும் பாவேந்தரின் பாடல் சிறப்புப் போல் உள்ளது.

மண்மீதில் உழைப்பாரெல்லாம் வறியாராம் உரிமை கேட்டால்
புண்மீதில் அம்புபாய்ச்சும் புலையர்செல்வராம் இதைத்தன்
கண்மீதில் பகலிலெல்லாம் கண்டுகண் டந்திக்குப்பின்
விண் மீனாய்க் கொப்பளித்த விரிவானம் பாராய் தம்பி!

என்பது பாவேந்தர் பாடல்.

பிறர் துன்பத்தில் மகிழ்வோர் போன்று, நம்மை அறியாமலேயே அவலத்தில் மிளிரும் கவின் மிகு கற்பனைகள் தரும் இலக்கிய இன்பத்தைச் சுவைக்கிறோம். இலக்கியம் சுவைப்போரின் சாபக்கேடு என்பதா அல்லது இலக்கியத்தின் அற்புத ஆற்றல் இது என்பதா? கவிஞரின் அவலப் பாடல்களும் அற்புத இலக்கிய ஆற்றல் மிகுந்தன என்பதில் ஐயமில்லை.

12.4.7. அங்கதம்

குலோத்துங்கன் கவிதைகளில் எள்ளல் குறிப்புகளும் ஏராளம் உள்ளன. "எழுத்தாள நண்ப!" முற்றும் எழுத்தாளர்கள் சிலரை எள்ளி நகையாடுவதாக அமைந்த பாடலாகவே உள்ளது.

எழுத்தாளர்கள் எங்கெங்கு இருக்க வேண்டுமோ, என்னென்ன பிரச்சினைகளை அலசி ஆய்ந்து தீர்வு காண ஆவன செய்ய வேண்டுமோ, அவற்றை நீத்துப், போகாத இடத்துக்குப் போகும் நிலை குறித்து வெகுண்டெழுவதன் வாயிலாகவே இக்கவிதை ஈட்டிமுனையாக எள்ளல் குறிப்புடன் வெளிவருகிறது.

கூரிய எழுது கோலைக்
கொள்கையின் மையில் தோய்த்துப்...... பெரும்போர்
நடத்துகின்றா யோ வென்ன நகரிலும் நாட்டிலும் மற்
றிடத்திலும் பார்த்தேன் உன்னை எங்குமே காணவில்லை......
......வேடிக்கை மனிதர் கூட்டம் மிகுந்துள இடம் உனக்கு
வாடிக்கை என்றெனக்கு வந்ததோர் செய்தி......

என்பதன் வாயிலாக நிலை தாழ்ந்த எழுத்தாளர்களைப் படம் பிடித்துக் காட்டுகிறார் எள்ளல் சுவைக்கோர், எழில் நிறைந்த எடுத்துக்காட்டு.

"மனத்திற்குள் ஒரு வானகம்" பாடலில், மது அருந்து வோர் நிலை விளக்கம் பெறுகிறது. உள்ளத்தின் ஆழத்தில், கண்கள்காணா இடத்தில் ஓர் உலகம் இருப்பதாக எண்ணி, அதைக் காண வழித்துணையாக - உறுதுணையாக - மதுவை உடனழைத்துச் செல்கின்றனர் மது அருந்துவோர் என்னும் விளக்கம், அங்கதம் மிளிரும் அழகான கற்பனையாக உள்ளது.

கள்ளெனத்த் கலம் ஏறி அத்னைத் தேடிக்
காலமெலாம் அலைகிறதோ மனித சாதி?

கள்ளுண்டோர் இன்ப உலகைச் சுற்றும் தளர் நடைப் பயணம், நமக்கும் இனிக்கிறது.

நாற்கால் யாம்கண்ட தெய்வம் - அதனை
நாள் தோறும் வழிபடுதல் நாம் காணும் இன்பம்......
....செல்வம் எவ்வழி வரினும் அதன் எடை குறைவதில்லை

என்று அரசியல்வாதி கூறும் கருத்து நகைப்புக்கு வழி வகுக்கிறது. "அரசியல்வாதி பாட்டு" எனும் பாடல், பேரறிஞர் பெர்னார்ட்ஷாவின் சிந்தனையையும் கருத்து வெளிப்பாட்டையும் நினைவூட்டுகிறது.

நவரத்தின மாலையில் இணைக்கப்படும் பல்வேறு மணிகள், மாணிக்கங்கள் முத்துக்கள் போன்று, குலோத்துங்கன் கவிதைகளில் அங்கதமும் ஓரினமாக ஒளிர்கிறது. எண்வகை மெய்ப்பாடுகள் தரும் சுவையில், அங்கதமும் - எள்ளலும் - அதன் பங்கை அளிக்கத் தவறவில்லை. கூத்துக்குக் கோமாளி போல், எள்ளலுக்குரியோரும் தேவைப்படுகிறார்கள், இலக்கியத்தில்.

12.4.8 புராணக் குறிப்புக்கள்

"எம்பணி மானிடர் ஏற்றம்" என்னும் பாடலில் மனிதர்களின் தோற்றம், செயல், திறனையும் விளக்கும் கவிஞர், உருவில் மனிதர் சிறியராயினும் செயலில் மிகமேம்பட்டவர்கள் என்கிறார். இதை விளக்கத் திருமால் வாமன அவதாரம் எடுத்த புராணச் செய்தி சுட்டப்படுகிறது.

எப்பொருளும் எவ்வுயிரும் மானிடத்தின்
ஏற்றம்போல் என்மனதை ஈர்த்த தில்லை.
ஒப்பரிய பயணமிது: வாமனர்யாம்
உம்பர்பதி ஊடுருவி உயரச் செல்வோம்.

மாபலி மன்னனிடம் மூன்றடி மண்கேட்டு வாமனனாக - குள்ள உருவினனாக - வந்த திருமால், "ஓங்கி உலகளந்த" புராணக் குறிப்பை நினைவூட்டுகிறார்.

இவ்வாறு புராணக் குறிப்புகளைக் கருத்து விளக்கத்துக்குப் பயன்படுத்துவதால், கவிஞர் புராணத்தில் மூழ்கிப் பொன் தோண்டப் போய் விட்டார் என்று கூறுதல் புரியாதாரின் புலம்பலே ஆகும். திருமாலின் பெருமை பேசுவதால், குலோத்துங்கன் வைணவத்தில் ஈடுபட்டு விட்டார் எனக் கூறுவது, சமயத்துக்கு ஆள் சேர்க்கும் சரியற்ற போக்கு. பகுத்தறிவாளர்கள், புராணக் குறிப்பைப் பயன்படுத்தினால், அறிவியக்கத்தை விட்டு, பக்தி இயக்கத்துக்குப் பாதை மாற்றிவிட்டதாக நினைத்தல், ஒவ்வா நிலையாகும்.

நிலவும் கொடுமைகள், தீயினும் கொடியதாயின் இந்நிலை மறைய - உலகம் அமைதி பெறத் - தீயவை, தீய்க்கப்படல் வேண்டும். முயலகனைச் சிவபெருமான் காலின் கீழ்ப் போட்டு மிதித்தாற்போன்று, கொடுமை மிதிபடல் வேண்டும் என்பது கவிஞரின் விருப்பம். புராண உவமையைத் "தீயவை தீய்ப்போம்" என்னும் பாடலில் கையாளுகின்றார்.

கொதித்தெழுந் தவர்கள் செய்யும் கொடுமையைக் காலில் போட்டு
மிதித்தொரு நடனம் செய்ய மீண்டுமோர் சிவனார் இங்கு
வருவரென் றெண்ணுதற்கு வழியில்லை......

என்கிறார். முயலகனை அழித்த சிவபுராணம் இங்குப் பேசப்படுகிறது. எனினும் அவருடைய பகுத்தறிவுச் சிந்தனை, புராணம் புனைந்துரை என்பதில் நிலைத்து நிற்பதால், சிவனார் வருவரென்று எண்ணுதற்கு வழியில்லை. என்கிறார். அங்கேயும் அறிவியல், ஆய்வு மனப் பான்மையில் நிலைகொண்ட பகுத்தறிவு நிலைப்பாட்டை நிலை நிறுத்துகின்றார். அசைவிலாச் சீர் திருத்தச் சிந்தனையின் வெளிப்பாடு மிளிரக் காண்கின்றோம்.

பாவையினைத் தன்னுடலில் பாதியாக்கும்
பகுத்தறிவால் பரமசிவன் வலிமை பெற்றான்

என்னும் அடிகளால், பரமசிவன், பார்வதியை இடது புறத்தில் வைத்த செய்தியைக் கூறுகிறார். மனைவிக்குச் சம உரிமை கொடுக்கும் பகுத்தறிவு நெறி நின்றதால்தான் சிவன் வலிமை பெற்றான் என்கிறார் கவிஞர். பெண்ணுக்குச் சமநீதி - ஒத்தஉரிமை - வழங்கலே, ஆடவர்க்கு வலிமை சேர்க்கும் என்பதை விளக்கவே புராண மேற்கோளைக் கருவியாக்குகின்றார்.

12.5. கவிதை பற்றிய கவிஞரின் கருத்தும் கொள்கையும்

ஒவ்வொரு நூல் ஆசிரியரும் தன் விருப்பம்
இல்லாமலேயே தன் நூல்களில் தன்னைப்
பற்றி, வெளிப்படுத்திக் கொள்வார்கள்

என்பது மேதை ஒருவரின் கருத்து. முனைவர் வா.செ. குழந்தைசாமி அவர்களும் தம்மைப் பற்றிய சில செய்திகளை ஆங்காங்கே உணர்த்துகின்றார்.

"எழுத்தாளர்கள் மூன்று வகை. சிலர், கீழே விழும் நட்சத்திரங்கள். உடனே மறைந்து விடுவர். இரண்டாவது வகையினர், கோள்களைப் போன்று,

கொஞ்ச காலம் இருப்பார்கள். மூன்றாம் வகையினர், நிரந்தரமான நட்சத்திரங்கள். எப்போதும் ஒளிவீசிக் கொண்டிருப்பவர்கள்." குலோத்துங்கன் கவிதைகள் எப்போதும் ஒளி வீசிக் கொண்டிருக்கும் நிரந்தரத் தன்மை பெற்றவை.

வேரற்ற பொருளன்று கவிதை. செய்யும்
வினையற்ற இடமன்று கவிஞர் வையம்

கவிதைக்கும் கவிஞர் உள்ளத்துக்கும் உரிய நிலையைக் குறிப்பிடுகிறது. கவிதை பற்றிய கவிஞரின் கருத்து நேராக வெளிப்படுகிறது.

எரிக்கின்ற தீயிருக்கும்: நெடிய வெற்பை
இடிக்கின்ற வெடியிருக்கும்: விழுதும் வேரும்
பறிக்கின்ற புயலிருக்கும்: இன்ப வெள்ளம்
பாய்ச்சுகிற ஊற்றிருக்கும் கவிதைச் சொல்லில்

கவிதையின் நிலை எவ்வாறு இருக்க வேண்டும் என்பதையும் உணர்த்தும் பாடலடிகள்.

அழகென அழகென அமைவன இன்பம்.
ஆய்வினில் ஆய்வினில் ஆழ்வதும் இன்பம்
பழகவும் பழகவும் பண்ணிசை இன்பம்
பயிலவும் பயிலவும் பாசமும் இன்பம்

என்பன போன்று, கவிதையும் அழகுணர்வால்; ஆய்வால்; பழக்கத்தால்; பயில்வதால் உருவாகிறது. இன்பம் இணைக்கிறது என்பதை உள்ளுறையாக உணர்த்துகின்றார்.

பாடுதற் கென்று நெஞ்சைப் பறித்தன கோடி யேனும்
நாடுமென் கவிதை உள்ளம் யாவினும் உயர்ந்த தென்ன
நித்தமும் எண்ணுகின்ற நிறைவொடு நாடு கின்ற
தத்துவம் வேறு தேடும் தலைப்புகள் வேறு வேறு

என்று தம் நெஞ்சை ஈர்ப்பனவற்றை எல்லாம் பாடாமல், தாம் தேடுவதை; உலகுக்கு உணர்த்த விரும்புவதையே, தமக்கே உரிய கவிதை நடைத் தலைப்புகளில் பாடுவதாகக் குறிப்பிடுகிறார். இதனால்தான் கண்டதை யெல்லாம் பாடும் இன்றைய கவிஞர்களிடம் இருந்து மாறுபட்டு, அறிவியல் கவிஞராக உயர்ந்து நிற்கிறார், குலோத்துங்கன் அவர்கள்.

இல்லாத படைப்பதுவே இன்பம் வாழ்வில்
எதிர்நீச்சல் முன்னேற்றப் பயணம். மண்ணில்
பொல்லாத யாவெனினும் எதிர்த்து நின்று
போரிடுதல் அறம். தீமை பொறுத்து நிற்றல்
நல்லார்தம் இயல்பன்று மாற்றங்கள் வளரும்

* * * *

மாறாத பொருளெதுவும் வளர்வ தில்லை

என்று தம் கவிதைக் கோட்பாடாகக் கூறுகிறார். இக்கொள்கையின் அடிப்படையில், குலோத்துங்கன் கவிதைகள் மலர்கின்றன. மணம் பரப்புகின்றன.

12.6. கவிஞரைப் பற்றி, அவருடைய கவிதை பற்றி அறிஞர்களின் கருத்துக்கள்

கவிதை எப்படி அமைய வேண்டுமென்று குலோத்துங்கன் கூறுகிறார். குலோத்துங்கனின் கவிதைகள் எப்படி அமைந்துள்ளன என்பதைக் கற்றறிந்த - ஆன்றவிந் தடங்கிய கொள்கைச் சான்றோர்கள் கூறுவதைக் கேட்டாய்ந்தால், குலோத்துங்கனின் கவிதை நிலையை உணர முடியும் சான்றோரின் கருத்துகள், ஒரு சிறந்த படப் பிடிப்பாக அமையும்.

> இவரது (குலோத்துங்கனது) ஆக்க நோக்கு, ஆக்க முறைமை ஆகியவற்றைப் பார்க்கும் போது இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் முதன்மை இடம் பெற்ற கவிதைப் பண்பாட்டிலிருந்து வேறுபட்ட ஒரு கவித்துவ நோக்கும் தொழிற்பாடும் இவரிடத்தில் காணப் படுவதை அவதானிக்கலாம்

என்கிறார் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள்.

> சான்றோர் செய்யுட்கள் எழுந்த காலத்திலிருந்து, தத்துவத் தெளிவுடனும் தரிசன வீச்சுடனும் காலத்துக்குக் காலம் வந்துள்ள செய்யுள் மரபை - சித்தாந்த பூர்வமான கவிமரபை - நமது யுகத்துக்கேற்ற வகையில், புதியதொரு உயர்ந்த நிலைக்கு எடுத்துச் சென்றிருக்கிறார் குலோத்துங்கன். புதிய கவிதையில், பழைய செய்யுட்களும் நமக்கு இனிமையாகின்றன. இன்றைய சூழ்நிலையில் குலோத்துங்கன் ஓர் ஆய்வறிவுக் கவிஞர் (INTELLECTUAL POET) என விவரித்தல் சரியான தாயிருக்கும்.

என்கிறார் கலாநிதி க. கைலாசபதி

> குலோத்துங்கன், விஞ்ஞான உயர்வை - விஞ்ஞானப் பார்வையை - இலக்கிய ஆக்கத்திற்குப் பயன்படுத்துகிறார். விஞ்ஞான நோக்கு, பாசியின் இழைபோல், தசையிடை நார்போல் ஒன்றி, இணைந்து அவரது இலக்கிய ஆக்கங்களில் ஊடுருவி நிற்கிறது.

என்று குலோத்துங்கன் கவிதைகளில் உள்ள, விஞ்ஞானத்தின் பிரிக்க முடியாப் பிணைப்பைச் சுட்டுகிறார் க. கைலாசபதி.

> குலோத்துங்கன் ஒரு கவிஞருள், சிறந்த கவிஞர்......

எனப் புகழ்கிறார் முனைவர் தமிழண்ணல்.

கவிஞருட் சிறந்த கவிஞர் எனும் மாண்பு, தமிழுலகில், இன்னும்

> உரிய அளவுக்கு உணரப்படாமலிருக்கிறது.

என வேதனையுடன் தமிழண்ணல் கூறும் நிலை "இருட்டறையில் உள்ளதடா உலகம்" என்று பாவேந்தர் எதற்கோ சொன்னது, இங்கு இதற்கு இயைந்து வருதலைக் காணமுடிகிறது.

> குலோத்துங்கன் கவிதைகளுக்குத் தமிழிலக்கிய உலகில் கிடைத்திருக்க வேண்டிய அங்கீகாரம், சிறப்பு இதுவரை கிடைக்கவில்லை

என்று 1983 இல் ஆதங்கப்பட்டார், பெ. தூரன் அவர்கள்.

இந்நிலை பெருமளவு மறைந்துவிட்டது. எனினும் முழு அளவில் உரிய சிறப்புச் செய்யாமை தமிழுக்கும் தமிழர்க்கும் இழுக்கே யாம்.

> தத்துவங்கள் சார்ந்த எண்ணங்களையும் இன்றைய அரசியல், சமுதாய வாழ்க்கையில் எழுந்துள்ள பிரச்சினைகளையும் கருத்தும் உணர்வும் கலந்து நிற்கும் கவிதைகளாகப் படைத் திருக்கிறார். சுருங்கக் கூறினால், இன்றைய பிரச்சினைகள் இத்தொகுப்பில் (குலோத்துங்கன் கவிதைகளில்) இலக்கிய வடிவம் பெற்றுள்ளன

என்னும் பாரதரத்னா சி. சுப்பிரமணியம் அவர்களின் கருத்து, குலோத்துங்கன் கவிதைகள் பற்றிய தலை சிறந்த மதிப்பீடுகளுள் ஒன்றாக மிளிர்கிறது.

> கம்பனில், தெய்வம், மனிதத்தை ஏற்று முழுமை பெறுகிறது. பாரதியில், மனிதம் தெய்வத்தை உணர்ந்து முழுமை பெறுகிறது. பாவேந்தரிலும் குலோத்துங்கனிலும் மனிதம், மனிதமாகவே முழுமையாகிறது. பாவேந்தர் ஓர் அறிவு சார்ந்த தமிழியக்கக்கவி யென்றால், குலோத்துங்கனோ தமிழ் மரபில் வேரூன்றிய அறிவுயுகக் கவியாக அமைகின்றார்.

என்கிறார் பேராசிரியர் கா. செல்லப்பன் அவர்கள், "தமிழில் ஓர் அறிவுயுகக் கவி" கட்டுரையில்:

> *மரபின் மறுமலர்ச்சி சமுதாயப் புத்துணர்ச்சி*

என்னும் கட்டுரையில்,

> சங்க காலச் செழுமைகளோடு, சமகாலப் புதுமைகளை இணைக்கும் செய் நேர்த்தி, இந்த நூலெங்கும் சுடர் தெறிக்கிறது. இது இக்கவிஞரின் தனிச் சிறப்பு

என்கிறார் கவிஞர் தணிகைச் செல்வன் அவர்கள்.

"ஒரு கருத்துலகப் பார்வை"யில் டாக்டர் கே.எஸ். சுப்பிரமணியம் அவர்கள், பின்வருமாறு மதிப்பிடுகிறார்.

> தனது மனிதாளுமையையும் படைப்பாளுமையையும் பிசிறில்லாமல் இணைத்து, சமூகத்தில் விரிந்து வரும் அறிவுலகத்தின் தாக்கத்தால், தன்னுள் விளைந்த அதிர்வுகளுக்கும் ஆதங்கங்களுக்கும் தன் கவிதைகளில் குலோத்துங்கன் உருக்கொடுத்துள்ளார். அவருடைய கவிதைகளில் நாம் தரிசிக்கும் கருத்துலகம், மண்ணைச் சார்ந்தது. மானுடத்தைச் சார்ந்தது. அடிப்படை விழுமியங்கள் சார்ந்தது. வெற்றுச் சாயல்கள் காட்டும் கயமைகள் பால் உள்ள சீற்றம் சார்ந்தது. விஞ்ஞானக் காட்டாற்றை மடைதிருப்பித், தன் மண்ணைநீராட்ட வேண்டும் என்ற துடிப்புச் சார்ந்தது. புத்துலகை எதிர் கொள்ளும் ஆற்றலுள்ள கருவியாகத் தன் அருமைத் தமிழுக்குப் புத்துயிர் அளிக்க வேண்டும் என்ற உந்தல் சார்ந்தது. இவற்றையெல்லாம் அணைத்தவாறு, உண்மை சார்ந்தது. உண்மையின் இரட்டைப் பிறப்பான அழகு சார்ந்தது.

"நான் சுவைத்த பாங்கு" என்ற கட்டுரையில் டாக்டர் கா. மீனாட்சி சுந்தரம் அவர்கள் கீழ்க்காணுமாறு மதிப்பிடுகிறார்.

> தமிழ் வளர்ச்சிக்கு, அறிவியல் பார்வை கொண்டு, உரிய அளவில் பழமையைப் போற்றுதல், புதுமைக்குரிய வழிகளை ஆய்வுக்கண் கொண்டு அலசும் குலோத்துங்கனைப் போற்றச் சொற்கள் இல்லை. இதுஉண்மை. வெறும் புகழ்ச்சி இல்லை.
>
> மொழிவளர்ச்சி, மொழி உரிமை என்பவற்றுக்கு வெறும் உணர்வடிப்படையிலான முயற்சிகளை மேற்கொள்ளாமல், அறிவு அடிப்படையில் அணுகு முறையை இவருடைய கவிதைகள் உண்டாக்கியிருக்கின்றன.

துடைக்க முடியாத வறுமை, தொலைக்க முடியாத சாதியம், அகற்ற முடியாத மதவாதம் இவற்றால் பாதிப்புக்குள்ளான மனிதர்களை மேலேற்றும் அறத்தீர்ப்பாக முழங்குகிறது குலோத்துங்கன் கவிதை.

தமிழ்க் கவிதையை அறிவுத் தடத்திலும் - அறிவியல் தடத்திலும் இட்டுச் சென்ற தனித்தன்மை இவருடையது" என்று புகழ்கிறார், "சொல் புதிது, சுவைபுதிது" என்ற கட்டுரையில் டாக்டர் கு.வே. சுப்பிரமணியன் அவர்கள். "குலோத்துங்கன் கவிதைகள் ஓர் கண்ணோட்டம்" என்ற நூலில் பா. வீரமணி அவர்கள்,

> குலோத்துங்கன் கவிதைகள் எனும் புதையலிலுள்ள பொன்னும் மணியும் பலதிறத்தன. அவை எண்ணுந்தோறும் உள்ளத்துக்கு, உவகை அளிப்பன. சிந்தனைக்கு வளம் சேர்ப்பன. உரம் சேர்ப்பன. வாழ்க்கையிலுள்ள இருளைப் போக்கி, ஒளி வீசுவன, இத்துணைப் பண்பும் பயனும் அழகும் ஆழமுமுடைய, நற்கவிதைகளில் பல, வான வில்லாகக் காட்சி தருகின்றன. அவை, நம்மை மகிழ்விக்கின்றன மயக்குகின்றன.

"மானுடம் பாடும் மாக் கவிஞர்" எனும் கட்டுரையில், பாரதி சுராஜ் அவர்கள் - பழுத்த வைணவச் சிந்தனையாளர் - கூறும் கருத்தும் குலோத்துங்கன் அவர்களைப் பாராட்டும் பாங்கும் எண்ணி மகிழ்தற்குரியன.

> வைணவனாகப் பிறந்ததால், ஆழ்வார்கள் தமிழ் என்னை ஆட்கொண்டது. அதன்பின் பாரதியார் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே, என்ற அளவுக்கு என் நெஞ்சை நிறைத்தார். பிறகு, படித்தவை எத்தனை, எத்தனையோ! ஆனால், ஆழ்வார், பாரதியாருக்குப் பின் என்னை ஆட் கொண்டவர், குலோத்துங்கன் தான்

என்று நெஞ்சம் நெகிழக் கூறுகிறார் பாரதி சுராஜ் அவர்கள்.

நுண்ணிசை வைரத் தொங்கல்கள், பேர் அருவியெனப் பாய்ந்து வருதல் போன்று, குலோத்துங்கன் கவிதைகளின் சொற்கள் தட்டுப் பாடின்றி, காட்டாற்று வெள்ளமாய்க் கரை மோதி வரக் காண்கிறோம். ஆனால், "கவிதை மரபுக் கரைகளைக்" குலோத்துங்கன் கவிதை வெள்ளம் கடந்ததில்லை.

குலோத்துங்கன் கவிதைகளின் போக்கை, இசையுடன் இணைத்து இயைபுபடுத்தினால், நாதசுரச் சக்கரவர்த்தி உயர்திரு டி.என். இராஜரத்தினம் அவர்கள், இசைப் பேரரசி பாரத ரத்னா, எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்கள், இசைப் பேரறிஞர் டாக்டர் மதுரை எஸ். சோமு அவர்கள் போன்றோரின் தங்குத் தடையில்லா இசைப் பிரவாகத்துடன் ஒன்றி, உலகத்தரம் வாய்ந்ததாகத் திகழ்கிறது; மிளிர்கிறது; ஒளிர்கிறது எனலாம்.

அவர்களின் தேனிசை "எண்ணிற்கடங்காமல் எங்கும் பரந்தனவாய்," என்றும் "காற்றினிலே வரும் கீதமாய்" மிதந்துவந்து எண்ணுந்தோறும் இனிப்பதுபோன்று, குலோத்துங்கன் கவிதைகளும் நாம் கருதும்தோறும் நமக்கு இன்பமும் பயனும் நல்கும் என்பதில் எள்முனையளவும் ஐயமில்லை.

> மானுடம் வாழ்ந்தால், தமிழன் வாழ்வான். தமிழன் வாழ்ந்தால், தமிழ்வாழும். இத்தகைய நல்ல கருத்துக் கருவூலங்களைச் சந்த இனிமைமிக்க, சிந்துவடிவான செந்தமிழ்க் கவிதைகளில் யாத்துத் தந்துள்ளார் குலோத்துங்கன்

என்கிறார் முனைவர் தமிழண்ணல் அவர்கள்.

குலோத்துங்கன் கவிதைகள் என்னும் கோபுர தீபம் - கலங்கரை விளக்கு - காலமெல்லாம் ஒளி கூட்டி, வழிகாட்டும்.

13. கொள்கைகள்

13.0. முன்னுரை

"குலோத்துங்கன் கவிதைகள்" ஒரு பன்மணித்திரள். பல்வேறு கோணப் படப்பிடிப்பு. வாழ்க்கைத் தத்துவம் குறித்தும் அதன் பார்வை செல்கிறது. இறையேற்புச் சிந்தனையிலிருந்து மாறுபட்டது. பிறவாநிலை, பேரின்ப வீடு, இறைவனுடன் இரண்டறக் கலத்தல் பற்றிய கவலையில்லாத தத்துவ நெறி நிற்பது. அன்றாட வாழ்க்கையில், துன்பமிலா இன்பம், நிறை வாழ்வை மட்டும் வேண்டுவோர் நிலையை, ஏற்காதவர் குலோத்துங்கன்.

குலோத்துங்கனின் தத்துவப்படி, உலகம் நிலையானது. அழிவற்றது. உலகின் இயக்கம் கோள்களிடம் இல்லை. மனித மனமும் செயலுமே, மனிதர் நிலையை நிர்ணயிக்கின்றன. வழி வழி வரும் அனுபவமே மனித வாழ்வுக்கு மிகச் சிறந்த வழிகாட்டி. கேள்வி, சிந்தை, பாசம் பற்றிய புதிய விளக்கங்களும் கிடைக்கின்றன. தீயில் குளித்தவனை, வெயில் சுடுவதில்லை. மென்மை, இனியது. அதுவே வலிமை மிக்கதும் ஆகும். உயிரின் நிலை, உடலின் முடிவு இன்னபிற பற்றியும் தத்துவ விளக்கமாகத் தம் கருத்தைத் தருகிறார். ஆன்மிக விளக்கம், தர்க்க சாத்திர அடிப்படையிலான விளக்கமாக மிளிர்கிறது.

பயிற்சி, கல்வி, உழைப்பு, மாற்றுக் கருத்தை வரவேற்கும் மாண்பு, சார்ந்தவரை உயர்த்துதல், சிறியன சிந்தியாது உயர்வினை அடைதல்; முயற்சி, புதியன படைத்தல், சீர்தூக்கி ஏற்றல், சீரில்லாதனவற்றைச் செம்மைப் படுத்துதல், மரணத்துக்குப்பின் நாம் அறிந்தது எதுவும் இல்லை, விண்ணுலகம் என வொன்றில்லை, விண்ணுலகை மண்ணில் படைக்கலாம், கடவுளென ஒன்றிருந்தால் கவிஞர் தாமே கடவுளாக வேண்டுமென விழைதல், பணிபுரிதலின் சிறப்பு போன்ற பண்புகளும் நினைப்பும் சிறப்பிடம் பெறுகின்றன. கொள்கைளும் குறிக்கோளும் "உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்" என்னும் வள்ளுவத்தின் அடிப்படையில் அமைந்துள்ளன.

13.1. பயிற்சியும் கல்வியும் பெருந்துணையாகும்

வெற்றி என்பது வேண்டும் பொருளொடு
ஒன்றிஒழியாது உழைப்பவர்க்(கு) உறுவதாம்

என்னும் கொள்கை கொண்டவர் குலோத்துங்கன்.

கோவில் பூசைகள், குருக்கள் ஆசிகள்
நாவில் கடவுளர் நாமம் போற்றுதல்

மந்திரம் சோதிடம் வசியம் தேடுதல்
எந்திரம் காப்புகள் இன்ன பூணுதல்
வேண்டுவ தாமோ வீணோ அதையாம்
ஈண்டு பேசுவது எண்ணிலம் ஆயினும்........
..........பயிற்சி கல்வியெம் படையெனக் கொண்டோம்
முயற்சி யுண்டெனின் முழுமை காணுவம்

என்கிறார் "முயற்சியுண்டெனின் முழுமை காணுவம்" எனும் பாடலில். எத்துறையிலும் முழுமையான கல்வியும் பயிற்சியும் வேண்டும் எனும் நிலைப்பாடு கொண்டவர் குலோத்துங்கன்.

அறிவன்றி ஒளியெதுவும் அறியோம். இன்றெம்
ஆய்வுக்குள் அடங்காத புதிர்கள் யாவும்
தெரிகின்ற நெறிகாண்போம். உண்மை தேடித்
திசையெங்கும் அலைபவர்யாம் திறந்த நெஞ்சர்
விரிகின்ற கொள்கையாளர்

என்று தம் கொள்கை பற்றி அவரே குறிப்பிடுகிறார்.

13.2. உழைப்பே வாழ்வுக்கு உறுதுணை

"உழைப்பு மெய்வருத்தக் கூலி தரும்" என்னும் உயர் நெறி நிற்பவர். உழைப்பே, வாழ்வெனக் கொண்டவர். தன்னலப் புன்குறிக்கோள் கொள்ளா உழைப்பு.

எண்ணுவதும் படைப்பதும் எம்பணிகள்: எங்கும்
எல்லோர்க்கும் சமவாய்ப்பு நிறைந்த தான
மண்ணுலகைச் சமைப்பதும்எம் குறிக்கோள்: நாளை
வருகின்ற தலைமுறையின் வாழ்வுக் காக
உண்ணுவதும் உறங்குவதும் தவிர்த்துக் கூடி
உழைப்பதுவே யாம்மகிழும் இன்பம்

என்கிறார். அ∴துடன், உலகம் வாழ உழைப்போம். எமக்கு விண்ணுலகம் பற்றிய அக்கறையில்லை. அல்லாமல் மீளா நரகம் என்று அச்சுறுத்தினாலும் அதைப் பற்றியும் கவலைப்படுவதில்லை என்கிறார். பணி செய்வதே எம்கடன், இத்தலைமுறை மட்டுமல்ல; வருங்கால மக்களும் பயனுறும் பாங்கில் பணி தொடர்வேன் என்கிறார்.

எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே

எனும் தாயுமானவரின் பராபரக்கண்ணி நிழலாடுகிறது. புனிதமான இறையேற்பாளர் நெஞ்சிலும் தூய்மையான இறை மறுப்பாளர் இதயத்திலும் அருள் உணர்வு பேதம் பாராமல் நிலைத்து நிற்கும் போலும்!

13.3. மாற்றுக் கருத்தை வரவேற்கும் மாட்சி

தம்கொள்கையில் சமரசம் செய்யா உறுதி கொண்ட கவிஞர், மாற்றுக் கருத்தை, மனமுவந்து வரவேற்கும் நெறி கொண்டவர். சிறந்தனவற்றைப் போற்றுகின்றார்.

செல்வத்தில் நாகரிகம் செழிப்பதில்லை.
சிந்தையின் வளத்தில் செழிப்பது நாகரிகம்

என்று பண்பாட்டின் பிறப்பிடம் பற்றிப் பேசும் கவிஞர்:

> எந்த இடத்தில் சிறுபான்மை, மொழிச் சிறுபான்மை, இனச்சிறுபான்மை, மதச் சிறுபான்மை, நிறச் சிறுபான்மை சிறப்பிடம் பெறுகிறதோ, எந்த இடத்தில் வேறுபாடு கண்ணியமாக வரவேற்கப்படுகிறதோ, மென்மையின் வலிமை, மேலோங்கி நிற்கிறதோ, அந்த இடத்தை நோக்கி யான் யாத்திரை செய்கிறேன்

என்கிறார். கவிஞருக்கு இந்த இடங்கள் புனித பூமியாகத் திருத்தலமாகத் திகழ்கின்றன.

"திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேனே" என்றோர் ஆழ்வார் கூறுதல் போன்று, கருத்து வேறுபாடுகள் வரவேற்கப்படும் இடங்கள் கவிஞரின் தொழுகைக்குரிய யாத்திரைத் தலங்களாகின்றன.

13.4. சார்ந்தோரை உயர்த்தும் சான்றாண்மை

"நான் நிலத்திடை தேவன்" என்ற கவிதையில், கவிஞரைச் சார்ந்தோர் ஆவதற்குத் தகுதிபெற விரும்புவோர், தம்மை வளர்த்துக் கொள்ளுதல் வேண்டுமென வலியுறுத்துகிறார்.

என்னை நீ அடைவதாயின் ஏறிமேல் வருக. மேலும்
உன்னைநீ உயர்த்தல் ஒன்றே உயர்வழி

* * * *

......*நிலையினில் தாழ்வ தொன்று நினைப்பது மியலேன்*

என்று உறுதியாய்க் கூறுகிறார். "என்னைச் சார்ந்தவர் உயர்வதற்குச் சாலைகள் அமைப்போம்." ஆனால்:

சாதியிற் கூடி நம்பும் சமயத்திற் கூடி மாந்தர்
ஆதியை மொழியை வைத்தவ் வமைப்பினில் வாழ்வு தேடி
மயங்கவும் மாலையேற்று மகிழவும் நிலைமைக் கேற்ப
இயங்கவும் இயலேன்......

என்று பிரகடனம் செய்கிறார். "என்னினும் மிஞ்சினோர் வளர்க" என்னும் பாடலில் தம்மைக் காட்டிலும் திறன் மிக்கோர் வளர்க என வாழ்த்துகின்றார்.

என்னினும் மிஞ்சினோர் வளர்க! எம்மினம்
எவரினும் மேலென எழுக! நாள்தொறும்
தன்னினும் மிஞ்சினோர் சமைவ தற்கெனத்
தடம்அ மைப்பவர் தம்புகழ் பாடுவேன்

என மனம் திறந்து பேசுகிறார். நற்குடிப் பிறந்தோர்மாட்டே, பிறரிடம் உள்ள சிறப்பினைப் போற்றிடும் புனிதம் காணப்பெறும். சிறப்புக்குத் தலைமை அளித்துப் பின் செல்லும் பெருநிலை, பெருமக்கட்கே உரிய பண்பாகும். போற்றற்குரிய சான்றாண்மையைக் கொள்கையாகக் கொண்டவர் முனைவர் வா.செ. குழந்தைசாமி.

13.5. சிறியன சிந்தியாமல் உயர்வன உள்ளும் மேலோன்

"உச்ச மொன்றடைய" என்னும் கவிதையில் "மானிடர் எம் இனத்தார். மண்ணெல்லாம் எமது தேசம்" எனும் தம் கொள்கை கூறும் குலோத்துங்கன், நாம் சூனியம் கடந்து, விண்ணைத் துளைத்து மேற்சென்றோம். எண்ணொடு, கருவி கண்டோம், எழுத்தொடு கலைபடைத்தோம். காலம், கடல்கள் வென்றோம், விண்ணொடு கலந்து, மேலும் விரிந்துள வெளி நடந்தோம். சந்திரன் தேயம் கண்டோம் என்று அறிவியல் சாதனைகளைப் பட்டியலிடும் கவிஞர்,

. . . . மனிதரை இழிவு செய்யும்
தாழ்வுகள் ஒழிப்போம்:
உண்மைச் சமத்துவம் தழைப்பதற்குச்
சூழ்நிலை படைப்போம்
அச்சமொன்றில்லா வாழ்வை அடைகுவம்...... நாளும்
உச்சமொன்றடைய நாடும் உள்ளத்தைப் போற்றி வாழ்வோம்

என்று கூறி முடிக்கிறார். கழுகு உயரே பறந்தாலும் அதன்பார்வை, தரையில் கிடக்கும் உயிர்பிரிந்த மிருக உடல்கள் மீதே இருக்கும். தரையில் நின்றாலும் மயிலின் நோக்கம், வானில் திரியும் மேகக்கூட்டத்தில் தான். மனிதன் மயிலாக வேண்டும். கழுகாகக் கூடாது என்பதே கவிஞரின் கொள்கை.

13.6. தளர்விலா முயற்சியைப் போற்றுதல்

முயல்வாரைப் பணிவோம்

என்னும் பாடலில்,

காலமெல்லாம் தத்துவத்திற் கழிப்போர் தம்மைக்
காண்பதற்கும் நாணுகிறேன்

என்கிறார். காரணம், அவர்கள், "செயல் முடங்கள்" என்கிறார். தத்துவத்தின் ஆய்வுப் பொருளாக அவர்கள் மேற்கொள்ளும் பணியால், சமுதாயத்திற்குப் பயனெதுவும் இல்லை. பணி செய்தால், மேற் கொண்டால் அதன் பயனாகச் சமுதாயம் சிறப்புற வேண்டும். அஃதின்றேல், அதை ஒரு பணியெனக் கருத முடியாது என்னும் கொள்கை கொண்டவர்.

தத்துவ அறிஞர்கள் படைப்பின் மூலமெல்லாம் ஆய்கின்றனர்.

மூலமெலாம் ஆய்ந்தென்ன? அறுகம் புல்லும்
முளைப்பதற்கும் வழி செய்யார் முடிப்ப தென்ன?

கற்பனைத் திறனும் சித்தாந்தங்களும் எழுத்துப் பாட்டின் சொற் பெருக்கின் வலிமையும் அறிவோம். எனினும் இவை அனைத்தின் மூலமும் தோள்வலி - உழைப்பின் - அடித்தளத்திலேயே தான் அமைந்துள்ளது. "தோள்வலியின் துணையின்றேல் சுழிகள் இவை" என்பதே கவிஞரின் கருத்து.

எதிர்ப்புக்கு அஞ்சாத செயல் வீரர்களின் துணிச்சலான முயற்சி யோடிணைந்த செயல்களால் தான் தத்துவங்களின் உயிர்நாடி துடித்துக் கொண்டிருக்கிறது என்கிறார் கவிஞர். ஒரு சமுதாயத்தில்:

செயல் வேண்டும் வினைகோடி செய்யத் தூண்டும்
திறன் அமைந்த கலைவேண்டும்

என்கின்றார். தளர்விலா முயற்சியொடு, புதுமை கண்டு, புவிக்கு இன்பம் இணைக்கும் சிறந்த மக்களின் திருப்பாதங்களில் தலைவைத்து வணக்கம் செலுத்துவதாகக் கூறுகின்றார். கவிஞரின் பண்பு விளக்கப் பாடல் எனலாம். நல்லதை மனமுவந்து பாராட்டும் நற்செயலின் திரு உருவம் கவிஞர்.

"விண்சமைப்போர் வருக" என்னும் பாடலில், வேடிக்கை மனிதர்களை- விண்ணில் உள்ளதென்னும் மாளிகையை எண்ணி, மேலே பார்த்திருப்பவர்களை அதாவது மோட்சத்தை நினைத்து வானைப் பார்ப்பாரை நாம் அழைக்க வில்லை. அவர்களிடம் நாம் எதிர்பார்ப்பது ஒன்றுமே இல்லை என்கிறார்.

இருப்பதனைத் துய்ப்பதுபேர் இன்பமல மண்ணில்
இல்லாத படைப்பதுவே இன்பமெனும் வழியில்
விருப்புற்றார் வருகநிதம் மேற்செல்லும் பயணம்
விழைகின்றார் வருகஇவண் விண்சமைப்போர் வருக

என வரவேற்கிறார். "வினையே ஆடவர்க் குயிரே" என்பதற்கொப்ப, வினை செய்வோரையே கவிஞர், வாழுகின்ற மனிதரெனக் கருதி வரவேற்கின்றார்.

13.7. நாவன்மையால் நானிலத்தை ஈர்த்தல்

நாவசைத்து நாடசைப்போம் மக்கள் நெஞ்சில்
நடமாடும் கனவுகளுக்(கு) உருவம் தந்து
பாவசைத்துப் புத்துலகம் படைப்போம்......

என்கிறார் "காண்ப தெலாம் கலையாய் மாறும்" எனும் பாடலில்.

"நாமார்க்கும் குடியல்லோம் நமனையஞ்சோம்" எனத்துணிந்து நின்ற துறவி - உண்மையான ஆன்மிக அறிஞர் நிலையில்:

ஏவலுக்குப் பணிந்தறியோம். எவர்க்கும் அஞ்சோம்
இதயத்தின் ஆணையெமக்(கு) இறைவன் கண்டீர்!

என்று மனச்சாட்சியே இறைவன் வாக்கு. அ∴தன்றி வேறெதையும் ஏற்க மாட்டோம், மற்ற எதற்கும் அஞ்ச மாட்டோம் என்று தம் நிலையை விளக்குகிறார் கவிஞர்.

"தூங்க முடியாமல் இரவில் துன்புறுவோர்க்கு, இரவு மிக நீளமாய்த் தோன்றும். உடல் நலிந்தோர்க்குப் பயணப் பாதை மிகவும் நீண்டு செல்வதாய்த் தோன்றும். ஆனால் பறக்கின்ற சிறகமைந்தால், பார்முழுதும் ஓரினமாய்ப் பரந்து காணும்" என்கிறார்.

13.8. புதியன படைப்பதே இன்பம்

"கல்வியுகம் மலர்கிறது" என்னும் பாடலில், இன்பம், அறம், முன்னேற்றப் பயணம், மாற்றங்கள் போன்ற பண்புகளின் இலக்கணம் காண்கிறோம். புலவர், தலைவர், அறிஞர், செல்வர் எந்நிலைகளில் திகழ வேண்டுமென்ற கவிஞரின் கோட்பாட்டையும் புரிந்து கொள்கிறோம். செவிகள், விழிகள், புலன், நெஞ்சம் எவை எவற்றை நுகர்வதால் இன்பம் பெறும் என்பதையும் கவிதைகள் குறிப்பிடுகின்றன. கல்லாத சமுதாயம் கரைசேராது என்பது குலோத்துங்கனின் கொள்கை. அனைத்துக்கும் அடிப்படை கல்வி என்ற கருத்து, நவமணிகளை இணைக்கும் பொற்சரமாக நிற்கிறது கவிதைகளில்.

இல்லாத படைப்பதுவே இன்பம். வாழ்வில்
எதிர் நீச்சல் முன்னேற்றப் பயணம், மண்ணில்
பொல்லாத யாவெனினும் எதிர்த்து நின்று
போரிடுதல் அறம் தீமை, பொறுத்து நிற்றல்
நல்லார்தம் இயல்பன்று......

என்கிறார். தீயனவற்றைத் தீய்த்திடும் போர்க்குணம் - மறஉணர்வு - தேவை என்பது குலோத்துங்கனின் கோட்பாடு.

பழுத்த இலைகள் உதிர்வது, புதிய இலைகள் தோன்ற
வாய்ப்பிணைக்கவே

என்பது ஆங்கிலக் கவிஞர் ஷெல்லி அவர்களின் கருத்து.

பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல ....

என்பது இலக்கண நெறி.

மாறாத பொருளெதுவும் வளர்வதில்லை
வையத்தின் விதியதற்கு மாற்றமில்லை

என்று ஆணித்தரமான அறிவியல் கருத்தை வலியுறுத்துகிறார் கவிஞர்.

தேறாத புலவர்களும் வளர்ச்சிப் பாதை
தெளியாத தலைவர்களும் தெரிந்த உண்மை
கூறாத அறிஞர்களும் ஆய்வுப் பார்வை

கொள்ளாத பண்பாடும் குடிமை செய்ய
வாராத செல்வர்களும் கொண்ட நாடு
வளராது வளர்கின்ற வழி காணாது

என்பதன் வாயிலாக நன்றல்லா நாட்டின் இயல்பு கூறப்படுகிறது. பிறந்த பொன் நாட்டை உருப்பெற வைத்திட அறிஞர்கள், புலவர்கள், செல்வர்கள், தலைவர்கள் ஆற்ற வேண்டிய கடமையை வலியுறுத்தப் புதிய இலக்கிய உத்தியை - எதிர்மறையைக் கையாளுகிறார். நாட்டின் முன்னேற்றத்திற்கு எதிர்மறை வாக்கியங்களாக அறிவுரை தருகிறார்.

சொல்லாத சொல்கேட்கும் செவிகள் வேண்டும்.
தோன்றாத பொருள்காணும் விழிகள் வேண்டும்.
எல்லாரும் வளர்க வெனும் நெஞ்சம் வேண்டும்.
எதிர்காலப் புலன்வேண்டும். இவைய னைத்தும்
வல்லாரே வையத்தை வழிந டத்தும்
மாண்புடையர்......

என்று, தலைவராகும் தகுதியையும் மக்களாகும் தகுதியையும் மட்டும் கூறி நிறைவு செய்திடாமல், தாம் மாபெரும் கல்வியாளர், சிந்தனையாளர் என்பதால்,

வளம் எதுவும் வருங்கா லத்தில்
கல்லாத சமுதாயம் காண்ப தில்லை

என்கிறார். எதிர்மறை வாக்கியங்களாக இப்பாடலில் பல அடிகளைப் பாடிய கவிஞர், "கல்வியுகம் மலர்கிறது காணவாரீர்" என அழைத்துக் கவிதையை நிறைவு செய்கிறார்.

13.9. சீர்தூக்கிப் பார்த்தே ஏற்போம்

யார் எதைச் சொன்னாலும் கண்மூடி ஏற்கும் செயல் நன்மை தராது. ஏன்? எதற்கு? எப்படி? என்றாய்ந்து ஏற்க வேண்டுமென்ற சிந்தனையாளர் கிரேக்கப் பெரியார் சாக்ரடிசு கொள்கைக் கேற்ப, குலோத்துங்கன்" முடிவில்லாப் பயணம்" எனும் பாடலின் தொடக்கத்திலேயே

பகுத்துணரும் அறிவே எம் உரைகல் ஆய்ந்து
பாராமுன் எதையுமே கடவுள்வந் தொருநாள்
வகுத்ததென் றோதினும் நம்போம்

என்று, பகுத்துணரும் அறிவின் இன்றியமையாமையை உணர்த்துகின்றார்.

அலைசூழும் கடல் வானம் யாவும் எங்கள்
அறிவுக்கு வணக்கம் செய் பணியாட்கள் அன்றோ?

என்பது மானுடத்தின் மகத்துவம் சுட்டும் மணிவரிகள், மனிதத் தன்மைக்கு மாசூட்டும் யாவும் தகர்ப்போம். தலைதாழ்வதில்லோம்; வணங்கோம் என்று தந்தை பெரியார் அவர்களின் நிலைநின்று முழங்கக் காண்கிறோம். காரணம்

முனைவர் வா.செ. குழந்தைசாமி சீர்திருத்தக்காரர் என்பதுடன் பழுத்த அறிவியல் மேதை. காரண, காரியங்களை அலசி, ஆய்ந்து ஆய்வின் அடிப்படையில் விதிகள் கண்டேற்கும் விதியுடையார்.

13.10. சீரிலாதனவற்றைச் செம்மைப் படுத்துவோம்

"அடிப்படைகள் அசைந்ததில்லை" என்னும் பாடல், சமுதாயச் சீர்கேட்டின் காரணம், உலகின் பாதியாக உள்ள பெண்களை அடிமை நிலையில் வைத்திருப்பதேயாகும் என்ற கோட்பாட்டை வலியுறுத்துவதாக உள்ளது. எடுத்த எடுப்பிலேயே,

முடிவின்றிப் பேசுகின்றீர்; பணிகள் யாவும்
முடித்தவர்போல்நடிக்கின்றீர்! அரற்று கின்றீர்......

*   *   *   *

ஒரு பாதி மக்கள் தொகை மகளிர் - அன்னார்
ஒத்தநிலை பெற்றதிலை......

*   *   *   *

நிகர் என்று மனிதகுலம் நிமிர்ந்து நிற்க
நிலம் முழுதும் சமத்துவமே நெறியென் றாக
உலகொன்று புதிதாக உருவம் செய்வோம்
ஒவ்வாத பண்பனைத்தும் உருக்கி வார்ப்போம்

என்று பிரகடனம் செய்கின்றார்.

பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள்,

புதியதோர் உலகு செய்வோம் - கெட்ட
போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்

என்கிறார். குலோத்துங்கன் அவர்கள் ஒவ்வாத பண்பனைத்தும் ஒழிப்போம் என்று மட்டும் கூறவில்லை. மாற்றுக் குறைந்த சமுதாய அமைப்பைப் புடம் போட்டு உருக்கிப் புதிதாக வார்த்துச் சீராக்குவோம் என்கிறார்.

பாவேந்தருக்கும் குலோத்துங்கனுக்கும் நீதியில்லாச் சமுதாய அமைப்பிலுள்ள குறைகள் மேல் வெறுப்புள்ளது. இதில் இருவருக்கும் வேறுபாடில்லை. ஆனால் தீர்வுகாணும் முறைகளில் தாம் மாற்றம் காண முடிகிறது.

13.11. இறப்பின் பின் எதுவுமறியோம்

"தோற்றனம் இல்லை" என்னும் பாடலில் முற்பிறப்பு - பிற்பிறப்பு பற்றிய சிந்தனையைக் கலப்பிலா உண்மையாக. வெளிப்படையாகக் கவிஞர் வெளியிடுகிறார்.

பிறப்பின் முன்னரும் பிறந்து வாழுநம்
இறப்பின் பின்னரும் எதுவும் காண்கிலம்

என்ற இரண்டே அடிகளில், சமயங்கள் கூறும் முற்பிறவி, பிற்பிறவி, ஏழேழ்பிறவி, பிறவிபல எடுத்து இளைத்தது, நீந்தப்பட முடியாப் பிறவிப் பெருங்கடல் போன்ற கருத்துக்களைவேருடன் வெட்டி வீழ்த்துகின்றார்.

மானுடர்க்கு உயர்ந்த தென்று மற்றொரு பிறவி இல்லை.

* * * *

தேவர் உலக மென் றெதுவும் இல்லை.
உம்பரும் எம்படைப்பே

என அழுத்தமாக - அறுதியிட்டுக் கூறுகிறார். தேவர் உலகமென ஒன்றில்லை என்பதுடன் நில்லாமல் அந்தத் தேவர் உலகைப் படைத்தவர்களும் நாங்களே என்கின்றார். இதில் மோட்சம் நரகம் பற்றிய சமயக் கோட்பாடுகள் ஒட்டு மொத்தமாக ஒதுக்கப்பட்டுவிட்டன.

வலியிலாப் பகையை
வென்று மகுடம்யாம் சூட்டமாட்டோம்

* * * *

பயிற்சியில் பிறப்பில் ஞானப் பறவையாம்:
புழுக்கள் அல்லோம்

நீதியின் வழியில் நிற்றல் தர்ம வாழ்வு; அதுவே மானிடர் நெறி. தாம் கொண்டுள்ள கொள்கை என்பதைச் சுட்டி, மூட இருளகற்றும் ஞான சூரியனாகத் திகழ்கிறார் கவிஞர் குலோத்துங்கன் அவர்கள்.

13.12. விண்ணுலகை, மண்ணில் காண்போம்

முன்னோர்கள் காவியமாகவும் கற்பனைப் பார்வையில் ஓவியமாகவும் உரைத்த வீடே, விண்ணுலகு என்பது, நூலின் கருத்து.

முன்னோர் உரைத்த கற்பனை உலகை
மண்மேல் நிலைபெறச் செய்வோம்

என்று நெஞ்சுயர்த்திக் கவிஞர் கூறக் காண்கிறோம்.

உழைக்காமல் உண்டு வாழ்வோர், இறந்த பின்பு செல்ல விரும்பும் இடம் சொர்க்கம். ஓயா உழைப்பை மேற்கொண்டு, உயர்வையே நாடும் நமக்கு அந்த இடம் தகுதியற்றது.

எடுத்த வாழ்வினை ஏற்றம் செயாதவர்
கொடுத்த யாவினும் குற்றமே காணுவோர்
முடிப்ப தொன்றிலை, மோட்சம் அவர்க்கெனின்
சோம்பர் சேர்நிலம் சொர்க்கம் என்பதோ?
நாம் பெறற்கது நன்றல தள்ளுவம்

கண்ணில் தெரியாத கற்பனையான விண்ணுலகைப் பற்றிய கவலை வீணானது. கடமையைத் தொய்வின்றித் தொடர்ந்தால், துல்லியமாகச் செய்தால், மண்ணில் விண்ணைக் காணலாம். நாம் தேவர் ஆகலாம், தெய்வமும் ஆகலாம் என்பது கவிஞரின் கொள்கை.

13.13. நான் கடவுளாக வேண்டும்

மண்ணில் விண்ணைக் கண்டு, மாண்புற எண்ணும் கவிஞர், ஆண்டவன் உள்ளானாயின், கடவுள் என்னும் பெருமானாகத் தாம் ஆக வேண்டும் என இறைவனிடம் கேட்கப் போவதாகக் கூறுகின்றார். புதுமைப் போக்கு! புரட்சிச் சிந்தனை!.

தாம் கடவுளாக விரும்புவதன் காரணத்தையும் கவிஞர் கூறி விடுகிறார்.

தலைமுறைத் தளைகள் யாவும்
அறும் வழி படைத்தல் வேண்டும்

அதனால்

......கடவுள் என்னும் பெருமான்யான் ஆகவேண்டும்

என்கிறார். இதுவரை கடவுள் செய்து முடிக்காத செயலை உடைத்தெறியாத தளைகளைத் தம்மால் செய்து முடிக்க முடியும், தடைகளை அகற்ற முடியுமென்ற நம்பிக்கையின் வெளிப்பாடாக உள்ளது இக்கவிதை எனலாம்.

13.14. இதயமே இறைவன்

மானிட இதயத்தை - மனச்சாட்சியை விட வேறு இறைவன் இல்லை என்பது உணர்த்தப்படுகிறது. என்னால் முடியும் என்பவர்க்கு, எதுவும் அரிதல்ல. எழுந்து நிற்பவர்க்கு இமயம் கூடத் தடையல்ல. இதயமே அவருடைய வாழ்வை நிர்ணயிக்கிறது. இதயமே! இறைவன் என்கிறார்.

"உள்ளமே திருக்கோயில். ஊன் உடம்பு ஆலயமாம்" என்னும் கருத்து இங்கு நினைவில் நிழலாடுகிறது. கடவுள் கொள்கை அடிப்படையில், ஆசிரியர் ஓர் இறைமறுப்பாளர் எனக் கொள்ள முடிகிறது.

அலைசூழும் கடல்வானம் யாவும் எங்கள்
அறிவுக்கு வணக்கஞ் செய் பணியாட்கள்

என்பது கவிஞரின் பிரகடனம்.

13.15. இறவாமை - பிறவாமை பற்றி

இறைப் பற்றாளர் முக்தி மோட்சம் வீடு பேறால், இறைவனிடம் வேண்டுவது, மீண்டும் பிறவாத பெருநிலையே ஆகும். இதனையே இறைவனுடன் ஒன்றுதல் - இரண்டறக் கலத்தல் - வீடுபேறு அடைதல் என்பர். பிறவிப் பெருங்கடல் நீந்தி, நீந்திக் களைத்தவர்கள், விரைவில் இறைவன் திருவடி சேர்ந்து, மீண்டும் பிறவாத நிலைமை வேண்டுகின்றனர். ஆனால், முற்றிலும் மாறுபட்டவராக முனைவர் வா.செ. குழந்தைசாமி அவர்கள், வானத்தைவிட, வையத்தை விரும்புகிறேன். இங்கே வாழ்வது இன்பம் தருகிறது என்கிறார். அத்துடன்:

காட்சிகளில் கோடியின்பம் காண் பவன்யான்.......
......மண்ணின் கலைகளில் மனமிழந்து நிற்பவன்யான்
......இறவா திருப்பதெனில் ஏற்பேன் இறந்தால்யான்
பிறவா திருத்தல் பெறல் வேண்டேன்
......மீண்டும் பிறப்பேன் இம் மேதினியில்......
.....மேதினியின் யாத்திரையைக் காவியமாய்ப்
பாடுவதில் யானடையும் பரவசத்தை யாரறிவார்?
......தொட்ட கடமைகளைத் தொடர்ந்து முடிக்காமல்
விட்டகன்று பாதிவழி வேறுபயன் தேடோம்யாம்

என்று தம் நிலையை விளக்குகிறார். நிறைவாக,

செய்யும் தொழிலோடு சேர்ந்துவிட்ட நெஞ்சினர்க்கு
வையம் தரும் இன்பம் வானம் தருவதில்லை

எனக் கூறி முடிக்கிறார். கவிஞரின் கொள்கையை உணர்த்துவதுடன், அவருடைய பண்பு விளக்கமாகவும் இப்பாடல் காட்சி தருகிறது. செய்யும் தொழிலில் ஒன்றிய நிலையே பேரின்பம் நல்கும் என்பது உணர்த்தப்படுகிறது.

13.16. நான் நிலத்திடை தேவன்: நிலையில் தாழேன்

நான் வானிடைத் தேவன் அல்லன்; நிலத்திடைத் தேவன் என்கிறார். உலகம் அனைத்தையும் அன்புடன் அணைத்துக் கொள்ள ஆயத்தமாக இருக்கிறேன். ஆனால் சாதி, சமயச் சழக்கர்களை இணைத்து அவர்களின் அன்பால், ஆதரவால் நான் வாழ்வு தேடவும் புகழ் பெறவும் ஒரு நாளும் இசையேன் என்கிறார். பெரும் பசியெடுத்தபோதும்:

மலத்திடை. அரிசி தேடும்
மனிதரை மதிப்ப ரோ யான்
நிலத்திடை தேவன் எந்தன்
நிலையினில் தாழ்வ தில்லேன்

என்ற கருத்து, கவிஞரின் செம்மையைச் சித்திரிப்பதாக உள்ளது.

13.17 குவலயம் ஒரு குடும்பம்

முப்பது கோடியும் வாழ்வோம்-வீழின்
முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்

என்று அன்றைய ஒட்டு மொத்த இந்தியரை மனங்கொண்டு பாடினார் மகாகவி பாரதியார். "யாவரும் கேளிர்" என்று, உலக மக்கள் யாவரையும் உறவு கொண்டாடினான், பண்டைத் தமிழன். "தணியாத தாகம்" எனும் பாடலில், குலோத்துங்கன்,

வய்யகம் தன்னைக் குடும்பமென் றேற்றபின்
மற்றொரு சுற்ற மில்லை - குடி
செய்யத் தொடங்கிய தியாகியர்க் கெந்தத்
திசையிலும் எல்லை யில்லை

என்கிறார் கவிஞர்.

ஏணி படைப்பவர் ஏறுபவர்

என்ற பாடலில்:

அண்டம் முழுதுமென் தேய மென்றேன் வளர்ந்(து)
அந்நிலை எய்து முன் ஓய்வதிலேன்

என்னும் கவிஞரின் கூற்று, குலோத்துங்கனின் கவியுள்ளம், உலக அளவில் பரந்து விரிந்தது என்பதற்குச் சான்று பகர்வதாக உள்ளது.

13.18. கோள்களில் மனிதனின் விதியில்லை

விண்ணிற் சுழலும் கோள்களின் இயக்கம், மண்ணில் வாழும் மனிதரின் வாழ்வை நிர்ணயிக்கிறதென்று கூறுவர். மனிதர் என்ன முயற்சியை மேற்கொண்டாலும் கோள்களுக்கெதிராகத் தம் வாழ்வை மாற்ற முடியாதென்பது ஆன்மிகம் சார்ந்த கணிப்பு. ஆனால், "கொள்கைக் குழப்பமும் வளர்ச்சி தானோ?" என்ற பாடலில்

விதியெனப் பணிவோ மில்லை
விண்ணிடை இயற்கை தந்த
கதியினிற் சுழலும் கோளின் கையில்
எம் வாழ்க்கை இல்லை.
மதிவளம் கொள்கை நெஞ்சின்
வலியிவை உடையார் வாழ்வின்
அதிபரென் றுறுதி கொண்டேன்.

என்று குறிப்பிடுவதன் வாயிலாகக் கோள்களின் கைகளில், மனிதரின் வாழ்க்கை இல்லை என்று நம்பியதாகக் கூறுகிறார். இருப்பினும்

காலங்கள் மறைய வாழ்வின்
காட்சிகள் வளர நெஞ்சின்
பாலங்கள் விரிய ஆய்வுப்
பார்வையும் முதிர நம்பும்
மூலங்கள் மாறக் கண்டேன்
முடிவுகள் குழம்பி நிற்கும்
கோலங்கள் கண்டேன்

என்னும் அடிகளால் பல கேள்விகள், பல ஐயங்கள் எழுந்து ஒரு குழப்பத்தை உருவாக்கியிருப்பதாகவும் ஒத்துக் கொள்கிறார்.

13.19. உயிரின் முடிவு

முன்னோர் நடந்து வந்த பாதையையும் அவர்கள் ஈட்டிய வெற்றியையும் அதன் விளைவுகளையும் அவற்றால் கற்ற படிப்பினையையும் உற்றுநோக்கி, செவ்வழி காணும் நிலை நில்லாமல், எந்நேரமும் வாழ்வின் ஓட்டத்தில் பந்தயக் குதிரைபோல் பறக்கின்றோம். சிறிதுநேரம் தங்கி ஓய்வெடுக்க மறந்துவிட்டோம். ஓய்வு நேரத்தில், வாழ்வின் இலக்கென்ன என்பதை எண்ணிப் பார்க்கத் துணிந்தோமில்லை. நாம்,

செல்லுவ தெங்கோ? சென்று சேருவ தெங்கோ? இன்றும்
சொல்லுதற் கிலக்கு நம்மோர் துணிந்தது முண்டோ?

என வினவுகிறார்.

பொங்கிடும் காட்டு வெள்ளப் புனல்படு பொருளே போல
இழுப்பவர் அறியோ மேனும் இழுபடு பொருளாய்க் காலம்
கழிப்பவர் ஆயி னோமோ?

என்பதன் வாயிலாக நம்மைக் காட்டாற்று வெள்ளம் போல் இழுத்துச் செல்வது எது என்பதை அறியா நிலையிலேயே இழுபட்டுக் காலம் கழிப்பவர் ஆகிவிட்டோமோ? இலக்கு அறியா நிலையில் இருக்கிறோம் எனக் கவிஞர் கருதுவதை உணர முடிகிறது.

கல்பொரு திரங்கு மல்லல்பேர் யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம்........

என்ற புறநானூற்றுப் புலவன் சொற்கள் குலோத்துங்கன் கவிதைகளில் புதைந்து கிடக்கின்றன.

......மானுடத்தின்
காலமும் உயிரும் எந்தக் காலமும் வளர்வ தென்னும்
மூலமொன் றுணர்ந்தோம். ஆயின் முடிவுகள் காணோம்

என வருந்துகிறார். காலமும் உயிரும் முடிவுறும் நிலை என்ன என்பதை அறியோம் என்கிறார். அறிந்திடாமல் இருப்பது ஒரு குறை என்பது குலோத்துங்கனின் கருத்து.

உயிர் ஆவியாக அலைகிறதோ அல்லது பிறவாப் பெருநிலை பெறுகிறதோ என ஐயுறும் ஆன்மிக வழிச் சிந்தனையிலிருந்து மாறுபட்ட தத்துவமாகத் திகழ்கிறது, குலோத்துங்கனின் தத்துவ விசாரணை.

"மானிடம் தாண்டாதோ?" என்னும் பாடலில் "மானிடர் வாழ்வின் பொருளென்ன? உயிரின் தரம் என்ன? மானிடம் வளர்கிறது. வளரச்சியின் முடிவென்ன? உயிரின் உச்ச நிலை எது? மானிடம், இருளில் வாழ்வது உண்மையா? மண்ணில் பிறந்து மறையும் எல்லையை மானிடம் தாண்டாதோ? மானிடன் கேள்வி கேட்கிறான்" என்று பல்வேறு கேள்விக்கும் கருத்துக்கும் பதில் கூறும் கவிஞர், இறுதியில் மானிடர் கேட்கும் கேள்விக்கு மானிடரேதான் பதில்தர முடியும் என்ற கருத்தையும் வலியுறுத்துகின்றார்.

"கண்டவர் விண்டதில்லை. விண்டவர் கண்ட தில்லை" எனக் கூறித் தப்பிக்கும் (ESCAPISM) தத்துவத்தைக் கவிஞர் கூறவில்லை. மனிதன், கேள்வி கேட்கிறான். பதிலை, அவனே சிந்தித்து, அவனே விடை தருவான் என்று, மானிடத்தின் மீது அசைவிலா நம்பிக்கை கொண்ட தன்மையை நிலை நாட்டுகின்றார்.

கேள்விகள் ஆயிரம் கேட்பவன் மானிடன். தேடி
வாழ்வினில் பதில் சொல மானிடர் அல்லது
மற்றவர் யாருமிலை......

என்று பாடலை முடிக்கின்றார், கவிஞர். தத்துவம், ஆன்மிகம், பிறப்பு, இறப்புப் பற்றிய கொள்கைகள் சார்ந்த அனைத்துக்கும் பதில் சொல்லக் கூடியவர்கள் மனிதரேயன்றி வேறெவரும் இல்லை.

13.20. சிந்தனையில் மாறுபட்ட சிந்தனையாளர்

மாந்தருள், உயர்நிலையினரும் கூட, வாழ்வில் கவலைகள், துன்பங்கள், துயரங்கள் தீண்டாப் பூரண-முழுமை - இன்ப நிலையையே விரும்புவர். சிறந்த இலக்கிய மேதைகளும் ஆன்மீக அருளாளர்களும் விரும்புவதும் துன்பப் பிணைப்பில்லா இன்பப் பெருநிலையையே ஆகும். "என்னைச் சின்னக் கவலைகள் தின்னாதிருத்தல் வேண்டும்" என்று வேண்டுவார் பாரதி.

பட்டினத்தடிகள், அருணகிரிநாதர் போன்ற அருளாளர்களும் தேவார மூவரும் திருவாசக மணிவாசகர் பெருமான் போன்றோரும் சித்தர்களும் வாழ்வின் துயர்களைப் பட்டியலிட்டுப், பிறந்து, பிறந்து இழைத்த நிலையினின்றும் ஈடேறி, மீண்டும் பிறவா நிலையை வேண்டுகின்றனர். வாழ்வின் துயர்களைத் தாங்க முடியா நிலையின் வெளிப்பாடு. ஆனால், குலோத்துங்கன் அவர்களின் வாழ்வியல் தத்துவம், அணுகுமுறை முற்றிலும் மாறுபட்டது. இயற்கை நியதியில், இரண்டறக் கலந்த நிலை.

இரவு இல்லாத பகல் இல்லை. துயர் இல்லாத இன்பம் இல்லை. நாணயத்தின், இருபக்கங்களில் ஒன்றை மட்டுமே விரும்புவது, அறிவுக் கொவ்வாதது. இயற்கைக்கு எதிரானது. இயற்கையோடியைந்த சிந்தனை கொண்ட அறிவியல் அறிஞர் வா.செ. குழந்தைசாமி அவர்கள், இயற்கை அன்னையிடம் வேண்டுதல் வேறு பட்டதாக உள்ளது.

இயற்கை அன்னாய்!
சுமையைக் குறை எனத் தொழுவதிலேன் எம்
தோள்கள் வலிபெறத் துணை செய்வாய்
இமயச் சிகரம் வளரட்டும் தொடர்ந்(து)
ஏறும் வலிமை எம் கால்பெறட்டும்.
துயரம் தவிர்எனத் தொழுவதிலேன் - நான்
துன்பம் தவிர்த்த சுகம் தேடேன்.
அயரும் பொழுதிலெம் இதயத்தில் நீ
ஆசையின் தீயெழ அருள் செய்வாய்

என்று தோள்கள் கால்கள் வலிமை பெறவும் நெஞ்சில் அணையா ஆசைக்கனல் கனன்று கொண்டிருக்கவும் இயற்கையை வேண்டுகிற தனித்தன்மை மிக்க கவிஞரைக் காண்கிறோம். துன்பச் சுமையைக் குறை என்றோ துயரம் தவிர் என்றோ கவிஞர் வேண்டவில்லை. பெரும்பாலான

உலகப் பொது நோக்குச் சிந்தனைகளின்றும் முற்றிலும் மாறுபட்ட கோண நோக்கும் போக்கும் கொண்ட தத்துவநிலை நிற்பவராக உள்ளார் குலோத்துங்கன் அவர்கள்.

13.21. வாழும் சூழல்

"நீறும் சாம்பலும்" என்னும் பாடல், தவநிலையினர் போற்றி அணிகின்ற திருநீறு, தன் நிலை தளர்ந்து, தரையில் வீழ்ந்தால், புனிதமான திருநீறு சாம்பலின் நிலைக்குத் தரம் தாழ்கிறது. எனவே இருக்கும் இடம்-சூழல்-பொருட்களின் நிலையை நிர்ணயிக்கிற தென்கிறார் கவிஞர்.

தலையின் இழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையின் இழிந்தக் கடை

என்று வள்ளுவர், நிலைதாழ்ந்த மனிதரையும் உதிர்ந்த முடியையும் ஒன்றெனக் காட்டுகின்றார்.

நீறும் சாம்பலும் பாடலால், குலோத்துங்கன் திருநீற்றை உவமித்து விளக்கம் தருகிறார்.

மண்தொட விழுந்த பின்னர் மலர்களும் குப்பை - மேகம்
விண்தொட நின்று மண்ணில் வீழ்ந்தபின் சகதி

* * * *

பெண்தகை இதழின் தேனும் பிரியுமேல் எச்சில் அன்றோ?

* * * *

வையகம் முழுதும் ஆளும் மன்னவன் பிடித்த செங்கோல்
கையிருந் தகலு மாயின் கழியலால் வேறொன் றில்லை.

* * * *

இருப்பிடப் பெருமை ஏற்றம். ஏணியும் அதுவேயாகும்
நெருப்பிடை அழியு மேனும் நீள்திரி தெய்வம் அன்றோ?

இருக்கும் இடத்திற்கேற்ப நிலை நிர்ணயிக்கப் பெறுகிறது. நிலை இழிந்தால், தரம் தாழ்கிறது. சூழலுக்கேற்ப ஏற்றமும் தாழ்வும் இணைக்கப்படுகின்றன என்று பல ஒப்பீடு தந்த கவிஞர், தியாக நெருப்பில் வெந்தழிந்தாலும் வேதனையுற்றாலும் ஒளி தரும் திரியின் அருட் செயல்-பெருஞ்செயல் போற்றுதற்குரியது; வணக்கத்துக் குரியதாகிறது என்கிறார்.

13.22. பிறர் அனுபவத்தைக் கேட்க வேண்டும்

"கேள்விகள் புதியன கேட்பவர் புதியவர்" என்ற பாடலில், கவிஞர், கற்றறிந்தோர் கூறும் மெய்ம்மைகளை ஏற்று நாமும் உலகத்தோடு ஒட்ட ஒழுகல் வேண்டுமென்கிறார். கற்றலின் கேட்டல் நன்று எனும் கருத்து வலியுறுத்தப் பெறுகிறது.

முற்றவும் வளர்ந்த மொழியும் கலையும்
இத்தரை வாழ்வினில் எவரும் காண்கிலர்.

மற்றவர் அனுபவம் மதித்தும் கேட்டும்
கற்றவர் வளருவர் கருத்தும் காதும்
முடினர் தாழுவர் முடிவிது......

என்கிறார்.

கற்றில னாயினும் கேட்க...

செல்வத்துட் செல்வம் செவிச் செல்வம்

குறள் கூறும். பிறர் பெற்ற அனுபவத்தைப் படிப்பினையாகக் கொள்வது மிகுபயன் நல்கும் என்பது கவிஞரின் கோட்பாடு.

13.23 கேள்வி - சிந்தை - பாசம் குறிப்பன எவற்றை?

"கர்ப்பபீடம்" என்னும் கவிதையில் கேள்வி, சிந்தை, விந்தை பாசம் நேசம் போன்ற பண்புகட்கு விளக்கம் தரப்படுகிறது.

கேள்வி ஓர் கழனி: நெஞ்சம்
விழைவன விளைக்கும் நன்செய்

என்பது கவிஞரின் கருத்து. கேள்வி என்னும் வயலில் வித்திடும்போது, நெஞ்சம் விரும்புவதை - இட்டவித்துக் கேற்ப - விளைக்கும் நன்செய் ஆகிறது.

கேள்வி ஓர் ஊற்று, ஞானம்
கேட்பவர்க்(கு) ஊறும் கேணி

ஆகிறது ஏன்? எதற்கு? எப்படி? என்ற கேள்விகளைக் கேட்டே ஏதன்ஸ் நகரை மட்டுமின்றி, உலகையே சிந்திக்க வைத்தார் சாக்ரடீசு. எனவே தான் கேள்வியை ஞான ஊற்றுக்கேணி என்கிறார். தோண்டத் தோண்ட நீர்சுரக்கும் மணற்கேணி. கேள்வி, கேட்கக் கேட்க, அறிவு - ஞான - நீர் கிடைக்கும் என்பது கூறப்படுகிறது.

சிந்தை ஒரு சுரங்கம். அதனுள் மனிதனும் மிருகமும் ஒன்றாய் உலவுவது மாபெரும் விந்தையாகும். தேவருடன், அசுரர் வாழும் நிலை அங்கே உள்ளது. எதிர்கோணங்கள், விந்தை மிகு சிந்தையில் இணைகின்றன." மாந்தர் மேதைமை கடந்த சக்தி சிந்தை என்பது கவிஞரின் கருத்து.

பாசமோர் உலகம். அங்கு
பகுத்தறி(வு) ஆள்வ தில்லை

சிந்தித்தே செயல்படத் தூண்டும் பகுத்தறிவின் ஆட்சிக்குப் பாச உலகில் இடம் இல்லை. பாசம், அன்பின் முதிர் நிலை. காரண, காரியம் பற்றிச் சிந்திக்காமல் உயிர் ஈர்ப்பின் அடிப்படையில் செயலாற்றச் செய்வது பாசம்.

நேசமோர் உறவு. நட்பு
நிறை குறை பார்ப்பதில்லை

என்கிறார். இப்பாடல் முழுதும் தத்துவ உருவகமாக உள்ளது. சிந்தையின் கருவறை - கர்ப்பபீடம் - என்பதற்கு விளக்கமாக,

காண்பன கடந்து, நெஞ்சம் கருதுப மிஞ்சும் ஆழச்
சேண்மைஓர் அந்த ரங்கம் சிந்தையின் கர்ப்ப பீடம்

என்ற கருத்தைத் தருகிறது கவிதை. கவிதையின் தலைப்பு, "கர்ப்பபீடம்" என்பது.

13.24. தீயில் குளித்தவனை, வெயில் சுடாது

"வெங்கனலில் குளித்தோரை வெயில் சுடுமோ?" என்னும் கவிதை, புண்பட்ட உள்ளத்திற்கு, மாமருந்தாகிறது.

12 அடிகள் கொண்ட குலோத்துங்கனின் இப்பாடலில், உலகில் சாந்தி நிலவ வழி கூறுகிறார், கவிஞர் பொன்னைச் சுரங்கத்திலிருந்து எடுத்துவந்து, புடம் போட்டு மெருகூட்டுவது போன்று, என்னைப் படைத்த இயற்கை, என்னைத் துன்பமெனும் பெருந்தீயில் புடமிட்டுத் தூய்மைப்படுத்துகிறாள் என்கிறார் கவிஞர்.

பற்றும் துயர் நெருப்பில் எனதுயிர்
பக்குவம் காணுதடா

என்பது, குலோத்துங்கன் வாழ்வை - துயரை - எதிர் கொள்ளும் முறை, தத்துவம்.

சிற்றுளிக் காயமெல்லாம் உடலைச்
செம்மைப்படுத்துதடா!

என்பது கவிஞரின் வழிகாட்டுதல். சிற்றுளியால் கல் காயப் படாதிருந்தால், கல், கரடு, முரடாக இருந்திருக்கும். காண்போரின் கருத்தைக் கவராது. சிற்றுளியால் தாக்கப்பட்டு, உருமாற்றம் பெறும் போதுதான் கல், கலை வடிவம் தருகிறது. மனிதர், முழுமை பெற்றுப் பொலிவுடன் திகழ, துன்பம் இன்றியமையாதது என்பது குலோத்துங்கனின் கொள்கை. கண்ணில் வழிந்தோடும் கண்ணீர், உள்ளத்தைப் புனித மாக்குகிறது என்கிறார் கவிஞர்.

"அழுதால் உன்னைப் பெறலாமே" ஆன்மிகக் கருத்து. துன்பத்தால் மனிதர் நிலை குலையக் கூடாது என்பதற்காகக் கவிஞர் தரும் கருத்துக்கள் - விளக்கங்கள் - கோட்பாடுகள் - தத்துவங்கள் - துன்பத்தின் ஆற்றலையும் துன்புற்றோர்க்குத் துன்பம் தரும் அளப்பரிய பேற்றினையும் இரண்டே அடிகளில் விளக்குகிறார் கவிஞர்.

வெங்கனலில் குளித்தோம் - எமை ஒரு
வெய்யில் சுடுமோடா?

என்ற வினா, கொடுந்துன்பத்தில் மூழ்கிக் கரை சேர்ந்தோரைச் சிறு துன்பங்கள் எவ்விதத்திலும் கவலையுறச் செய்ய முடியாது என்று விளக்கம் தருகிறது.

வாழ்வில், துன்பங்களைத் துணிந்து ஏற்று, எதிர் நீச்சல் போட்டு வெற்றி பெற வேண்டும்; இடும்பைக்கு, இடும்பை தரவேண்டும் என்பதே குலோத்துங்கனின் கொள்கை; கவிஞரின் நெறியாகும்.

அவயவங்களின் வெவ்வேறு பாகங்கள் ஒன்றிணைந்து மனிதன் என்ற முழுமை உரு - பூரணம் கிடைப்பது போல், இவ்வியலிலுள்ள துண்டுச் செய்திகள், மனிதரின் ஒட்டு மொத்த இன்ப வாழ்வியலுக்கு இட்டுச் செல்லும் தத்துவக் கூறுகளாகின்றன.

13.25. மென்மைவலியது, இனிமையானது

மலரின் எழிலில் மணத்தில், மதுவின் உயர் சுவையில், யாவினும் மென்மையைக் கண்டு மகிழ்கிறோம். மகிழ்நிலை தருவதால், மதிக்கிறோம்.

வன்மை அன்றுநம் வலிமையின் உரைகல்
மென்மையின் வலியது வேறெது மில்லை........
......மென்மையின் மென்மையர் விறலினர் என்போம்

என்று வலிமையைக் காட்டிலும் மென்மையே சிறந்தது; ஈர்ப்பது; வலியது என்பதை வலியுறுத்துகின்றார்.

மலரின் தளிரின் வளரும் குருத்தின்
மென்மையின் வலியது வேறெதுவும் இல்லை

என்பது குலோத்துங்கனின் முடிபு.

மென்மையே விரும்பப்படுவது. விரும்பப்படுவதே பெருமைக்குரியது, சிறப்பானது. மனிதர்கள் பிறரால் விரும்பப் படுவதே புகழொடு வாழ்தலாகும். எனவே புகழ்கொண்டு வாழ்தலை விரும்புவோர் மென்மையாளராகத் திகழ வேண்டுமென்கிறார் கவிஞர்.

13.26. இயற்கையை உறவாகக் கொண்டவர்

இயற்கையைப் பாடாத புலவரில்லை. பாடாதார், கவிஞருமல்லர். கற்பனை ஊற்றின் பிறப்பிடம், கவிஞர்கள் காணும் நிலைக் கேற்ப, இயற்கையன்னை காட்சி தருகிறாள்.

காலையிளம் பரிதியிலே அவளைக் கண்டேன்
கடற்பரப்பின் ஒளிப்புனலில் கண்டேன்..

என்று அழகு சிரிக்கும் பொருட்களைப் பட்டியலிடுகிறார், பாவேந்தர் அவர்கள். இயற்கையின் சிரிப்பாம் அழகில் இயைந்தால் கவிதை வரும்; துன்பம் நீங்கும் என்கிறார்.

குலோத்துங்கன் இயற்கையைத் "தூரத்து உறவு" என்ற நிலையில் குறிப்பிட்டுச் சொந்தம் கொண்டாடுகிறார். "என்னுயிர் தனியொரு உடம்பைச் சார்ந்ததன்று; நனி சிறந்துயர்ந்து, ஞாலம் முழுமையும் பரவி நிற்பது" என்று தம் உயிர் பற்றிக் கூறும் கவிஞர்,

விண்ணின் வெளியின் தாரகைக் கூட்டமும்
தண்மதி பொழுதும் என்ஊரவர் ....
தூரத்து உறவினர் ஆவர்

என்கிறார். "யாதும் ஊரே, யாவரும் கேளிர்" என்ற, பழந் தமிழர் பண்பில் வந்த குலோத்துங்கன் தொடக்கக் கவிதையிலேயே, "தொன்மையிற் தொன்மையில் ஊன்றிய தமிழ் நிலத்(து) ஒழுங்கின் பண்பின் நீழலில் வளர்ந்த நிறை யுடையவர்" என்று கூறிய கூற்று, இணைத்துப் பார்த்து இன்புறுதற்குரியது.

"எவன் ஒருவன், தன் இதயத்தில் பிற உயிர்களின் ஆத்மனையும் பிறஉயிர்களின் இதயத்தில் தன் ஆத்மனையும் காண்கிறானோ, அவனுக்கு மறுபிறவி இல்லை" என்கிறது உபநிஷத்து. குலோத்துங்கன் உள்ளம் விண்ணில் சுழல்கின்ற விண் மீன்களையும் தன் உறவாகக் கண்டு நேசிக்கிறது. வானினும் விரிகடலினும் புவியின் பரப்பினும் பரந்து, விரிந்த அருள் உள்ளம், கவிஞரின் உள்ளம்.

13.27. நான் ஒருவனே போதும்

இறைவனிடம் வரம் வேண்டுவது, தம்முடைய மன உணர்வைக் கூறுவது போன்று பாடல்கள் அமைந்துள்ளன. "பார் வணங்கும் இறைவனே! எந்நாளும் சின்னவரும் கேட்கத் தெரியாத என் நெஞ்சின்.." என்பதன் வாயிலாக, "உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்" என்னும் நெறி நிற்கும் கவிஞரின் நிலை ஒளிர்கிறது. "பார் வணங்கும் இறைவனே! நின்படைப்பில் இருக்கின்ற எண்ணிறந்த குறையெலாம் நீக்கிக் குவலயத்தை யான் விழையும் வடிவில் அமைக்கின்ற வாய்ப்பெனக்குத் தாராய்" என்கிறார்.

இறைவன் படைப்பில், பலகுறைகள் உள்ளன என்பதைச் சுட்டும் கவிஞர், அவற்றை யெல்லாம் களைந்து, கவிஞர் விரும்பும் தன்மையில் வடிவமைக்க வாய்ப்பு வேண்டுமென்கிறார். இறைவன் செய்த குறையைக் கவிஞரால் களைய முடியும் என்ற ஆழ்ந்த தன்னம்பிக்கை மிளிரக் காண்கிறோம்.

நான் செல்கின்ற திசையை நன்கறிவேன். மனித இனம் தோன்றிய நாள் முதல், இன்று வரை, உலகம் எவ்வாறு அமைந்தால், இன்பச் சமுதாயமாக அமையுமென்று எண்ணும் வகையில் புதிய உலகு படைப்பேன். இல்லறத்தார், துறவறத்தார் ஆன்மிக வழி நின்றோர், தத்துவ மேதைகள்; நல்ல சமய விற்பன்னர் போன்றோர் காண விழைந்த உலகைக் காட்டிலும் மாணச் சிறந்ததை நான் படைக்கத் துணிந்தேன் பணியின் இடையே தோன்றும் தடைக்கற்கள் அனைத்தையும் தகர்க்கும் வல்லமையுடையவன் யான்.

அறிவும் நெடுந்தவமும் ஆற்றுதலும் இல்லாதார்
பெரிதாய் எதுவும் பெறுந்தகுதி யில்லார் எனும்
உண்மை அறிகுவன் நான். ஒரு கோடி துன் பெனினும்
திண்மை குறையாத சிந்தையினன்

என்று தன் நிலை விளக்கம் தருகிறார். ஒரு கோடி துன்பத்தையும் தூளாக்கும் சிந்தை கொண்டவன்யான் என்கிறார்.

இருளினை வறுமை நோயை
இடறுவேன் என்னுடல் மேல்
உருள்கின்ற பகைக் குன்றையான்
ஒருவனே மிதிப்பேன்

என்னும் பாவேந்தரின் மறஉணர்வு, குலோத்துங்கன் உளத்தோடு ஒப்பிடற்குரியது.

விழையும் பொருளெதுவும் வீடுவந்து தானாக
நுழையும் எனக் கருதும் நோக்குடையன் அல்லேன் நான்

என்று தம் நிலையைச் சொல்லோவியமாகத் தீட்டும் கவிஞர், தாம் நீண்ட பயணம் மேற்கொள்ள வேண்டியுள்ளது என்று தம்முடைய தொலை நோக்குக் கனவுகளைக் குறிப்பிடுகிறார். நீண்ட காலப் பணி மேற் கொண்டுள்ளதால், வீண் பொழுது போக்கவோ வெற்றுரை பேசவோ நேரமில்லை என்பதை உணர்த்துகின்றார்.

பயணம் பெரிது. செல்லும் பாதை நெடிது என்று தம் பயணத் தன்மையை விளக்கும் கவிஞர், தம்முடைய வழித்துன்பம் துடைக்கத் துணை தேடேன் என்கிறார். தமக்கு ஒதுக்கப்பட்ட - தாம் ஏற்ற - பணியைத் தாமே முடித்திடல் வேண்டும் என்ற கொள்கை வழி நிற்பவர் குலோத்துங்கன்.

என்படைக்கு ஒரு சிலரும் போதும் நான்
ஒருவனே போதும்; கூட்ட மெதற்கு?
கூட்ட மெதற்கு?

என்று வினாவும் தொடுக்கிறார்.

தம்முடைய அரிய பணியை முடிக்க, கூட்டமும் தொண்டர்களும் தேவை இல்லை. ஒரு சிலர் மட்டும் போதும். அந்த ஒரு சிலரும் உதவி செய்ய வரவில்லையெனில், தன்னந்தனியாகத் தாம் ஒருவரே செய்து முடிக்க முடியும் என்ற உறுதியான நம்பிக்கை கொண்டவராகத் திகழ்கிறார். தம் படைப்பில் உள்ள

அரிய பொருளெதையும் தேடியளிக்கச்
சிலர் போதும்......

என்கிறார்.

> அரிய பொருளைத் தேடிப் பெற ஒரு சிலமேதையர் போதும். ஒருவரே கூடப் போதும். ஆனால் அதன் பயன் அனைவரையும் சேர வேண்டும். எனவே கூடிச் சுவைக்கக் குவலயத்தை நாமழைப்போம்.

என்கிறார். தேடிய பொருளை உலகனைத்தும் ஒன்று கூடிச் சுவைக்க வேண்டுமென்ற உயர்ந்த உலகளாவிய எண்ணம் உணர்த்தப் பெறுகிறது. எல்லார்க்கும் எல்லாம் பொதுவானால், அங்கே புரட்சிக்கும் பூசலுக்கும் வாய்ப்பில்லை. குலோத்துங்கனின் குறிக்கோள், கொள்கைகள், சமுதாயச் சிந்தனைகள், பொருளியல் கருத்துகள் அனைத்தும் இக்கவிதையில் அடங்கியுள்ளன எனலாம்.

14. நிறைவுரை

"குலோத்துங்கன் கவிதைகள் - ஒரு கோபுர தீபம்" என்னும் இந்த ஆய்வில், முன் இயல்களில் கண்டறியப் பெற்ற மெய்ம்மைகளும் இன்றியமையா முடிவுகளும் இவ்வியலில் தொகுத்து வழங்கப் பெற்றுள்ளன.

"குலோத்துங்கன் கவிதைகள்" ஒரு கவிதைத் தொகுப்பு. கவிதைகள் பொருள் வாரியாகப் பகுக்கப்பெற்று 18 தலைப்புக்களில் தரப்பெற்றுள்ளன. 261 கவிதைகளை உள்ளடக்கமாகக் கொண்டது இந்நூல். இப்பெருந்தொகுப்பு நூல், இதற்கு முன்பு வெளியிடப்பட்ட 6 தொகுப்பு நூல்களையும் மற்றும் தின, வார, மாத, ஆண்டு இதழ்களில் வெளிவந்த கவிதைகளையும் கொண்டுள்ளது. இதன் ஆசிரியர், முனைவர் வா.செ. குழந்தைசாமி அவர்கள்.

கரூர் மாவட்டம் வாங்கலாம் பாளையம் என்னும் சிற்றூரில் 14.07.1929 இல் தோன்றியவர் முனைவர் வா.செ. குழந்தைசாமி அவர்கள். "தோன்றின் புகழொடு தோன்றுக" என்னும் குறள் இலக்கணத்தின் இலக்கியமாகத் திகழ்பவர். தரமான கல்வியால் உலகம் புகழும் பெருநிலை பெற்று,

மகன் தந்தைக் காற்றும் உதவி இவன் தந்தை
என்நோற்றான் கொல்எனும் சொல்

என்னும் குறளோவியத்துக்கேற்பப் பெற்றோர்க்குச் சிறப்புச் சேர்த்தவர். மனைத்தக்க மாண்புடையளோடு அறிவறிந்த மக்கட்பேறு பெற்று குறள் வழி வாழ்வு கொண்டு புகழ் நெறி நிற்கும் மேலோன். ஜெர்மனி, அமெரிக்கா போன்ற வெளிநாடுகளில் உயர்கல்வி பயின்றவர். நீர்வளத்துறையில் முனைவர் பட்டம் பெற்றவர். இத்துறையில் இவருடைய கண்டுபிடிப்பு, "குழந்தைசாமி மாதிரியம்" (Kulandaiswamy Model) என்ற பெயரில் நீர்வளத்துறையில் இடம் பெற்றுள்ளது. ஐக்கிய நாடுகளின் கல்வி அறிவியல் பண்பாட்டுக் கழகத்தில் (UNESCO) ஆறு ஆண்டுகள் திட்டக் குழுவில் வரைவு தயாரிப்பில் உறுப்பினராகப் பணியாற்றியவர். இவர் சர்வதேச, தேசிய அளவில் பல உயர்மட்டக் குழுக்களில் அங்கம் வகித்தவர். ஆய்வுத் துறைகளில் நீண்ட ஈடுபாடு உடையவர். சர்வதேசியத் தொழிற்கல்விக் கழகத் தலைவராகவும் பணியாற்றியவர் இவர்.

ஏழு பல்கலைக் கழகங்கள் இவருக்கு டாக்டர் பட்டம் (D.Litt) வழங்கிச் சிறப்பித்துள்ளன. இவர் எழுதிய நூல்கள் பல பல்கலைக் கழகங்களில் பாட நூல்களாகவும், இவருடைய கட்டுரைகள் உயர்நிலை, மேல்நிலைப்பள்ளி வகுப்புகளில் பாடங்களாகவும் இடம்பெற்றுள்ளன. யாழ்ப்பாணம் பல்கலைக் கழகம் 1980இல் இவருக்கு (D.Litt) பட்டம் வழங்கிச் சிறப்பித்த போது "அறிவியல் உலகம், கலை இலக்கிய உலகம் ஆகிய இரண்டையும் இணைக்கும் தகுதி வாய்ந்த அபூர்வமான அறிவியலாளர்களில் டாக்டர் குழந்தைசாமி ஒருவர். எனவே அவரது கலைப் படைப்புகளில் அறிவியல் பார்வையும், அறிவியல் ஆய்வில் கலை உணர்வுகளும், மனித நேயமும்

இடம்பெற்றுள்ளன" என்று குறிப்பிடுகிறது. மூன்று பல்கலைக் கழகங்களின் துணை வேந்தராகப் பணிபுரிந்த பெருமைக்குரியவர்.

1988-இல் இந்திராகாந்தி தேசிய ஒருமைப்பாடு விருதும், 1992 இல் நடுவண் வேளாண்மை வாரியத்தின் வைர விழாச் சிறப்பு விருதும் வழங்கப்பட்டன. இந்தியப் பொறியியலாளர் நிறுவனம் இவரை இந்தியாவின் மிகச் சிறந்த பொறியியல் வல்லுநர்களில் ஒருவராக 1991இல் பூனே மாநாட்டில் கௌரவித்தது.

இவருடைய "அறிவியல் தமிழ்" நூலுக்கு 1987 இல் அரசு விருது வழங்கப்பட்டது. தமிழ் மொழி மேம்பாட்டுக்கு இவர் ஆற்றியுள்ள தொண்டுகளைப் பாராட்டி 1999இல் தமிழக அரசு இவருக்கு ஒரு இலட்ச ரூபாய் பொற்கிழியும் பாராட்டுப் பத்திரமும், நினைவுச் சின்னமும் கொண்ட திருவள்ளுவர் விருது வழங்கியது.

"வாழும் வள்ளுவம்" நூலுக்கு 1988இல் தேசிய அங்கீகாரமான சாகித்ய அகாதமி விருது இவருக்கு வழங்கப்பெற்றது. பல்வேறு விருதுகள் பாராட்டுப் பத்திரங்கள் பெற்றுத் திகழ்பவர் நூலின் ஆசிரியர் அவர்கள்.

அறிவியலுக்கும் கல்விக்கும் இவர் ஆற்றிய தொண்டினைப் பாராட்டி, நம் குடியரசுத் தலைவர் 1992இல் இவருக்குத் தேசிய கௌரவமான பத்மஸ்ரீ விருதும், அறிவியல், தொழில் நுட்பம் ஆகிய இரண்டு துறைகளிலும் இவர் செய்த சேவை, படைத்த சாதனைகளுக்காக 2002இல் தேசிய கௌரவமான "பத்மபூஷன் விருதும்" வழங்கிச் சிறப்பித்துள்ளார்.

இலக்கியத் துறையிலும் முனைவர் வா.செ. குழந்தைசாமி அவர்கள் மாபெரும் சாதனையாளர். தமிழ் இலக்கியம், தமிழ் வளர்ச்சி; தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் போன்றவற்றில் இவரின் பணி போற்றற்குரியது. இலக்கியத்துறையில் பாவேந்தர் பாரதிதாசன், மகாகவி பாரதியார் ஆகியோரின் வழி நிற்பவர்.

இலக்கியத்தில், பழந்தமிழ் மரபு காக்கப்படவேண்டுமென்ற நிலை நிற்பவர். எழுத்தோட்டம், சிந்தனைகளில் திராவிட இயக்கப் பாரம்பரிய வழி நிற்பவர்.

ஓரினத்தின் நிகழ்காலச் சாதனையில் நிறைவு இல்லாவிட்டால், பழம்பெருமை பேசிப் பயன் ஒன்றுமில்லை என்ற கருத்து அடிப்படையில் இலக்கியத்தை அணுகுபவர் இவர்.

இவர், தமிழ்மொழியின் சிறப்பைப் பல அடைமொழிகளால் பாராட்டுகின்றார். அன்புத்தாய் மகவைக் கொஞ்சி மகிழ்ந்து பாராட்டும் நிலை, கவிஞர் தமிழிடம் காட்டும் வாஞ்சையை நிகர்க்கும். மனோன்மணியம் சுந்தரனார் தமிழைப் போற்றுவதன் காரணம் ஆரியம்போல், தமிழ் சிதைந்து அழிந்துவிடவில்லை என்பதே. அதனால் குலோத்துங்கனும் வாழும் தமிழை வாயாரப் புகழ்கிறார். வெண்ணிலாவின் தண்ணொளியால் வானம் வளம் பெற்றது போல், வள்ளுவன், ஔவை, இளங்கோவைப் பெற்றதால், தமிழ்நிலம் ஒளி பெற்றதென்கிறார் கவிஞர். தமிழ்மீது காதல் கொண்டதால், வாழ்க்கை

முழுவதும் இனிக்கிறது. கசப்புச் சுவையைக் காணவில்லை என்பது கவிஞரின் கூற்று.

நமது முந்தையோர் முயன்று தொடர்ந்து முத்தமிழ் காத்தனர். வந்தவர் ஆட்சியில் தமிழ் வளம் குன்றிற்று. தமிழின் பழம்பெருமை பேசிப் பயனில்லை. அறிவியல் தமிழை வளர்க்க வேண்டும். சற்றே பின் தங்கினால், அறிவியலில் நெடுந்தூரம் பின்னடைவு ஏற்படுவதுபோல், மொழியிலும் தளர்ச்சி ஏற்படும் என்பது கவிஞரின் கருத்து.

தமிழன் மனித வாழ்வின் தீராப் புதிர்கள் அனைத்தையும் ஆய்ந்து கண்டுணர்ந்து, அடித்தளம் காணும் ஆற்றல் வாய்ந்தவன், இனம், இடம், பொருள் போன்ற பேதங்கள் கடந்து, உயர்ந்து நிற்பவன்; யாவரும் உறவெனக் கொண்டு வாழ்ந்து ஓர் குவலயக் குடும்பம் என வாழ்பவன்; களம்பல கண்டுவென்ற, தலைசிறந்த மாமன்னரின் கீழ்வாழ்ந்த மாபெரும் இனம் தமிழினம் என்று வானளவு போற்றுகின்றார்.

பிற்றைநாளில், தமிழினம் தன்னலத்தால் தம் இன நலத்தைத் தீய்த்தது. கடுகு உள்ளம் கொண்டு தரம் தாழ்ந்தது. தம் இன வீழ்ச்சிக்குப் பொது எதிரிகளைவிட, உட்பகையே காரணமென உறுதியாய் விளக்கத்துடன் விவரிக்கின்றார். தம்மினத்தை அழிக்கும் பண்பில், தமிழர்கள் தலை சிறந்தோர், ஈடற்றோர் என்பது கவிஞரின் முடிபு.

முன்னோர் செல்வத்தைக் கொண்டு வாழ்வது "செத்தநிலை" என்று சங்க நூல் கூறுதல் போல், முன்னோரின் பழம்பெருமையைப் பேசியே வாழ்வதும் செத்த நிலை என்கின்றார். முயற்சி கொண்டு, தமிழினம் முன்னேற வேண்டும் என்பதை "நவக்கிரக இனத்தவர்" என்னும் சொற்றொடரால் சுட்டுகின்றார். "செத்த பாம்பு சீறலாம்; கட்டையில் வைத்த சடலம் துள்ளலாம்; நவக்கிரங்கள் நண்பராகலாம். ஆனால் தமிழினம் ஒன்றிணைந்து ஒரு தலைவரின்கீழ்ச் செயல்படாது; தமிழர்கள் வளர்பவரைத் தடுப்பர்; வளர்ந்த பின் துதிப்பர்" என்கிறார்.

கடல் கடந்த, தமிழர், தமிழ் கற்க முடியாமல் வாடுகின்றனர். தமிழ்க் கடவுள் முருகனுக்குப் பூசை புரிய பௌத்தகுரு நியமிக்கப்பட்டுள்ளார் இலங்கையில். தமிழ்மொழியும் பண்பாடும் அயல்நாடுகளில் சிதைக்கப் படுகின்றன. மொழி காக்கப்படா விட்டால், தமிழ்மொழியும் தமிழினமும் சிதையும் நிலை உருவாகுமென எச்சரிக்கின்றார்.

புதுக்கவிதை பொருள்புரியாதது. இலக்கண நெறி நில்லாதது, எனவே இதுவும் தமிழின், தமிழரின் பகை என்பது கவிஞரின் கருத்து.

தமிழில் புதுமையும் அறிவியல் சார்பும் வேண்டும். அதுபோல் தமிழினத்துக்கும் அறிவியல் அணுகு முறை தேவை என்கிறார்.

தமிழில் எழில் வேண்டும், புதுமை வேண்டும் என்னும் கவிஞர் பிறமொழி கலவா நிலையில் சாளரங்களை அடைத்து வைப்பதால் ஒளியும் புதுக்காற்றுமின்றி, இருட்டறையாக - புழுக்கம் நிறைந்ததாக - உயர்வுக்கு வழி இல்லாததாக ஆகிவிடும் என்று எச்சரிக்கின்றார்.

வயலைப் பராமரித்து, உயர் பயனைப் பெறும் உழவர் போல், தமிழைப் பராமரிக்கா விட்டால் தமிழ் ஊடல் கொள்ளும். பயனற்றுப் போகும். மொழி அழிந்தால் இனம் அழியும் என்பதை உணர்த்துகின்றார். அயல் மொழிகளின் வரவால், தமிழ் மொழியின் பரப்பு விரியும். இது நம் மொழியின் வலிமையை இழப்பதாகாது. நம் மொழியின் தனித்தன்மை கெடாமல் பாதுகாக்க வேண்டியது தமிழரின் பொறுப்பு, கடமை.

தாய்நாடு பற்றிக் குறிப்பிடும் கவிஞர், நாட்டின் எல்லை சுருங்கிவிட்டதை உணர்த்தி, வருந்துகின்றார். எவ்வித எதிர்நிலைச் சூழலிலும் தாய் நாட்டிற்குப் பெருமை சேர்க்கும் முயற்சியில் தளரக் கூடாதென்பது கவிஞரின் கருத்து.

யாண்டும் யாங்கும் யாவுமாய் நிறைந்து நிற்பது தாய்நாடு என்பதை உணர்த்துகின்றார்.

இதயத்துடிப்பாய்க் களங்கமில்லா அன்புடன், சிந்தையும் செயலும் நிறைந்ததாய்த் தாய்நாட்டுப்பற்று மிளிர வேண்டும் என்கிறது குலோத்துங்கன் கவிதை.

தாய் நாட்டின் மணிமுடி மீதில் ஒரு மாமணிக்கல் சேர்த்திடும் ஆசை ஒவ்வொருவரிடமும் எழுதல் வேண்டுமென்று குறிப்பால் உணர்த்துகிறார். நாடு உயர்வெய்த உழைக்கும் உழைப்பை, நாட்டுக்குக் காணிக்கை யாக்குதல் வேண்டும். நாட்டுப்பற்று இரண்டறக் கலந்திடல் வேண்டும் தமிழர் குருதியிலே, என்பதைத் தன் நிலை விளக்கமாகத் தருகிறார். மொழி வல்லுநரின் முதிர்ந்த கருத்துக்கள் அடங்கிய கருத்தோவியமாகக் கருத்துப் பெட்டகமாகத் திகழ்கிறது குலோத்துங்கன் கவிதைகள் என்னும் இந்நூல்.

குலோத்துங்கனின் சாதி, சமயக் கண்ணோட்டம் அறிவியல் சார்ந்தது. பகுத்தறிவு அடிப்படையில் எழுந்து நிற்பது. தமிழர் சங்கம் கண்டனர். ஆனால் சாதிகள் கண்டிலர். முச்சங்கம் கண்டவர் தமிழர். நாற்குலம் கண்டவர் வேதியர். அரசியல்வாதிகள், சாதிகளாலேயே வாழ்பவர்கள். சாதியமைப்பே சமுதாய வளர்ச்சிக் கெதிரான நஞ்சாகிறது.

சாதித் தலைவர்களென்னும் தவளைகள் எழுப்பும் சத்தம் காதைப் பிளக்கின்றதென்கிறார், கவிஞர். கற்றோரிடத்தும் சாதிச் சழக்குகள் மறையவில்லை. சாதிச் சிறுமையில் உழல்வோர் காட்டும் தீநெறியில் செல்லாதிருத்தலே மனிதகுலத்துக்குச் செய்யும் மாபெரும் பணியாகும் என்கிறார். சாதிச்சழக்கர்கள் நிதமும் புதுப்பெயரில் நிறுவனங்கள் காணுகின்றார். காலமெலாம் சாதிக்குக் கால்பிடிப்போர், சீலம் உணரா மக்கள் வெளிவேடக்காரர்களின் வேடத்தை உணர்ந்து நல்லோர் விலகிட வேண்டும்.

சாதி என்பது, தமிழ் மரபன்று. அறம் வகுத்த வள்ளுவர், ஆன்ம நேய அருளாளர் வடலூர் வள்ளலார்; சித்தர்கள், புதுயுகம் காணப் புறப்பட்ட பாரதி, சாதி நச்சுமரத்தை வீழ்த்த வாழ்நாளெல்லாம் தளர் வறியாத் தொண்டாற்றிய தந்தை பெரியார், பேறிஞர் அண்ணா போன்றோர் வழியே சென்று சாதியைச் சாய்த்திட வேண்டுமென்பார் கவிஞர். சாதித் தவளைகளின் ஒலி ஓயாதது வரை, தமிழ்ச் சமுதாயம் சரியான வளர்ச்சிப் பாதையில் கால் பதிக்கவில்லை யென்பதே பொருள் என்கிறார்.

அறிவியலே நமது மறையெனக் கொள்ளப்பட வேண்டும். அன்பு நம் வழியெனக் கொள்ளப் பெறல் வேண்டும். புதுயுகம் காண்பதற்குப் புறப்படல் வேண்டும். அறிவியல் அணுகுமுறையே சாதிக் கொடுமைகளைச் சாய்க்கும் என்கிறார். மனிதனின் துணைக்கு வடிக்கப்பட்ட கருவியே மதம். மதம், மனிதனைக் காட்டிலும் மேலானதென மதிக்கும் மடமை மாய்க்கப் பெறல் வேண்டும். கலையுரைத்த கற்பனையைக் கடவுளெனக் கொண்டாடும் கண்மூடி வழக்கங்கள் ஒழிக்கப்படல் வேண்டும். மற்றவர்கள் உணர்வுகளை மதிப்போம். பண்டை மரபுகளின் அடிப்படையில் ஆய்வோம். திண்ணிய நெஞ்சம் பெற்று, எதையும் தாங்கும் இதயத்துடன் கூற்று உடன்று வரினும் எதிர்த்துப் போரிட்டு வெற்றி காண வேண்டும். பல்கலைத் தெளிவும் பட்டமும் அறிவியல் கல்வியும் சிறுமைகளைக் களையவில்லை. திரை மறைவில் சாதி கூட்டித் தொடர்பேற்றுச் செயலாற்றும் பொல்லாத நிலை தொடர்வதால், திராவிடத்தின் வளர்ச்சிக்கே தன்னைத் தந்து ஒரு நூறாண்டு தன்னலமற்ற தொண்டாற்றிய தந்தை பெரியார் அவர்கள் மீண்டும் தமிழகத்தில் பிறக்க வேண்டுமென்று வேண்டுகின்றார்.

தன்னலமற்ற தலைவரின் வழி நடத்தலில்தான், தமிழகம் சாதி ஒழிந்த நிலை பெறும். உயர்வு பெறும் என்கிறார் முனைவர் வா.செ. குழந்தைசாமி அவர்கள். பெண்மையைப் பாடாத கவிஞரில்லை. பாடுவோரின் பண்புக்கேற்பப் பெண் பேசப்படுகிறாள். ஒரே கவிஞர் இருவேறுபட்ட எதிர்துருவ நிலைகளில் - பெண்ணைப் பற்றி மாறுபட்ட நிலைகளில் - குறிப்பிடுவதும் உண்டு. சிலர் பெண்ணைப் பேயெனவும் சுட்டக் காண்கிறோம். குலோத்துங்கன் கவிதைகள் பெண்ணை உயர்ந்த கோணத்தில் பார்க்கின்றன. குலோத்துங்கனின் கவிப் பெண்ணாள் சிறு மாசும் தீண்டப்படா நிலையில் படைக்கப் பெற்றிருக்கிறாள்.

பெண் கள்ளாகவும், காவியமாகவும் பயன்படுத்தப் படுகிறாள். கவிஞர், பெண்ணைக் காவியமாகக் காண்கிறார். "புத்துணர்வின் மணற்கேணி, அழகு கோடி பூக்கின்ற மலர்க்காடு முடிவில்லாச் சுவை அமைந்த முழுமை, பெண்மை" என்பது கவிஞரின் கருத்து. அன்பு, ஆற்றல், உயர்வு தேடும் ஆசை; அடிப்படைகள் அனைத்தும் பெண்மை என்கிறார்.

ஆதிமுதல் மானிடத்தைப் பேணிவளர்த்தவர்கள் பெண் என்னும் தெய்வங்கள். வையத்தின் மாண்பனைத்தும் ஒரு சொல் கொண்டு வருணித்தால், அது அழகே ஆகும். அந்த அழகென்னும் அருவத்திற்கு உருவம் கொடுத்தால், அந்த அழகின் திருஉருவே பெண் என்கிறார். தமிழுக்கும் அமுதென்று பேர் என்பார் பாவேந்தர். அழகுக்குப் பெண்ணென்று பேர் என்கிறார் குலோத்துங்கன். பெண் கல்வியால், மூடக் கொள்கை, முடை நாற்றம் வீசுகின்ற காடு நறுமணம் பெறும் என்பது கவிஞரின் கருத்து. பெண்ணின் காதலுணர்வு, பீடுடன் பேசப்படுகிறது.

கைகள் தொடாது, கால்கள் படாது
கலவிகள் நிகழ்வதுண்டு. உணர்வுகள்
கரைபுரண் டோடுவ துண்டு

என்று காதலின் புதிய பரிமாணம் பேசப்படுகிறது.

பெண்மை எனப்படும் காவியம் - புவி
பேணும் வலிமையின் பெட்டகம்

எனப் போற்றும் கவிஞர், குடும்பத்துடன் வாழ்தலையே - இல்லறத்தையே - மிகச் சிறப்பெனப் போற்றுகின்றார்.

மக்கட்பேறு, வாழ்வின் சிறப்பெனும் கவிஞர், பாரதி போல் குழந்தையை "இன்பம் உருவெடுத்த பேரழகே! இசை வடிவே! எழிலெடுத்த பொன்னுருவே! எனப் போற்றிப் புகழ்கிறார்; மகிழ்கிறார்.

> சதி இன்றும் வாழ்கிறது. பெண்ணை வைத்துச் சந்தை பல நடக்கிறது. விதவை என்னும் விதி இன்னும் தொடர்கிறது

என நோகிறார், கவிஞர்.

> எழில் நலம் வழியும் பெண்ணைப் பார்க்கவும் தகுதியற்ற பாவியர் ஆண்கள். தாய்மை யேற்கும் பெண்ணைக் காட்டிலும் பெரியது எதுவும் இல்லை

எனக் கூறும் கவிஞர் அவர்கள், புதுமை என்னும் பெயரால், பொல்லாதன செய்யும் பெண் உருவங்களைக் கண்டிக்கத் தவறவில்லை. பெண், போதைப் பொருளாகப் பயன்படுத்தப்படுவதற்கு இசையும் பொல்லாப் போக்குகள் இருப்பது வரை, பெண் குலத்துக்கு உய்திக் காலம் இல்லை என்பது கவிஞரின் உறுதியான முடிவாகும்.

மனைமாட்சி, இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை, எனை மாட்சித்தாயினும் அது எந்தப் பேறும் இல்லா நிலையே ஆகும். குடி உயர்வுக்கு முதன்மையாய் இருப்பவள் பெண் எனக் கொண்டு, பெண் பீடுற நடக்க வேண்டும் என்று, அறிவுறுத்துகின்றார். ஆண்களிடம் கெஞ்சுவதால், வருவதில்லை உரிமை. உரிமையை, எவரும் கேட்டுப் பெற்றதுமில்லை "கிளர்ந்தெழுந்து, வஞ்சியர்கள் தலைநிமிர்க" என்று, பெண் உயர்வுக்குப் பாதை காட்டுகின்றார். உரிய உரிமைகள் மறுக்கப்பட்டால், கிளர்ச்சி, புரட்சிதான் உரியவழி என்பதைப் பெண் விடுதலை பேசும் இடத்தில், கவிஞர் அவர்கள் விளக்கக் காண்கிறோம்.

குலோத்துங்கன் காணும் மனிதன், மனமும் தோளும் இணைந்தவன். சிந்தையும் செயலும் சேர்ந்தவன், உடல் உழைப்பாற்றலும் உள்ளச் செழிப்பும் சேர்ந்திருக்க வேண்டும். மனிதன் பகுத்தறிவுள்ள மிருகம். வயிற்றில் மட்டுமே மானுடம் வாழ்வதில்லை. திடமுடன் கூடிய சிந்தையும் செயலின் திறமையும் சேர்ந்திருந்தால், தெய்வமும் மனிதனே, என்பது கவிஞரின் கோட்பாடு. எங்கே உள்ளமும் உடலும் மனமும் தோளும் சிந்தையும் செயலும் உறுதி பெற்றியைந்து கடமையாற்று கின்றனவோ அந்த இடந்தான் கடவுள் இருக்குமிடம். செயல்புரியும் அந்த மனிதன் தான் தெய்வம் என்பதை வலியுறுத்துகின்றார். மனிதன், அணு நிகர்த்தவன். எனினும் அண்டத்தையே ஆராயும் ஆற்றல் மிக்கவன். இயற்கையின் இயல்பைத் தேடும் பாதையில், முடிவில்லாத பயணம் மேற்கொண்டவன். பயணம் போற்றும் கவிதையின் தலைவனும் காதையின் தலைவனைப் பாடும் கவிஞனும் அவனே என்கிறார் கவிஞர்.

மனிதர் வெற்றியடைய, முதலாவது இலக்கை நிர்ணயம் செய்து கொள்ள வேண்டும். குறிக்கோள் இல்லாச் செயல் திட்டம், பயனற்றது. திட்டமிடல் முதன்மையானது என்று வலியுறுத்துகின்றார். ஏழ்மையும் துயரும் பிறர் இழைத்ததன்று. மற்றோர் துன்பம் செய் தனரெனக் கூறுதல், அறிவுக் கொவ்வாதது. வளர்ச்சிக்கு வழிவகுப்பதும் தொடர்வதும் துணிந்து முன்னேறுவதும் வாழ்வின் நியதியெனக் கொண்ட மக்கள்; கடமை என்று செயலாற்றுவோர் என்றுமே தாழ்வதில்லை.

"பனிமலர்த் தண்மையோடு, பரிதியின் கனலும் கொண்ட புனிதனும் அவனே; சக்திப் புயலும் அவனே" எனக் கூறுகிறார் கவிஞர். தடைகள் குறுக்கிடினும் தொட்ட பணியைத் தொடர்ந்து, தொய்வின்றி முடித்திடல் வேண்டும். ஆர்வமும் துடிப்பும் ஆற்றலும் தெளிந்த கல்வியும் மானிடம் கடந்த ஆசையும் செல்வமும் சிறியன தேடாச் செருக்கும் பொங்கும் புகழும் தேட வேண்டும்.

மானிட னே! நின்னடி வளர்ந்தால் நீள்நிலம் வளரும்,
உன்னடி தளர்ந்தால் உலகம் தேங்கும்......
...... கவிஞன் கனவு கண்டால் காவியம் படைக்கிறான்.
...... கண் பார்வைக்கு எல்லையுண்டு. கண்மூடிக் கனவு
...... கண்டால், எல்லை உள்ளளவுக்கு விரியும். கனவுகள்
கடந்து நிற்பன. அவை நிச்சயம் நிறைவேறும்

என்பது கவிஞரின் வாக்கு; கருத்து; வழி காட்டுதல்.

வருமுன்னர்க் காத்திடல் வேண்டும். சத்தியம், தருமம், வாழ்வின் உத்திகள், ஒழுக்கம் போன்றவை மாறும். சலனமும் மாற்றமுந்தான் வளர்ச்சி ஏற்கும். குழப்பமும் வளர்ச்சியே. உலகின் அனைத்திலும் இன்பம் இணைந்துள்ளது. புரியாத மனிதன், இன்பம் எங்கே, இன்பம் எங்கே என்று தேடுகிறான். உலகம் உயர்ந்தால், தனி மனிதன் தலைமை எய்துவான். பந்தங்களின் செயல் கண்டு, அவர்கள் செய்யும் துன்பம் கண்டு, மனிதன் வாடுகிறான். ஆனால், அப்பிணைப்பைப் படைத்துக் கொண்டவன் அந்த மனிதனே தான். செல்வர், வறியவர் நிலை உருவாக முதன்மைக் காரணம், மனிதரின் தன்னலமே.

இருப்பதைப் பகுப்பதல்லால், இயற்றுதல் இல்லார் கையில்,
பொறுப்பெல்லாம் தந்த நாட்டில், புல் கூட முளைப்பதில்லை.
தகுதியுடையோர் தலைமை பெற வேண்டும். காசுக்கு,
வாக்குச் சீட்டை விற்கும் கயமை நிலவுவது வரை, மாந்தரின்
துயரும் பரவி நிற்கும். வினை செய்யா வீணர் கையில்
பொறுப்பளித்தலாகாது

என்கிறார் கவிஞர் அவர்கள்.

மானுடம் மகத்தானது. எனவே மானுடத்தையே பாடுவேன் என்கிறார் கவிஞர். சிறப்பு, எங்கிருப்பினும் போற்றப்பட வேண்டு மென்பது, சீர்மைமிகு மேன் மக்கள், நற்குடிப் பிறந்தாரின் இயல்பு என்பதை வலியுறுத்துகின்றார்.

மூச்சுள்ள வரையும் முன் செல்ல முயல்வேன்

என்னும் கூற்றால், மானுடம் ஓய்வின்றி உழைக்க வேண்டுமென்ற கருத்தைக் கூறுகிறார். மதம் என்னும் பேய்பிடியாதிருக்க வேண்டும். வள்ளலார் அவர்களின் சமரச சன்மார்க்கம் பரவுதல் - நிலை கொளல் - வேண்டும் என்பதைச் சுட்டும் கவிஞர், சமயக் கொடுமையால் சாய்க்கப் பட்டோரின் பட்டியலையும் தருகிறார். மாந்தரினம் சிறந்திட, சமய நல்லிணக்கம், சாதி பேத மற்ற சமுதாயம் தேவை என்று நூல் குறிப்பிடுகிறது.

அறிவியல், உலகை ஒரு சிறு குடும்பமாக உருமாற்றி விட்டது. மலை, கடல்களை நொடியில் கடக்கிறோம். ஆனால், சாதி, சமயம், மொழி, நாடு, நிறங்களால் மனிதர் பிரிக்கப்படும் நிலையைக் கடக்கவில்லை. இவற்றை யெல்லாம் வென்றிட, மனிதன் முயற்சியும் மேற்கொள்ளவில்லை. மனித உரிமையை உருவாக்காத அறிவியலும் அறிவும் பயனற்றவை. புலன்களை விஞ்சி நிற்கும் மெய்யறிவு, அறிவியலறிவு, பகுத்தறிவு வேண்டும். அது, ஆண்மையோடு இயைந்த வினை நலத்தில் ஒன்றிச் செயல் புரிதல் வேண்டும். மனிதன் வளம் பெற, மதம் தவிர்த்த நல்லன்பு மலர்தல் வேண்டும். கொடுஞ்செயல் மறையும்போது தான், இன்பம் குவிமலர், இதழ் விரியும்.

மறைகளும் மறைகள் தந்த மதங்களும் மதங்கள் கண்ட
நிறைகளும் கடந்து நிற்கும் நெஞ்சினன் மனிதன்

என்ற பெருநிலை பெறவேண்டும், என விழைகின்றார் கவிஞர் குலோத்துங்கன் அவர்கள்.

காலம் பொன் போன்றது. கடமை கண்போன்றது.

அரை நொடிப் பொழுதும் வாழ்வின் நிலையை நிர்ணயிக்கும் ஆற்றல் பெற்றது. காலத்தைப் பயன்படுத்தத் தவறினால், காலம், தவறியவரைப் புறக்கணிக்கும்.

காலமாம் விந்தை கல்லிடை இழைத்தது;
ஞால வாழ்வெனும் நற்சிலை

என்பது கவிஞரின் காலக் கருத்து. காலத்தைக் கணிக்கும் கருவிகண்ட, மனிதன், காலத்தை ஆட்சி செய்யும் கலைகளைக் கற்கவில்லை. அது கோழையின் கையிலுள்ள, கூர் வாளாக உள்ளது. காலம், யாருக்காகவும் காத்திருப்ப தில்லை. எனவே காலத்தை உரிய முறையில், உரிய பொழுதில் முற்றிலும் பயன்படுத்தி முன் செல்க என அறிவுறுத்துகின்றார் குலோத்துங்கன் அவர்கள்.

காலம் போன்று, முயற்சியும் சிறப்புடைத்து. முயற்சி, திருவினை யாக்கும். தளரா முயற்சியே, ஆசைத்தீயின் சுடரை, அணையாது காக்கும். "நான் ஒரு கோரிக்கையை முன் வைத்தால், அது நிறைவேறும் வரை, ஓயமாட்டேன்" என்கிறார். மனிதர் உயர, விடா முயற்சி தேவை என்பது வலியுறுத்தப் பெறுகிறது.

பயணம் தொடங்கும் போது, முன்னோர் மரபை முற்றிலும் அறிவதுடன், முயற்சியின் விளைவைப் பற்றியும் முழுமையான சிந்தனை வேண்டும். கல்வி

கற்பதும் மாபெரும் பயன்நிறை முயற்சியே. புதிர்கள் காண்பதும் அவற்றிற்குத் தீர்வுகள் காண்பதும் வாழ்வியல் நெறியின் இலக்கணம் ஆகும். மாணவர் போன்று, கற்றுக் கொண்டே இருப்பதால்தான், நாம் இயற்கையின் எல்லையற்ற விரிவுகளைக் கண்டுணர முடியும். அதுவே, வாழ்வுக்குச் சுவை யூட்டும்.

வெற்றிக்கு விளிம்பில்லை. எல்லை தாண்டிப் பறக்கும் பறவைகள் போல், மனிதன் சாதி, சமய, நாடு, மொழி எல்லைகள் தாண்டிச் சிந்திக்க வேண்டும். உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளலாக வேண்டும். தீயனதீண்டா முயற்சி வேண்டும்.

ஓசைகள் எல்லாம் இசையாவதில்லை. ஒழுங்குபடுத்தப்பட்டவையே இசைவடிவாகின்றன. கால நீரோட்டக் கரை வழியே தான் நடக்க வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. புதிய பாதை காணலாம். எதிர் நீச்சல், அறிவியல் கண்டு பிடிப்பின் அடித்தளம். முயன்று கொண்டிருப்பதே ஆக்கத்தின் அடிப்படை. வெற்றியென்பது, வேண்டும் பொருளொடு ஒன்றி, ஓய்வின்றி, உழைப்பவர்க்கே உரியது. புழுக்களும் சேற்றில் புரண்டு, உண்டு, உறங்கி, வாழ்கின்றன. மனிதன் உயர்ந்தவன். உயர்ந்தன அடைதல் வேண்டும். தானாக எதுவும் வந்து கையில் கூடுவதில்லை. சிறுமையை வேருடன் தீய்ப்பதென்னும் உறுதியாலன்றி, உயர்வு எதுவும் காண்பதற்கில்லை. தகுதிகள் பாராட்டப் பெறல் வேண்டும். செயற்கரிய செய்தாரைப் புகழ்தல் வேண்டும். ஊக்கத்திற்கு, ஊக்கம் சேர்க்கும் சத்துணவு போன்றது பாராட்டுதல்.

தக்காரை நெஞ்சாரப் போற்றும் நாடு
தகுதியினை வளர்க்கின்ற கழனி

என்பது குலோத்துங்கன் அவர்களின் கருத்து.

தகுதிகண்டு, பாராட்டாததால்தான், திறமை மிகுந்தோர், வேற்று நாடு செல்கின்றனர் என்பது உள்ளுறையாகும்.

"கற்க கசடறக் கற்பவை...." உயர்நெறி, முழுமை நிலை. பூரணம், இயலாத தாயின், கொஞ்சம் கற்பது, காலோ, அரையோ பயன் தரலாம். எள்ளைத் தின்றால், எள்ளளவு பசியாறும்." கற்றல் முயற்சி, நற்பயன் தரும். "காலோ, அரையோ கற்பது செல்வம்" என்பது கவிஞரின் கொள்கை.

நாட்டின் நிலவரம் நல்லதாக இல்லை. தீயோர், திருவில் திளைப்பதும் தூயோர் நாளும் துயரில் துடிப்பதும் நடைமுறை ஆயிற்று. பழைய போக்குகள் பயனளிக்காததால், புதிய பாதை கண்டு புன்மைகளை வேரறுத்துப் பொசுக்கி, நல்லன வளர்த்திடல் வேண்டு மென்கிறார் முனைவர் வா.செ. குழந்தைசாமி அவர்கள்.

"குலோத்துங்கன் கவிதைகள்" எனும் இந்நூல், இலங்கைத் தமிழரின் அவலத்தை ஒரு தொகுப்புப் பாடலில் குறிப்பிடுகின்றது. இதில், ஈழத்தமிழரின் நிலை அவர்கள் படும் வேதனையின் எல்லை; அவர்களின் ஏமாற்றம்; இன்னல் இலங்கை எரியும் ஈமத்தீயின் தோற்றம்; தமிழர்கள் ஏற்க வேண்டிய சபதம், இவற்றுடன், ஆசிரியரின் மனித நேயமும் தமிழ் இனப் பற்றும் மிளிர்கின்றன.

"இலங்கையை ஆண்ட அந்நியரை விரட்டத் தமிழரை அணி சேர்த்த சிங்களர், விடுதலை பெற்றதும் தமிழினத்தை வேரறுக்க முனைந்தனர். ஏமாற்றப் பட்ட தமிழர், இன்னலின் உச்சத்தில் நின்று துடிக்கின்றனர். இலங்கையில் தீ பரவிற்று. அது ஈமத்தீயின் தோற்றம் கொண்டுள்ளது. கோவலனைக் கொன்ற, பாண்டியன் நெடுஞ்செழியனின் மதுரை, கண்ணகியின் சீற்றத்தால் பற்றி யெரிந்தது. ஆயிரக்கணக்கான தமிழரின் கண்ணீர், இலங்கையை முற்றும் அழிக்குமென்பது, கவிஞரின் கருத்து - சாபம் - வேண்டுதல், ஈழத்தீ வளர்கிறது. தமிழர் ஆவி, எரிபொருளாய் ஆகிறது அவர்கள் நியாயம், ஊழித்தீ யாகுமடா; வஞ்சகர் ஆட்சியை அழிக்கும்" என்கிறார் கவிஞர்.

ஊழிபல ஆயிடினும் ஈழ மண்ணில் எம்முடைய
நற்றமிழ் ஆட்சியைக் காண்பதுவரை, நாங்கள்
ஓய்ந்திருக்க மாட்டோம்

என்று சபதம் - உறுதி - மேற்கொள்ள வேண்டு மென்கிறார் கவிஞர், அவர்கள்.

சிங்களர்களின் கொலை வெறி கண்டு அஞ்சி, உயிர் பிழைக்கக் கடல் தாண்டி வர முயன்ற தமிழரின் கலம் கவிழ்ந்து, கூட்டமாய் நீரில் மூழ்கி மாண்ட துயரக் கொடுஞ் சிகரம் கண்டு குமுறுகிறார் குலோத்துங்கன் அவர்கள்.

தோணி கவிழ்ந்த கணம் துணையின்றி நின்ற கணம்
என்ன நினைத்தாரோ? எதற்காக ஏங்கினரோ?
அடங்கிய அவ் ஆவிகளின் ஆசைகளை யாரறிவார்?

ஒப்பாரி இலக்கியமாகத் தோன்றிடினும் கவிஞரின் உள்ளக் குமுறலின் எரிமலைப் பிழம்பின் வெளிப்பாடாகிறது.

ஈழத்தமிழரின் இன்னலை எண்ணிப் பாராத உலக நாடுகள், அறம் பிறழ்ந்தவை என்பதே கவிஞரின் கணிப்பும் கருத்தும் ஆகும். "ஈழவர்தம் துயர்கண்டு கொதித்து, விம்மி எழுவதிலாப் புழுவினங்கள் இருந்தென் போயென்?" என்று எரிச்சலுடன் கூறுகின்றார்.

உலக நாடுகள், அறம் காக்கும், போற்றுமென நம்பி, ஈழத்தமிழர் விடுதலைப் போரில் இறங்கவில்லை. தம்மையே நம்பி இச்சுதந்திரப் போரில், தமிழர்கள் இறங்கியுள்ளனர் என்று தமிழரின் நிலையைத் தெளிவுற விளக்குகின்றார், கவிஞர். தன்மானப் பண்புக்கு, வெற்றி நிச்சயம்; "அறம் வெல்லும். பாவம் தோற்கும்" என்பதை நூலில் முனைவர் வா.செ. குழந்தைசாமி அவர்கள் விளக்கிக் கூறுகின்றதைக் காண முடிகிறது.

குலோத்துங்கன் அவர்களின் பாராட்டுதலுக்குரியோராய்த் திகழ்கின்றவர்கள் பாவேந்தர் பாரதிதாசன், பேரறிஞர் அண்ணா, தன்மானத் தலைவர் தந்தை பெரியார், மகாகவி சுப்பிரமணிய பாரதியார், பாரதப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு, தவத்திரு குன்றக்குடி அடிகளார், கவிஞர் அவர்களின் தந்தை; தாய்; தங்கை; தம்பி ஆகிய பெரும் பேறு பெற்றவர் களாவர். பதினெட்டுப் பொதுத் தலைப்புகள் கொண்ட நூலில் இரண்டு தலைப்புகளில் இவர்களின் சிறப்புகள் பேசப் பெறுகின்றன.

குலோத்துங்கன் அவர்களின் போற்றுதற்குரிய மேன்மக்களைப் போன்று, கவிஞரின் கண்டனத்துக்குள்ளானோர் பட்டியலும் நீண்டதாகவே உள்ளது. ஒளியைப் புகழ்ந்தால், இருள் இகழ்ச்சிக்குரிய தென்பது, சொல்லாமலேயே புலப்படும். சமுதாயம் எந்த அளவுக்கு, இருள் மனத்தினரால், இன்னலுக்குள்ளாக்கப்படுகிற தென்பதை விளக்குகிறார் நூலாசிரியர். இவர்களை இனம் காட்டுவதன் வாயிலாக, நல்லோர், இவர்களிடமிருந்து எட்டி நிற்க இயலும், சமுதாயம் ஒளி பெறக் கூடும். இதனால்தான், கண்டனத்துக்குள்ளானவர்கட்கும் இரு தொகுதிகளை ஒதுக்கியுள்ளார். "சிலை இவர்க்குச் செய்வதெனின் செம்பு நாணும்" 'தன்னலத் தாண்டவம்' ஆகியவை, அந்தத் தலைப்புக்கள்.

ஊழல் ஆட்சியாளர்கள், தலைவர்கள் துதி பாடியே வயிறு நிரப்பும் ஈனத் தொழிலினர்; உள்ளும் புறமும் ஒன்றாக இல்லாத இரட்டை நிலை வேடதாரிகள், சிறுபயன் விரும்பிச் சிறியன சிந்தித்துப் பெரிய குறிக்கோளை அடைய முடியாத - முயலாத - மனிதப் புழுக்கள் மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கு மணம் இருக்காது எனக் கூறும் மனச் சாட்சி யற்றோர்; கருத்துக்குருடர் ஓர்ந்து கண்ணோடும் ஒரு தரப்புவாதத்தினர்; பண்புகொன்ற பத்திரிக்கையாளர்; இதயத்துக்கும் மூளைக்கும் முதன்மை தராமல், வயிற்றுக்கும் வாழ்வுக்கும் முக்கியத்துவம் தரும் எழுத்தாளர்கள்; நினைவுச் சின்னங்களை நிர்மூலப்படுத்துவதால், நிரந்தர, இன, மதப் பகையை உருவாக்கும் நீசர்கள்; குடியிருப்புக்காக, இடுகாட்டில் இடம்பிடிப்போர்; இடம் தேட வைப்போர்; இனம், மொழி, மதம், நாடுகள் பேரால், கலவரங்கள் உருவாக்கி, மண்ணின் மைந்தர் எனும் மாசிணைத்து மக்களை அகதிகள் ஆக்குவோர் போன்றோரைக் கவிஞர் தம்முடைய கண்டனத்துக்குள்ளானவர் களாக் கருதுகின்றார்.

நூலாசிரியர் முனைவர் வா.செ. குழந்தைசாமி அவர்கள், கறைபடிந்தவர்களைப் பட்டியலிட்டு, மிகவும் கடினச் சொற்களால், கறுப்புப் பட்டியலில் இடம்பெற்றோரின் நிலையை உணர்த்துவது, மாபெரும் அறப்பணி, அருட்பணியாகும். கொடுமை உச்சம் பெற்று, புரட்சி விளைந்து, வெடிக்கும் போது, அது கோட்டை, கொத்தளங்களை மண் மேடாக்கும். ஈர்ங்கை விதிரார் - அறவுணர்வு அற்றவர்களை - இரக்கமற்றோரைக் காலம் கொடிறுடைக்கும் என்ற நியதியைக் குறிப்பிடுவதன் வழியே, உலகில் அறம் வளருமெனக் கருதுகிறார் முனைவர். "அச்சமே கீழ்களது ஆசாரம்" அச்சம் காரணமாகவாவது, கயவர் திருந்துவர் என்ற சீரிய சிந்தனையின் அடிப்படையில் உருவானதே கண்டனத்துக்குரியவர்கள் பற்றிய குறிப்புப் பட்டியல். குலோத்துங்கன் கவிதைகள் ஓர் ஒப்பற்ற அறநூல் ஆகும். கண்டனத்துக்குள்ளானோரின் பாடல்களின் கருத்துக்கள், நூலின் நிலையை உயர்த்துகின்றன. முக்கனிச் சாற்றுடன் தேன் பெய்தாற் போன்றமைந்திடல் காணமுடிகிறது.

வறுமை பற்றிய கவிஞரின் கருத்தை "மானுடச் சீற்றம் தோற்பதில்லை" என்ற ஏழாவது தொகுப்பிலுள்ள 17 பாடல் தலைப்புக்களிலும் மற்றும் ஆங்காங்கே சில இடங்களிலும் விளக்கக் காண்கிறோம்.

ஏழ்மைக்குக் காரணமான பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் மற்றும் பசியின் கொடுமை, ஏழையின் தோற்றமும் நிலையும் ஏழையின் வாழ்வும் எண்ணமும், ஏழையின் உடைமையும் உரிமையும் ஏழையின் விதி, ஏழையின் தோழர்கள், பயனற்ற கலையும் அறிவியலும் துடைக்கப் படாத துன்பத்தின் இறுதி நிலை புரட்சி, அமைதி நிலவ உலகம் செய்ய வேண்டிய பணி ஆகியவை பற்றியும் விவரமாக விளக்குகிறார் இத்தொகுப்புப் பாடல்களில்.

மனிதர் அல்லது மற்றுயிர் அறியாத தனியது வறுமை

ஒப்பிலாத தென்றுயர்ந்த மானிடம், குப்பையாய்க்
கூளமாய்க் குவிந்து மாய்ந்திட வருத்தும் பகை வறுமை

என்பது கவிஞரின் கருத்து.

கலைகளும் அறிவியலும் பொருளியலும் ஆன்மீகம் போன்ற அனைத்தும் முதலாவது, வறுமையை ஒழிக்க வழிவகை காண வேண்டும் என்பது குலோத்துங்கனின் கோட்பாடு.

ஏழையின் தோழர்களென்று, குலோத்துங்கன் சுட்டுவது, கட்சித் தலைவர்களை. தலைவர் என்போர் நடிப்பவர் ஆயினர். "உள்ளத்தில் உண்மையின்றி, ஊரெல்லாம் தலைவர் என்று கள்ளத்தில் வாழ்வு செய்யும் களங்கத்தின் சின்னம்" என்று ஏழைப் பங்காளரை - பாட்டாளியின் தோழர்களை - வருணிக்கிறது கவிதை.

"கட்டறுக்கும் கூர்வாளே! தன்னலத்தின் இரக்கமற்ற கட்டடங்கள் சரியவரும் கடும்புயலே! தீயவைகள் அழித்தாங்குச் செம்மைநிறை திரு ஆக்கும் திறலே! மாசில் தூய பகுத்தறிவாம் பொன் சுடரொளியில், தமைச் சூழ்ந்த சூழ்ச்சி கண்டு தீ அவிழ்க்கும்...... வலிமை பெற்றுத் திகழ்வாய்! வாழி" என்று புரட்சியைப் போற்றுகின்றார் கவிஞர்.

இன்மையும் இருளும் போக்கும் வளமெலாம் தாங்கி
நிற்பாய்...... புவியினில் முதன்மை பெற்றாய்

என்று கல்வி போற்றப் பெறுகிறது பல கோணங்களில் கல்வியின் பண்பும் பயனும் போற்றப் பெறுகின்றன.

எது கல்வி? கல்வி கற்கும் காலம், ஆர்வம் பற்றிய விளக்கமும் விரிவாக இடம்பெறுவதைக் காண்கிறோம்.

கவிதை பற்றிப் பேசுகிறார். கவிதை எழுதும் காலம் பற்றிப் பேசுகிறார். கவிதை உருவாகும் சூழல் குறித்து, கவிதையின் பயன் குறித்துக் குறிப்பிடுகிறார் கவிஞர்.

கவிதை எழுத முயன்றவுடன் முற்றுப் பெறுவதன்று. பலமுறை திருத்தங்கள் தேவைப்படும். அனைத்துப் பாடல்களும் முழுநிலவாய்ப் பூரணம் பெற்றுத் திகழ்வதில்லை. "மாத மெலாம் முழுநிலவு வாய்ப்பதில்லை. தடம் என்றால், குண்டுகுழி தவிர்ப்பதில்லை" என்னும் அடிகளால், இலக்கியப் படைப்புகள் குறித்து முழுவதுமாக உணராதார்க்கு, ஒளி காட்டப் பெறுகிறது.

விஞ்ஞானத்தின் விந்தை பற்றி வியக்கும் கவிஞர் அவர்கள், அறிவியல், ஆக்கத்திற்கே பயன்படுதல் வேண்டுமென்பதில், அசைவிலா உறுதி நிலை கொண்டுள்ளார். ஏழ்மையகற்ற, மூடக் கொள்கை முடை நாற்றம் வீசுகின்ற காடு மணக்கச் செய்ய, சாதி, சமயச் சழக்குகளை அகற்ற, அறிவியல் கருத்துக்கள், சாதனைகள் வழிகாட்ட வேண்டுமென்பது கவிஞரின் கொள்கை. விஞ்ஞானம் பற்றி அவர்பாடும் பாடல்களில் இவ் ஆக்கபூர்வக் கோட்பாடே பளிச்சிடுகிறது. அறிவியல் வளர்ச்சியில், தகுந்த கவனம் செலுத்தப்படாவிட்டால், உலக ஓட்டத்தில் நாம் பின் தங்கி விடுவோம் என்பதையும் வலியுறுத்தத் தவறவில்லை.

கூடங்குளம் அனல் மின் நிலையம்

தொழில் வல்லுநர் மேதையின் சேய்......
மாடனும் காடனும் செய்ததல்ல

என்றுணர்த்தி,

அதனால் சேதம் ஏற்படுமோ என்று, அஞ்சத் தேவை
இல்லை; இம்மின் நிலையத்தால் நாட்டின் வளம்
உயரும்; ஏழைகள் வாழ்வு பெறுவர்

என்று அறுதியிட்டு உறுதி கூறும் கவிஞர், "சுற்றுச் சூழல் மாசுபடுவதைத் தடுக்கும் முயற்சிக்கு முன்னுரிமை தருவோம்" என்கிறார்.

இயற்கையின் அருட்கொடையாம் உலகப் பொருட்களில், கழித்து ஒதுக்கப்படுவதற்குரியது ஒன்றுமே இல்லை என்பது கவிஞரின் கருத்தாகும்.

வனமெலாம் அழித்தார், மண்ணில்
மரம்செடி கொடிகள் பச்சை
இனமெலாம் அழித்தார்

எனவே மலைவளம் பொய்த்தது; மழைவளம் மங்கிற்று. இவற்றின் விளைவு,

உண்ணவும் பஞ்சம், வாழும் உறையுளும் உடையும் பஞ்சம்

உருவாயின என்று காரண, காரியத் தொடர்பைத் தர்க்க சாத்திர அடிப்படையில் விவரிக்கின்றார்.

இயற்கையைக் காப்ப தெந்நாள்?
இன்மைகள் மறைவ தெந்நாள்?

என்று ஏக்கக் கவிதை யாக்கின்றார்.

என்னரும் தமிழ் நாட்டின் கண்
எல்லாரும் கல்வி கற்று......
......இன்புற்றார் என்று மற்றோர்
இயம்பக்கேட் டிடல் எந்நாளோ?

என்று பாவேந்தர் பண்ணிசைப்பது போன்று.

"மனத்திற்குள் ஒரு வானகம்" என்னும் பாடல், மது அருந்துவோர் யார் யார், மது அருந்துவோரின் எண்ணம் போன்றவை ஓவியமாக்கப்படுகின்றன. எள்ளல் சுவை நிறைந்த பாடலுக்கோர் எடுத்துக் காட்டு.

இளமை, தனிமை, முதுமை பற்றி மிகச் சிறப்பான செய்திகள் தரப் பட்டுள்ளன, கவிதைகளில். அரசு நிர்வாகம், கோயில் தேருடன் ஒப்பிடப் படுவது, அரசு நிர்வாகத்தின் நிலையை விளக்கும் அழகிய உருவகமாகக் காட்சியளிக்கிறது.

ஈனர்கள் நேர்மை காணா இழிவினர் வய்ய வாழ்வில்
.... மானமும் விற்று வாழும் வழியினர்.
... தேசத்தின் ஆட்சி பீடம் சென்றிடத் தேடும்
வாயில் அனைத்தையும் மூடுவோம் யாம்

என்று சபதம் ஏற்போம். நிர்வாகம் சிறப்புற நேர்மையான - தகுதிமிக்க - ஆட்சி தேவை. நேர்மையாளரையே தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது "மக்கள் சபதம்" என்னும் பாடல்.

"பல்சுவைப் பாடல்கள்" இயலில் இடம் பெற்றவை 15 தலைப்புகள். ஒவ்வொன்றும் தனித்தன்மை கொண்டவை. ஒவ்வொரு கோணத்தைச் சித்திரிக்கும் நோக்கமும் போக்கும் கொண்டுள்ளன. ஒவ்வொரு பாடலும் கவிதைச் சுவையுடன் கருத்தும் கலந்து எண்ணுந்தோறும் இன்பம் பயப்பதாக உள்ளன. 261 பாடல் தலைப்புக்கள் கொண்ட இந்நூல், "படையல்" என்னும் தலைப்பில் தொடங்கி, "தியாகதீபம்" எனும் தலைப்புள்ள கவிதைகளுடன் நிறைவுறுகிறது.

மரபுக் கவிதையின் நெறி நின்று, நிறைந்த கட்டமைப்புடன் திகழ்கிறது. வாழ்வாங்கு வாழ, வழிவகுக்கும் அறநெறி நிறைந்த, சிறந்த நூல். மிகுந்த உணர்ச்சிக்கு அதிக இடமில்லை. கருத்துச் செறிவுக்கும் அறிவியல் சிந்தனைக்கும் முதன்மை தரப்பட்டுள்ளது.

உவமைகள், உருவகம், புதிய உவமைகள், புதிய செய்திகள் இடம் பெறுகின்றன. ஆசிரியம், விருத்த வகைகள், சிந்து போன்ற யாப்புகளுடன் கூடிய கவிதைகள் அணி செய்கின்றன. அங்கதமும் அவலமும் கற்போர் உள்ளத்தை மகிழ்விக்கின்றன; கவலைக் குள்ளாக்குகின்றன. புராணச் செய்திகள் எடுத்தாளப் பட்டுள்ளன. எனினும் கவிஞரின் பகுத்தறிவுச் சிந்தனை, கார்வானக் கவின் நிலவாய் ஒளிரக் காண்கிறோம்.

கவிதை பற்றிய சூலோத்துங்கனின் கருத்தும் கொள்கையும் மிளிர்கின்றன. இல்பொருள் உவமை, ஓரிடத்தில் மட்டும் தலைகாட்டுகிறது.

"ருசி பார்க்கத் தக்கவை; விழுங்கத்தக்கவை; மென்று ஜீரணித்தற் குரியவை" என்ற மூவகை நூற்களில், இந்நூல், மென்று ஜீரணிக்கத்தக்கதாகும்.

எட்டடிச் சிற்றெல்லையும் 352 அடிகள் பேர் எல்லையும் கொண்டவை. வயதேற, ஏற அனுபவம் - பட்டறிவு - காரணமாக எழுத்துக்கள் மெருகு பெறுகின்றன என்ற மொழியறிஞர் கருத்துக்கேற்ப இந்நூலின் கவிதைகள்

பூரணப் பொலிவு பெறுகின்றன. தொடக்கக் காலக் கவிதைகளும் மிகச் சிறப்பாகவே உள்ளன.

சங்கப் பாடலில் திளைத்ததற்குரிய சுவடுகள், முத்திரைகள் பரவலாகக் காணக் கிடைக்கின்றன.

உண்மையான எழுத்தாளருக்கு, மனஉறுதி வேண்டும்

என்ற அறிஞரின் வாக்கு - இலக்கணத்திற்கேற்ப, இந்நூலின் கருத்துக்கள் இலங்குகின்றன.

குலோத்துங்கன் கவிதைகளில் ஒரு கட்டமைப்பு
உண்டு, முதலும் முடிவும் இயைந்து, கருத்துக்கோர்வை
யாகக் - கட்டுக் கோப்பாகக் காணப்படும்

என்னும் முனைவர் தமிழண்ணல் அவர்களின் மதிப்பீடு, முற்றிலும் பொருந்துவதாக உள்ளது.

"கவிதைப் பொருள் கூற்று முறையில் பார்க்கும் பொழுது இவர் கவிதைகள், பாரதியார், பாரதிதாசன் மரபில் வருவதை, இத்திரட்டைப் பார்த்த உடனேயே தெரிந்து கொள்ளலாம்" என்ற கார்த்திகேசு சிவத்தம்பி அவர்களின் கருத்து, இந்நூலின் போக்கை உணர்த்தப் போதுமான சான்றாகும்.

"இந் நூலில் தன் முயற்சி, தன்னம்பிக்கை, தன்னெழுச்சிப் பாடல்கள், புதுமையாய்ப் பாடப்பட்டுள்ளமையைக் காணலாம்" என்ற முனைவர் தமிழண்ணல் அவர்களின் கருத்து, குலோத்துங்கன் கவிதைகளின் உள்ளீட்டை உணர்த்துகிறது.

மாடிக்குப் படி யமைத்த வண்ணம் போல
வார்த்தையொரு வரியாக்கி அடுக்கி வைத்தல்

புதுக் கவிதையாப்பு முறையென இந்நூல் உய்த்துணர்ந்து உரைப்பதால், முனைவர் வா.செ. குழந்தைசாமி அவர்கள் தம் கவிதையில் புதுக்கவிதையின் நிழல்கூடப் படியவிடவில்லை.

உயர்ந்த பொருளையே ஒப்பீடு செய்து, உவமமும் பொருளும் ஒத்திருக்கும் நிலையில் உருவான உவமையணி அணிகளுக்குள் தாயணி என்னும் நிலையில் சிறப்புற்று மிகுதியாக மிளிர்கிறது இந்நூலில் எனலாம்

மழைகண்ட மயிலன்ன எனது நெஞ்சம்
மலர்கின்ற கனவுகளில் மகிழும் பாடும்

இது ஒரு சோறு, பதச் சோறு. இல்பொருள் உவமைக்கு,

வாரணம் நடந்த தன்ன
மலையெழுந் தசைந்த தன்னப்
பெருமிதம் கலந்த பண்பின் பீடுடை வாழ்வு

என்னும் அடிகள்.

"உயர்வு நவிற்சி யில்லாமல், உள்ளதை உள்ளவாறு கூறிவிடுகிறார் குலோத்துங்கன்" என்னும் கலாநிதி க. கைலாசபதி அவர்களின் கருத்து, குலோத்துங்கன் கவிதைகளின் மெய்ம்மையை விளக்கும் உண்மையாகிறது.

இளமை, மாறாதிருக்கும் நிலைக்கு, என்றும் பதினாறு வயது என்பதற்குப் புதிய சொல்லாக - சொல்லாட்சியாக "மார்க்கண்டம்"

என்னும் சொல்லைப் பயன்படுத்துகிறார்.

வழி வழி வருவயாவும் மார்க்கண்டம் பெறுவதில்லை

என்னும் பாடலடியில்.

வறுமைக்குக் கவிஞர் கையாளும் சொற்றொடர், "வண்மை முடம்"

தாய்மொழியென அழைக்கப்படும் தமிழை,

வளர்தமிழ் அமுதே! எந்தாய்!

என்று அழைக்கக் காண்கிறோம். கவிதைகளில் அழகிய உருவகங்கள் அணி செய்கின்றன.

மூளும் அறிவுப் பசிநெருப்பு

ஒரு சான்று. இலக்கிய இன்பம் தரும் பாடல்கள், அந்தாதி நடை அமைந்த பாடல்கள், என்று பாடல்களின் பரப்பு மிகுந்து செல்கிறது. கற்பனையும் கருத்தும் இனிய ஓசை நயமும் இணைந்து மகிழ்வும் வாழ்க்கைக்கு வழிகாட்டும் ஒளியும் தருகின்றன கவிதைகள்.

மலைசாய்ந் தையகோ!........ தமிழகத்தின்
கொழு கொம்பு சாய்ந்த தம்மா!

என்னும் பாடல் தந்தை பெரியார் மறைவு குறித்து எழுதப்பட்ட கவிதை. இரங்கற் பாவுக்கோர் எடுத்துக்காட்டு.

எள்ளல் சுவைக்கு "எழுத்தாள நண்ப"
"மனத்திற்குள் ஒரு வானகம்"
"அரசியல்வாதிபாட்டு"

போன்ற பாடல்கள் மிகச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

முயலகனைச் சிவன் மிதித்தழிக்கும் புராண வரலாறு பேசப்படுகிறது.

சிவன், பார்வதியைத் தன் இடது பாகத்தில் வைத்த புராணச் செய்தி பேசப்படுகிறது. பகுத்தறிவு அடிப்படையில், பரமசிவன், பார்வதிக்குச் சமநிலை தந்ததால்தான், சிவன் வலிமை பெற்றதாக இந்நூலில் குறிப்பிடப் பெறுகிறது.

குலோத்துங்கன் கவிதைகளைச் சிலம்புச் செல்வர் ம.பொ. சிவஞானம், யாழ்ப்பாணம் பல்கலைக் கழகப் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி, கலாநிதி க. கைலாசபதி, முனைவர் தமிழண்ணல், பெ. தூரன், பாரத ரத்னா சி. சுப்பிரமணியம் போன்ற ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர் - மேதைகள் பலர் பாராட்டியுள்ளனர்.

பொன்னும் மாமணிகளும் சூட்டப் பெற்று, அழகின் திருக்கோலமாகத் திகழும் குறிஞ்சி நிலத் தெய்வம் எழில் முருகனுக்கு மணம் மிகுந்த ரோஜா மலர் மாலை சூட்டி அழகு பார்ப்பது போன்றதே நம் பாராட்டுதல்.

குலோத்துங்கன் கவிதைகளை, இசையுடன் இயைபுபடுத்தினால், நாதசுரச் சக்கரவர்த்தி டி.என். இராஜரத்தினம் அவர்கள், இசைப் பேரரசி, பாரத ரத்னா எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்கள், டாக்டர் மதுரை எஸ். சோமசுந்தரம் அவர்கள் போன்ற இசை மேதைகளின் தங்குதடையற்ற இசைப் பிரவாகத்துடன் ஒன்றி நிற்கிறதெனலாம். இசை மேதைகளின் நுண்ணிடை வைரத் தொங்கல்கள், பேர் அருவியெனப் பாய்ந்து வருதல் போன்று, குலோத்துங்கன் கவிதைச் சொற்கள் தடங்கலின்றிக் காட்டாற்று வெள்ளமாய்க் கரைபுரண்டோடி வரக் காண்கிறோம். ஆனால் கவிதை மரபு என்னும் கரைகளை முனைவர் வா.செ. குழந்தைசாமி அவர்களின் கவிதை வெள்ளம் கடந்ததில்லை. இசை மேதைகளின் இசைபோல், கவிதைகள் உலகத்தரம் வாய்ந்தனவாக உள்ளன. அவர்களின் தேனிசைத் தென்றல் எண்ணிற்கடங்காமல் எங்கும் பரந்தனவாய் என்றும் "காற்றினிலேவரும் கீதமாய்" மிதந்துவந்து களிப்பூட்டுவது போன்று, குலோத்துங்கன் கவிதைகளும் நாம் கருதுந்தோறும் இன்பமும் பயனும் நல்கும் என்பதில், எள்முனை அளவும் ஐயமில்லை. நம் புகழ்ச்சி குழந்தையின் மழலை மொழியனையதே ஆகும்.

வானுயர்ந்த பண்புகள், குலோத்துங்கனின் கொள்கைகளாக மிளிரினும் குறிப்பிட்ட சில கோட்பாடுகளுக்கு முதன்மை தந்து, அழுத்தமாக வலியுறுத்துகின்றார். அவற்றுள், பயிற்சி; கல்வி; உழைப்பு; மாற்றுக் கருத்தை வரவேற்கும் மாண்பு; சார்ந்தவரை உயர்த்துதல்; சிறியன சிந்தியாது உயர்ந்தன உள்ளல்; முயற்சியுடையோரைப் போற்றி வளர்த்தல்; நாவன்மையால் ஈர்த்தல்; புதியன படைத்தல்; சீர்தூக்கி ஏற்றல்; சீரிலாதனவற்றைச் செம்மைப்படுத்துதல்; விண்ணுலகு என ஒன்றில்லை; அஃதை மண்ணிலே படைக்கலாம் எனல்; மரணத்துக்குப்பின் எதுவுமில்லை என்ற கொள்கை; பணி புரிதலே சிறப்பென்பதை வலியுறுத்துதல்; கவிஞரே, கடவுளாக வேண்டுமெனும் விருப்பம் போன்ற பண்புகளும் நினைப்பும் சிறப்பிடம் பெறுகின்றன. குலோத்துங்கனின் கொள்கைகளும் குறிக்கோளும் உயர்ந்தன வற்றையே நாடுவனவாக அமைந்துள்ளன. வாழ்வியலுக்கு, வழிகாட்டுவனவாக அமைகின்றன. எனவே இந்நூல், சிறந்த பயன் நல்கும் சீர்மையுடன் திகழ்கிறது.

கவிஞரின் வாழ்க்கைக் கண்ணோட்டம் முன்னாள், இந்நாள் கவிஞர்கள் பலரிடமிருந்தும் இறையேற்பாளர்களின் சிந்தனைகளி லிருந்தும் மாறுபட்டது; எதிரான தெனலாம். பிறவா நிலை; பேரின்ப வீடு; இறைவனுடன் இரண்டறக் கலத்தல் போன்ற கருத்துக்கு எதிரான தத்துவம் கொண்டவர். அன்றாட வாழ்வில், துன்பமிலா இன்பத்தை மட்டும் விரும்பும் நிலைக்கு எதிர்நிலை நிற்பவர் குலோத்துங்கன் அவர்கள்.

உலகம் நிலையானது, அழிவற்றது, உலகத்தின் இயக்கம் கோள்களின் கைகளில் இல்லை. மனமும் செயலுமே, மனிதரின் நிலைகளை நிர்ணயிக்கின்றன.

மற்றவரின் அனுபவம், சிறந்த வழிகாட்டியாகிறது. கேள்வி, சிந்தை, பாசம் பற்றிய புதிய விளக்கங்கள் கிடைக்கின்றன. தீயில் குளித்தவனை, வெயில் சுடுவது இல்லை. மென்மை, இனியது, அதுவே, வலிமைமிக்கது. உயிரின் நிலை; உடலின் முடிவு இன்ன பிற பற்றியும் இறையேற்பு கொள்கைக்கு எதிர்நிலை நின்று தத்துவ விளக்கமாகத் தம் கருத்தைத் தருகிறார். ஆன்மிக விளக்க அடிப்படையில்லாமல், அறிவியல் அறிவு சார்ந்த, தர்க்க சாத்திர அடிப்படையிலான விளக்கமாகி மிளிர்கிறது.

தம் கொள்கையில் சமரசம் செய்யா, உறுதி கொண்ட கவிஞர். மாற்றுக் கருத்தை மனமுவந்தேற்கும் மாட்சி கொண்டவர்.

> எந்த இடத்தில் சிறுபான்மை - மொழிச் சிறுபான்மை, இனச் சிறுபான்மை, மதச்சிறுபான்மை, நிறச்சிறுபான்மை சிறப்பிடம் பெறுகிறதோ, எந்த இடத்தில் கருத்து வேறுபாடு கண்ணியமாக வரவேற்கப்படுகிறதோ, மென்மையின் வலிமை மேலோங்கி நிற்கிறதோ, அந்த இடத்தை நோக்கி யான் யாத்திரை செய்கிறேன்

என்கின்றார்.

> *நினைவினில் தாழ்வ தொன்று, நினைப்பதும் இல்லேன்*

என்னும் நெறி நிற்பவர்.

> *மானுடர்க்கு உயர்ந்த தென்று, மற்றோரு பிறவி இல்லை*
> *தேவர் உலகம் என்றெதுவும் இல்லை*

என்பதோடன்றி,

> *உம்பரும் தேவர்களும் எம்படைப்பே*

எனக் கூறுகிறார்.

> *மானிடர் எம் இனத்தவர் மண்ணெலாம் நமது தேசம்*
> *மனிதரை இழிவு செய்யும் தாழ்வுகள் ஒழிப்போம், உண்மைச்*
> *சமத்துவம் மலர்வதற்குச் சூழ்நிலை படைப்போம்*

எனக் கூறுகிறார்.

> *காலமெலாம் தத்துவத்தில் கழிப்போர், செயல் முடங்கள்...*

என்பது கவிஞரின் கணிப்பு.

"மூலமெலாம் ஆய்ந்தென்ன? அறுகம் புல்லும் முளைப்பதற்கு வழி செய்யார் முடிப்பதென்ன?" என்ற கேள்வி கேட்கிறார். சமுதாயத்துக்குப் பயன் தராத சித்தாந்தங்கள் செத்தநிலை எனக் கருதப்படுகின்றன.

தடைகண்டு தளராது, எதிர் நீச்சல் போட்டு இலக்கை எட்டுபவரே உலகுக்கு உயிர் கொடுப்பவர்கள் என்பது கவிஞரின் கணிப்பு. "உறுதியோடு முன்னேறும் கால்களின் முன் முடிபணிந்தோம்" என்னும் பெருநிலை நிற்பவர். சிறந்தோரைப் போற்றும் சீர்மை மிகுந்தவர். அழுக்காறு தீண்டா, உயர்குடிப்பிறப்பினர்க்கே உரிய பண்பு இது.

"பாட்டுத்திறத்தால், பேச்சுத் திறத்தால் மக்கள் விருப்பத்தை ஈடு செய்யும் முயற்சி மேற்கொள்ள வேண்டும் எழுத்தாளர்கள்" என்பார், கவிஞர்.

புன்மைகளைக் கண்டு சகித்து நிற்காமல், எதிர்த்துப் போரிட்டு அழித்திடல் சிறப்பிணைக்கும் என்னும் கொள்கை வழி நிற்பவர். பிறந்த பொன் நாட்டைச் சிறக்கவைத்திட, அறிஞர்கள், புலவர்கள், பண்பாளர்கள், சிறந்த முறையில் கடமையாற்ற வேண்டும். சிந்திக்காமல் எதையும் கண்மூடி ஏற்பது உகந்ததல்ல என்ற பகுத்தறிவு நெறி நிற்பவர் கவிஞர்.

சீரில்லாதனவற்றைச் சீர் செய்து ஏற்றிடல் வேண்டுமென்று அறிவுறுத்தப் பெறுகிறது. முற்பிறப்பு, மறுபிறவிகளில் நம்பிக்கையற்றவர்.

பிறப்பின் முன்னரும் பிறந்து வாழுநர்
இறப்பின் பின்னரும் எதுவும் காண்கிலம்

என்கிறார்.

கழிந்த காலம் காணா நாட்கள் பற்றிய கவலையை விடுத்து,
இன்றையப் பொழுதைப் பயனுறப் பயன் படுத்தி,
நாளைவரும் நாளுக்குச் சிறந்தன படைப்போம், மண்ணில்,
விண்ணைக் காணலாம், நாம், இப்புவியின் தேவராகலாம்

என்பது இந்நூல் காட்டும் வாழ்வின் வழிகாட்டும் நெறியாகும். வாழ்வியல் அணுகுமுறையாகும்.

இதற்கு மேலும் ஒருபடி சென்று, தலைமுறை, தலைமுறையாக வருகின்ற, மானிடரின் துயர்களைய "நானே தெய்வமாக வேண்டும், புவியின் இடர் நீக்க வேண்டும்" என்கிறார்.

"செய்யும் தொழிலோடு சேர்ந்துவிட்ட நெஞ்சினர்க்கு வையம் தரும் இன்பம் வானம் தருவதில்லை."

நிறைவேற்றப்பட வேண்டிய பணிகள் நிறைந்துள்ளதால், மீண்டும் புவியில் பிறந்து பணி தொடரவேண்டுமென்கிறார், குலோத்துங்கன் அவர்கள். இறவாமை வேண்டும், இறவா நிலை, பணிகளை முடிக்க உதவும் என்று கூறி, மரணமிலாப் பெருவாழ்வு பெற விழைகிறார், கவிஞர். ஆன்மிகர்கள் விரைவில் இறைவனடி சேர வேண்டும்; மீண்டும் பிறவாமை வேண்டுமென விழைவர். ஆனால் குலோத்துங்கன் அவர்கள், நீண்ட ஆயுளும் மறுபிறவியும் வேண்டுகின்றார்.

இவ்வையகம் ஒரு குடும்பம். இவ்வுணர்வு பெற்றால், வாழ்வில் துன்பமில்லை என்னும் நெறியை உணர்த்துகிறது இந்நூல்.

விண்ணிற் சுழலும் கோள்களின் இயக்கம், மண்ணில் வாழும் மனிதரின் வாழ்வை நிர்ணயிக்கிறதென்னும் சோதிடக் கூற்றை மறுக்கிறது இந்நூல்.

அறிவியல் விரிவும் கல்வியின் வளர்ச்சியும் ஆய்வு மனமும் மூடக் கொள்கையின் மூலங்களைச் சிதைக்கின்றன என்பது கவிஞரின் முடிபு ஆகும். சிதைத்திட வேண்டும் என்பது கவிஞரின் விருப்பம்.

"உயிரும் உடலும் வளர்வதை அறிந்தோம், உயிரின் முடிவை உணர்கிறோம், அதைக் காணும் காலம் வர வேண்டுமென்பது கவிஞரின் வேட்கை. உயிர் ஆவியாக அலையும் அல்லது பிறவாப் பெருநிலை பெறும் என்னும் சமயச் சிந்தனையிலிருந்து மாறுபட்ட கோணத்தில் செல்கிறது கவிஞரின் நோக்கு.

தத்துவம், ஆன்மிகம், பிறப்பு, இறப்புப் பற்றிய கொள்கைகள் சார்ந்த வினாக்கள் அனைத்துக்கும் விடைகூறக் கூடியவரும் பொறுப்பினரும் மனிதரேயன்றி மற்றொருவரும் அல்லர் என்று அறுதியிட்டுக் கூறுகிறார். "கண்டவர் விண்டதில்லை, விண்டவர் கண்டதில்லை" என்னும் நியதிக்கு எதிரான சித்தாந்தம் நிலவுகிறது, இந் நூலில்.

ஆழ்ந்த இறைப் பற்றாளர்கள் வீடுபேற்றை விரும்புகின்றனர். சாதாரணமானவர்கள், கவலையற்ற நிலையையும் களிப்பு மிகுந்த வாழ்வினையும் விரும்புகின்றனர். துன்பத்திலிருந்து விடுபட்டிருத்தலே இவ்விருசாராரின் குறிக்கோள், விருப்பம், பிரார்த்தனை. ஆனால் குலோத்துங்கன், வீடுபேற்றையும் விழையவில்லை. துன்பமே இல்லாத, இன்ப வாழ்வையும் வேண்டவில்லை.

புண் இல்லாப் போராட்டம் இல்லை.
தீயில்லா வேள்வி இல்லை. துன்பமில்லா வாழ்வு
இல்லை

என்ற நியதியை உணர்ந்தவர் கவிஞர். உணர்த்துபவர் குலோத்துங்கன் அவர்கள்.

மனிதன், நிலைதாழக்கூடாது, உயர் நிலையில் நிற்றல் வேண்டு மெனும் செந்நெறியை உணர்த்துகிறது இந்நூல். தலையின் இழிந்த முடி, நிலை தாழ்கிறது. மதிப்பிழக்கிறது. நெற்றியில் அணியப் பெறும் புனிதத் திருநீறு, கீழே சிந்திவிட்டால், சாம்பலின் மதிப்பை அடைகிறது. மனிதர் தியாக நெருப்பில் வெந்தழிந்தாலும் போற்றுதற்குரியர் ஆகின்றனர். மானிட வாழ்க்கை, நெருப்பில் வெந்தழிந்து ஒளி உமிழும் விளக்கின் திரிபோன்று, பயனுள்ளதாக அமைந்திடல்வேண்டும் என்பது கவிஞரின் கொள்கை. பிறர் அனுபவத்தைக் கண்டு, கேட்டு வாழ்வைச் செம்மைப்படுத்த வேண்டும்.

> கேள்வி கேட்டலென்பது, அறிவின் ஊற்று, சிந்தை ஓர் சுரங்கம். அதனுள் மனிதனும் மிருகமும் ஒன்றாய் உலவுவதே மாபெரும் விந்தை. மனிதர், மேதைமை கடந்த சக்தி

என்று கூறுகிறார்.

> பாசமோர் உலகம். அங்குப் பகுத்தறிவு ஆள்வதில்லை

என்கிறார். பகுத்தறிவு அடிப்படையில், காரண காரியம் தொடர்புபடுத்திப் பாசத்தை அணுகுதல் கூடாது என்பது கவிஞரின் அணுகுமுறை - அறிவுரையாகும்.

மென்மை வலியது; கண்ணீர்த்துளிகள் ஆற்றல் மிக்கவை. எனவே, உலகம் மென்மையை வாழ்வின் துணையாகக் கொள்ள வேண்டும். பிறரின் கண்ணீருக்குக் காரணம் ஆகக் கூடாது. சமுதாயம் மகிழ்ச்சியுற வழி செய்ய வேண்டு மென்பதை வலியுறுத்துகிறது இந்நூல்.

பட்டமரம் விறகாகப் பயன்படும். சமுதாயத்துக்குப் பயன்படாதவன் பட்ட மரத்திலும் - விறகுநிலையிலும் - பாழ்பட்டவன் என்பது குலோத்துங்கனின் முடிபு.

தன்னம்பிக்கையும் தளரா முயற்சியும் கொண்ட கவிஞர், மனிதர் ஒவ்வொருவரும் தத்தம் பணியைத் தாங்களே முயன்று முடித்தல் வேண்டும்; பிறரை எதிர் பார்த்தலாகாதென்று அறிவுறுத்துகிறார். "நான் ஒருவனே போதும்" என்ற பாடலில் தன்னிலை விளக்கமாகச் சிறந்த கோட்பாட்டைக் குறிப்பிடுகிறார். கவிஞரின் உயர்ந்த குறிக்கோள், உறுதி, தன்னம்பிக்கை, தளர்வறியா முயற்சி, ஆணித்தரமான கொள்கை விளக்கங்கள் போன்றவை இடம் பெறுகின்றன இப்பாடலில்.

"பார் வணங்கும் இறைவனே! எந்நாளும் சின்னவரம் கேட்கத் தெரியாத என் நெஞ்சின்..." என்பதன் வாயிலாகக், கவிஞர் சிறியன சிந்தியாத உள்ளம் பெற்ற தன்மையும் உலகம் உயர்ந்தனவற்றையே உள்ளல் வேண்டுமென்ற உணர்வை ஊட்டும் நிலையும் ஓவியமாக்கப்படுவதைக் காண முடிகிறது.

> நான் செல்கின்ற திசையை நன்கறிவேன்... மனித இனம் தோன்றிய நாள் முதல் இன்று வரை, உலகம் எவ்வாறு அமைந்தால், இன்பச் சமுதாயமாக அமையுமென்று புவி எண்ணுகிற வகையில், புதிய உலகு படைப்பேன். இல்லறத்தார், துறவறத்தார், ஆன்மிக வழி நிற்போர், தத்துவ மேதைகள், நல்ல மதவிற்பன்னர் போன்றோர் காண விழைந்த உலகைக் காட்டிலும் மாணச் சிறந்ததை நான் படைக்கத் துணிந்தேன். பணியின் இடையே எதிர்ப்படும் தடைக்கற்கள் அனைத்தையும் தகர்க்கும் வலிமையுடையவன்.

நான் என்று கவிஞர் கூறுவதன் வாயிலாக, மக்கள் இவ்விதமான நிலையும் செயல்திறனும் பெற்றிட வேண்டுமென வலியுறுத்துகிறார் எனலாம்.

தாம் மேற்கொண்ட பயணம், நெடிய பயணம். எனவே வீண் பொழுது போக்கவும் வெற்றுரைகள் பேசவும் நேரமில்லை என்கிறார். எறும்புபோல், தேனீபோல் உழைக்கும் ஓய்வறியா உழைப்பாளி என்பதையும் சுட்டுகிறார். சமுதாயமும் அந்நிலை பெற வேண்டு மென்பதை விழைகிறார் கவிஞர் என்பது உள்ளுறையாகும்.

"பயணம் பெரிது, செல்லும் பாதை நெடிது" என்றுதம் பயணம் பற்றிக் குறிப்பிடும் கவிஞர், "தம் வழித்துயரம் தவிர்க்கத் துணை தேடேன். நான் ஒருவனே போதும், கூட்டமெதற்கு?" என வினாவும் தொடுக்கின்றார். தன் காலிலே நிற்க வேண்டுமென்பது, வலியுறுத்தப் பெறுகிறது.

ஏறத்தாழ 1950 ஆம் ஆண்டிலிருந்து, கவிதைகள் எழுதப் பெறுகின்றன. நீண்ட நெடும் இலக்கியப் பயணப் பயனாக ஜூலை 2002 இல் "குலோத்துங்கன் கவிதைகள்" என்னும் இந்நூல் 704 பக்கங்களுடன் வெளியிடப்படுகிறது. அரை நூற்றாண்டு, அயராத இலக்கியப் பணியின் தீங்கனியாகத் திகழ்கிறது, இந்நூல். இந்நூலில் உள்ள "அரிய பொருளெதையும் தேடியளிக்கச் சிலர் போதும்" என்று கூறும் கவிஞர், அவ் அரிய பொருட் சுவையைக் "கூடிச் சுவைக்கக் குவலயத்தை அழைப்போம்" என்கிறார். கவிதையைச் சுவைக்க முடியாதவர்கட்கு அக்கவிதையிலுள்ள பொருள்களைத் தேடித் தொகுத்து உணர்த்தப்பட்ட பின்பாவது, உலகம் ஒன்றிணைந்து கூடிச் சுவைக்க வரட்டும் என்கிறார். கவிஞர் கூறுவதுபோன்று, அவர் கடந்து வந்த பாதை நெடியபயணமே. துணைக்கு ஒருவரின்றித் தாமாகச் செய்து முடித்த அரிய பணிதான். தீர்க்கதரிசியாக 1969 இல் வெளியிட்ட கருத்து 33 ஆண்டுகள் சென்றபின் வடிவம் பெற்றுள்ளது. பெரும்புகழ் ஈட்டுகிறது.

தேடிய பொருளை, உலகனைத்தும் ஒன்று கூடிச் சுவைக்க வேண்டுமென்ற உலகளாவிய உயர் எண்ணம், தனியாக ஈட்டிய பெரு நிதியை, உலக மக்கள் அனைவரும் துய்க்க வழி வகுக்க வேண்டும் அது பெருமை தரும்; சமுதாய நலன் விளைக்கும் என்ற சீரிய பொருளாதாரச் சிந்தனையின் வெளியீடு என்று கொள்ளவும் வழியுள்ளது. எல்லார்க்கும் எல்லாம் பொதுவானால், பொருளாதார ஏற்றத்தாழ்வு தோன்றாது. வறியர், செல்வர் எனும் நிலையால் உருவாகும் வெறுப்பும், புரட்சியும் தோன்ற வழி தோன்றாது. அந்தச் சமூக அமைப்பில் அமைதி, நிறைவு, வளமை தோன்றும். சாந்தி நிலவும். குலோத்துங்கனின் கொள்கைகள், அறிவியல் சார்ந்த பகுத்தறிவு வெளிப்பாடு. மனிதனின் உயர்வு உணரப்படுகிறது; போற்றப்படுகிறது. தன்மானம் வளர்ப்பதாக உள்ளது. மனிதனாக வாழ, வழிகாட்டுகிறது. சமதர்மச் சமுதாயப் பொருளியலுக்கு இட்டுச் செல்வதாக உள்ளது. புரட்சி, பூசல் தோன்றாமல் அன்பும் அமைதியும் சமுதாயத்தில் நிலவுவதைக் குறிக்கோளாகக் கொண்டு ஆன்மநேய ஒருமைப்பாட்டையே உறுதியாகப் பற்றி நிற்பதாக உள்ளது இந்நூல்.

பொருளாதார அடிப்படையில், உலகப் பொருளியல் நெறியில், உலகமக்களின் 20 சதவீதத்தினர், மீதமுள்ள 80 சதவீதத்தினர் வாழ்வைப் பறிக்கின்றார்கள் என்பதை "ஐந்தில் ஒன்றும் ஐந்தில் நான்கும்" என்னும் பாடலில் விளக்குகின்றார்.

ஐந்தில் ஒரு பங்கினர்நீர் உலகச் சொத்தில்
ஐந்தில் ஒரு நான்கினையும் அனுப விக்கும்
நிந்தையினைச் சுமக்கின்றீர்...
பெருமைபல பேசுகின்றீர் பிறரைத் தேய்த்துப்
பெருவாழ்வு வாழுவதா மனித நேயம்?

எனக் கேட்கும் கவிஞர் அவர்கள், சுரண்டுவோரை மனித நேயம் அற்றவர்கள் என்று சுடுமொழியால் சுட்டுகின்றார்.

நாதியற்றவரை அழுத்தும் பொருளாதார அவலம், சமுதாயக் கொடுமை, பொருளியல் சீர்கேடு எனும் கொள்கை கொண்டவர். எனவேதான் தேடிய

பொருளை உலகனைத்தும் ஒன்று கூடிச் சுவைக்க வேண்டு மென்கிறார் குலோத்துங்கன் அவர்கள் என்பது சாலப் பொருந்தும்.

எண்ணுவதும் படைப்பதும் எம்பணிகள் எங்கும்
எல்லோர்க்கும் சமவாய்ப்பு நிறைந்த தான
மண்ணுலகைச் சமைப்பதும் எம் குறிக்கோள்

என்று கொள்கை முழக்கம் செய்யும் செயல் வீரர் குலோத்துங்கன் அவர்கள் என்பது நினைவு கூரத்தக்கதாகும்.

நிறைவுப் பகுதியில் ஒன்று மீண்டும் நினைவுபடுத்தப் பெறல் வேண்டும். பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள்

அழகென்பாள் கவிதை தந்தாள்
நெஞ்சத்தில் குடியேறி மகிழ்ச்சி செய்தாள்
நல்லழகு (கவிதை) வசப்பட்டால் துன்பமில்லை

என்கிறார்.

குலோத்துங்கன் அவர்கள், குவலயம் முற்றும் துன்பமிலா நிலை பெற்றிட - மகிழ்வுற அழகு சிரிக்கும் கவிதைகளை உண்ண வேண்டும் என்கிறார். குவலயம் முற்றும் ஒன்றிணைந்து ஓர் இலக்கியத்தைப் போற்றும் நிலை எப்போது உருவாகும்? இலக்கியம் தரமானதாக இருந்தால்தான் உலகு ஒன்றிப் போற்றும். குலோத்துங்கன் கவிதைகள், ஓர் உன்னதமான - உயர்ந்த தரமான படைப்பு என்பது உறுதியான நம்பிக்கை, மெய்ம்மையும் அதுவே.

இயற்கைப் படைப்பில், தேனையே நாடும் தேனீ, சிறந்த உணவிலும் கழிவிலும் சுவை கண்டு உடல் வளர்க்கும் வீட்டு ஈ, கழிவிலேயே பிறந்து கழிவிலேயே வாழ்ந்து, கழிவிலியே அழியும் மல வண்டு போன்று மனிதர்களிலும் மூன்று வகை. உயர்ந்தனவற்றையே நாடும் முதனிலை மக்கள் - உத்தமர். நல்லன மற்றும் அல்லனவற்றை விரும்பி வாழும் இடைநிலை மாந்தர் - மத்திமர். கயமையிலேயே, கயவராகவே வாழும் இழிபிறவியினர் - கடையர் - அதமர்.

மொழிப் புலமை மிக்க பேரறிஞர்கள், சமுதாயச் சீர்திருத்த நெறி நிற்கும் சமுதாயப் பெரியார்கள்,அரிய பொருட்கள் நிறைந்த முனைவர் வா.செ. குழந்தைசாமி அவர்களின் "குலோத்துங்கன் கவிதைகள்" நூலை, கவிதையின் எழிலை - கருத்துச் செறிவை - கவிதை நயத்தை - மரபு நிலை திரியாக் கவிதை மாட்சியைப் போற்றுவர். சுவைக்கும் மாபெரும் கலை உள்ளம் கொண்ட கலைஞர்கள் போன்ற உயர்நிலையினர் ஏற்றிப் போற்றுவர் என்பது உறுதி. குறுந்தொகைத் தலைவி, தலைவனின் நட்பு,

நிலத்தினும் பெரிதே, வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே

என்று, பரந்த இவ்வுலக நிலத்தினும் பெரிது, வானத்தினும் உயர்ந்தது, கரைகாணாக் கடலினும் பேரளவுடையது என்று போற்றும் புகழுரைகளே, குலோத்துங்கன் கவிதைகளுக்கும் பொருந்தும்.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக

என்கிறது குறளோவியம்.

இந்நூலை முனைவர், இளம் முனைவர் (M. Phil) பட்டப்படிப்பிற்குரிய ஆய்வுப்பொருளாகக் கொள்ளலாம். பல்வேறு, தலைப்புக்களில் ஆய்வு மேற் கொண்டால், அறிவியல் அணுகுமுறை இணைந்த இலக்கியம் பெற வாய்ப்பு உருவாகும்.

தமிழ்க் கவிதைகளின் புதிய நோக்கும் போக்கும் கொண்ட சிறப்பினை உணரவும் உணர்த்தவும் வழி பிறக்கும். அறிவியல் அறிஞரின் இலக்கிய அணுகு முறையை ஒப்பீட்டளவில் - ஒப்பிலக்கிய நோக்கில் - ஆய்வு மேற்கொள்ளும் போது, தமிழின் பரப்பு, பல்வேறு கோணங்களில் பரந்து விரியும். அது தமிழ்த் தாயின் மாசறு பொற் கிரீடத்தில் மாணிக்கமும் மணியும் பதிப்பதாக அமையும்.

குலோத்துங்கன் பாடலிலுள்ள எல்லா வரிகளுமேமிகமிக ஆழமும் இனிமையும் உட்பொருளும் கொண்டு மின்னுவதால், இதனைப் பாடிச் சுவைத்தலே நல்லது.

என்கிறார், "நான் சுவைத்த பாங்கு" என்னும் கட்டுரையில் டாக்டர் கா. மீனாட்சி சுந்தரம் அவர்கள். பாடிச் சுவைக்கப்படுவன, முதலாமவை: கர்நாடக இசைக் கீர்த்தனைகள். மற்றவை: திரைப்படப் பாடல்கள். பேரறிஞர் அண்ணா அவர்களின் 'ஓர் இரவு' திரைப்படத்தில் அமைந்த பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் "துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ இன்பம் சேர்க்க மாட்டாயா?" என்னும் பாடல் நின்று நிலவுகிறது. கலைஞர் அவர்களின் பராசக்தி திரைப் படத்தில் பாரதியின்

நெஞ்சு பொறுக்குதில்லையே - இந்த
நிலை கெட்ட மனிதரை நினைந்து விட்டால் ...

என்னும் பாடலும் "மணமகள்" திரைப் படத்தின் "சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா" பாடலும் பலராலும் பாடப்பெறும் பாடல்கள். இதே போன்று பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களின் "தூங்காதே தம்பி தூங்காதே" என்ற பாடலும் பரவலாகப் பாடப்படும் பாடலாகும்.

முனைவர் கா. மீனாட்சி சுந்தரம் அவர்கள் இவற்றை மனங் கொண்டு குலோத்துங்கன் கவிதைகளைப் பாடிச் சுவைத்தலே நல்லது என்கிறாரோ என எண்ண வேண்டியுள்ளது. திரைப்பாடல் - திரைத்துறை பற்றி, ஒன்றுக்கு மேற்பட்ட கருத்துக்கள் நிலவிடினும் பாமரமக்களுக்கும் தகவல்களை - கருத்துக்களைக் கொண்டு சேர்ப்பதில் ஆற்றல் மிகுந்த மக்கள் தொடர்புச் சாதனம் திரைப்படம் என்பதை மறப்பதற்கோ - மறைப்பதற்கோ இயலாது என்பதை ஒப்புக் கொள்ளத் தான் வேண்டும்.

உயர்ந்தோரிடை உலவும் உயர்ந்த இலக்கியச் சிந்தனைகள், பாமரரிடமும் சென்று சேர்ந்தால் தான், சமுதாயத்துக்கு மிகுபயன் கிடைக்கும். முனைவர் கா. மீனாட்சி சுந்தரம் அவர்கள், குலோத்துங்கன் கவிதைகளைப்

பாடிச் சுவைத்தலே நல்லது என்று எக்கோணத்தில் கூறினும் வரவேற்கப் பெற வேண்டியதே ஆகும். செயல்படுத்த ஆவன செய்தலே சிறப்பீனும் என்பதிலும் கருத்து வேறுபாடு இருக்க வழியில்லை. நூலின் நிறைவினில், பாடல் முதற்குறிப்பு அகராதி பாடல்களின் அகர வரிசையில் தயார் செய்யப்பட வேண்டும். அதில், பாடல் எண், பாடல் தலைப்பு, பக்கம், பாடப்பெற்ற ஆண்டு, இடம் பெற்ற இதழ்கள் போன்ற விவரங்கள் இடம் பெறல் வேண்டும். அல்லது கால வரிசையில் (Chronological Order) வரிசை எண், பாடல் வெளியான மாதம் ஆண்டு, பாடல் தலைப்பு, பாடல் எண், பக்கம், இடம் பெற்ற இதழ்கள் போன்றவை இடம் பெற்றிட வேண்டும்.

> பல்லாண்டுக் காலம், பல்வேறு உயர்பொறுப்புக்களில் மாநில அளவிலும் இந்திய அளவிலும் உலக அளவிலும் விளங்கியவர் கவிஞர். இவர் தமது சுயசரிதையை எழுதி வெளியிடல் வேண்டும். அப்படி வெளியிட்டால், பல்வேறு செய்திகளை அறிவதன் மூலம் பலர்க்கு அது பாடமாகலாம். வழிகாட்டி யாகவும் இருக்கும் கவிஞர், (முனைவர். வா.செ. குழந்தைசாமி) இதனைப் பற்றிச் சிந்தித்து விரைவில் முடிவெடுக்க வேண்டும் என்பது நம் விருப்பம்

என்னும் பா. வீரமணி அவர்களின் கருத்து, நூற்றுக்கு நூறு உடன்பாடான சிறந்த கருத்தாகும். செயல்வடிவம் பெறப் படவேண்டிய இன்றியமையா உடனடிக் கடமையும் ஆகும்.

"குலோத்துங்கன் கவிதைகள் - ஓர் கண்ணோட்டம்" என்னும் திறனாய்வு நூலில்,

> அறிவியல் அறிஞராக விளங்கும் டாக்டர் வா.செ. குழந்தைசாமி போன்ற, சமுதாயக் கொள்கைச் சான்றோரை நடுவண் அரசோ, மாநில அரசோ அறிவியல் ஆலோசகராக அமர்த்துவது, அரசுக்கும் நல்லது, மக்களுக்கும் நல்லது. இதனை அறிவிப்பது எம் போன்றோரின் கடமையாகும்.

என்ற பா. வீரமணி அவர்களின் வேண்டுதல், பரிந்துரை, நமக்கு இன்பத்தேன் வந்து காதில் பாய்ச்சுவதாக இருக்கிறது. அரசுகளின் காதுகளில் பலதரப்பட்ட ஒலிகளும் பேரிரைச்சல்களும் காதுகளைச் செவிடாக்குமளவு நீங்காது நிறைந்திருப்பதால், சூழ்ந்திருப்பதால் உரிய காலம் வரும் வரை காத்திருக்க வேண்டிய கட்டாயம் உள்ளது. சிறந்த திறமைகளை, உரிய முறையில் பயன்படுத்தாமை, சிறப்புடைய தனி நபர்களுக்கு; மட்டுமல்ல இழப்பு. ஒட்டு மொத்த சமுதாயத்துக்கும் நாட்டுக்கும் பேரிழப்பு என்பதை உரியோர் உணர வேண்டும். வாய்ப்புள்ளோர் உணர்த்திட வேண்டும்.

விண்ணில், உயரே, உயரே வெகு உயரத்தில் பறந்து, வட்டமிட்டாலும் கழுகு, மண்ணில் மாண்டு கிடக்கும் உயிரினங்கள் மீதே கவனம் வைக்கும். ஆனால் மண்ணில் நின்றாலும் மயிலின் மனம், விண்ணில் விளையாடி, விந்தை புரியும் மேகக் கூட்டத்தையே விழைந்து நிற்கும். கழுகின் நோக்கும் மயிலின் போக்கும் மாறுபட்டவை.

மழைகண்ட மயிலன்ன எனது நெஞ்சம்
மலர்கின்ற கனவுகளில் மகிழும் பாடும்

என்கிறார் குலோத்துங்கன். மழைகண்ட மயில்போல் மனம் மகிழ்கிறது. அதனால் நெஞ்சம், கவிதை பாடுகிறது என்கிறார்.

வடலூர் இராமலிங்க வள்ளல், தரையில் நின்று

மேலே, மேலே பறந்து சென்று
வானத்தின் மீது மயிலாடக் கண்டேன்

என்று மயில் மகிழ்வால் வான் வெளியில் நடனமிடும் திருக்கோலக் காட்சி கண்டு உணர்த்துகிறார். நாமும் அருட்பெருஞ்சோதி மயில் கண்டு மகிழ்ந்து ஆடுவோம். குலோத்துங்கன் கண்ட காட்சியோடு இணைந்து பாடுவோம். அல்லது பாடத் தெரியாவிட்டால் பாடலில் திளைப்போம்.

மழைகண்ட மயில்போல், குலோத்துங்கக் கவிஞன் மகிழட்டும். மகிழ்ந்து பாடட்டும், தொடர்ந்து, தொய்வின்றி என்று, வாழ்த்துவோம். வேண்டுவோம். பிரார்த்திப்போம்.

காய்தல், உவத்தலின்றி மிக நுட்பமாக, மென்மையாகவோ, வன்மையாகவோ சுட்டப்படும் - வழங்கப்படும் - ஆக்கப்பூர்வமான விமரிசனங்கள் (Constructive Criticism) நன்றியுடன் ஏற்கப்படும்.

"முத்தர் மனம் இருக்கும் மோனத்தே..." என்பதுபோல், நம் குறிக்கோள் சிறந்த பழந்தமிழ்க் கவிதை மரபு மிளிரும் குலோத்துங்கன் கவிதைகளைத் தமிழ் கூறு நல்லுலகுக்கு உணர்த்துவதன்றி வேறொன்றில்லை.

குலோத்துங்கன் கவிதைகளை இன்னும் நுட்பமாக உய்த்துணர்ந்து, உலகுக்கு உணர்த்தும் மேதைகள் பலர் உண்டெடன்பதை அறிவேன். அவர்கள் கோணத்தில், பெருமதிப்புக்குரிய முனைவர் வா.செ. குழந்தைசாமி அவர்களின் நூலை ஆய்ந்து கவின் மிகு கருத்தினை வெளியிடல் வேண்டும். இந்நூல், ஓர் அற்புதப் படைப்பு. எனவே, பல்வேறு திக்குகளிலும் இந்நூலின் கருத்துகளைக் கண்டறிந்து வெளியிடுவதால், தமிழின் பரப்பு மிகுவதோடு, திறனாய்வுத் துறையில் தமிழ்ச் சான்றோர்க்கு மிக உயர்ந்த விருந்தாகவும் அமைந்திடும். பரந்து, விரிந்த, உயர் உள்ளம் கொண்ட குலோத்துங்கன் அவர்கள் கூறுவது போன்று,

என்னினும் மிஞ்சினோர் வளர்க எம்மினம்
எவரினும் மேலென எழுக! நாள் தொறும்
தன்னினும் மிஞ்சினோர் சமைவ தற் கெனத்
தடம் அ மைப்பவர் தம்புகழ் பாடுவேன்

என்று உறுதி கூறி, நிறைவு செய்கின்றேன்.

வாழ்க முனைவர் வா.செ. குழந்தைசாமி அவர்கள் !

வளர்க "குலோத்துங்கன் கவிதைகள்" புகழ் !

வாழ்க உலகெலாம் !

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113
அண்மை வெளியீடுகள்

	ரூ.பை.
உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 901 - கி.பி. 1300	100.00
உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 1851 - 2000	180.00
தமிழக வானவியல் சிந்தனைகள்	35.00
திருப்புகழ் ஒளிநெறி பகுதி - I	90.00
திருப்புகழ் ஒளிநெறி பகுதி - II	90.00
திருப்புகழ் ஒளிநெறி பகுதி - III	80.00
தொல்காப்பியம்-எழுத்ததிகாரம் மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்	200.00
தொல்காப்பியம்-சொல்லதிகார மூலமும் சேனாவரையருரையும்	200.00
தொல்காப்பியம்-பொருளதிகார மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்	325.00
தொல்காப்பியம் - பொருளதிகார மூலமும் பேராசிரியர் உரையும்	300.00
Economic Heritage of the Tamils	115.00
மலேசியத் தமிழரும் தமிழும்	100.00
தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் - தொல்லியல், வரலாறு, சமூகவியல்	100.00
கவிதையியல்	50.00
பண்பாட்டு நோக்கில் திருமுறைகள்	30.00
கதைப் பாடல்களில் கட்டுப்பாட்டு மீறல்கள்	95.00
Bibliography on Translations	175.00
சங்க இலக்கிய ஆய்வு தெ.பொ.மீ.யும் மேலை அறிஞரும்	60.00
திராவிட மொழி இலக்கியங்கள்	200.00
வா.கீ.ச. கலாநிதி கி.வா.ஜகந்நாதன்	60.00
நாசுதிராதிக்-ஞாலமுதன்மொழிஆய்வுகளுக்குப்பாவாணர் தரும் ஒளி	35.00
தமிழ்ச்சொற் பிறப்பாராய்ச்சி	45.00
மொழி பெயர்ப்பியல்	45.00
தமிழில் தத்துவ நூல்கள்	40.00
சி.வை. தாமோதரம்பிள்ளை	40.00
சொல்லிலக்கணக் கோட்பாடு தொல்காப்பியம் - முதல் பகுதி	70.00
இசுலாமியச் சிற்றிலக்கியங்கள்	40.00
பாவாணர் கடவுள் நம்பிக்கையும் சமயச் சால்பும்	30.00
மகளிர் முன்னேற்றத்தில் "அவள் விகடன்" இதழின் பங்களிப்பு	35.00
திருக்குறள் உரைச் சிந்தனைகள்	50.00
தமிழர் நாட்டு விளையாட்டுகள்	95.00
தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும்	120.00
மீனவர் சமுதாய நாட்டுப்புறப் பாடல்கள்	35.00
A Course in Modern Standard Tamil	65.00
இசை மருத்துவம்	45.00
கம்பன் களஞ்சியம்	550.00
குலோத்துங்கன் பார்வையில் சமுதாயம்	70.00
இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞர்கள் தொகுதி-1	100.00
இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிஞர்கள் தொகுதி-2	100.00
நீறணி பவளக் குன்றம் (ஒன்பதாம் திருமுறை ஆய்வுநூல்)	35.00
உலகப் பகுத்தறிவு நீரோட்டத்தில் பெரியார்	35.00

---

634 குலோத்துங்கன் கவிதைகள் ஒரு கோபுர தீபம் 60.00